சித்தர்களின் வர்ம சூத்திரங்கள்



தாமரை நூலகம், சென்னை - 26.

உ

ஓம் நமசிவாய நமக

சித்தர்களின் வர்ம சூத்திரங்கள்

வர்ம சூத்திரம், வர்மத்திறவுகோல், வர்மாணி, வர்மகண்டி,
வர்மசூத்திர நிகண்டு அகராதி, ஒடிவு முறிவு ஞானம்,
வர்மஆணி சூஸ்திரம்.

பதிப்பாசிரியர்
ஆர். சி. மோகன்

தொலைபேசி எண் : 23620249

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு,
வடபழனி, சென்னை – 26.

தாமரை வெளியீடு : 291

முதல் பதிப்பு : ஜுன். 2006

இரண்டாம் பதிப்பு : © ஆகஸ்ட் 2017

உரிமை பெற்றது

நூல் விவரம்

நூலின் பெயர் : சித்தர்களின் வர்ம சூத்திரங்கள்

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7. என். ஜி. ஓ. காலனி, 3வது தெரு,
வடபழனி, சென்னை - 26

பதிப்பு ஆண்டு : ஆகஸ்ட் 2017

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : 21 செ.மீ x 14 செ.மீ

அச்சுத்தாள் : 14.4 வெள்ளைத்தாள்

எழுத்துக்கள் : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 223

பிரதிகள் : 1200

பைண்டிங் : செக்‌ஷன்

விலை : ரூ. 100.00

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
சென்னை - 36

91/4

வர்ம சூத்திரம்

பாகம் – 1

வர்மசூத்திரம்	1
வர்மத்திறவு கோல்	30
வர்மாணி	34
முறிவு எண்ணெய்	56
வசைவு எண்ணெய்	57
குக்குடத்தைலம்	57
அஞ்செண்ணைத்தைலம்	58
நாவிச் செட்டெண்ணெய்	59
குறுநதட்டி எண்ணை	59
மருந்துகள்	60
வற்மகண்டி	61
மருந்துகள்	65

பாகம் – 2

சீடனுக்கு அறிவு	66
அகஸ்தியர் ஞானம்	66
வறும விகடதுடி	67
வற்ம மரணகண்டி	71
அடிமுறை	71
நரம்பு அடகம்	72
நரம்பு சூத்திரம்	75
வற்ம குரு நாடி	76
வற்ம வில்லும் விசையும்	77
ஐந்தெண்ணை	83
முக்கூட்டு எண்ணை	83
திருமேனி எண்ணை	84
சுவாதி எண்ணை	85
வற்ம சூத்திர நிகண்டு அகராதி ஒடிவு முறிவு ஞானம்	87
குண்டலினி முறிவு	94
மணி பந்தம் முறிவு	94
முட்டு நகண்டால்	95
பிட்டிநடு	95
தோடைவேர் கிருதம்	138
ஏலாதி துவாலை	140
கஷாயம்	141
காய ராசாதி எண்ணை	142

பாகம் – 3

வர்ம சாஸ்திரம்	144
நாசித்தூள்	144
பொட்டணம்	145
வெள்ளறுகு கிஷாயம்	145
முக்கூட்டு கியாழம்	147
குக்குட எண்ணை	149
தெற்றிப்பூ கஷாயம்	152
திருமேனி எண்ணை	153
தன்வந்திரி எண்ணை	154
மாறாடி நெய்	156
வெள்ளாட்டு நெய்	158
முருங்கை எண்ணை	159
வற்ம கண்டி	160
கூடாரத்தைலம்	168
குறுந்தொட்டி கஷாயம்	169
தூதுவளை கஷாயம்	169
மற்றொரு கஷாயம்	170
புதுமை எண்ணை	170
தோடைவேர் கஷாயம்	171
வசவெண்ணை	172
ஆலம்பால் எண்ணை	173
கூடாரக் கஷாயம்	173
வர்ம சூத்திரம் - 50	175
கண்டங்கத்தரி கிருதம்	176
குறுந்தொட்டி எண்ணை	177

கருங்கோழித் தைலம் 178
பரஞ்சோதி கஷாயம் 179
குக்குட கஷாயம் 179
மிளகுவேர் கஷாயம் 180
ஆலம்பால் எண்ணை 183
குளியல் எண்ணை 183
வசவு எண்ணை 184
தோடைவேர் கஷாயம் 184
ஆடா தோடை நெய் 185

மரண கண்டி

கெற்பிணிகளுக்கு
வர்ம இளக்குமுறை 194
கறந்தமலை வாகடம் 196
18 சித்தர்கள் ஜாதி 197
அறம் - 32 198

வர்ம ஆணி சூஸ்திரம்

மருந்தின் ஸ்புடவிதி
யெடைபாகம் 200
ளிப்புத் திட்டம் 201
வர்மமென்பதறிய 202
வர்ம அளவு 202
வர்ம தட்டு அளவு 203
வர்மமிளக்கு மிடம் 203
இந்நூலீவதார்க்கெனல் 203
வர்ம அளவு கண்டு
இளக்க வேண்டுமெனல் 203
படுவர்மம்- 12 203
தொடுவர்மம்-96-க்கு விபரம் 207
திரேகப் பொருத்துகள் 205
சகலவர்மத்துக்கு
அன்னப்பால் கசாயம் 216
வர்மக்குளிகை 216
சகலவர்ம சன்னிகட்கு
கஸ்தூரிமெழுகு 217
வர்ம மிளக்காதோரிவரெனல் 218
உடலை தொடாமலிளக்கு முறை 218
வைத்தியரறிய வேண்டியது 218

91/4

பகுதி – 1

ஓம் நமசிவாய நமக

குருப் பிரும்மோ! குருவிஷ்ணு: குருதேவோ மஹேஸ்வரா
குருசாட்சாத் பரப்பிரும்ம தஸ்மை ஸ்ரீ குருவே நமக.

வர்ம சூத்திரம்

குருவின் பாதார விந்தங்கள் போற்றி!
கூறிடும் அடியார்கள் பாதம் போற்றி!

வறும சூத்திரம்	- 120
வறும திறவுகோல்	- 16
வற்மானி	- 115
வற்மகண்டி	- 16

ஆதியென்ற மூலவட்ட கடவுளின்
அகன்ற பரிபூரணத்தின் அறிவினாலே
ஜோதிஎன்று நின்றுலங்கும் பிராணதீபம்
சூட்சுமத்தை யாபேர்க்கும் துலங்கவேண்டி
வாதிபெறு உலகமதில் மனிதர்க்காக
வகைவிபரம் கைபாகம் வழியாய்ச் சொல்ல
பாதியென்ற மனிதர்க்கு பரன்தன்னை
போற்றி பரப்பிரும்மமான குருபரனே காப்பு.

ஆதர்ர மானதொரு மூலத்துள்ளே
அகண்டமாய் அண்டமெங்கும் நிறைந்தஜோதி
பாதாரந்தனைப் பணிந்து வர்மசூத்திரம்
பலித்திடவே யாபேர்க்கும் பலமதாக
கோதாரம் கொண்டுணர்ந்து என்னைஆண்டார்
கடாட்சமது போகருடைய கிருபையாலே
பாதாரம் மகிழ்ந்துரைத்த வர்மசூத்திரம்
வையகத்தோர் காணாமல் அறையில்வையே.

அறையில்தான் வைப்பதென்றால் மைந்தாகேளு
ஆகுல கைவிபரமொடு கைபாகம்தான்
உறவாடி சிலபேர்கள் நூல்தாவென்று
ஓவியம்போல் உரைபேசி உன்னைஏய்ப்பார்

திறமான நூலவர்க்கு வெளியிடாதே
சீஷனென்று பன்னிரெண்டு வருடம்காத்தால்
அறிவான பக்தியவர்க்கு இருந்ததானால்
அப்பனே பொருள்வாங்கி நூலைஈயே. 3

ஈவதுதான் ஆறாகுகடவுள் அடியார்க்கு
இகத்திலுள்ள மானிடர்க்கு ஈந்தாயானால்
சாவதுதான் கடைநரகில் வீழ்வாய் சொன்னேன்
சண்டாளர்க் கீயாதே தரணிமீதில்
தாமிதுதான் வெளியாகச் சொன்னேன் மைந்தா
தாரணியில் இந்நூலை இகழ்ந்துரைத்து
ஆமிதுதான் நின்றவர்க்கு வற்மமெல்லாம்
அடைவாகப் பலிக்காது அறிந்துபாரே. 4

பாரப்பா படுவர்மம் பன்னிரெண்டும்
பாங்கான தொடுவர்மம் தொண்ணூத்தாறு
வேறப்பா மெய்தீண்டா காலமொன்று
வெற்றியென்ற பச்சிலையும் விளம்பக்கேளு
ஆரப்பா நாடி எழுத்தீராயிரம்தான்
ஆராய்ந்து சொல்லுகிறேன் அன்பாய்க்கேளு
கூறப்பா இவைக்குள்ளே வர்மமெல்லாம்
குலையாமல் கூறுகிறேன் மைந்தாகேளு. 5

கூறடா மானிடனே அடக்கம் வேணும்
கொடிதான கோபமெல்லாம் குறையவேணும்
பாரடா பராபரனை பூசைசெய்ய வேணும்
செய்யப்பா மூலியெல்லாம் தெரியவேணுமென்று
செய்யடா உபதேசம் உண்டுபண்ணு
கைப்பாக வறுமமதை தேர்ந்து கொண்டு
மெய்யடா கைப்பாகம் அறிய வேணும்
மெல்லவே இதன்விபரம் நன்றாய்ப்பாரு. 6

செய்யப்பா மூலியெல்லாம் தெரியவென்று
செயலான உபதேசம் வேண்டுமென்று
கையப்பா வறுமமதை தேரவென்று
கையால பாகமதை அறியவென்று
நையப்பா இதன்விபரம் நன்றாய்ப்பாரு
நாதனருள் பெருகமனதை நாடிமேலும்

பையப்பா வர்மமெல்லாம் பகரக்கேளு
பராபரனை நெஞ்சமதில் நினைத்துப்பாரே.

நேரப்பா நெற்றிநடு புருவந்தன்னில்
நேராக நெல்லிடைக்கும் கீழதாக
தாரப்பா திலர்தகாலம் அதற்குப் பேராம்
தட்டெனவே முறிவுகொண்டால் பிழையாதப்பா
பேரப்பா பிழையாத திலர்தகாலம் பேசுகிறேன்
பேசும்அதில் வற்மமது கெண்டால்கேளு
கூறப்பா வாய்பிளந்து வானம்பார்த்து
கொள்ளுமடா நாழிகைதான் மூன்றேமுக்கால. 8

குலையாமல் இளகுமுறை கூறக்கேளு
குடும்பி பிடுத்திருக்குஉச்சி குணமாய்த்தட்டி
தளையாகப் பின்தலையும் செவியும்பற்றி
சார்வாக சுக்குவைத்து ஊதுவாயே
உளையாமல் அன்னப்பால் சுக்கும்சேர்த்து
உத்தமனே கொடுத்துவிடு உறுதியாகும்
பிளைவாக நேர்வர்மம் செய்யினோர்க்கு
விசித்திரமாய் என்மருந்தை ஊதிடாயே. 9

ஊதியே அன்னப்பால் சுக்கும்சேர்த்து
உற்பனமாய்க் கொடுத்துவிடு உறுதியாகும்
சாதியெனும் நட்சத்திர காலம்தன்னில்
தலம்குணம் விபரமுடன் சாற்றக்கேளு
சோதிஎனும் கடைக்கண்ணின் சிறைக்குள்ளேதான்
துலங்குமந்த குளியதினில் தோன்றும்பாரு
வாதியென்ற வர்மமது கொண்டுதானால்
மஞ்சள்போல் கண்முகமும் மாறும்பாரே. 10

முகம்மாறி வேர்வையுடன் விழிதோன்றாது
முதுகுதனில் இருபுறமும் குளிர்ந்து காணும்
உகமான நாழிகைதான் இருபத்தேழு
உத்தமனே இளகுமுறை உரைப்பேன் பாரே
சுகமான கைவிரித்து மறுபுறத்தில்
சூத்திரமாய் தட்டொன்று சுருக்கில்லாமல்
வகையான மறுபுறமும் தடவித்தாழ்த்து
வளமையுடன் உச்சியிலோர் அடியும்போடே. 11

போடப்பா சுக்காலே ஊது ஊது
புத்தியுடன் சாமைஅரிசி பாலையூட்டு
காட்டப்பா காதில் சிறுதண்டில் தானும்
கலங்காத செவிகுருழி காலமென்பார்
விட்டப்பா செய்குணத்தை விளம்பக் கேளு
விழிரெண்டும் தள்ளிவாய் பதைப்பு காணும்
நாட்டப்பா இதன் குணத்தை நன்றாய்பார்த்து
நாழிகைதான் இருபத்து மூன்றுக்குள்ளே மாறுமப்பா 12

மறுபுறத்தில் ஊன்றிக்குத்தி வளமையாக
மகத்தான கண்விழியும் தடவித்தாழ்த்து
குருபரனைநினைத்து கைமடக்கி இருத்தி
கூசாமல் இருபுறமும் தடவி வாங்கு
கருவறிந்து கையிணைத்து மேலேவைத்து
கமலமதில் அடியடித்து காதில் ஊதி
அருகிருந்தோர் அறியாது இளகும்பாரு
அரிசியிட்ட அன்னப்பால் சுக்குமாமே. 13

ஆமப்பா இன்னுமொரு காலம் சொல்வேன்
ஆச்சரிய மாச்சரிய மிதுபோலுண்டோ
தாமப்பா வளைமுடிந்த தலத்திலேதான்
சார்வான குழியதிலே பிடரிக்காலம்
ஓமப்பா ஓடிவுடனே அடிகள் குத்து
ஊக்கமுடன் கொண்டதானால் உடனேசாவு
தாமப்பா தலைகுனிந்து கண்ணுமூடி
நன்றாகத்தான் நடுங்கும் கண்டுகொள்ளே. 14

நாதமே நாழிகைதான் மூவெட்டாகும்
நன்மையுடன் இளக்குமுறை நவிலக்கேளு
ஓதமே எடுத்திருத்தி அசைத்திடாமல்
உண்மையாய் உச்சியிலோர் அடியும்போடே
ஆதமே கண்டத்தில் அணுவதாக
அசைத்துவிடு இருபுறமும் கயிறுபோல
வாதமே கறியுப்பும் அன்னப்பாலும்
மைந்தனே கொடுத்துவிடில் மாறுந்தானே. 15

மாறுமப்பா உறக்கத்தின் காலமொன்று
வழியாகச் சொல்லுகிறேன் மருவிக் கேளு

தேறுமப்பா இப்படி எத்தேசத்தோர்கள்
செய்கின்ற காலத்தின் தெளிவேதென்றால்
வேறுபடும் நாடிக்குள் தானே ஏற்றி
விரல் பதியும் குழிஒன்றில் உறக்க காலம்
கூறுபடா காலமதில் கொண்டபேர்க்கு 16
கொஞ்சு திருவாய்பிளந்து நாக்குதள்ளும்.

தள்ளியுடல் வெதும்பி உணர்வுமாறும்
தளர்ச்சையுடன் உறக்கமது தானுண்டாகும்
விள்ளும்பார் நாழிகைதான் தொண்ணூறுக்குள்
விசித்திரமாய் இளக்குமுறை வீசுகிறேன்கேள்
உள்ளும்பார் எடுத்திருத்தி கலங்கிடாமல்
உத்தமனே உச்சியிலோர் அடியும்போடே
கொள்ளும்பார் பிடரியின்மேல் ஒன்று குத்தி 17
கூசாமல் பிடரிவட்டம் தடவிச் சாயே.

தடவியே ஏலம்இட்டு அன்னப்பால் கொடு
தப்பாமல் இந்தவர்மம் இளகும் பாரு
தொடர்வான காலம்ஒன்று இன்னம் சொல்வேன்
தோற்றமது தும்மி என்ற காலம் தன்னை
மிடர்வான தொண்டையின்கீழ் குழியிலேதான்
மேலான வர்மமது கொண்டதானால்
கடர்வான மேல்துடிக்கும் கண்மூடும் 18
கமலமென்ற நாசி நீராயிறங்கும் பாரே.

ஒலிருமப்பா முகங்கருக்கும் வேர்வையுண்டாம்
உத்தமனே நாழிகை பதினெட்டுக்குள்ளே
பலிக்கும்பார் நாசி செவி சுக்குஊதி
அன்னப்பால் சீரகத்தில் அருந்திட சொல்லு
அலிக்கும்பார் அச்சிலே நேர்வர்மம்
தடவுகேள் இன்னும் ஒருவர்மம் சொல்வேன்
நலிரும்பார் கூம்பின் இருவிரலின் கீழே 19
நலமான திலர்தகாலம் கொண்டால்கேளு.

இருந்தஉடல் தளர்ந்துவிடும் வேர்வைகாணும்
இருமினால் ரெத்தம் விழும் இதனால்தானே
பொருந்திடவே நாழிகைதான் பதினெட்டுக்குள்
பொறுப்பாக உச்சியிலோர் அடியும் போடே

அருந்திடவே காலமது இளகும் பாரு
அடக்கம் என்ற பச்செயலை தங்கசெய்து
சொரிந்திடவே இந்தவர்மம் மட்டும்தட்டு
துரோகிகளைப் பாராமல் தட்டிப் போடே. 20

போடப்பா அடவுடனே புறங்கால் கொண்டு
புத்தியுடன் முதுவரியில் தலத்தை நோக்கி
சாடப்பா சீரமெல்லாம் தடவி தூக்கி
தண்ணீரை கொடுத்துவிடு தளர்ச்சை போகும்
வீடப்பர் பலதுயிரும் மீளும் சொன்னேன்
வெற்றியுட னின்னமொரு அடவுகேளு
சீட்டப்பா முட்டெலும்பி விறையே மூன்றில்
இயல்பான பக்கத்தில் அடப்பக் காலம். 21

காலமென்றால் செய்குறிகள் கருதக்கேளு
கடினமுடன் தளர்ச்சையுண்டாம் விழிகாணாது
கோலமென்ன காலம் உச்சம் கொண்டதானால்
குறிப்பான தேகமெல்லாம் முதிர்ந்து போகும்
சாலமென்ன மறுபுறத்தில் புறங்கால்கொண்டு
தட்டியே முதுகும்நெஞ்சம் தடவித் தாழ்த்து
வேகமென்ன நாழிகைதான் பதினெட்டுள்ளே
வெற்றியுடனே இளகுஇஞ்சி அன்னப்பாலே. 22

அன்னம்போல் இன்னமொரு அடவுகேளு
அப்பனே நேர்வர்மம் தடவு கீழே
சொன்னேனப்பா அங்குலம்தான் நாலின் கீழே
சூட்சமடா உறுமி என்ற காலமையா
இன்னம்பார் கண்ணதனில் விழிகாணாது
இருந்து மேல்மூச்சு விட்டு இழுக்கும்பாரு
இன்னுமப்பா நாழிகைதான் இருபத்தேழு
உத்தமனே இளக்குமுறை உரைக்கிறேனே. 23

உரைப்பதென்ன எடுத்திருத்தி கைபிணைத்து
உத்தமனே உச்சியிலோர் அடியும்போடே
கரைகவே செவியிரண்டும் சுக்கால்ஊதி
கால்மடக்கி முதுவரியில் கருத்தாய் தட்டி
விரைகவே சீரமெங்கும் தடவிதூக்கி
விட்டுவிடும் அன்னப்[illegible]சுக்கும் சேரு

நிரைகவே எழுந்திருப்பான் நிச்சயம் சொன்னேன்
நிர்ணயமாய் இன்னுமொரு அடவுகேளு.

கேளடா முன்டெலும் பின்தாழ்வாய்
கெணிதமுடன் இருவிரலில் சுருளிக்காலம்
பாழடா செய்யாது உலகத்துள்ளே
பழியது பாவமத்திச் சுருளியென்பார்
நாளடா காலமது கொண்டுதானால்
நாலுபத்து நாளையிலே முதிர்ந்து போகும்
சாளடா மறுபுறத்தில் புறங்கால் கொண்டு
தட்டியே முதுகும் நெஞ்சும் தடவிதாழ்த்து
வேழடா நாழிகைதான் பதினெட்டுக்குள்
வெற்றியுடன் இளகும்முன் அன்னப்பால் கொள். 25

அன்னம் போல் இன்னுமொரு அடவுகேளு
அப்பனே நேர்வர்மத் தலத்தின் கீழே
தன்னப்பா சூட்சமது உறுமிகாலம்
தன்மையுடன் சொல்லுகிறேன் தயவாய்க்கேள்
இன்னப்பா கண்விழிக்கும் விழிக்கொண்ணாது
இறைந்துமேல் மூச்சுவிட்டு இழுக்கும் பாரு
உன்னப்பா நாழிகைதான் இருபத்தேழில்
உத்தமனே இளக்குமுறை உறைக்கிறேனே. 26

ஆகுமே இளக்குமுறை அறியக்கேளு
அணைத்திருத்தி மறுபுறத்தில் புறங்காலால்
வேகுமே தட்டொன்று தலைமேல் கையில்
விபரமுடன் அணைத்திடிக்க விசிதமாகும்
போகுமே முதுவரியில் புறங்கால் கொண்டு
புத்தியுடன் தட்டிவிடு புதுமையாக
ஏகுமே சேர்த்தணைத்து தடவும்போது
'எழுந்திருப்பா னிந்தவர்ம மெல்லாமப்பா. 27

மப்பதென்ன கறியுப்பு மன்னப்பாலும்
மைந்தனே கொடுத்துவிடு மாறுந்தானே
எப்பதென்ன இளகிவிட்ட அடப்பக்காலம்
இன்செய்து குறிகள் இளகுவாயே
இப்புவியோர் இந்தவர்மம் செய்யவேண்டாம்
இருக்கையிலே மண்டலத்தில் இறந்துபோவான்

எப்பொழுதும் இதையேதான் மனதில் எண்ணி
இறைந்தழுது ஈசனையே நாடு நாடு. 28

இறந்துபோ முன்டெலும்பி நிறையே மூன்றில்
இயல்பான சிறிய வழிச் சுருளிக்காலம்
பறந்துபோம் பெரியவழிச் சுருளிபோல
பாலகனே குணமதுதான் பகரக்கேளு
சிறந்துபோம் நாழிகைதான் இருபத்தேழில்
சேர்த்திருத்தி இருபுறமும் சீராய்த் தட்டி
அறிந்து முதுவரியில் புறங்கால் கொண்டு
அணைத்து நீ அழகாகத் தட்டிடாயே. 29

ஆயேநீ கைபுனைத்து மேலேவைத்து
ஆச்சிரியம் உச்சியிலோர் அடியும்போடு
சீயேநீ வெற்றிலையும் சுக்கும் சேர்த்து
இரண்டு காதிலேயும் இனமாயூது
தேயேநீ சேர்த்தெடுத்து ஊதும்போது
தெய்வத்தின் கிருபையினால் இளகும்பாரு
காயேநீ அரிசியுரி பலமே சுக்கு
கணக்காக அன்னப்பால் உண்ணச்செய்யே. 30

செய்யேநீ அன்னப்பால் கொடுக்கும்போது
சீக்கிரமாய் இந்தவர்மம் இளகும் பாரு
ஐயோநீ கல்லெடைக் காலம் சொல்வேன்
ஆச்சரியம் ஆச்சரியம் அதிகமப்பா
உய்யேநீ மனிதருக்குக் கொண்டுதானால்
உத்தமனே விரை ரெண்டும் காணாதப்பா
ஓய்யேநீ கல்லேறு தளர்ச்சையாகும்
உத்தமனே சத்தமும் மூச்சும் போகா. 31

போத்தன்ன நீர்பிடிக்கும் வயிறும் ஊதும்
பொருந்தவே மூச்சுவிட தொடங்கும் பாரு
சாத்தென்ன ரத்தம்வந்து கட்டிக் கொள்ளும்
சாதகமாய் சதைஊர்ந்து மூடும் மட்டும்
பார்த்தென்ன கவசரெண்டண்டையும் கூட்டி
பத்திரமாய் என்னென்று பிடிக்கச்சொல்லி
காத்தென்ன நெற்றிதனில் விரலைவைத்து
கைமுறையாய் உச்சியிலோர் அடியும்போடே. 32

போடுவாய் முதுவரியில் புறங்கால் கொண்டு
புத்தியுடன் தட்டிவிடு புதுமையாக
ஆடுவாய் கால்தூக்கி சேர்த்துக் குத்தி
அப்பனே கல்லிறங்கும் அதிகமாக
வீடுவாய் விரல்பிடித்து துணியைச்சுற்றி
விட்டுவிடு இந்த வர்மம் இளகும்பாரு
சாடுவாய் அன்னப்பால் சுக்கும் சேர்த்து
சாத்திடவே இந்தமுறை உறுதியாகும். 33

பாரப்பா படுவர்ம்ம் பன்னிரெண்டும்
பாங்காகக் கைப்பாகப் படியேசொன்னேன்
ஊரப்பா அடக்கமென்ற காலந்தன்னை
உண்மையாய் உனக்கறியச் சொன்னேனப்பா
ஆரப்பா ஆனாலும் காலம் கொண்டால்
அப்பனே கொண்டதலம் குளிர்ந்து காணும்
வேரப்பா சோதனையை கண்டு கொள்ளு
வித்தகனே திரைவளைத்து இளகுவாய் நீ. 34

பாயமென்ன இளக்காத காலத்துக்கு
மாத்திரைதான் செகமூலி மாயோன் மாயோன்
ஆயமென்ன குருமுடிப்பகத்தி மூலி
அப்பனே நீயறிவாய் தாளியாகும்
ஞாயமென்ன சாறுபுழிந்து தருகும்போதுதானே
உபாயமாக காலமெல்லாம் இளகும்பாரு
மாயமென்ன இந்தமுறை இளக்கத்தைதான்
மாயவனின் முறையென்று தெரிந்து கொள்ளே.. 35

கற்றனன் கண்டத்தின் மேலேயுள்ளே
கடினமுள்ள காலமது மூன்றேயப்பா
என்றனன் இதற்கு ஒத்தால் பூச்சுமோகோ
இடமறிந்து காலமதில் செய்யாவிட்டால்
கற்றநன் நூல்யாவும் பாழாய்ப் போகும்
கருத்துடன் மருந்து செய்தால் காணாதுண்டு
பெற்றனன் உள்ளவர்க்கு கிடைக்குமின்நூல்
பேசுகிறேன் தொடுவர்மம் புகழ்ந்துதானே. 36

கூட்டியே இருதொடையும் சேர்த்திருத்தி குத்தி
குணமாக உச்சியிலோர் அடியும் போடே

கூடியே செவிரெண்டும் சுக்கால் ஊதே
கால்மடக்கி முதுவரியில் கருத்தாய் தட்டு
பாடிலே தோன்றுமது விட்டிடாதே
பலம்பெறவே எல்லாரும் தாங்கக்காலம்
கூடியே செய்குறிகள் கருத்தாய் கேளு
காலம் என்ற கைபாகம் அறியவேணும். 37

பாவமது படுவர்மம் நூற்றுக்குள்ளே
பாடிவிட்டேன் பன்னிரெண்டு தலமும்பாரு
ஆலமுண்ட கண்டருட அடியைப் போற்றி
அறிவுணர்ந்தேன் பூரணமாய் எவ்வுயிர்க்கும்
போலஒன்று மில்லையடா குருவின்பாதம்
கும்பிட்டால் நம்பிக்கையின் குறிசொல்வேனே
சாலவே சற்குருவின் பாதம் சாந்து
சாஸ்திரத்தின் சூட்சமத்தை பாரு பாரு. 38

குறியான தட்டுவர்மம் எட்டேயாகும்
குருவினடி பணிந்து நூல்வாசிக்கும்
அறிவுடைய பிள்ளைகளே இந்த செய்தி
ஆரோ சொல்வார் நானும் சக்தியாகும்
நெறியுடையோன் நின்றாக்கால் வாசி வாசி
நிச்சயமாய் காலம் மிக்க கொண்டதானால்
பிரிவுடனே நாழிகைதான் பார்க்கவேண்டாம்
பேய்மகள் சீற்றமிட்டால் உயிரும் போச்சே. 39

போச்சப்பா இவைகளொடு குளிகை நெய்யும்
பொருந்தவே கஷாயமொடு பொடிகள் யாவும்
ஆச்சப்பா கைமுறையும் செய்முறையும் சொன்னேன்
சொன்னேன் அதனால் அடிகளிட நாசம்தானே
வீச்சப்பா விட்டுவிடு வர்மம் எல்லாம்
வீணாக இதனாலே பொருளும் உயிரும்
போச்சப்பா போச்சப்பா விரயமாக
போதும் இந்த வர்மத்தின் விளைவுதானே. 40

நாசமாம் பிறந்தலையில் பின்செவிநேர் பற்றி
நன்றான பெருநரம்பில் காலம் ஒன்று
தோசமில்லை சுழியாடி வர்மத்தின் கீழ்
சொல்லுகிறேன் காலம் ஒன்று சூட்சுமமாக

பேசக்கேள் சிரசுவட்டம் ஒட்டிநீயும்
பிரியமுடன் அறிந்து கொள்ளு பெருமைதானே
கூசக்கேள் இக்காலம் அறிந்தவர்க்கு
கொண்டவினை எல்லாமே நீங்கும்தானே. 41

பொன்னான முதுவடியின் வரிக்குமேலே
பேர்கொண்ட வர்மமது பேசக்கேளு
அன்னலே கைப்புஷ்டி எல்லின்மேலே
அருகுற்று இடிகொண்டால் ஆறுநாளில்
தின்னவே தோன்றது இருமல் காணும்
திருமேனி எண்ணெயினால் தீரும்கண்டாய்
உண்ணவே விட்டாது உறக்கம் இல்லை
உற்றதொரு எண்ணெயைத்தான் நாடு நாடு 42

கண்டாயோ சுழியாடி வர்மத்தின் கீழே
கைபுஷ்டி அல்குழியில் விலாவில்தானே
துண்டயிடி கொண்டால் துடிக்கும் தேகம்
சோரைமயம் இருமலிலே துவக்கும் கண்டாய்
விண்டது நேரிடும் பருக்காச் சொன்னோர் இந்த
மேலான எண்ணையினால் விட்டுப்போகும்
அண்டர்களும் அறிவார்களோ விண்டதுண்டோ
ஆச்சரியம் தொடுவர்மம் அதற்குத்தானே. 43

தானான புட்டியின்மேல் சுழியின் கீழாய்
தாக்கடா நடுவரியில் அடியோ கொண்டால்
வானான திரிவராதுள்ளே மைந்தா
வாய்பேசாது நோவு சுரம் உண்டாகும்
தேனான முதுவரிபுட்டியுற்றி தீர்க்கமுடன்
அடிகொண்டால் முடவனாவான் மாயமாக
மானான எண்ணைவைக்க வழுதுகின்றேன்
மார்க்கமெல்லாம் பின்னாலே இதற்குமைந்தா. 44

ஆக்கமுள்ள தொண்டையின்கீழ் கூம்பின்மேலாய்
அடிஇடிகள் கொண்டாக்கால் ஆறுநாளில்
வாக்குளறும் பின்தொந்த சுரமும் தோன்றி
மயங்கிபின் தலைசுற்றி வாந்தியுண்டாம்
பாகமுடன் நாக்குளறி மரணமாவான்
பண்டிதரும் கைவிட்டுப் போரேனென்பார்

வாக்குடனே நாக்கு உள்ளிருந்ததானால்
மருந்து செய்தால் எவ்வுயிரும் மாளாதென்றேன். 45

மாளாது மாத்திரைதான் கடந்ததானால்
மைந்தனே நீ கண்டுஅறி மருந்துஈயாதே
தாளாதே துட்டருக்கே இந்த வர்மம்
சாத்தியம்காண் இதன்விபரம் சாற்றினோம் பார்
பாழான சொல்லொன்றும் சொல்லவில்லை
பரீட்சையாம் என்று சொல்லிப் பாடினோமே
கோளான வெட்டுமுக வறுமம்தன்னை
கூர்ந்துபார் தலங்குணங்கள் கூறுவேனே. 46

கூறக்கேள் மார்பிலிரு விரலின் கீழாய்
குணமுடனே கொண்டவர்மம் எங்கே என்றால்
மார்க்குள்ளே வெள்ளீரல் சோரைப் பற்றி
மதியான ரவி மீறி அனலும் மூழ்கி
வாருக்கே அக்னிபோல் சுரமும் காயும்
மந்தமுடன் மலர்ந்து கிடந்துவிடவிடாது
நீரக்கேள் இப்படியே திசை எட்டுக்கும்
செவ்வையாய் வறுமமெட்டும் வகைசொல்வேனே. 47

மெய்யென்று சொல்லிவைத்த நூல்கள்மெத்த
வீணாகப் போச்சுதடா வித்தைஎலலாம்
கையொன்றும் காலொன்றும் அறியாமூடர்
கற்றவர்போல் வனுமம் எல்லாம் கைக்குள்ளென்பார்
பொய்சொல்லி வயிற்பிழைக்கும் புலையர்கூட்டம்
பொறி அளித்தோம் என்றுரைத்துப் பொருள்தாவென்பார்
ஐயயோ கருவி தொண்ணூறுத்தாறுக்குள்ளே
அடங்கிநின்ற தலமறியா மூடர்தானே 48

தானென்ற தட்டுமுறை தடவுமார்க்கம்
தலங்கண்டு இருந்தமுறை இடங்கல் யாவும்
வானென்ற வடகொடிகள் வர்மம் கொண்டால்
வகையாக கைபாகம் அறிய வேணும்
கோனென்ற என்குருவின் அடிபணிந்து
கூறுவேன் அடகாதில் குறிகள்யாவும்
மானென்ற வெட்டுவர்மம் மார்பிலப்பா
இடையில் இரண்டுவிரல்பதிய விரலால் சுற்றி. 49

ஆனாலும் மார்பிலெட்டு வர்மம் கொண்டால்
அடைவான விசைநரம்பு குளிர்ந்து காணும்
மானேகேள் உறுப்பெல்லாம் உளைச்சல் சோம்பல்
மகத்தான மரணம்என்ற நிலைகள் எல்லாம்
ஆனான துடிதுடிக்கும் அபானமெல்லாம்
மனஞ்செல்லா தறிவுஉடல் உடைந்துபோகும்
கானான சயரோகம் வந்துசேரும்
நாநூறு நாளையிலே தேகம் போமே. 50

ஏதான புட்டியிடை நடுவில்தானே
ஏகனொரு சங்குதிரி அங்குண்டப்பா
போதாத சங்குதிரி கொண்டபேர்க்கு
பொங்கமுடன் நீர்பிடிக்கும் மலம்போகாது
கோதான கால்முடங்கல் உளச்சல் சோம்பல்
குனிதமுடன் நீர்விடா விளைவுடமாகும்
சாதான இந்த திருவெண்ணைவைத்து
தாக்கடா இந்தவர்மம் தீர்ந்து போகும். 51

போகுமடா இதன்மேல் மூவிரலுக்குள்
பொறிகலங்க முண்டெலும்பில் வற்மம்கொண்டால்
ஆகுமடா அகங்கலங்கி பேதி தள்ளும்
அப்பனே குளிர்சுரமும் மயக்கமுண்டாம்
வாகுமடா சோராதி எண்ணையோடு
விற்பனமாய் இந்தவர்மம் எல்லாந்தீரும்
ஏகுமடா இந்த எண்ணெய் இருந்ததானால்
எப்போதும் இந்தவர்மம் செய்வாய் பாரே. 52

தீரவே வேணுமென்றால் தொப்புளின்கீழ்
திறமான இருவிரலில் "மூத்திரக் காலம்"
சேரவென்றால் காலமது கொண்ட பேர்க்கு
செரியாது உடன்மயங்கி மூத்திரம் பாயும்
நேரவே மூத்திரம் எல்லாம் குறைந்துபோம்
நிறமான தேகமெல்லாம் திமிர்போலாகும்
ஆரனவே பின்புறத்தில் புட்டிமேலே
அழகாக கால்மடக்கி அறிந்துதட்டே. 53

தட்டியே முதுகும் நெஞ்சும் தடவித்தாழ்த்து
சரியான அடகாம்புச் செலையும்தாக்கு

முட்டியே சிறிச்சனமும் மடக்கிப் பின்னே
　முறையான நீரழிவும் தீர்ந்து போமே
கட்டியே எல்லிடர் காலத்தின் கீழ்
　கருத்தான தண்டிலொரு விரலின் மேலே
சுட்டியே இதன்நடுவே "விந்துவற்மம்"
　சுளியான வற்மமது கொண்டபேர்க்கு. 54

போக்கென்ற தண்டிடையில் நீரேசாயும்
　போனதேகம் நீர்தரித்துள்ளே போகும்
ஆக்கனென்ற வற்மம் மேலாதி கீழாய்
　ஆக்கமுடனே போட்டு சொன்ன தாரை
சக்கனென்ற சற்வ உயிர் நாதன்பேரில்
　தப்பாமல் செபதோத்திரம் செய்யே
போகனென்ற இந்த வற்மம் போகும் சொன்னேன்
　புண்ணியனே தவறாமல் பொருந்தச் செய்யே. 55

செய்யவென்றால் வித்துரண்டும் பதிந்த சார்பில்
　திறமாக அதன்நடுவில் அண்டக் காலம்
பய்யவென்றால் மலங்கழியும் ரெத்தங் காணும்
　பற்புடனே பானமது தள்ளிக்காணும்
துய்யவென்றால் இந்தவர்மம் கொண்டபேர்க்கு
　சுக்கு கஷாயம் கொடுத்து சுருக்காய்த் தட்டு
ஐயவென்றால் நவத்துவாரம் அருகில் கொண்டால்
　அகம்உளையும் நீர்தரிக்கும் தனம்விம்மும். 56

தாக்கடா தூக்கிவிட்டு தட்டும்போது
　சரியாக இந்த வற்மம் இளகும்பாரு
நாக்கடா சபைதனிலே நீட்டிப்பேசும்
　நலமான கோபமெல்லாம் நமக்குள்என்பான்
போக்கடா தேவிசொன்ன வார்த்தை மைந்தா
　பிடரிதன்னில் பெருநரம்பில் மயக்கமதாகும்
ஆகுமிந்த "சுளியாடி" கொண்டபேர்க்கு
　அடைவான பனிசுரங்கள் பையித்தியரோகம். 57

போகுமிந்த சுவராதி யெண்ணை வைத்து
　புகழ்பெறவே கீரிசாத்து கஷாயம் செய்வாயே
ஏகுமிந்த சுளியாடி தீர்ந்து போகும்
　எப்படியும் இந்த வற்மம் இருக்குதென்று

வாகுமிந்த குளிகை வற்மானி தன்னை
வகை பெறவே கஷாயத்தி லுரைத்து மாட்டே
மாகுமிந்த படியோதான் மாட்டினாக்கால்
மைந்தனே எழுந்திருப்பான் நேர்மையாக. 58

மாட்டவே உச்சிதனில் குருவே பற்றி
மகத்தான "பூட்டல் வற்மம்" இரண்டேயாகும்
தாட்டிகமாய் இடிகளடி கொண்டால் கேளு.
சாதகமாய் மூண்டுகொள்ளும் மூலரோகம்
வாட்டிடவே பீனிசமும் வறட்சிரோகம்
வகையுடனே உள்ளுக்கு கெந்த நாற்றம்
போட்டியங்க ளில்லையப்பா நானுஞ்சொன்னேன்
புகழ்பெறவே சுக்கெண்ணைய் நாசிக்கூத்தே. 59

ஊத்தியே இப்படி மூன்றுநாள் செய்
உண்மையாய் வல்லாரை அரைத்து தாக்கு
சாத்திரத்தில் சொன்னதொன்றும் விட்டிடாதே
தகமைபெறும் உள்வற்மம் மூன்றுண்டாச்சு
மாத்திரையாம் செவிதனிலே "குருந்து குறி"
மகத்தான வறுமமது கொண்டபேர்க்கு
நேர்த்தியாய் ஐன்னிவரும் கபங்கள் தோன்றும்
நிர்ணயமாய் திங்கள்ஒன்றில் மரணமாமே. 60

மறுகுமரி இத்தயிலம் செவியில் ஊதி
மகிமையுடன் உள்கொடுத்து மேலும் பூசி
கரணமெனும் உள்ளீரல் காரீரல் பற்றி
நலம்பெறவே வெள்ளீரல் சமீபம்தானே
விரணமெனும் விசைநரம்பு தளர்ந்து மெத்த
வில்லதுபோல் நிமிர்ந்துவிடும் விறைக்கும்மேனி
அரணமென்றும் உயிர்பிரியக் காலமாகும்
அப்பனே அசாத்தியமென்று உரைக்கலாமே. 61

பூமென்ற வல்லதுதான் முடிந்த மூட்டில்
"அலவாடி" என்றதற்குப் பேரேயாகும்
நாமென்ற வற்மமது கொண்டதானால்
நாளொன்றில் நல்வாயும் கோணிப்போகும்
போமென்ற வாய்பிளக்கும் அண்ணாந்துதான்
புகழ்பெரிய நரம்பெல்லாம் சிலிர்த்து நிற்கும்

வாமென்ற முக்கூட்டு எண்ணெய் தேய்த்து
வளமான முகத்தடியில் காதுக்குள்ளே. 62

ஐயப்பா "விலங்கு வற்மம்" அதற்குப் பேராம்
நலமான குத்திடிகள் நசுங்கல் கொண்டால்
பையப்பா சாக மாட்டாதென்று
பாங்கான மார்பிலிடி போட்டாப் போலும்
ஐயப்பா குறுக்குடனே கழுத்துக் கோணும்
அழகான திருமேனிஎண்ணை தீர்க்கும்
வையப்பா முதல்இந்த எண்ணைதன்னை
வளமாக செய்பாகம் பின்சொல்வேனே. 63

தீருமடா செவியதற்கு முன்பில்தானே
திறமான "புஜவர்மம்" அதற்குப் பேராம்
ஆகுமடா கையதிலே கொச்சமாகி
அழகான முகமதிலே வீக்கமுண்டாம்
நேரும்டா கையதையும் உயர்த்த ஒட்டாது
நிசமான நித்திரையும் காணாதப்பா
சேருமடா திருமேனி யெண்ணைவிட்டு
செயலான மூன்றுநாள் தடவத் தீரும். 64

தடவுகின்ற முன்டெலும்பின் மத்திபத்தில்
தயவான நரம்பதிலே "சுளுக்கு வற்மம்"
அடவுகின்ற அந்தவற்மம் கொண்டுதானால்
அடவான நடுநரம்பில் சுளுக்கிக் கொள்ளும்
மடவுகின்ற முட்டதுவும் கொடுத்துமேதான்
மத்திபமாய் தடவி மெள்ள நெட்டிவாங்கு
படவுகின்ற குருஉனக்குச் சொன்னவார்த்தை
மறப்பேனோ ஒருநாளும் வார்த்தை வாங்கே. 65

வாங்கி வந்த கரமதிலே "மூட்டுவர்மம்"
அத்துடனே அடிஇடிகள் கொண்டதானால்
தாங்கி அந்த கரமதிலே கொச்சதாகி
தயவாக விறுவிறுத்து நொந்து வீங்கும்
மாங்கிசத்தில் ரெத்தமயம் மாறலாகும்
மவுனமாய் வல்லாரை புளிந்து தேயே
நீங்குமடா தவிப்பென்ன நெட்டி வாங்கி
நிர்ணயமாய் உள்ளுக்கு கொடுத்திடாயே. 66

கொடுத்திடுவாய் கோச்சலது விட்டுப் போகும்
குணமான மூட்டிடையில் மொழியில் வற்மம்
அடுத்திடுவாய் "மொழிவற்மம்" கொண்டுதானால்
அடைவான வடிவதிலே வீக்கமாகி
தொடுத்திடுவாய் வற்மமதில் விரணமாகி
துங்கனென்னும் முன்டெலும்பு முறிந்து தள்ளும்
படுத்திடுவாய் பிணியாளி பலரும் மொய்க்க
பரமகுரு கிருபையினால் இளகும்பாரு.

67

பாரனவே பழந்துணியில் வளையம் சுற்றி
பத்திரமாய் முறிவதிலே எலும்பைத் தள்ளி
ஆரனவே வளையமதை உள்ளே தாக்கு
அருளான வல்லாரை புழிந்து தாக்கு
சீரனவே முறிவெண்ணைய் மெத்த வாங்கி
திறமான கையதிலே நெய்யும் போடு
நீரெனவே நீரெல்லாம் வற்றிப்போகும்
நிசமான புண்ணொழிந்து வயமே வீழும்.

68

வீழுமந்த முன்கையில் மையம் பற்றி
விஷமான "மணிபந்த வற்மம்" ஆகும்
தாளுமந்த மணிநடுவில் அடிமுறிவு வந்தால்
தயவான பன்னிரெண்டில் மரணமாகும்
வாழுமது கழிந்து மெல்ல முறிவுண்டானால்
வளமான மூடில்லா தாளிச் சாற்றில்
ஆளுமந்த உளுந்துவிரை அரைத்து மைந்தா
அழகான துணியதிலே ஊத்திச் சுற்றே.

69

சுற்றுமந்த துணியதிலே நாலு கிழிவைத்து
சுகமான அதன்மேலே துணியைச் சுற்று
முற்றுமந்த முறிவெண்ணைய்த் தாரையோடு
முடிந்த நல்ல வல்லாரை தாக்குவாயே
மற்றுமந்த வற்மமது தீரும் சொன்னேன்
பரமனருள் கிருபையினால் தீர்ந்தலாச்சு
வெற்றுமந்த எட்டுவிரல் முன்னே தள்ளி
வெகுவான மணிக்கட்டின் உள்ளேதானே.

70

மணிஎன்றால் வெள்ளைதனில் அருகுபற்றி
மத்திபத்தில் வளைவதிலே "துதிக்கை காலம்"

கண்ணில் எண்ணம் ஓசைபோலே கொண்டுதானும்
கண்பிச்சி மணிக்கட்டு விறைக்கும் தேகம்
அண்ணென் வளையமாய் நீரும் கட்டும்
அகமெல்லாம் தளர்ச்சையினால் விறைக்கும்
தன்னென்றல் வல்லாரை தாக்கிமைந்தா
சார்ந்த நெட்டி வாங்கிவிடு தீர்ந்துபோமே. 71

போகுமப்பா வெள்ளையதில் உள்ளங்கையில்
பொருந்திநின்று சொன்ன "தெட்சிணைகாலம்
ஆகுமந்த இவ்வற்மம் கொண்டபேர்க்கு
அடைவான சீதம்வரும் சன்னிதோன்றும்
வேகமப்பா உயிர்பிரிய நேரம் கொள்ளும்
வித்தகனே வந்ததொன்றும் மரணமாகும்.
ஏகுமப்பா நாள்மூன்று கழிந்ததானால்
எழுந்திருப்பான் இந்தவர்மம் எவர்க்கும் 72

விற்பனையாய் இளநீரில் கஷாயம் செய்து
வெண்ணைவடி கொடுத்துவிடு வற்மம்தீரும்
கற்பனையாம் கையிடையில் "கவளிக் காலம்"
கனமான மூன்றுவற்மம் இதுவே ஆச்சு
இப்படியே பெருவிரலின் இடையில் வற்மம்
இடஞ்சலாய் பித்தவேட்கை குணமொன்றாகும்
முப்பிறவி உள்ளோர்க்கு கிட்டும் இந்நூல்
மூடருக்கு கிட்டாது இந்நூல் என்றேன். 73

என்று அறிந்த வற்மமது கொண்டபேர்க்கு
இருக்கையிலே ஓராண்டு கழித்தபின்பு
நன்று அறிந்த விதமுடனே விதனமாக
நாடிவரும் விப்புருதி வெடிப்புமாகும்
குன்று அறிந்து தீர்க்க அவன் சொன்னபோது
குறையாமல் கருஞ்சீரகத் தைலம் வாங்கி
மன்று அறிந்த சீரகத்தை வாங்கி மைந்தா
மயமான சிவன்வேம்பு தைலம் சேர்த்து. 74

சேர்த்துடனே மண்டலம்நீ கொண்டாயானால்
தீர்ந்துபோகும் இந்தவற்மம் திடமேகொள்வாய்
பார்த்துடனே கருத்தாகச் சொன்னேன் மைந்தா
பகருவேன் மறுகரத்தில் அதுபோலாமே

நேர்த்தியாய் தொண்டையிலே "பதக்கக் காலம்"
நேரான வறுமமது கொண்டதானால்
சார்த்தியமாய் கால்தன்னை பின்னிழுக்கும்
தயவான பக்கவாத மதுவுண்டாகும். 75

ஏகுமடா துடைமுதுகில் "ஆமைக்காலம்"
இயம்புகிறேன் மூன்று வர்ம குணமொன்றாகும்
போகுமடா இந்தவர்மம் கொண்டதானால்
பொருத்தசைத்து கால்நடக்க ஒட்டாதென்றேன்
ஆகுமடா இந்தவர்மம் கொண்டதானால்
வசதியுடன் உளைச்சலது மிகவும் காணும்
நோகுமடா துடைமுதுகு சதைகள் தானும்
நோயுற்றவன்போல நடக்க வொண்ணாதே. 76

இன்பமுள்ள காலதிலே "மூட்டு வற்மம்"
இயல்பான மூவிரலில் "பக்க வர்மம்"
நன்பமுள்ள இருவிரலில் "நாய் தலைவற்மம்"
நலமான அசைவில் "திருக்கண் வற்மம்"
குன்பமுள்ள "வெருதை வற்மம்" ஆறும் கொண்டால்
கூடுவிட்டு பிரியும்வரை முடவனாகும்
வன்பமுள்ள இதற்க்கெல்லாம் மருந்தேயில்லை
வர விஷமுட்டித் தைலம் போடத்தீரும். 77

தீருமே முழங்காலில் வறுமம் கொண்டால்
திறமான மையமதில் "குதிரைமுகம்தான்"
ஆகுமே காலமது கொண்டபேர்க்கு
அடைவான அதிக விஷமேவுமப்பா
நீரும் மெய்த்தலத்தில் விரணமாகி
நிர்ணயமாய் புண்ணதில் புரையுமாகி
பாருமே பராபரத்தின் கிருபையாலே
பகரும் விஷப்பச்சை எண்ணை தீரும் கண்டாய் 78

கண்டாயோ அங்குலத்தின் நாலின்கீழே
கனமான "கோம்பேறி வர்மம்" ஆகும்
விண்டாயே வியர்த்து மெல்ல விஷமேஏறும்
வீசியதோர் சன்னிவரும் பிழையதாகும்
மண்டத்தில் யாரிவார் இந்த செய்தி
மகத்தான திரித்தயிலம் அதுவால் தீரும்

கொண்டாயோ கஞ்சியொடு கஷாயம் சொன்னேன்
குணமான பரிகாரம் சூர்ந்து செய்யே. 79

செய்யப்பா மூவிரலின் கீழேதானே
திறமான முன்நரம்பில் "முடிச்சு மையம்"
மெய்யப்பா சன்னிவரும் கோணச்சன்னி
விதமாக செயல்குணத்தை விரும்பக் கேளு
நையப்பா சீதம்வரும் முகத்தைக் கோணும்
நயம்பெறவே சரீரமெல்லாம் முறுக்கி காணும்
பையப்பா விசைநரம்பு தளர்ச்சி காணும்
பாங்கான மரணமது மூணில்தானே. 80

கொல்லுமென்றால் குணமாக விந்நூல்பாரு
கொல்லாமல் குருபக்தி மனதில் வைத்து
வெல்லுமென்றால் இதுவிபரம் நன்றாய்ச் சொல்வேன்
வெற்றியென்ற மூலிதனை தாக்கிப்போடு
சொல்லுமென்ற நல்லுயிராய் இருந்ததானால்
சுகமான தீத்தைலம் மூழ்கிவாநீ
அல்லுமென்றால் அலுத்துயிராய் மரணமாகும்
ஆண்டிரண்டு கழித்தால் மரித்திடாதே. 81

மரிப்பதற்கு மூவிரலில் "பாத சக்கிரம்"
மதியான வற்மமது கொண்டபேர்க்கு
இருப்பதற்கு கண்குளிரும் இருமல் காணும்
இசைபாதகம் தோன்றும் இருக்கவொட்டாது
தரிப்பொருநாள் பிரிந்தாலு நாள் கழித்தால்
தான்தெரியும் பச்சிலையை தாக்கச்செய்வாய்
வரிப்பெரிய வறுமமது தீர்ந்துபோகும்
வசைவதற்கு வசைவெண்ணை மேலே பூசே. 82

செய்யவே அங்குலந்தான் நாலின் கீழே
செயலான பெருவிரல் இடையில்தானே
"பய்யவெற்றி இடைவற்மம்" அதற்கு பேராம்
பாரிடையில் குத்தினால் ரெத்தம் வராது
உய்யவே உளைச்சலது காணும் காணும்
உயர்ந்த திருமேனி எண்ணெய் மூழ்கச்சொல்வாய்
நெய்யவே இந்தவற்மம் தீர்ந்து போகும்
நெய்போன்ற எண்ணெயதில் மூழ்குமூழ்கே. 83

நலமான பெருங்கண்ணில் "பூமிக் காலம்"
நாடுமடா இந்தபெரு வற்மக் காலம்
காலமது சொல்கின்ற கருத்தைக்கேளு
கடினமுடன் நரம்பிளகிக் கண்ணில் போகும்
ஓலமது நோயாளியை இருத்திக் கொண்டு
கையதையும் நலமாக உயரத்து வாங்கி
நாலுநாளைக்கு எண்ணைதனை போட்டு நன்றாய்
நரம்புகளில் தடவநன்றாய் வற்மம் தீரும். 84

பச்செலையை அறியாத பாவிஎல்லாம்
படைக்காக கச்சைகட்டி மாண்டுபோவார்
சிட்சை வெறும் ஆசானால் பேரும் பெற்று
இருதயத்தில் இவரைப்போலில்லை என்று
அச்சுதனும் ஆயானும் அறியாமூடர்
அகத்தியனார் அறிந்துரைத்த வெற்றிநூல்கள்
பட்சமுடன் யாரரிவார் இதினால்தானே
பாருலகில் வாதைகளுக்கு அருமைதானே. 85

தானான வெற்றியென்ற பச்சிலையைக் கேளு
தயவான நீர்க்கரையில் தணிந்துநிற்கும்
வானான வயது நூறு ஆகும் அது
வகைதெரிந்தோர் மணங்கமழ "வல்லாரை" என்பர்
தேனான சித்தருக்கு காட்டியமூலி
செய்கருமம் குருமுடிப் பகத்திமூலி
நானான காலத்துக் கெல்லாம் ஆகும்
நவலோக உறுப்புகளில் அசைவுக்காகும். 86

ஆகுமிந்த மெய்தீண்டாக் காலமெது
அலங்காரச் சுவட்டுமுறை அறிவதேது
போகுமிந்த சுவடதிலே பெருக்கமது
போக்குட்ட மலைதாங்கி மூலிஎது
ஏமிந்த மானிடரே இந்தப் புத்தி
எவ்வுலகும் கொழிஞ்சிபோல எங்குமுண்டு
வாகுமிந்த் பொருள்அறியக் கருத்தைக் கேளு
வளமான கல்லோ தெரித்துப் போகும். 87

அதுஉனக்கு வேர்பிடுங்கு முறையைக் கேளு
அடர்ந்துவள் மூலியுட மூட்டில் சென்று

ஊதுபட வேரைவாங்கி மணியாக்கி
மணியாக்கி அதனையே வாயில்கொண்டு
வாதுபட படையதுபோல் வந்திட்டாலும்
உள்ளபடி எவ்வளவு ஜனங்கள் மாளும்
காதுபட இந்த வற்மம் சூட்சுமமாகும்
கற்றறிந்து கொண்டோர்க்கு அச்சமில்லை. 88

ஓங்கியே எண்ணற்ற ஜனங்கள் மாளும்
ஏகாந்த "மெய்தீண்டாக் காலமாகும்"
பாங்கியே முன்அந்தம் பின்அந்தம் போட்டு
பாங்குடனே ஒன்பது சுவடுவைத்து
நீங்கியே முகம் நோக்கிச் சுண்டும்போது
நிச்சயமாய் மயங்கிடும் பின் மரணமாகும்
வாங்கியே வேரைதேடி வைத்துக் கொண்டு
வற்மகுரு கிருபையுடனே தாக்கிப் போடே. 89

மரணமென்ற பிடிசிலம்பு இதற்கு ஒவ்வாது
மகத்தான மந்திரமும் இதற்கு ஒவ்வாது
நரணமென்ற தொடுவற்மம் அடக்கக் காலம்
நவலோக வல்லாரை ஆகும் சொன்னேன்
கருணமென்ற படுவற்மம் அடக்கக் காலம்
கருநாகவேலி எனும் பருத்திதானே
தரணியிலே இம்மூலி இரண்டும் கண்டால்
தாமதியாமல் வற்மமெல்லாம் தாக்கிப் போடே. 90

நாருகின்ற கைஎலும்பு துண்டுநாலு
தயவான காலெலும்பு துண்டு நாலு
ஆருகின்ற உறுப்பு சந்தில் நுப்பத்திரண்டு
அழகான குறுக்கெலும்பு முப்பத்திரெண்டு
வாருகின்ற வரிஎலும்பு பதினாறு ஆகும்
வளருகின்ற சிரசு தன்னில் மூன்றேயாகும்
நாருகின்ற நாசியின்மேல் நரம்படியில் துண்டு
நாலு நலம்பெறவே கழுத்திலே கண்டமாறு. 91

கண்டமென்ற கொக்கிதனில் உறுப்புநூறு
கனத்ததொரு கேசாதிபாதம் நரம்பு எழுபத்தீராயிரம்தான்
துண்டமென்ற படுவர்மம் பன்னிரெண்டு
தொடுப்பாக தொடுவற்மம் தொண்ணூத்தாறு

அண்டமென்ற மெய்தீண்டாக் காலம்ஒன்று
ஆதாரம் இதுவெல்லாம் சொன்னேன் மைந்தா
மண்டலத்தில் யாரரிவார் இந்த செய்தி
வறுமத்தில் நரம்புமுதல் அடைவாய்ச் சொன்னேன். 92

சொன்னதொரு கஞ்சிமுதல் கஷாயம் எல்லாம்
சுகமான தைலமொடு முக்கூட்டெண்ணை
மன்னியதோர் ஒற்றலொடு பொடியும் நல்ல
வகையான கைமுறையுஞ் செய்முறையுஞ் சொன்னேன்
பின்னியதோர் நரம்புதனை பிடிக்கச் சொல்வேன்
பேதமில்லா ரோகமெல்லாம் தீர்க்கச் சொல்வேன்
உன்னியதோர் கருத்துடனே உனக்கு சொல்வேன்
உள்ளமுறை உள்ளபடி உறைப்பேன் கேளே. 93

கேளப்பா திரிகடுகு திப்பிலி மூலம்
கெடியான உளிஞ்ஞையோடு சிற்றாமுட்டி
நாளப்பா பழந்துணியில் கிழியாய்க் கட்டி
நலமான அரிசிஉரி அதன்மேல் போட்டு
வாளப்பா கஞ்சியதாய் பத்துநேரம்
வளமாக கொடுத்துவிடு வற்மம் போமே
மீளப்பா இந்தமுறை யாரோ சொல்வார்
மிக்களதுவும் தெரிந்ததுபோல் நடக்கஒன்னாதே. 94

போமதுரம் திரிகடுகு திப்பிலியின் மூலம்
பொருந்தவே சீரகமும் யீருள்ளியும்
வாமே குன்றிவேர் அறுகின் வேரும்
வகையான கடலாடி உளிஞ்ஞை வேரும்
நாமே இவையெல்லாம் சதைத்து வ்ங்கி
நலமான அரிசியிட்டுக் கஞ்சியாக
தாமே மருந்தெல்லாம் கிளியாய்க் கட்டி
நன்மையுள்ள கஞ்சிவைத்து குடிக்கும் போது. 95

புளிப்புள்ள வகை எல்லாம் தள்ளிப் போடு
புத்தியுடன் பத்துநாள் குடிப்பாயானால்
எளிப்பான ஈளையோடு இருமல் தாகம்
எப்பிணைப்பு இடுப்புவலி இழுப்பதென்ன
சுளியான காலமெல்லாம் தீர்ந்து போகும்
சூட்சுமமாய் இந்தமொழி சாற்றினேனே

வெளியான இந்நூலின் மருந்தையெல்லாம்
வெகுளிபோல் பேசுவோர்க்கு சாற்றிடாதே. 96

சாற்றினேன் திரிகடுகு மதுரம்ஏலம்
தயவான வெந்தயமும் பூர ஓமம்
ஆற்றினோம் வாசகொட்டம் மிருகராசி
வசி அழகான மேதையொடு புனுகும்சேரு
தேற்றினோம் முருங்கு தெங்கு முருங்கைப்பூவும்
செபலான இசங்கு தூதுவளைப் பூவும்
பாற்றினோம் பூனாகம் மஞ்சாடி வில்வப்பூவும்
வீசும் பாங்கான மாதளம்பூ ஐந்தும் கூட்டே. 97

கூட்டியே களஞ்சு வகைக்கு ஒன்றேயாகும்
குங்குமப்பூ கோரோசனையும் களஞ்சு ரெண்டாம்
வாட்டியே இதுஎல்லாம் இடித்துத் தூளாய்
வளமான குழியம்மி தன்னில் போட்டு
ஆட்டியே கொம்பரக்கு சதைத்து நீரில்
அழகாக ஒருஜாமம் அரைத்துக்கூட்டி
கூட்டியே ஒருஜாமம் பசுவின் பாலில்
குணமாம் பொன்னாவரையின் சாற்றால் ஆட்டே. 98

ஆட்டியே குளிகையது துவரைபோல
அழகான கஷாயத்தில் அரைத்துத் தாக்கு
வாட்டியே வற்மமெல்லாம் தீர்ந்து போகும்
வகையான ஈழை மந்தார காசம்
சூட்டியே அஸ்திசுரம் சுவாச காசம்
சுகமான உள்வற்மம் ஈடுரோகம்
தீட்டியே இரு குளிகையாகுமே கேள்
திறமான வறுமாண்ணிக் குளிகையாமே. 99

ஆகுமே நீர் ஆலமரத்தின் பிஞ்சுதானும்
அழகான நாயுருவி நுள்ளிவித்தும்
நாமே நீர்வகைக்கு ஒரு களஞ்சாக
நலமான பொரிகாரம் லிங்கம் பூரம்
போமே நீர் மதுரமொடு திரிசாதி திப்பிலியுங் கூட்டே
பொங்கமுடன் வகைக்கு ஒரு களஞ்சாமே
ஆமே நீர் இதைஎல்லாம் இடித்து நன்றாய்
அழகான குழிஅம்மி தன்னில் போடு. 100

போடப்பா கதலியுடைய பழத்தின் சாற்றில்
பொருந்தவே அரைத்திடு ஜாமம் ஒன்று
ஆட்டப்பா ஒரு ஜாமம் குமரிச்சாற்றில்
ஆகுமொரு ஜாமம் வெற்றிலையின் சாற்றில்
நாட்டப்பா மைபோலே அரைத்துக் கொண்டு
நலமான மாத்திரை சிறு பயரதாக
நீட்டப்பா குளிகையது கொடுக்கும்போது
நிசமான சீதவலி சன்னிபோகும். 101

போகவே கஷாயமொன்று சொல்லக்கேளு
பொருந்தவே சுண்டவேர் ஆடாதோடை
ஆகவே பணபூதாக்கு வேரும்
ஆகுமோ ரிலைமூலி இசங்குவேரும்
ஏகதுணை கத்தரி செந்தட்டி சேர்த்து
இடித்து எடுத்து குருணி நீர் தண்ணியில் போட்டே
போகவே இவையெல்லாம் போட்ட பின்பு
போகருடைய கிருபையாலே இன்னும் கேளே. 102

போடடா அதிமதுரம் பலம்தான் ஒன்று
புதுமையுடன் நல்லதொரு சுக்கும் சேர்த்து
ஆரடா கொம்பரக்கு பலம்தான் ரெண்டு
ஆகும்வகை இவைஎல்லாம் சதைத்துச் சேரு
சேரடா கடாட்சமுடன் கன்லை மூட்டி
சரியாக அதில்பாதி யாகும் பாரே
பாரடா கஷாயத்தில் நாழிவாங்கி
மைந்தனே மறுசட்டி வைத்துக்கொண்டு. 103

கொண்டிடுவாய் கோழிரெத்தம் விட்டுமைந்தா
குணமான திப்பிலியின் பொடியும் கூட்டு
இண்டிக்கு போதருந்த வைப்பதானால்
ஒருவைப்பு இரவிமதியில் வைத்துக் கொள்ளே
விண்டிடும்பார் மேனோக்கு மீழையோடு
மிக்கதொரு சயரோகங்கள் எல்லாம்தீரும்
அண்டிப்பார் அண்டமெல்லாம் இடித்தாற்போலே
பதிவான பத்துவற்மம் அடங்கல் தீரும். 104

ஆலைதிரிகடுகு மதுரம் தேவதாரம்
அழகான முந்திரி கொம்பரக்கு சீரகம்

வாலையென்ற கொத்தமல்லி கீரிசாறு
வளமான திப்பிலி ஈருள்ளியோடு
காலைஇவை வகைமூன்று களஞ்சு வீதம்
கனமான குறுந்தொட்டி கொடுப்பை மூலம்
பாலைவனம் பூண்டு வல்லாரை இசங்கு
பண்டு கண்டங் கத்தரி தூதுவளையாமே. 105

திரியான பொடுதலையும் ஆடாதோடை
தீங்குவராது இம்மருந்து பலம்தானொன்று
வரியான செந்தெங்கு இளநீர் வெள்ளம்
வகைவகைக்கு பலமதுவே பத்துமாகும்
பரியான மருந்தெல்லாம் சேர்த்து வாங்கி
பத்திரமாய் வெள்ளத்தில் கஷாயம் செய்யே
சரியாக முன்னாழியாகும் போது
சாற்றினோம் மறுநாள் தயவாய்க் கொள்ளே. 106

சாரப்பா சயம்மாறும் கபங்கள் மாறும்
சலிப்பான எப்பிளைப்பு விதமே மாறும்
நேரப்பா சுமைமாறும் புளிப்பு காந்தல்
நெஞ்சுளர்வு தீருமப்பா நிச்சயம் சொன்னேன்
பாரப்பா வற்மவகை எல்லாம் தீரும்
பரமபிதாவின் அடிதனையே வணங்க வேண்டும்
சேரப்பா செய்குருவின் பாதம்போற்றி
பொறுமையுடன் அறிந்துநீ பெருமை சொல்லே. 107

சொல்லவே திரிகடுகு பலம்தானொன்று
சொல்பெரிய மதுரமொடு தேவதாரம்
நல்லதொரு அரத்தையொடு கோட்டம்தானும்
நற்றபுல் அமுக்கிறா இவைகள் இரண்டும்
பல்புகழ் கீலுடனே முத்துச் சிப்பி
வகையான இருவேலி மிச்சுதேக்கு
எல்லைபெறும் மேல் மணிக்குந்திரிகம்,
இயல் சனிநாயகம் நாகவிஷம் தானே. 108

தானேகேள் கண்டிவெள்ளை பூக்காய்மோதம்
தயவான வதிநாகம் வேப்பம்பட்டை
மானேகேள் காயமொடு கீரிச்சாறு
மயமான கருஞ்சீரகம் தற்கோலம் தானே

தேனேகேள் திரிசாதி ஏலம் குப்பை
சிறந்ததொரு கடல்நுரையும் சிறுநாகப்பூ
நானேசொல் மருந்தெல்லாம் இடித்து மைந்தா
நலம்பெறவே வகைவகைக்கு கழஞ்சுரெண்டே. 109

ரெண்டான ரவிபோன்ற ஆவின்நெய்யும்
இரவிமதி புங்கெண்ணை செந்நெல் நெய்யும்
கொண்டான விளக்கெண்ணை ஐந்தும் கூட்டி
குணமாக வகைவகைக்கு படிதான் ஒன்று
நன்றான ஆவினுடைய நல்லபாலும்
நலமான மேதிப்பால் மதசிப்பாலும்
ஒன்றான தாய்ப்பாலும் வாங்கித்தானே
ஒகோகோ சுவராதி எண்ணெய் சொல்வேன். 110

எதுவான உண்மையுள்ள நிம்பளச்சாறும்
என்மகனே எட்டிச்சாறு மட்டிச்சாறும்
அதுவான வேப்பற்றிப் பழத்தின் சாறும்
ஆகவே ஒருபடி ஒன்றாய் எடுத்து
இதுவான சந்தனமும் வேங்கைக் காதல்
இயல் கருங்காலி பொன்னாவரையின் பட்டை
மதுவறி விதியால் அரசுப்பட்டை
மாகுறுந்தட்டி வகைவகைக்கு பலம்பத்தாமே. 111

ஆகவே நால்மரக்கால் நீர் கஷாயம் செய்து
அடைவான அஞ்ஞானியாகிக் கொண்டு
வாகவே பெரிதான உருளிதன்னில்
வகையான மருந்துமுதல் எண்ணெய் பாலும்
போகவே கஷாயமது சேர்த்தபின்பு
பொங்கமுடன் எருக்கிலையும் மேனி நொச்சி
தயவாக வல்லாரை கொடுப்பை வெற்றி
தயவாக கைதோன்றி சங்குக் குப்பி 112

சங்கென்ற வகைவகைக்கு படிதான் பாதி
தயவுடனே ஒன்றாக்கிக் கலந்து கொண்டு
பொங்கியே போகாமல் அணைத்துக் கட்டி
பொருந்தவே தீமூட்டி பதமும் பார்த்து
மங்கிடா சட்டமுடன் வெட்டிவேரும்
வகையான பழம்பாசி மிச்சத்தாலே

எங்குமொரு நிலையாத கடவுளுக்கு
எண்ணையதை வடிகட்டி பூஜைசெய்யே. 113

செய்யவே அந்திசந்தி பத்துநேரம்
செயலாக நல்லவெந்நீர் முழுகச் சொல்லு
கைச்செவயாய் இத்தயிலம் செய்யும்போது
கண்டதொரு படுவர்மம் பன்னிரெண்டும்
உய்யவே தொடுவர்மம் தொண்ணூத்தாறும்
உயர்ந்ததொரு படுவர்மம் எல்லாம் தீரும்
ஐய்யய்யோ புதுமைஇதை அறிந்து கொள்ளே
அப்பனே இதன் போக்கு புதுமைதானே. 114

கொள்ளப்பா வாதபித்த சிலேத்துமங்கள்
கொடிதான சூனியங்கள் கடிவிஷங்கள்
பள்ளப்பா பேய்பூதம் பசாசு ஆனாலும்
பலநரம்பு தேற்றலுடன் பிசகானாலும்
நல்லப்பா பயித்தியங்கள் பலதுக்கெல்லாம்
நலமாக நானுரைத்தேன் தைலம் தன்னை
வள்ளப்பா வைத்திருந்து சிரசோடெங்கும்
வளமாக பூசிடுநீ பத்து நேரம். 115

நேரமாம் குறுந்தட்டி கூவளம்தான்
நிசமான சங்குகுப்பி எட்டிவேரும்
வாருமந்த வகைவகைக்கு பலமதாகும்
வளமான மருந்தெல்லாம் சதைத்து வாங்கி
ஆருமந்த நால்மரக்கால் நீர்கஷாயம் வைத்து
அழகாக நாழியது வாங்கிக் கொண்டு
காருமந்த வல்லாரைச் சாறுநாழி
கருத்தாக நல்லெண்ணை படிதான்சேரு. 116

சேருநீ சீரகம் பலந்தானொன்று
சித்திரமா மகரமேதை களஞ்சுசேரு
காருநீ அதுதன்னை மெழுகாப் வாங்கி
வகையாக மேலிட்டுத் தடவுவாயே
சீரு நீ இது தன்னை மெழுக நன்றாய்
சித்திரம்போல் ஒடிமுடங்கள் எல்லாம் போமே
வேறு நீ விஷநரம்பில் குற்றம் தீரும்
விஷமான காச்சலுடன் விஷமுந்தீரும். 117

தீருமடா குமரிச்சாறு நாழிவாங்கி
திறமான ஆவின் நெய் படிதானொன்று
வாருமடா சீரகம் ஏலம் சுக்கு
வகையான திப்பிலியும் மதுரந்தானும்
சீருமடா மருந்தெல்லாம் பொடித்து வைத்து
திறமான எண்ணெய் மெழுகாய் செய்து
பாருமடா எண்ணெய் அதை மெழுகநன்றாய்
பத்திரமாய் ஓடி முரிவுக்கு தடவலாகும். 118

ஆகுமிந்த பாலனுக்கு கணைரோகங்கள்
அடைவாக வந்ததொரு வற்மம் எல்லாம்
தாகுமிந்த பச்சையாம் வறுமமெல்லாம்
தயவாக தீர்ந்துவிடும் தரணிமீதில்
ஏகுமிந்த குமரிஎண்ணெய் கொண்டபேர்க்கு
பொல்லாங்கே இல்லையடா கொழுக்கும் தேகம்
குழந்தைகட்கும் கெர்பிணிக்கும் கரண்டிவீதம்
கோணாமல் கொடுத்திடுவாய் குமரி எண்ணெய். 119

அழுத்தமாம் வெள்ளைக்கல் பாறைசுட்டு
அழகான ஈருள்ளி தேங்காய்ப்பூவும்
பழுத்தான மருந்தெல்லாம் விரவி வாங்கி
பத்திரமாய் துணியதிலே வைத்துக் கொண்டு
வழுத்துமொரு வெள்ளைக்கல் எடுத்துமைந்தா
வகையான கிழியில் வைத்து ஒத்தல் நன்றே
சுழுத்தான வலி வீக்கம் ரத்தக்கட்டும்
சுருக்காக தீர்ந்துவிடும் உண்மையாமே. 120

வர்மத் திறவு கோல்

ஓம் நமசிவாய நம

அண்டசராசரம் கடந்த அருளே போற்றி
ஆனந்த பராபரத்தின் அருள்தான் போற்றி
குண்டெலிக்குள் மறைந்துநிற்கும் குகனே போற்றி
குருஅருளே அனுதினமும் குறையாய் போற்றி
கண்டகண்ட நூல் பார்த்து கலங்கிடாமல்
கண்மணியை பூரணத்தில் வைத்து கருத்தாய்நில்லு
எண்டிசையும் போற்றும் இந்நூல் எல்லோருக்கும்
எட்டாது என் மகனே உனக்கே சொன்னேன். 1

பூரணமாய் பீரங்கி நூற்றுக்குள்ளே
பூட்டிவைத்தேன் வற்மத்தின் புதுமைஎல்லாம்
காரணமாய் சூத்திரம்தான் ஐம்பதுக்குள்ளே
கைகண்ட மருந்துவகை கருத்தாய்ச் சொன்னேன்
தாரணியோர் பிழைப்பதற்கு திறவுகோலை
சாற்றினேன் பதினாறில் அடக்கமாக
ஆரணத்தில் குகன்பொருள் அறிவாய் நின்ற
அனாதியான பொருள்தான் அதற்குக் காப்பே. 2

காப்பாகப் பொறிபட்டு மயங்கினோரை
கருத்தாகப் பார்ப்பதற்கு குறிதான் கேளு
பார்ப்பதுவே கண்வட்டம் பாய்ந்து சுக்கிலம்
பரிந்துடுமாம் நீர்வளங்கள் பாழ்தானே
சார்ப்பதுவே இளக்குதற்கு குறிநாலுண்டு
சாகுறியும் நாடிநிலை சரியாய்ப் பாரே
பார்ப்பதுவே உள்ளநிலை சரியாய்ப் பார்த்து
பயமின்றி செய்முறையை சரியாய் பாரே. 3

பாரப்பா நால்குறியும் சத்தத்தோடே
சாற்றுவேன் நால்குறியும் சரியாய் கண்டால்
சீரப்பா பிழைப்பதற்கு ஐயம் வேண்டாம்
திடமான சற்குருபாதம் சிரசில் வைத்து
ஆரப்பா அறைவீட்டில் அமைத்திருந்து
ஆளதனை அடக்காலில் எடுத்திருத்தி
கூறப்பா கூம்பில் கைமுட்டைக் கொடுத்து
கீழ்நாடியை கையில் ஏந்திக் கொள்ளே. 4

ஏந்தியே முட்டுநீ வளைத்துக் கொண்டால்
ஏங்கியே சுவாசமது நேரேயாகும்
சாந்தெனவே வலமார்புமுதல் தடவிக்கொண்டு
தாங்கியே இடக்கையில் கோரிக் கொள்ளு
சார்ந்த உடன் இடமார்பும் அதுபோலப்பா
தப்பாமல் இறையொன்று இளக்கிக் கொள்ளு
அத்தனையும் மும்மூன்று வளையஞ் செய்வாய்
அப்பனே நேரேதான் தடவு மூன்றே. 5

நேரேகை முன்னுபின்னும் மூன்றானப்பா
முன்பின்னும் கத்தரிக்கோல் மாறலாக
சாரேநீ சான்றோர்கை பாகம்காணு
சண்டாளர் தடவுமுறை தவறொண்ணாது
சான்றோர்கள் அளவுதப்பி நடக்கவேண்டாம்
அதுகடந்தால் கீழ்நாடிவிரல் ஒன்றுக்குள் ஊன்றே
ஊன்றடா நடுவிரலில் இறையோ ஒன்று
ஊன்றிடவே கண்முழிப்பான் உண்மைதானே. 6

உண்மையுடன் தான் இளக்க உறுதிகேளு
ஊன்றடா அண்ணாக்கில் விரல் நாலுக்குள்
வன்மையுடன் பெருவிரலால் ஊன்றிப்பார்த்து
மறப்பான கண்அதனை பார்த்துக்கொள்ளு
நன்மையுடன் அதற்குமேல் வலத்தேகையை
தாக்கடா புறங்காதின் புறத்தே குண்டில்
கண்வட்டாய் பாம்புவிரல் இறைதான் ஒன்று
பற்றியே இறுபுறமும் ஏந்தித் தூக்கே. 7

தூக்கவே கண்விழித்து எழுந்திருப்பான்
துரிதமுள்ள சர்வாங்கம் இதுதானப்பா
ஆக்கையிலே சுக்கிட்டு சாமைஅன்னம்
அருமையுடன் கொடுத்துவிடு அவிழ்தமாமே
பார்க்கையிலே கடைவாயில் புறத்தேமூணில்
பாலகனே விரல்வைத்து ஏந்திக் கொள்ளு
நோக்குமுன்னே எழுவான்என்று நுட்பமாக
நூல்பார்த்துக் கயிறேஆயி அறிந்து கொள்ளே. 8

கொள்ளுதற்கு ஜன்னி வெட்டு கொண்டதென்றால்
பெருவிரல் இடையோதன்னில் ஓரிறைதான் தள்ளி

மெள்ள வெட்டியே பிடிப்பாய் ஜன்னி போகும்
கள்ளமில்லை வற்மமுடன் மயக்கம் தீரும்
உள்ளபடி கை கண்ட உண்மையப்பா
உண்மை கைகண்ட காலடங்கள் முறைதானப்பா
உள்ளபடி கைக்குளியில் ஓர்பிடிதான்
உத்தமனே பிடித்தூன்றித் தூக்குவாயே. 9

தாய்மொழியாய் வழுவில்லாச் சொல்லி வைத்தேன்
தரணியுள்ளோர் பிழைப்பதற்கு வகைதானப்பா
தாய்மொழியாய் நெற்றிமுடி தன்னில் நின்று
தப்பாமல் பதினொறு விரலில் தானே
காய்பழுத்த கனிபோல கடுகளவு விதிகை காட்டி
குருமுறையாய் உண்மையின் தளத்தைக் கண்டால்
நாய்போல அலைவானே சீவன் போகா
நவமணிபோல் தமரொன்றும் நன்றாய்க்காணே. 10

நன்றாக காணவென்றால் ஜீவன்போனால்
நலமாகக் காணுமடா துவாரம் ஒன்று
குன்றாதே ஒருவருக்கும் சொல்லவேண்டாம்
குருமொழியாய் குருதொட்டுக் காட்டவேணும்
மன்றாடி மான்போலே மருவுவோர்க்கு
வாய்க்காத முறையுண்டோ வையகத்தில்
தன்பெருமை கொள்ளாதே தவறிடாதே
சத்தியத்தை மறவாதே தயவாய்நில்லு. 11

நில்லென்று சொல்லிவிட்டேன் நிலத்துள்ளோர்க்கு
நிலைகுலைந்து மாத்திரைதான் மீறிற்றாக்கால்
வல்லவனே வறுமமது இளகிடாது
மதிமயங்கி கண்சிவந்து காணும் காணும்
அல்லலில்லை ஆசாமி மருந்துங் கையும்
அமைத்துவைத்தேன் அறிவுள்ளோர் அறிந்து கொள்வார்
தொல்லை இல்லை வேலிதனை புழிந்தசாறு
சுறுக்கமாய் பாதம்முதல் உச்சிமட்டே. 12

மட்டாகத் தானிட்டுத் தேய்த்துக் கொண்டு
வளமாகப் பேன் குழியில் விரலை ஊன்றி
திட்டமதான் மாத்திரைதான் மிஞ்சிவந்தால்
தூக்கி விட்டு மறுபுறத்தில் உதறிநன்றாய்

தட்டமதாய் உச்சியிலோர் அடியடித்து
    தட்டிவிடு குறுக்கதிலும் தயவதாக
விட்டகுறை உள்ளவர்க்கு எய்தும் எய்தும்
    மேல் முறையாய்த் தலமொன்று விளம்பக் கேளு 13.

விளம்புவேன் "ஆசாமிக் காலம்" ஒன்று
    வீண்போன ஜீவன் வரும் மேன்மையுண்டாம்
களங்கமில்லாத அடக்கமொன்று கருத்தாய்க் கேளு
    காதில் முன்குறுத்தின் கீழ்இறை அறையில்
வளக்கமுடன் நெல்போல குழிதானுண்டு
    வளமான அணிவிரலால் ஊன்றி தலையிளக்க
மளுக்காக மயக்கம் விட்டு ஜீவனுண்டாம்
    மானிடனே விள்ளாதே மேன்மை போச்சே. 14

போச்சென்று எண்ணாதே பெலம்கொள்ளாதே
    பொய்யென்றும் சொல்லாதே பொருந்தச்சொல்லு
ஆச்சப்பா அடங்கல் முறை அடக்கிச் சொன்னேன்
    ஆசானை அடுத்திருந்து அறிந்து கொண்டால்
மூச்சப்பா விடுமுன்னே ஜீவன்வந்து
    மூடிவைத்த சவம்எழுகும் முற்றும் சொன்னேன்
ஆச்சப்பா இளக்கு முன்னே அசாத்தியம் கண்டால்
    அகன்றுவிடு நில்லாதே மாண்டுபோமே. 15

போகுமுன்னே கெடுவதிலே இளக்கிக் கொள்வாய்
    பூட்டெல்லாம் திறந்துவைத்தேன் புதுமையாக
ஆகுமிந்த புத்தி உனக்கு இருந்ததானால்
    அஞ்சாதே அலையாதே அடுத்துப் பாரு
ஏகுமுன்னே இல்லை என்னை தியானம் செய்து
    என்குருவே தஞ்சமென்று எழுந்து போவாய்
வாகான ஐந்தெழுத்தில் ஓதிப்போடு
    வளமான திறவு பதினாறும் முற்றே. 16

வற்மாணி

ஓம் நமசிவாய நமக

"திலர்த காலம்" நெற்றியின்கீழ் கண்புருவ நடுவில்
நிச்சயமாய் காலமது திலர்தம் பாரு
பற்றியதை வீழ்த்தும் முறை பகரக்கேளு
பதறாமல் சாண்தூரம் கையும் ஓங்கி
சுற்றியே இடித்துவிட விழுவான் பாரு
சோரை கண்டால் பிழையாமல் மரணமாகும்
வெற்றிகெடக் கண் சிவக்கும் அறிவழியும்
வீணாக வேர்வையோடி விழுகும் பாரே. 1

புத்தியொடு பின்னாக நேர்மை பார்த்து
புகழான பேன்குழிமேல் கைவிரித்து
கர்த்தனையே தெண்டனிட்டு தட்டிப் பின்னால்
காரியிலே அமுக்கிவிடு கணக்கைக்கேளு
உத்தமனே மூன்றேமுக்கால் நுப்பதல்ல
உறுதியோடு முப்பதுடன் ஏழரைதான்
சித்திரமாய் ஓமமது சுன்னமாகும்
திறமாக பொடித்துமேனிச் சாற்றில் பதியே. 2

தண்ணவே தப்பளமும் இட்டுப்பின்னும்
தயவாக அதிமதுரக் கஞ்சிஊட்டே
திண்ணமுடன் திலர்தமோர் விரல் கீழாக
சிறப்பான வறுமமது "தாங்கல் காலம்"
நண்ணவே நாக்குளறும் வாயும்கோணும்
நலமாகச் சாமம் பற்றி சாமத்துள்ளே
எண்ணமின்றி நீர்பாயும் ஏழரைக்குள்
இளக்கிவிடு பேன்குழிமேல் உச்சியின் கீழ்
கண்ணயமாகவே தான் காரியிலும்
கருத்தாக அமர்த்திவிடு பரிட்சைதானே. 3

தாங்கக் காலத்தினுடை மூவிரலின் கீழே
தயவாக "குருந்து வ்ர்மம்" தப்பாதப்பா
பாங்காகச் சோரையொடு கண்சிவக்கும்
பகருவேன் இக்குறிகள் இல்லையாகில்

ஓங்கியே நாழீகைதான் பதினைந்தேகால்
உத்தமனே மூன்றேமுக்கால் மறுபுறத்தில்
தாங்கிபேன் குழியின்கீழ் கைஇருத்தி
சார்பாக தட்டிவிட சாற்றினோமே. 4

"சுண்டு மின்னி" நாணியது கீழுதட்டின்
சுழிப்பில் கீழ்நாடிநடுப் பள்ளமதில்
விண்டிடவே வற்மத்தின் குணத்தைக்கேளு
வீறாக சுண்டு மின்னி துடிக்கும் பாரு
கண்டிடவே கைதிரும்பி முறுக்கிக் கொண்டு
கைகண்ட சோதனையை கருதிப்பாரு
பண்டு முன்னோர் செய்தமுறை பலிக்கும் பாரு
பாரிலே சண்டாளர்க்கு ஈந்திடாயே. 5

அட்டிடவே கொம்பரியின் ஆறுவிரல் கீழ்
அறைந்திட்டால் "சங்கு முடிக் காலம்" அப்பா
கட்டியதோர் முடிப்புற்றால் பிழைக்கமாட்டார்
கண்தலையும் கிறுகிறுத்து மயக்கமுண்டாகும்
பட்டமுடனே நுரையும் பதைப்புமாகும்
பண்டிதனே நாக்குள்ளே வாங்கிக் கொள்ளும்
சட்டமாய்ச் சீதமொடு அயர்த்தி வேர்வை
சஞ்சாரமாகு மதன் தட்டும் சொல்வேன். 6

திட்டமாய்ப் பேன்குழிக்குக் கீழ் கைவிரித்து
இதமாக உச்சியிலே அமத்திக் கொண்டு
நட்டமின்றி கழுத்திலிரு பக்கம்தானும்
நாடிடுவாய் பிடரியையும் தடவிஆட்டி
அட்டமில்லா ஒன்பதரை நாழிகையில்
கண்ணுக்கு நற்பன்னீர் வெந்நீர் அருந்தி
இட்டமுறை தப்பாமல் செய்வீரானால்
ஏற்றசுகம் பெற்றிடுவீர் இகத்துள்ளோரே. 7

உள்ளபடியே "உறக்கக் காலம்" கேளு
உற்ற சங்குமுடிப்பின் கீழ் ஓர்விரல்தான்
கள்ளமில்லை நீரோடும் சங்கு கீழாகும்
காது மிகக் கேட்டாலும் கண்திறக்கும்
மெள்ள அரைக்கண்ணடைத்து விழிக்கும்நல்ல
மேனியுள்ளே கொண்டதண்ணீர் எதிரெடுக்கும்

தள்ளாமல் ஏழரைக்குள் முன்போல் செய்து
　　தளராமல் பேன்குழிக்குக் கீழ் தடவிக்கொள்ளே. 8

கொள்ளேநீ தானுறக்கக் காலத்தின் கீழ்
　　குணமாக "தொண்டைக்குழி" நால்விரல் கீழ்
உள்வாங்கும் நாக்கதுவும் விக்கலுண்டாம்
　　ஊச்சலால் போஜனமும் சுரமும் உண்டாம்
மெள்ளவே உச்சியிலே தட்டிநெஞ்சில்
　　வீரமொடு கையிருத்திக் கூடிச்சேர்த்து
தள்ளாமல் உதறிவிட சாதிபத்திரி
　　தனிமிளகு சர்க்கரையில் கூட்டிக் கொள்ளே 9

கூட்டியே உச்சியிலே "ஆகக் காலம்"
　　குணங்கேளு கண்சிறுக்கும் நாக்குத் தள்ளும்
வாட்டசுரம் உண்டாகும் மைந்தா கேளு
　　ஐந்துநாளில் வலுத்ததோர் சன்னியுண்டாம்
தாட்டமாய் உள்ளங்கால் பூட்டியே நாடியையும் பிடரிதானும்
　　புத்தியொடு பேன்குழிமேல் உச்சத்தின் கீழ்
நாட்டியே கைகளையும் வைத்து அமர்த்து
　　நலமாக காரியொடு பரிசைதானே. 10

தானான "பேன்குழியின் குணத்தைக் கேளு
　　சாற்றுகிறேன் வயிறேந்தி நாக்குத் தள்ளும்
மானேகேள் அயர்ச்சியொடு வேர்வையுண்டாம்
　　வருகின்ற சீதமொடு சஞ்சாரம்தான்
ஆனதொரு முடிப்பானால் மரணம் பாரு
　　அளவானால் திவளைக்கு கீழிருந்து
தான்மரணம் வரை தட்டித் தடவிக்கொண்டு
　　தப்பாமல் கைக்கூட்டித் தடவித் தூக்கி
நானென்று எண்ணாமல் உதறிவிட்டு
　　நாயகனே போற்றி உச்சி தட்டிப்பாரே. 11

பார்க்கவே பிடரிமுடித் தானந்தன்னில்
　　பதறாமல் சான்மூன்று அகலம் வாங்கி
சேர்க்கவே கைவிரித்து வெட்டி வீழ்த்த
　　செயலான "பிடரிக் காலம்" தான்கொள்ளும்
தீர்க்கமாய் வாய்பிளந்து நாக்குதள்ளும்
　　சிறப்பான கண்துடிக்கும் செவிகேளாது

ஆக்கவே பின்சிரசு குளிர்ந்து விடும்
அப்பனே கண்மூடும் அடுத்து கொல்லும். 12

கொல்லுமே மூன்றிலல்ல ஏழாம் நாளில்
முதுவற்மம் காலரைதான் முக்காலானால்
மெல்லவே இடம்வலத்தே ஏந்திக்கொண்டு
மேனி இருபுறமும் கழுத்துநாடி
வல்லஓர் பூட்டிருந்து தடவிப் பார்த்து
வலது இடது பக்கங்களும் அசைத்துப் பின்னும்
சொல்லவே சிரசை விதானம் நோக்கி
துணிந்து செய்வாய் வாதமொடு பரிசைதானே. 13

நன்றாக நாழிகையும் இருபத்தேழில்
நலமாகப் போம் அதிலும் கஞ்சியூட்டு
குன்றாத காலத்து "பூணி வற்மம்"
குறையாது இடக்கண் மேல் இமைக்குள்
போன்றது சுற்றிவிழும் நாக்கு தள்ளும்
புக்முற நெஞ்சிறக்கி சிரசில்தட்டி
ஒன்றான குறுத்து வற்மம் தாங்கக்காலம்
உறுதியொடு காலம் இடைவலமுந்தானே. 14

"கண்ணாடிக் காலம்" என்று கருதுவார்கள்
காதுரண்டு நாசியிலும் சோரை கண்டால்
எண்ணாதே காலன்வந்தான் திண்ணம் திண்ணம்
இறப்பிந்த மானிடர்க்கு இல்லையில்லை
பண்ணவே கொண்டபுறம் சாண்பணிவார்
பாரப்பா சரம் ஓடும் பக்கமதில்
கண்ணியமான காலம் தன்னில்
கையிருத்தி உச்சியோடு பேன்குழியும். 15

நண்ணுவாய்க் கண்கடைக்கண் அருகே காலம்
நாடினார் "நட்சத்திர காலம்" என்று
திண்ணமாய் நாலரைச் சாண் தூரம்வாங்கி
திறமாக அடித்துவிட விழுகுவானே
உண்மையாய் இந்தமுறை பிசகாதப்பா
உத்தமமாய் இவ்வற்மம் கொடும்பாவம்தான்
அன்னமாய் இந்த வற்மம் கொண்டதானால்
அப்பனே இதன்குறிகள் விபரம் கேளு. 16

விழுந்தாலோ முப்பதிலே மரணம் சொன்னேன்
    விதனமொடு கண்சிவந்து இமைதடுக்கும்
அழுந்துமே கண்தட்டி விழிக்கும் பின்னும்
    அப்பனே முகம்கோணும் மறுபுறத்தில்
எழுந்துநீ கைவிரித்து அடித்து உச்சிஇதமாய்
    தட்டிடுவாய் இவ்வற்மம் இளகிக்கொண்டு
உளுந்துடனே சீரகமும் இட்டுக் கஞ்சி
    உடன்தானே கொடுத்துவிடு உறுதிதானே. 17

உறுதியுடன் நட்சத்திர வறுமத்துக்கு
    உயரவே பொய்க்கண்கீழ் "கடைக்கண் பொய்கை"
உறுதியுள்ள பூட்டுவிசை மண்டைவிட்டு
    உத்தமனே கண்அதுவும் தளர்ந்து போகும்
உறுதியாய்ப் பக்கம் இருவிசைப்பூட்டில் கை
    ஊன்றியே பரிட்சையிலே தட்டிக்கொண்டு
உறுதியாய் கற்புகை யறவேளை
    உறிந்துவிடு நாசியிலே உறிஞ்சு கொள்ளே. 18

உறிந்தாயே திலர்தத்தில் நாலுவிரலில்
    ஊன்றுவாய் வலமிடங்கண் இமைப்பக்கங்கள்
அறிந்திடாய் அரைவிரலின் மேலே "பொய்க்கண்"
    அதுகொள்ள கண்சிவந்து உருளும் பாராமல்
தெரிந்திடுவாய் புலம்பலொடு சுரமும் தோன்றும்
    சிறப்பான மேலிமைகீழ் ஒன்றிரண்டாம்
பிறந்தான்றி பேசவுமே ஒட்டாதாலே
    பேதமின்றி மல்லாக்கப் படுக்கச் செய்து. 19

படுத்தாலோ முன்பின்னே தூக்கி உச்சி
    பதமாகத் தட்டிவிடு இருக்கச் செய்து
அடுத்தாலோ நரம்பு வளி தடவிப்பாரு
    ஆனாலும் குமரிச்சார் எடுத்துப் பஞ்சில் ஊட்டி
எடுத்தாலோ கண்களிலே ஒத்திப்பின்னும்
    ஏற்றமுடன் செய்கின்ற முறையைக் கேளு
கொடுத்தாலோ அக்கிறாவும் பொடித்து நாசி
    தூள் தூற்ற துன்பமது போகும் சுகமே. 20

இருந்துமே பெருவாய்க் காலம் நடுவே
    ஏற்றுநீ இருவிரல் முன்னே நட்சத்திரத்தின்

பொருந்தவே இருவிரல்கீழ் குணத்தைக் கேளு
பொய்யல்ல வாய்திறந்து நாக்குள்வாங்கும்
திருந்தவே கைகால்கள் ஏந்திக்கொண்டு
செவிப்புறம் கழுத்தாடி நரம்படக்கம்
வருந்தியே பக்கம் ரெண்டும் மேல்நோக்கி
வளமாக செய்து பூனை வணங்கி வேரை. 21

மருந்தையே நிம்பெண்ணைய் கிழியில்கட்டி
மகனே நீ வேகவைத்து சுண்டுமின்னி
அருந்தாதே ஊன்றிவிடு பரின்சக்காரி
அமத்திவிடு அலவாடிச் சன்னியங்கே
கருத்துடனே பேருவாய்க்கும் அடக்கம் கண்டாய்
நடு அலகுவலி கோணிதென்றும்
அருகு பற்றி பற்றிஓடி அதற்கும் பற்கடிக்கும்
பார்புறத்தே சங்குதிரி காரிதானே. 22

சங்கையுடன் காதுக்குள் கீழ்சிறுதண்டில்
சாற்றினோம் அதனருகே "செவிக்குருதி" பார்
பங்கமின்றி சாணொன்று விரலும் இரண்டு
பதறாமல் வாங்கிஇடி சன்னி மூளும்
புங்கவனே பற்பூண்டு கண்ணடைக்கும்
பொறுக்காத இருபத்தி யெட்டுக்குள்தான்
அங்கமுத்தி தலைசுழற்றி விழும் நேர்பக்கம்
அனுவாக கைவிரித்து அதன்புறத்தே. 23

தட்டுவாய் ஓர் இடியும் உச்சித்தட்டி
தயவாக மூக்குச் செவி ஊதுகண்ணும்
தட்டின முகம் தடவி இளக்கு சுக்கு
அத்துடனே கஞ்சியொடு வெந்நீர் எய்யும்
மட்டான உருளு வற்மம் "கோணச் சன்னி"
மானிடனே நாடி கழுத்து அருகேயாகும்
பட்சமுடன் ஓர்முழம் வாங்கிச் சாற்ற
பல்வாயும் கண் இமையும் பூண்டு போகும். 24

பூண்ட ஒன்பதிலே சொல்லும்திட்டம்
பொல்லா அலவாடிசன்னி கோணச்சன்னி
கண்டு வந்தாலும் கழுத்து வந்திருக்கி
தொண்ணூறு கடிகையிலே தட்டி முகந்தடவி சங்கிளக்கி

வேண்டுகின்ற சோம்பு குறுந்தட்டி வேரும்
　　விருப்பமுடன் கஞ்சிவைத்து கொடுக்கத் தீரும்
நீண்ட அலவாடிசன்னி கோணச்சன்னி
　　நிசமானதிது ஒரு ஊமைச்சன்னி. 25

மூன்றதற்கும் வலம் இடது பக்கம் பார்த்து
　　முறையாக அமர்த்திவிடு "குவளைக் காலம்"
தோன்றுகின்ற சங்குமுடி வலப்பக்கம்தான்
　　சூட்சமுடன் இரண்டரைதான் விரலுக்குள்ளே
ஈன்ற கக்கல் விக்கலொடு கழுத்துகோணும்
　　ரெத்தம்போல் கண்சிவக்கும் இளக்கம் சொல்வேன்
சான்றோனே கொண்டபுறமல்ல மற்ற
　　சந்தமுள்ள காதின்கீழ் கழுத்திறக்கி 26

கழுத்தடி நரம்பு சுண்டிமுன்னே உச்சி
　　காலமது தடவிவிடக் கருத்தாய்க் கேளு
பளுத்த தொண்டைக் குழியருகே "திமிளைக்காலம்"
　　பல்கறுக்கும் கைகால்கள் வலித்துப் போகும்
அழுத்தமுள்ள கண்கள் வெளித்தள்ளும் பாரு
　　அதனாலே பதை நுரையும் ஆகுமப்பா
விழுத்தவே சாண்மூன்று விரலும் நாலு
　　விரைவாக இடித்து விட பிடரிஓட்டை. 27

ஓட்டையோ சாணதுகீழ் விசைப்பூட்டு
　　ஊக்கமொடு தட்டிச் சுளுக்கல் வழித்து
தட்டமாய் உச்சிதட்டி நெஞ்சின் கீழே
　　திறமாக நீதடவி காது மூக்கு
பட்சமாய் ஊதிவிடு சுக்கு வெள்ளீர்
　　பருவமாய் இஞ்சி வில்லைக் கஞ்சியோடு
மட்டாகச் சிறுதேனும் சேர்த்துக் கொண்டு
　　வளமாக அருந்திவிட வலிமைதானே. 28

வலிமையோடு பத்து ஐந்தரையுங்கேளு
　　வாகாக நாற்பத்தி ஒன்றே காலும்
நலமாக காற எலும்பு மேலதாக
　　நாட்டினார் வற்மமது முப்பத்திரெண்டு
பலமான "கழுக்கூட்டுத் தொடுவற்மம்"தான்
　　பாச்சிவிட கையமர்ந்து நிற்கும்பாரு

தலமதிலே தடவிவிடத்திருங் காரை பதினேழு
கழுக்கூட்டு தானடுக்கக் கைத்தொழில் காண். 29

கூட்டுவர்மம் நெஞ்சடைக்கும் மூச்சுமுட்டும்
குணங்கேளு கால்தளரும் அயர்ச்சியுண்டாம்
நாட்டமுடன் இடமறிந்து வலத்தே தட்டி
நலமாக உச்சியிலுந் தட்டிக் கூட்டி
வாட்டமின்றி நீ பிடித்து உதறிவிட்டு
வளமாக சீரகமும் சன்னாயிரும்
பாட்டதிலே ஓமமொடு கஞ்சிசொன்னேன்
பக்குவமாய் சாராயம் பருகச்செய்யே. 30

செய்யேநீ நாழிகையும் ஐம்பத்தைந்து
துடிதிவளைக் குளிவறுமமதுக்கு ஆறுவிரலில்
வையே விரல்பிடித்து நெஞ்சில்கையே
மானிடனே துடித்துதான் ஆள்குன்றிப் போகும்
மெய்யாகப் பேசவுமே குடிக்க மாட்டான்
மேனியிலே குத்துமப்பா சுளுக்கிக் குத்தும்
பய்யவே நேர்புறங்கால் முட்டுக்கொண்டு
பண்டிதனே கைபிடித்து இளக்கிக் கொள்ளே. 31

கடிகவே முப்பத்திநாலு கண்டாய்
பெலமான "துடிவற்மம்" இரண்டுங் கொண்டால்
நடிகவே குன்றுமது கேதும்பாரு
பத்தொன்பதுவிரல் நாலுதுடி ஒன்னரையும் வலபாகம்தான்
படிகவே வில்லான வற்மம் கொண்டால்
பக்கம் கால்கைகோணி வலிக்கும் பாரு
துடிப்பான ஆள்சாய்ந்து விழுவான் அட்டை
சுருண்டாற்போல் சுருளும் மலம் நீர்தான்போகும். 32

போகுமே போதமில்லை கண்மயங்கும்
புகழான வாய்கோழை வடியும்பாரு
ஆகுமே நேர்புறத்தே கைக்கொண்டுண்ணி
அன்பாகத் தட்டிவிட முப்பதாகும் நாற்பதுக்கு
நீகுணமாய் இவ்வற்மம் இரண்டரைதான்
நிச்சயமாய் அதன்கீழே மார்த்தண்டிற்கும் மேலாக
ஆகுமே "களு வற்மம்"தான் இப்படியே
அழகாக கழுக்கதுபோல் தூங்கும்பாரே. 33

பாரேநீ கூம்பிடரில் கோளனப்பா
பண்பான சத்தமது குரலும்மங்கும்
நேராக அன்னமது செல்லமாட்டா
நிர்ணயமாய் மறுபுறத்து முட்டுக் கொண்டு
சேரவே தானிளகும் இம்மூன்றுக்கும்
திறமான நாழிகையும் தொண்ணூறே முக்கால்
பேறான ஐயமிளகுங் காலங் கொண்டால்
பிசகில்லை மண்டலத்தில் கொல்லும் பாரே. 34

கொல்லுமே ஆவக்கால் அதில்இளக்கு
குணமாக நிம்பெண்ணை கஷாயம் மட்டேதான்
மெள்ளவே எள்ளதிலே இடிப்பக்காரம்
மேலாக நன்னாரி எண்ணைவாரே
கொல்லுகின்ற ஈரக்குலை "கூம்புவர்மம்"
குணமாகத் திவளையுடை சாணின் கீழே
நில்லாது விழுந்துவிடும் நுரையும் கக்கும்நிசமாய் 35

கண்சிவந்து இறுகிப்போம் கண்டுமறுபுறம்
நேர்மையாய் நடுகுறுக்கில் கால்மடக்கிக்கொடு
மீனையும் பிடித்துத் தட்டி கண்டிதமாய் காரியோடு
பரிசைபார்த்து கருத்தாக அமர்த்திவிடு மூன்றேகாலே
விண்டிடவே கூம்புவர்மம் இரண்டரைக்குக் கீழ்
குலை ஈரல் இதமான "ஈரல்குலை வற்மம்" ஆகும்
அண்டிடவே ஈரல்குலை அற்றுப் போனால்
அடுத்தடுத்து தாகம் அதிகமுண்டாம். 36

உண்டானால் கட்டியாய்ப் பரிதாபம் கொள்ளும்
உத்தமனே அல்லவென்றால் மறுபுறத்தே
கண்டாயோ குறுக்குச்சுழி அதனின் கீழே
கால்மடக்கித் தட்டி கைகால் தடவிகாரி
உண்டதலம் தடவி வெந்நீர் கொடுத்துவிடு
உத்தமனே வீணல்ல பன்னிரண்டரையும் ஆகும்
பண்டிதனே இந்தமுறை பலிக்கும் திட்டம்
பரமகுரு தன்ஆணை பாடினேனே. 37

காணுகின்ற வெள்ளீரல் கல்லீரலுக்கும்
கருத்துடனே காதும்கண்ணும் அடைத்துப் போகும்

பூணுகின்ற காரீரல் வற்மத்துக்கும்
புங்கவே கொண்ட புறம்வல்லாமல்
நாணுகின்ற தலமதிலே கண்ணடைக்கும்
நல்ல வெள்ளை ஈரலொடு காரீரலும்
ஆணவமாய்க் கொண்டால் இராக் கண்ணடைக்கும்
அபத்தமல்ல அது ஈரல் அறிந்து கொள்ளே. 38

அறியவே நெஞ்சினுட பூட்டுபத்தி
அவமாகும் சுரமதுவும் அதிகமாகும்
நெறியான தாமரைக்காய் விரிந்து போகும்
நேராக உச்சியிலே தடவுநெஞ்சு
குறியான அரைஇந்த தலத்திற்கு நேர்முதுகு
குறித்து நடுத்தானத்தில் தட்டிக் கூட்டி
இறையோனை வேண்டியபின் உதறிவிட்டு
இளங்கோழி தேங்காய்ப்பால் தான் அவித்து. 39

குறையாமல் நெய்யெடுத்து தின்னவேணும்
குணமாக நாழிகைதான் தொண்ணூற்றுஆறு
நேரான நெஞ்சினுட "கொழுந்து வற்மம்"
நிசமாக தாமரைக்காய் விரிந்து போகும்
சீரான வாயின் நுரை அதிகமாகும்
திக்கெனவே நாக்குளறும் புலம்பலுண்டாம்
பேரான பித்தமது கலங்கிப் போகும்
பேசாமல் தானிருப்பான் உச்சிதட்டி 40

பாரே கால் நீட்டி அங்கே உதறிவிட்டு
பார் இருநூற்று அறுபதுடன் இரண்டும் தானே
நேரே நெஞ்சில் மார்பதிலே "மாற்றான் வற்மம்"
நேர்க்கு ஏத்தியபின் இருமலுண்டாம்
கூரேநீ சயரோகம் என்றே சொல்வார்
கூசாமல் அதைபுயத்தில் அமர்த்திக்கொண்டு
நேரேநீ "நேர்வர்மம்" நெஞ்சுக் கூம்புக்
குறையாமல் மூவிரலில் இருக்கும்பாரு
வாரேநீ முழம் ஒன்று விரல் இரண்டு
வல்லபமாய் கைமுறுக்கி அடிக்கவிழும். 41

விழுந்தவுடன் தேகமது காலும் பின்னும்
விறையலொடு தேகமது குளிர்ந்து காணும்

அழுந்தாமல் முதுவரி நேர்புறத்தே
அரைமுழம் வாங்கிகை புறங்கால் கொண்டோங்கி
விழுந்தவனை ஓரடியும் அடித்து உச்சி
விருப்பமொடு தட்டொன்று பிடரிநோக்கி
மொழிந்தபடி கீழ்நோக்கித் தடவி வில்லை
முந்தி வந்த கஞ்சிகுடி பத்தொன்பதே. 42

தொப்புள் நால்விரலின் மேலே
துடியான சாண்மூன்று அகலம் வாங்கி
இப்புவியில் உறுமுகின்ற தாய்போலாகி
உற்றாமல் அமத்தியான் காத்துக்கொள்ளே
தப்பாமல் மறுபுறத்தில் புறங்கால்கொண்டு
தட்டொன்று உச்சியிலே அடியும் போடு
எப்படியும் காதுகளில் ஊது நாலே
ஈருள்ளி வில்லைவேர் கஞ்சியூட்டே. 43

"அன்னவற்மம்" ஈரல்குலை நால்விரல் கீழ்
அன்னமே சத்திக்கும் வயிறு இளகும்
இன்னமுடல் பூரிக்கும் இமைதழுக்கும்
எழுஞ் சன்னிபோல் கால்கை குளிர்ந்து காணும்
உன்னி மறுபுறத்தே சீலைகட்டு
உத்தமனே வயிறுதடவி இளகிக்காரி
சொன்னபடி பாிசையிலும் அமத்திக் கொண்டு
சுக்கு கடுக்காய் திப்பிலி ஓமம் வாளம். 44

முன்னவைக்கான வெல்லமொடு யூட்டிபின்னும்
முறையாக உப்பில்லா வெந்நீர் அருந்தே
பின்னமொடு பேதி மிச்சுங் கண்டாலுப்பு
பிசைந்து வெந்நீர் தானருந்த அறுபதேகால்
நன்னயமாய் இருவிரல்கீழ் "உச்சிக் காலம்"
நாழிகையும் பதினைந்து நாளுமாகும்
சொன்னோமே குறுக்கதுவும் தரிக்குமென்று
சொல்வார்கள் பிசாசுபிடி என்றுதானே. 45

தானான காலும் கையும் ஆட்டமாட்டார்
சத்தமில்லாமல் உருண்டு பிரளும் விம்மும்
மானேகேள் சன்னிசோதி தியானமொன்று
வழுத்துவார் வெள்ளையிலும் தட்டுக்காரி

கோனேநீ பரிசையிலே அமர்த்திக் கொண்டு
குணமான வெந்நீரில் ஸ்நானம் செய்யே
தேனான பார்க்க கழுக்கட்டுக்குக் கீழ்
திறமாக நால் விரலில் "அடப்பக்காலம்". 46

நானேதான் சொன்னேன் ஒன்றரை முழத்தில்
நலமாகக் கைவிரித்து அடிக்க வீழும்
மானேகேள் வலதுபுறம் கொண்டதானால்
மகத்தான இடக்கரம் கால்அடக்கித் தூக்கி
மானே அரையே நாழிகை சென்றபின்பு
புகழான உடல் கால்கை முறிக்கும்பாரு
தானேகேள் ஆள்கண்டால் புலப்பமது
வன்மையுள்ள நெஞ்சடைக்கும் நாக்குள்வாங்கி. 47

வாங்கவே கண்சிவக்கும் விறையலுண்டாம்
வைத்தியனே முழம்முக்கால் அகலம் வாங்கி
தாங்கவே பெலத்துக்கால் கொண்டடியும்
ஒன்று சாந்தமாய் உச்சியிலே தட்டும் ஒன்று
ஏங்கியே இடது நெஞ்சில் மூன்று
இதமாக வலது நெஞ்சில் மூன்று
நீங்காமல் தட்டியபின் நெஞ்சில் கையை
நிச்சயமாய் வைத்துஇருத்தி இழுத்து உதறி. 48

பாங்காகப் பூட்டுவிசை நரம்பு தூக்கி
பதமாகச் செய்கடிகை இருபத்தி ஐந்து
தூங்காதே நூற்றுநாற்பத்தி இரண்டு
சுருக்காக திப்பிலியும் மிளகும் சுக்கும்
வாங்கியே சாராயத்திட்டும் வேறு
வாலரிசி அமுது வெள்ளிக் கஞ்சியூட்டு
ஆங்கார இடதுபுறத்துக் கழுத்தும் கையும்
அந்த வலக்கைக் கிடம்ும் ஏந்தும் பாரே. 49

பாரேநீ அவ்வளவும் அடக்கிக் கொண்டால்
பாங்கான வலப்புறத்துக் கிடப்புறமும்
சேரேநீ அமத்திவிடு "உச்சிக் காலம்"
திறமாக வலமிடந்தான் ஓட்டைக்குள்ளே
பாரேநீ "பள்ள வற்மம்" வலமேயானால்
பண்பாக அப்புறத்தே சாய்ந்து வீழும்

நேராக வாயதிலே நுரையும் க்கும்
நேர்மையாய் விலாவில் தடவும் மூன்றேதான். 50

சீராகப் "பள்ள்பன்றி" வறுமம் தானே
செவிப்பூட்டு இடம்வலத்தே இரையுதென்பார்
சீரான பள்ளநடு வென்பாருண்டு
செய்ய விலாமுன்டெலும்பு இருவிரல்கீழ்
சீரான "அரையாப்பு" தலமுமென்பார்
சித்திரமாம் வலிய "அத்திச்சுருளி" யாகும்
ஏரேநீ முச்சாணும் ஓங்கி எய்ய
எப்படியும் விழும் நரம்பறுந்தால் பிழைக்க மாட்டான். 51

பிள்ளைகளே முழம் ஒன்று குறுக்குந் திட்டம்
பித்தனைப்போல் அண்டமது திறந்து காணும்
தளைக்கவே அடக்கமதில் தட்டிப் பின்னால்
தயங்காமல் அரைமுழத்தே புறங்கால் கொண்டு
உளைக்கவே தட்டோடு உதறித் தூக்கி
உத்தமனே விலா இரண்டும் தடவு கீழே
செளைக்கவே சென்னி நரம்பற்றபின்னர் இளக்கிவிட்டாலும்
செல்லவே மண்டலம்தான் ஆறில் கொல்லும். 52

பழிக்காதே இல்லைஎன்றால் சுகம் வரவே
பாரிலே மண்டலம்தான் செல்லும் பாரே
சொல்லவே "சிறிய அத்திச் சுருளி" யாகும்
செய்யப்பா விலாமுன்டெல் அதனின் கீழே
மெல்ல முழம் ஒன்றதுவும் முக்கால் வாங்கி
விதமாக வலக்கை கொண்டடிக்க வீங்கும்
நல்ல வண்ணம் மாண்டதிலும் அடக்கந்தட்டு
நாழிகை நாற்பத்தொன்னில் குணமுண்டாகும்
அல்லவானால் மறுபுறத்து முழமும் முக்கால்
அகலமதாய் புறங்கால் கொண்டடியு மொன்று. 53

வல்லமையாய் கைவத்து உச்சித்தட்டு
வாகான விலா இரண்டும் கீழே நோக்கு
துல்லியமாய்த் தடவியபின் உதறிவிட்டு
தும்பாக சங்குகிரி கனலும் கஞ்சி
சொல்லியமுன் மாத்திரையில் கொடுக்க வேளை
சுறுக்காகப் பந்து என் ஏழரைதான்

கல்லடைக் காலமது அண்டக் காலம்
காரணமாம் தண்டுவற்மம் வேறேயாகும். 54

ஏதென்று கேள் அத்திச் சுருளி இரண்டும்
இதமாக ஓரைந்தும் கொண்டதானால்
பேதமின்றித் தானிடுப்பில் தடவிக் கொண்டு
பிசகில்லா "நடுத்தான வற்மம்" கேளே
நீதமாய் தொப்புளின் நேர் மறுபுறத்தே
நிசமான வற்மத்தின் குணத்தைக் கேளு
சாதகமாய் பல்பூண்டு கண் அடைக்கும்
தலையதுவும் விறைக்கும்உடல் குறுக்காய் கொள்ளும் 55

வேதனையாம் நெஞ்சினுட கொழுந்துப் பள்ளம்
விழுந்துவிடும் சேர்த்தெடுத்துக் கைகால் ஆட்டு
சோதனையாம் நீதடவு நூற்றெட்டும் சென்ற பின்னே
நெய்தேங்காய் எண்ணைவிட்டு சாதம் உண்ணே
சூதடா உச்சுக்கு மூன்று கீழே
சொல்லுவேன் வற்மமது "மூத்திரக்காலம்"
காதலாய் சாண்ஒன்று அகலவாங்கி
கைஇறுக்கி முறுக்கிநீ அளவாய் இடி. 56

ஓடுமே மூத்திரநீர் சொட்டு சொட்டாய்
உடன்தானே அடிவயிறு தடித்து வீங்கும்
நீடுவாய் வயிறு ஊதியபின்பு கையும் தொண்டை
நித்தலம் போல் நீர்சொரியும் கண்ணில்தானே
ஓடியே பிடிநெறி இடக்கல் கொண்டடியும்
ஒன்று புரண்டுநின்று மறுபுறத்தே சீலைகட்டு
சாடியே கட்டுள்ளே மூலத்தில் கால்
சட்டெனவே நீ மடக்கி சாணும் வாங்கி. 57

பாடின்றி மூன்றுதட்டு இளக்கி உச்சி
பய்யஒரு தட்டின்பின் உதறிக் கொண்டு
கேடின்றி இருபத்தேழரையுங் கேளே
கெடியாகச் சீரகமும் இஞ்சியோடு
போடுவாய் உளுந்தோடு கஞ்சிகூட்டி
புகலுவேன் குடித்துவிடு புதியதாக
சூடுவேன் நீர்குழி வற்மத்திற்கு
சுத்தமாய் நாலுவிரல் கீழ்வற்மம் சொல்வேன். 58

நெட்டப்பா "கல்லெடைக்காலம்" கொண்டால்
நிச்சயமாய் விதைஇரண்டும் உயரே ஏறும்
கேட்டான குலையும் வயிறு ஊதும்
பித்தாக நாக்குணரும் பதைப்புமாகும்
ஆட்டியே கல்லெடை இருப்பாம் காலம்
ஆவித்துக் காலமொடு தூக்கு வற்மம்
தேட்டியே நரம்பற்றால் பரலுடைந்தால்
சீர்பவளம் சோரைகண்டால் செத்துப் போவார். 59

நாடியே அல்லவென்றால் அண்டை வைத்து
நல்லபடி கைகால்கள் ஆட்டவேண்டாம்
கூட்டியே நீ படித்துக் கால்தாங்கி
குறிப்பான பிடரிதான் அதிலிருந்து
வாடாதே கால்முட்டுக் கொண்டு மூன்று
வல்லமையாய் இருத்துபின்னும்
ஆடாமல் விலா இருபக்கம்தானும்
அடப்பக் காலத்திலிருந்து முன்னும் பின்னும். 60

தடவியே இதற்கு மூலம் பிசகாமல்
தயவாக மூன்றடி உச்சி மூன்று
அடவியே நன்றாக காரியிலே தட்டுமூன்று
அப்புறம் வெள்ளைக்குள் தட்டு மூன்று
ஓடவியே கைபிசை நடுத்தட்டு மூன்று
உறுதியாம் தலம்வரையில் தடவிக் கொண்டால்
சொடக்கிடே அவ்விதையும் இறங்கும் திட்டம்
சுறுக்காய் பிடிக்கில் அகம் செல்லாதே. 61

இன்னமும் மூவிரலில் துணியைக்கீறி
ஈரமையா அவ்விதையில் சுற்றிக் கொண்டு
பொன்னே தண்ணீர் கொடுக்கவேணும்
புக்கனலாம் சீரகம் கொத்தமல்லி
மின்னான் விஷ்ணுகிரந்திக் கஞ்சி
இதமாகக் குடித்துவிட வாசியாடும்
சொன்ன கல்லெடைக்காலம் அண்டக் காலம்
சூரதண்டு வித்துவைந்து துடிக்கும் பாரே. 62

துடியான மூத்திரத்தின் மூவிரலில் கீழ்
துல்லியமாய் "குறிஞ்சியது" கடுக்கும் மூலம்

மடிப்பான வயிறணையும் நீர் தரிக்கும்
பிடித்தமது மாகிவிடும் மறுபுறத்தே
நடியாமல் இருபக்கம் சீவாய நாட்டு
தானம் கை மடக்கி உதைத் திருத்தி
கடிதாகக் கால்குத்தித் தட்டு மூன்று
கண்டபிள்ளை தானிருந்து பக்கம் ரெண்டும். 63

இதமாக நீரடவு இதற்குப் பின்னும்
ஏற்றவனை மல்லாக்கப் படுக்கச் செய்து
பதமாக கால்படித்து இரண்டும் மேலேதூக்கி
பின்னங்கால் கொண்டரையில் மூன்றுஅடிஅடித்தே
இதமாக மிளகு சீரகம்மல்லி சிறுகீரையோடு
வெங்காயமும் அடியேநீ அவை அரைத்து
பதமாக அன்னப்பாலில் அடுத்தடுத்து
ஆறு பொழுது தானே உண்ணச்சொல்லே. 64

நாரியே வேப்பெண்ணைய் ஏரண்டெண்ணை
அதுவார்த்து மேல் ஸ்நானம் செய்து
ஆரியே இளங்கோழி இடித்து வெந்து
அப்பனே உப்பிடாமல் வெண்டைக்காய் சேரு
தேரியே நல்லவெறும் சோறதையும் சாப்பிடப்பா
திண்ணமாய் குறிஞ்சி வற்மம் கண்டதானால்
மாறியே தண்டுள்ளே வாங்குமப்பா
ச்டமதிலே வேர்வையொடு வலியுண்டாகும். 65

கண்டமறு புறஞ்சுழியில் கால்மடக்கி
கருத்தாகக் கீழ்தடவி முட்டு
கொண்டதலம் காலதினால் மூன்றுதட்டு
வீரமாய் தூக்கியே உதற வேணும்
கொண்டதிலே பலிதமது இல்லையானால்
குண்டிருத்தி குத்துக்கால் வைத்துப்பார்த்து
சுண்டுகால் விரல்பவளம் மேலே ஏந்து
அப்பூடு சாராயமிட்டு கருக்கிக் கொள்ளே. 66

கொள்ளே நீ வற்மமது நடையுங் குத்தும்
நறுக்கென்று மலசலம் தான்போகாது
கள்ளமில்லை வலபுறத்துக் கிடத்தே பார்த்து
கால்சமட்டி இளக்கு இருபத்திளட்டரையே

உள்ளபடி எட்டாகும் பன்றிக்கோர் விரலின் கீழ்
இதமான உருளையதின் மூலம்தன்னில்
கள்ளமில்லை கட்டாயம் கால்கை அடிக்கும்
கண்மூடும் உணர்வீராக கருதிப்பார்த்து. 67

கட்டான பூட்டுவிசை நரம்பு பார்த்து
கடிதாக நீதட்டு முப்பத்து ஒன்று
இட்டாக இடங்கீழ் பள்ளபன்றி இடம்வலத்தே
ஒற்றதுடை அசுவிப்பூட்டு பூட்டுக்குள்ளே
மட்டான முறைமூலம் கால்கை அடிக்கும்
மலம்விழும் பிரேதமாம் மலரச் செய்து
ஒட்டாக கால்தூக்கி உயர்த்திருத்தி
உடனிருபால் பக்கங்கால்கொண்டு தட்டுகால்கை. 68

தட்டாக இழுத்தது ஒன்பதாகும்
தான்மேலே வற்மங்கள் அடக்கம் சொல்வேன்
மட்டாலோ வறுமமது "பிடரி" ஆரம்
பாங்காக சிரசதுவும் கவிழ்ந்து தானே.
தட்டான கண்மூடும் செவியுங் கேளா
தயக்கமாய் மூன்றேனில் கொல்லும் கொல்லும்
அட்டாமல் காலரைதான் முக்காலானால்
அஞ்சாமல் இடம் வலத்தே ஏந்திநாடி. 69

போன இருபக்கமதில் கழுத்து ஆடி
புங்கமாய் நரம்பதுவின் பூட்டிருந்து
மானேநீ தடவி விடு இதற்கு உச்சியில்
மகத்தான விதானம் இளக்குபாதம் தேய்த்து
தேனே அதிலுள்ளுக்குப் பரிசைசெய்து
சிறப்பாக மூன்றரையும் செய்யும் பாரு
நானேதான் சொல்லும்குறி ஒத்துதானால்
நலமான மண்டைநோய் கொள்ளுங் கொள்ளும். 70

தான்பூரம் வான நமச்சாரம் காசுகட்டி
தாரம் வாய்த்த இஞ்சியரைத்து திரியிலூட்டு
என்னென்றால் புகையுரியில் நோயும் தீரும்
ஏரண்டம் எண்ணைச்சாற் கீரைச் சாறே
தான் ஆமணக்கெண்ணை தேய்த்து சிறுகீரையைச்
சம்பளச்சாறு கொண்டரைத்து அரப்பிட்டு குளித்து

வான் சொல்லும் இந்தவற்மம் இளகும்பாரு
வகையான இதன்விபரம் நன்றாய்ப்பாரே. 71

வேறாக "அண்டவற்மம்" அதற்குப் பேர்
சித்திரமாய் வயிறு ஊதும் அறுபத்திரண்டில்
நேராகத் தூக்கி இருத்தி வலமிடமும்
நெடுங்குடலில் பிடிக்கப் பார்த்துத்தட்டி
ஆராக அதை மல்லாக்க வைக்க வேண்டும்
அப்பனே மேலேந்து இடுப்பு இரண்டும்
வேறாக நோக்கி முக்கால்தட்டு மூன்று
வென்னீரும் விட்டுவிட விருப்பந்தானே. 72

பாரேநீ பரிபூரணமும் நெஞ்சொடுங்கும்
பகரும் வயிறேற்றுதுமே நீர் போகாது
நேராக நெடுமூச்சு உண்டாம் பின்னே
நிசமாய்க் கதறுக்கும் இளக்கம் சொல்வேன்
சீர்பொருந்தி கால்நீட்டி இருக்கச் செய்து
சிரசில் நீர்விட்டு வயிற் தடவி அன்னம்
நேர்புறமே பின்ணங்கால் பூட்டி உச்சி
நேரினைகீழ் தூக்கிப்பின் உதறிக் கொள்ளே. 73

தூக்கியே திரிகடுகு ஓமம் மேத்தி
சூரணித்துக் கொடுத்தவிடு கடுகுங் கூட்டி
தக்கான செக்காலம் காலமொன்று
சார்பான கையொன்று அடிக்குந்திட்டம்
வாக்கான வலமிடத்தே நெஞ்சில் தட்டி
வரைபூட்டு விசை நரம்பு தடவச்செய்து
நோக்காக உதறிழு யோகாந்திரி தான்
நிரம்பலமாய் பித்தனைப்போல் ஓடும் ஜாடும் 74

வாக்கியனே இருபத்தி நாலுக்குள்ளே
மயக்கமது உண்டாகும் குடும்பிதொட்டு
யோக்கியமாய் பின்புறம் உச்சிக்காலம்
நோக்கு பின்கால் கொண்டு மூன்றுதட்டி
ஆக்குகின்ற காரியப்பா பரிசைதன்னில்
அமர்த்தி விடு சுக்குபலம் இரண்டும் இன்னும்
வாக்குடனே சர்க்கரையும் பலம்மூன்று
வாங்கு தேங்காய்ப் பாலும் படிபாதியே. 75

பாதியே பொடி அரிசிக் கஞ்சிகூட்டி
பாங்காக ஏற்றதற்குக் காலமாகும்
நீதியாம் நித்திரையும் இல்லை இல்லை
நேர்படுக்கும் எழுந்திருக்கும் பிடரிகீழே
சாதியாம் முட்டிட்டு தடவிப் பக்கம்
சுங்கையாய் முடிபிடித்து சுழியமர்த்தி
பாதியாய் பின்கால் கொண்டிடித்து
நெஞ்சில் வென்னீர்விடு சாமை கஞ்சிகுடி 76

பேதமின்றி மீன்நெய்யில் வெந்து தின்று
பிசகாதே "ஏம வற்மம்" வில்லாப்புடைக்கும்
காதலாய் மல்லாக்க வைக்கால்
கையை விரித்து மூன்றுதட்டு குளிர்ந்த நீரை
போதமாய் மூன்றுக்குத் தூக்கி வைத்து
புகழாகக் குடும்பிபிடி பதிவிருந்து
பாதம்வரை தடவிக்கால் தூக்கி மூன்று
பண்பாகக் குலுக்கிவிடு ரண்டைச் சொல்வேன். 77

சொல்லுவேன் நாடிபார் குடும்பிதொட்டு
சுத்தமாய்க் காரிமுதல் பொய்க்கண்மட்டும்
நல்லபடி கண்இருத்தி மத்தி செய்து
நாயகனே கால்களைப் பாதந்தொட்டு
வெல்லவே கீழ்மேலுங் கால்பிடித்து
விதமாக மூன்று அசைவு அசைத்து விடு
சொல்லவே மூன்றதிலே சென்னிவிலாவும்
சேர்இரு பக்கமதும் கழுத்தும் செய்து. 78

அல்லாமல் ஆகவற்மம் இரண்டும் தட்டு
அப்போது பரிசையிலே அமர்த்திக் கொண்டு
சல்லாப மாகவே சுக்கு வென்னீர்
சாமைஅரிசி கஞ்சி கொடு சாந்தியாகும்
சொல்லாக் குடலேற்றமப்பா எதிரெடுக்கும்
செய்யாமல் தான்குடியார் சோலைபாயும்
வல்ல வயிறூர்தும் கண்ணிமைப் புருவம்
வாயதுவும் தடுக்கும் வயற்தடவிப் பின்னே. 79

பின்சுறுக்கு குளியிருந்து கைவிரித்து
பிச்சைமுதல் தட்டியபின் தூக்கிக் கொண்டு

கன்னமின்றி காலிரண்டும் இழுத்து வெட்டு
  கைகண்ட தைவேளை மேனிரெண்டும்
சொன்னபடி கிளிகட்டி நிம்பெண்ணையில்
  சுறுக்காக வேகவைத்து சுளியில் ஒத்தே
இன்னமும் தொடுவற்மம் பின்னால் சொல்வேன்
  எத்தனையோ படுவற்மம் எடுத்துச் சொன்னேன் 80

பொன்னான வற்மத்தின் சாஸ்திரத்தை
  புகழாகப் பாடிவிட்டேன் புதுமையாக
நன்றாகப் படுவற்மம் முற்றிற்றப்பா
  நலமாக உள்ளடக்கம் சொல்லப்போறேன்
என்றாலும் காலமது கொண்டபேர்க்கு
  ஏற்றவனே தெளிவணைப்பு அனுபானமும்
குன்றாமல் சரிப்பிடித்து இழுத்துப்பின்னும்
  குணங்களுமே ஆராய்ந்து குருவைப் போற்று. 81

போற்றியே காரிபிடித்து திருத்திக் கூம்பு
  புகழ்வற்மம் முட்டிட்டு பின்னும் முன்னும்
சாற்றியே தடவு கல்லெடைக் காலத்தில்
  தானிறக்கி விட்டிரண்டு அடப்புறவற்மம்
ஏற்றபடி கைவைத்துத் தடவிக் கூம்பு
  இறக்கிப் பெருவிரல் கொண்டெலும்பு ரெண்டும்
ஆற்றியே அவ்விரலும் கொடுத்து ஏற்றிபிடித்து
  உதறவே உடநாடியிலும் பிடரியிலும் கைகொடுத்து 82

மாறாமல் இடவலமும் அயச்சி உச்சி
  விரிந்துவிடு விரல் பலதும் விரித்துக் கொண்டு
தேறவே உள்ளங்கால் ரெண்டும் தட்டி
  தெளிந்து மாறான செய்யுங்காலம் நின்று
ஏற்றபடி தடவுரண்டு நரம்பும் தூக்கிடுவேன்
  நீர் உள்ளுக்கு இளக்கமாமே
ஆற்றியே முக்கால் நாழிகையில் தளர்ச்சைநீங்கி
  அறிந்த பின்பு எழுந்திருப்பான் வேறுகேளு. 89

ஆம் அங்கினை நீபிடித்திருத்திக் கைகால்
  ஆட்டாமல் உச்சிவலி தட்டும் தட்டு
நீமுதுகில் பின் கால்கொண்டு அடியும் வைத்து
  நெஞ்சிலே கைவைத்து அடியும் ஒன்று

தாமேவை சாகாத மூலி கொண்டு
தயவாக மூக்குச் செவி உச்சிவைத்து
தாமாகத் தூக்குதறி வெள்ளங் கோறி
தான்மூன்று கைவெள்ளம் அகம் செலுத்தே. 84

நீஇளகு சுழிமுனையைப் பற்றியபின்
கைவைத்து சுவாகமது கண்டதானால்
நாம்முன்னே சொன்னபடி அசுங்கல் தட்டு
நல்லறும் சாஸ்திரியை இளக்கிக்கொள்ளே
எம்மனது சீவுனுக்கு ஈந்த சூத்திரம்
இருந்த விடம் எந்நாளும் ஆசைதானே
நாம்உனக்கு எடுத்துரைத்த இந்நூலைத்தான்
நல்லவர்க்கு காட்டு தீயோர் கைதாக்காதே. 85

அணுகிலே வறுமம் தீரவே
அறைகிறேன் சிறு கஷாயம் ஒன்று
நணுகியே இசுங்கி தோடை
நறு நன்றி துளசி கொற்றான்
தணுசிறு அமுதோடே கேள்
சதாவேலி வில்லை அணங்கு
பனிமிகு கண்டனோடு
பார்த்திபன் பதினொன்றாமே. 86

பதினொன்றும் வேர் வகைக்கோர்
பலமது எடுத்துக் கொண்டு
கதிர்பெறும் சுக்கு மூலம்
மாயக்காய் சீரகம் மல்லி
கதிர்பெறு கொட்டம் ஏலம்
தாளிச பத்திரி கிராம்பு
அதிமதுரம் திப்பிலி யோடு
அத்தனையும் பன்னிரெண்டாமே. 87

ஆமொன்று பலம்தான் அறையும்
அப்பனே நல்ல தேனில்
நாமுனக்கு என்ன செய்வோம்
நடுங்கியே கொழுத்திறைப்பு
காமுறு முறுக்குச் சூலை
குணமங்கை மசக்காம் தீரும்

போமேல் தூலாய்ந்து எந்தன் 88
பொதிகை மாமுனி சொன்னர்.

குறுந்தொட்டி எண்ணெய்

குடங்கியே வறுமத்தாலே எடுத்த ரோகம்
குறுந்தொட்டி எண்ணெய் ஒன்று கூறக்கேளாய்
தொடங்கியே குறுந்தொட்டி தளதளக்க
சொல்லரிய நறுநன்றி இசங்கன் வேரும்
அடங்கலுமே வகைவகைக்கு பலந்தானப்பா
அப்பனே இருகுறுணி எட்டிலொன்றாக்கி
நடுங்கியே கோவையொடு முசுமுசுக்கை 89
நாயகமே விலைவகை சாறுநாழி.

சாறுடனே கடைமருந்து சொல்லக்கேளாய்
சாதிக்காய் அதிமதுரம் கொட்டம் ஏலம்
வாறுடனே தேவதாரம் இனிய சீரகம்
மாயக்காய் குறசாணி கிறாம்பு மூலம்
கூறுடனே வகைவகைக்கு தளஞ்சுமூன்று
குணமான நல்லெண்ணை படிதான் இரண்டு
கூறுகின்ற சாறுதனை உகந்து காய்ச்சி 90
மெழுகு பருவத்தில் வடித்துத் தேய்த்தால்.

காய்ச்சியே நன்றாக வடித்துத் தேய்க்க
கருதியே வெந்நீர்விட வற்மம் தீரும்
வீச்சுடனே வலிஇழுப்பு நடுக்கு வாதம்
மேலான சிரசதிலே விறையல் விக்கல்
மூச்சுடனே நடுநடுக்கம் அடைப்பு முட்டுநடுக்கம்
மோதுகின்ற நோய்களெல்லாம் முடிந்தே போகும்
ஆச்சரியம் குறுந்தொட்டி எண்ணையப்பா 91
அகஸ்தீஸ்பர முனிவருடைய பாடல்தானே.

திறம்பெரிய திறமேனி எண்ணெய்ஒன்று செப்பக்கேள்
செப்புகிறேன் மேனிச்சாறு தைவேளையின் சாறு
திறமான நவரை இலை மலர்ச்சாரோடு
நற்றமிழால் மரக்கொடிச்சாற் நாவுரிச்சாறு
திறமான நன்மையுடன் வேலிப்பருத்திச்சாறு
நாயகமே குறுந்தட்டி கையாஞ்சாறு

திறம்பெரிய முசுமுசுக்கை எலுமிச்சம் சாறு
கோவையரே ளிச்சி என்ற கஞ்சாவேரும் 92

கொற்றவனே கருடகொடிவேர் பீங்கான்பிஞ்சு
நன்னாரி வேர் அனைத்தும் சேரேசேரே
சேர்த்திடவே கற்கவகை செப்பக்கேளு
திறமான சாதிக்காய் சாதிபத்திரி
தீர்க்கமுடன் கருஞ்சீரகம் கார்கோலம்தான்
குணமுடனே துத்தமுடன் துருசுகட்டி
நற்சீரகம் கொட்டம் ராமிச்சி தேவதாரம்
சந்தனம் நிலவரமாய் மேத கஸ்தூரி. 93

சேரப்பா மதுரமொடு கோரோசனையும்
தீர்க்கமுடன் அபின் வெள்ளைக் குந்திரிகமாமே
ஆரப்பா கொள்வகைச்சாறு உழக்காகத்தான்
அப்பனே கடைமருந்து வகைக்கு கழஞ்சு நாலு
பாரப்பா நல்லெண்ணைய் மூன்று நாழி
பக்குவமாய் மெழுகுபதம் தன்னில் காய்ச்சி
ஆரப்பா தேய்த்துவிட தீரும் நோய்கள்
அடியினால் உச்சி வற்மத்தில் எழுந்த நோய்கள். 94

சன்னி முதல் மண்டைக்குத்து இடிகள் எல்லாம்
மாற்றான்தான் செய்துவிட்ட வற்மம் எல்லாம்
உன்னி நரம்புபிடி தாதுநஷ்டம் திமிர்த்து
உடலெல்லாம் சென்னியிலே கொண்டநோய்கள்
அன்னியுடன் ஆயாசம் கிறக்கமுடன் கிறுக்குமாறும்
அப்பனே உள்தளர்ச்சி கபமும் மாறும்
மான்போன்ற உச்சில்லி உச்சிக்குத்தும்
மறைவர்மம் உண்மை நோய்கள் தீரும் உறுதிபாரே. 95

முறிவு எண்ணெய்

அடவுடனே வெட்டுண்ட புண்ணானாலும்
அப்பனே மரம் ஏறி விழுந்ததானாலும்
திடமுடனே தன்முறிவால் வந்ததானால்
திட்டேறி திடலேறி முறிந்து போனால்
படபடென்று நொந்து விழுந்து போனால்
பனையேறி விழுந்தொடிந்து சிதறிப் போனால்

எடமெந்த உலகினிலே அறிந்துரைத்து
எடுத்து உரைக்க அதுலே்நாம் கூறுவோமே. 96

கூறுவேன் ஆலம்பால் குறுணியாகும்
குறுந்தட்டி நன்னாரி ஊச்சி நாதி
போதுவேன் சிவதைவீண் பிசினை எல்லாம்
சேர்போடே ஆறுக்கும் அடலுடனே
குறுணியெண்ணை அழகாக நல்லெண்ணையில்
குறையாது காய்ச்சியே பேர்பெறபச்சை
இறுக்கிக் கட்டித் தேற்றிய பின்
இந்த எண்ணையாலே ஊறும் பாரே. 97

வசைவு எண்ணெய்

மெழுகவே வசைவு எண்ணெய் சொல்லக்கேளு
முத்தெண்ணை ஆவின்நெய் பன்றிநெய்யும்
பழச்சாறு சரிசமமாய் வாங்கியே கேள்
சாங்கை பெறும் களஞ்சு ஆறு குறைந்திடாமல்
நழுவாமல் வெந்தயத்தை குமரிச்சாற்றால்
நாயகனே தானாட்டி ஒன்றாய்ச் சேர்த்து
வழுகாமல் குமரிச்சாறு வற்றும் போ்து
வழித்தெடுத்து தைலமதை முறிவில்போடு. 98

போட்டுவிடு தைலமதை வற்றிடாமல்
புண்ணியனே தினந்தோறும் தடவிவாங்கி
நாட்டிலுள்ள மாடடரும் நால்கால் செந்தும்
நாயகனே கோழிமுதல் ஒடிமுறிவு
கெட்டிக் கொண்டுடனே உள் முறிவு கொண்டால்
கொண்டுவிடு குக்குடத் தயிலம் உள்ளே
பாட்டிலுள்ள வசனமென்று எண்ணிடாதே
பாலகனே எண்ணைமுதல் தன்னைப் போடே. 99

குக்குடத் தைலம்

சொன்னதோர் தைலம் கேளு
தோடையின் சாறும் கொற்றான்
விண்ண மாதளையின் சாறும்
கண்டனோடி சங்கன் சாறும்

பின்னையும் ஆவின் நெய்யும்
  பேசிடில் உரியதாமே.
உன்னையும் நானே தேற்றும்
  உபாயமும் இன்னம் கேளே. 100

உரியதில் மதுரம் ஏலம்
  ஓங்கியே கொட்டம் மூலம்
பெரிய செஞ்செடி மாயக்காய்
  பேரிச்சங் காயுமொடு
அரிய முந்திரிக்காய் சீரகம்
  வகைக்கு இருகளஞ்சு வாங்கி
நெரிய முன்சாற்றால் ஆட்டி
  நெய்தனில் விட்டுக் கொள்ளே. 101

கொள்ளோடு கோழிக்குடல் துயில்
  கால்தலை களைந்திடித்த சாறும்
நாளதில் விட்டுக் காய்ச்சு
  நற்பதம் வடித்து ஈந்தால்
ஈளையும் நெஞ்சில் நோவும்
  இயல்பொடு நடுக்கம் நோயும்
மூளையில் வறட்சை மாறும்
  முற்றிலும் அகலும் சொன்னேன். 102

அஞ்செண்ணைத் தைலம்

கள்ளமில்லை இதுபோல சூட்சுமத்தை
  கரைகடந்த முனிவர்களும் சொன்னதில்லை
சுள்ளியிலே தீப்பிடித்த திறமும் போலே
  சுருக்கான எண்ணையொன்று சொல்லக்கேளு
கள்ளமில்லை சூட்சமாதி சூட்சுமமாகும்
  கண்டுகொண்ட பேர்களெல்லாம் கருத்தாளிதன்
விள்ளுகிறேன் விநோத அஞ்செண்ணை போக்கை
  வித்தகனே நீஅறிந்து விளங்கிக் கொள்ளே. 103

பச்சமுடன் பசுவெண்ணை தேங்காய்யெண்ணை
  பகருவேன் பங்கமில்லா புங்கஎண்ணை
அச்சமில்லா நல்லெண்ணை வேப்பஎண்ணை
  அழகாகச் சமன் கூட்டி மேல்மருந்து கேளு

பச்சமுள்ள தொட்டால் வாடி மூட்டில்லாத
தாளிச்சாறும் வீண் விராலிச் சாறும்
அச்சமா தூதுவளை வேலிப் பருத்தி சாறும்
அடவாக மட்டிச் சாறும் படிதானாமே. 104

ஆமே ஒன்று அக்கிறா சிங்கிசீரகம்
அழகான மதுரமொடு கோரோசனை
சாமே சிங்கிங்கம் வகைக்கு களுஞ்சு மூணு
வாங்கி குவளத்தின் சாறுசேர்த்து
போமே மெழுகுபதம் வாங்கி உள்கொடுக்க
சயம் இருமல் காசம் பொல்லாத வறுமமொடு
ஈமே ஈளை இருமல் வீக்கம் உள்கொண்டு விறைக்கும்வாதம்
உடல் எல்லாம் பொன்போல ஆகும்பாரே. 105

நாவிச் செட்டெண்ணை

கொட்டமொடு நல்ல மிளகு ஏலம்
சிலவங்கம் குப்பை வெப்பாலை சீரகம்
திட்டற விளங்கம் வேர் கொப்பரக்கில்
அரத்தையும் திற்பிலி நன்னாரி மூலம்
திட்டமொடு சந்தனம் தேவதாரம்
பச்சை இருவேலி செண்பகப்பூ இலைபுற்று
தட்கோலம் செஞ்சந்தனம் மாஞ்சி சட்டமொடு
மஞ்சள் இவையும் ஆக இருபத்தி ஐந்து. 106

சரி சமன் கூட்டியே தயவுபெறவே
இடித்து தாக்கி எண்ணெயில் விட்டுஉடன்
சரியாக மெழுகவே தலைமேல்கொண்டவற்மம்
அனைத்தும் உஷ்ணநீர் தோஷமும்
உறுப்புநீர் விழியின் நீரும் உடல் மெலிவு
உள் வற்மம் நோயுற்ற பிணியாகிலும்
அறுத்தார் போல் அகன்று விடும் என்றுதானே
அகஸ்தீஸர் உரைத்தனர் உண்மைதானே. 107

குறுந்தட்டி எண்ணை

குறுந்தட்டி வேர்பலமும் நாற்பதாகும்
கூறும் வெள்ளம் தான்அதுவும் நால் மரக்கால்
அறுந்தாத மூன்றுபடியாகக் காய்ச்சி
அப்பனே கொட்டமது களஞ்சி ஐந்து

சிறந்திட்ட மதுரம் இரண்டு சீரகம் மூன்று
சிறப்பான குறுந்தொட்டிதோல் அதுவும். ரண்டு
அருந்திட்ட இம்மருந்தைகஷாயத்தி லரைத்து
அழகான நல்லெண்ணை தேங்காஎண்ணை
பொருப்பாக இரண்டு படியிலிட்டு
பொன்போல மெழுகுபருவத்தில் காய்ச்சிதேயே 108

மருந்துகள்

அடிகள் குத்துகள் நோவு இவைகளுக்கு பூச்சு மருந்து

வெள்ளைக்குன்றி, பாவட்டம், வேலிப்பருத்தி மூன்றும் சாறு வகைக்கு ஒரு ஆழாக்கு.

சுக்கு, வெள்ளைப்பூண்டு, வசம்பு, கருஞ்சீரகம், கடுகு, கட்டிச் சுண்ணாம்பூ, வெந்தயம், ஒமம், சதகுப்பை இம்மருந்துகள் வகைக்கு விராகனெடை. இம்மருந்துகளை சாற்றில் அரைத்து கொதிப்பித்து பூசவும்

மேற்படி நோய்களுக்கு உள்ளுக்கு கஷாயம்

அதிமதுரம், வெள்ளைக் குந்திரிகம், வேலிப்பருத்தி இலை இவைகளைச் சதைத்து ஒரு நாழி தண்ணீரில் கஷாயமிட்டு ஒரு உழக்காக வற்ற வைத்து இரண்டு நேரம் கொடுக்க தீரும்.

சகல வறுமம் தீரப்பொடி

சுக்கு, மிளகு, திப்பிலி, தாளிசபத்திரி, சீரகம், ஏலம், கூகைநீறு, முந்திரிப்பழம் வகைக்கு 3 கழஞ்சு வீதம் உலர்த்தி சூரணம் செய்து கொண்டு சிறு தேனில் குழப்பிச் சாப்பிட சுகமுண்டு.

சதை முறிவில் இடமருந்து

பழைய எள்ளு விரல்பிடி அளவு கொண்டு வந்து பசுவின் பாலில் அரைத்து வேப்பெண்ணையில் மத்திச்சு முறிவில் விடுக.

முறிவில் ஒத்தடம் கொடுக்க

நொச்சி இலை, ஊமத்தன் இலை, கள்ச்சி இலை, வாதமடக்கி இலை, எருக்க இலை இவைகளை புட்டவியல் அவித்து கிழிகட்டி ஒத்தடம் கொடுக்க வலி நீங்கும்.

வற்ம கண்டி

ஓம் நமசிவாய நம

கேளப்பா வறும்மது முதலாம் காலம
கொடிதான நெற்றிநடு "திலர்தகாலம்"
நாளப்பா ஒரு விரலின் கீழ் "தாங்கல் காலம்"
நலமான வலமிடந்தான் "நட்சத்திரகாலம்"
வாளப்பா திலர்தத்தின் மூவிரலின்கீழ்
வளமான "குருந்து வற்மம்" வாகாய்ச் சொன்னேன்
கேளப்பா கடைக்கண் மூவிரலின் கீழே
கெடிதான "செவிக்குருதிக் காலம்" பாரே. 1

ஆடினேன் செவிக்குருதி காலத்துக்கு
அழகான சேர் மூன்றாறு விரலுக்குள்ளே
பாடினேன் "சங்குமுடிக்காலம்" தான்
நல் ஒரு விரல்கீழ் "உறக்கக் காலம்"
நாடினேன் இருவிரலின் கீழே
நல்ல ஒரு பெலத்ததோர் "திவிளைக் காலம்"
ஆடினேன் அற்புதமாய் அடவுஎல்லாம்
அத்தனையு மறிந்துனக்கு கூறத்தானே 2

திவிளைக் காலத்துக்கு சேரவே வலமிந்தான்
நலமாய் ஆறுவிரல் வலத்தே நாடிப்பார் "துடிவற்மம்" தான்
குவளை மூவிரலின் முன்னே மூக்கில் "வில்லான வற்மம்"
அரைவிரல் அரை மூன்றின்பின் கழுத்தரிக் கடிதானே
திவிளையின் "ஒட்டைக் கூம்பு வற்மம்"
நலமான விரல் ஒட்டை "அடப்பைக்காலம்"
கூவளைபோல் கூம்பின் அரையின் கீழ் "ஈரல்குலை வற்மம்"
குன்றான குலையின் நால் விரல்கீழ் கேளே. 3

உச்சியின் மூவிரலின் கீழ்
உண்மையாய் "மூத்திரகாலம்"
கச்சியாம் நால்விரல் கீழ்காண்
"ஆணுடம்பு வற்மம்" அழகாய்ப் பார்
மெச்சியே தண்டு ஆளும்
வித்து "கல்லெடைக் காலந்தான்"

உச்சியின் வலம் இடத்தே
 ஊன்றினேன் பிள்ளைதானே 4

பிள்ளையே ஒட்டைக் கீழே
 பகர்ந்திட்டேன் சந்து வசைவில்
மெள்ளவே "நடைவறுமம்" தான்
 விளம்பரண்டு விரலது கீழே
கள்ளமில்லாப் "பன்றிவற்மம்"
 காணவிரல் ஒன்றது கீழே
மெள்ள உறுளை மூலத்தில்
 மேலான "நெருக்கு வற்மம்" தானே. 5

பாரப்பா "பள்ளைப் பன்றி" வறுமத்துக்கு
 பாங்கான வலதுடையின் அசைவுக்குள்ளே
பாரப்பா "முன்டெல் வற்மம்" நடுவே
 "பள்ளை பாரதி சுருளி" இரண்டும்
பாரப்பா நரம்பதுதான் அற்றதானால்
 நலமாக நாழிகையும் நாற்பத்திஒன்றில்
பாரப்பா நரம்பதுதான் இருக்குமாகில்
 பாரிலே சுகம்வர மண்டலந்தான் பாரே. 6

கண்டத்தின் உள்ளய்யா "கூம்பிக் காலம்"
 காலத்தின் விபரத்தை கூறக்கேளு
பிண்டத்தின் நடுச்சுழி யதனில்தானே
 பிசகியே விசையான கரலம்கொண்டால்
கண்டநாள் மூன்று ஏழில்தானே
 கடிந்தபின் மூன்றேயப்பா கேளு
விண்டிடாது ஐந்தும் கூட்டித்தானே
 விளம்பினேன் உறுதியாய் மரணம்பாரே. 7

அடக்கமது "வாத வறுமம்" அறிவாய் நீயே
 அப்பனே கண்சிவக்கும் பெருவாய் கொள்ளும்
அடக்கமது வாய்கோணும் இருமலுண்டாம்
 அப்படியே கண்ணீர்பாயும் நாசி கட்டும்
திடமாகச் சயமிளகும் நச்சேத்திரங்காணும்
 செப்பினால் கேளாது கண் மேலாடும்
மடமாதே உறங்கினாப்போல் முகம் சுழிக்கும்
 வகையாக இன்னமும் நீ வருந்திப் பாரே. 8

பாரேநீ விக்கலுடன் நாக்குத் தள்ளும்
பண்பான வில்போலாம் கண்கள் மூடும்
பாரேநீ மூச்சொடுங்கும் கைகால் உளையும்
பண்பான கண் அதுவும் வெண்பஞ்சுபோலவும்
பாரேநீ அட்டையது போலே சுருளும்
பண்பான உறுமலுண்டாம் தேகம் சிலிர்க்கும்
வாறுடலும் குறுகும் வெண்நுரையே கக்கும்
வளமாக நாசியில் நீர் பாயுங்கேளே. 9

காணவே கைகால்கள் தளர்ந்து போகும்
கணமூலம் கடுத்துவிடும் வயிறு தானேற்றும்
தோணவே நெஞ்சொடுங்கும் கண்கள் தள்ளும்
சுறுக்காக கை கால்கள் மேலடிக்கும்
கோணவே தேகமெல்லாம் ஆட்டங் கொள்ளும்
கூறுவேன் கழுத்ததுவும் கோணிக் கொள்ளும்
வீணாக எண்ணாதே அப்பா நீயும்
விசை நரம்பு குருநாடி பார்த்துச் செய்யே 10

வாதத்தில் ஆணுடம்புக் காலம்
""கல்லெடைக் காலம்" அப்பா
தீதுடன் அதுவும் கொண்டிற்றானால்
செய்கையின் விபரமது கூறக் கேளாய்
கோதுற்ற ஆணுடம்பு குன்றிவிடும்
குறிப்பாக வித்து இரண்டும் மேலேறும்
வாதுற்ற பேர்களுக்கு நீயே செய்வாய்
பகையுடன் கைபாகம் அறிந்து செய்யே. 11

ஆனதோர் வாதந்தன்னில் அப்பா
அண்டமுங் கொண்டதானா லப்பா
ஊனமாம் அண்டபேதியப்பா
உண்மையாய் மலசலம் தானாய்ப் போகும்
ஆனதோர் நடைதான் கொண்டாலப்பா
ஆகவே மேலதுவும் ஏற்றிக் கொள்ளும்
ஊனாக அறிந்து காலம் நீயுமப்பா
உடனது கைபாகம் செய்வாய் பாரே. 12

செப்பவே பித்தத்தில் வறுமங் கொண்டால்
சேரவே மயக்கம்து வேர்வையுண்டாம்

வெய்யவே தலைசுழன்று ஓடிச்சாய்க்கும்
விரைவாக மணலதிலே படுக்கும் பாடும்
பையவே நித்திரையும் இல்லை இல்லை
பாரினிலே நாய்போலே எழுந்து சாடும்
செப்பிவே தலைசுழன்று நாக்குளறும்
செய்வினேன் ஐயத்தின் குணத்தைக் கேளு. 13

செப்பினேன் சிலேற்பனந் தானப்பா
சேரவே நாசி வாயாலப்பா
அப்பனே சோரை காணுமப்பா
அதிகமாய் திக்குமுக் காடுமப்பா
ஒப்புடன் உயர் கழுத்துமப்பா
உடனது முன்பின் ஆகுமப்பா
தப்பில்லை காலன் வந்தானப்பா
சடுதியில் மரணம் பாரேயப்பா 14

"வாதத்தில் வறுமம்" கொண்டால்
வன்மையாய் இளக்கம் சொல்வேன்
பாதத்தின் உள்ளின் நேர்மை
பகர்ந்திட்டேன் மூன்று நோக்கு
கோதுற்ற காரி மூன்றும்
குணமுடன் வெள்ளை மூன்று
வாதுற்ற புறந்தடவி வளர்
வரிசையில் அமர்த்திக் கொள்ளே. 15

"பித்ததில் வற்மம்" கொண்டால்
பிசகில்லை காரி ஒன்றும்
மத்தியில் சுழிமுனையில்
பக்கத்தில் ஆண்டு கண்டு
பத்திரமாய் நெஞ்சில் தட்டி
பச்சை வெள்ளம் முகத்தில் சிந்தே
உத்தியாய் சிலேற்பன மானால்
உடன்பட்டுச் செய்யாதே யப்பா. 16

மருந்துகள்

வறுமத்தில் நீர் கொண்டால் எண்ணை

கருஞ்சீரகம், கார்கோலரிசி, துத்தம், துருசு, பவளப்புத்து, வேம்பாடம் பட்டை, கஸ்தூரி மஞ்சள், வெள்ளைக் குந்திரிகம், தேவதாரம் இந்த ஒன்பது சரக்குகளும் வகைக்கு இரண்டு கழஞ்சு எடுத்துக்கொள்ளவும்.

தேங்காஎண்ணை படி - 1

தைவேளைச்சாறு, கெருடக்கொடிச் சாறு, வெற்றிலைச்சாறு, குப்பைமேனிச் சாறு, தாராய் இலைச்சாறு, சிறுதும்பைச் சாறு, முதலியவை வகைக்கு ஒரு ஆழாக்கு எடுத்துக் கொள்ளவும்.

மேற்படி கடைச்சாமான்களை பொடித்துக் கொண்டு, சாறுகளை ஒன்றாகக் கூட்டி அடுப்பேற்றி நீர் வற்றும் சமயம் பொடியைப் போட்டு தேங்காய் எண்ணெயை ஊற்றி மெழுகுபதமாக காய்ச்சி தேய்க்கத் தீரும்.

வறும வலிக்குத் தைலம்

வேப்பெண்ணெய் படி இரண்டு, பசுவின் பால் படி இரண்டு, செவ்விளநீர் படி மூன்று, கோரோசனை கழஞ்சு மூன்று, காஞ்சிரம்பழம் நாற்பது.

காஞ்சிரப்பழத்தை உடைத்து உள்ளே உள்ள சளிபோன்ற விழுதை எடுத்துக் கொண்டு வேப்பெண்ணையில் போட்டு மற்ற மருந்துகளையும் கூட்டி நன்கு காய்ச்சி பருவத்தில் வடிகட்டித் தேய்க்க வறுமத்தால் உண்டாகும் வலிகள் தீரும்.

வறுமம் பழகினால் உண்டாகும் தூலைக்கு கஷாயம்.

சதகுப்பை, நல்ல மிளகு, வேம்பாடம் பட்டை வகைக்கு கழஞ்சு - 1 இவைகளை இடித்து நாழி தண்ணீரில் கஷாயமிட்டு ஒரு ஆழாக்கு ஆக்கி குடிக்கவும். இப்படி ஆறு நாள் தினம் அந்தி சந்தி குடிக்க தீரும்.

ஓம் நமசிவய நம்

குருப் பிரம்மோ : குருவிஷ்ணு: குருதேவோ : மயேஸ்வரஹா:
குரு சாக்ஷாத் பரப்பிரும்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம :

வர்ம சூத்திரம்

பாகம் – 2

சீடனுக்கு அறிவு

கண்டாயோ நாடிநிலை நமக்குள் என்பார்
கைகண்ட சாஸ்திரங்கள் நமக்குள் என்பார்
பரன்பதியும் பூசை எல்லாம் எனக்குள் என்பார்
பகையாதே மூடர்என்று பார்த்துக் கொள்வாய்

அகஸ்தியர் ஞானம்

கேளடா காமத்தால் கெட்டோர் கோடி
கிளருகின்ற கோபத்தால் மாண்டோர் கோடி
நானென்ற ஆணவத்தால் அழிந்தார் கோடி
நலமான தீனியினால் மாய்ந்தோர் கோடி
வீணாக கொலை புரிந்து மாண்டோர் கோடி
பாரடா நானென்ற தெல்லாம் தள்ளி
பரஞான தத்துவத்தைப் பரிந்து பாரே
பரிந்து பார் உனக்குள்ளே பரமதியானம்
பாராட்டால் தொழுது படுகுழியில் வீழ்வாய்
ஊனான உடம்பெல்லாம் தனதென்றெண்ணு
உயிர் எல்லாந் தனதுயிர்போல் எண்ணிக்கொள்ளு
மானான விழி மடவார் போகத்தாலே
வருகின்ற நோயப்பா மசங்கலேண்டாம்
தேனான மொழி மடவார்க் கிச்சை கொண்டால்
தேகத்தில் நோய்க ளெல்லாஞ் சேருந்தானே.

பொருள்:

காமம், கோபம், ஆணவம், பெருந்தீனி, கொலை, நான் என்ற அகந்தை பெண் ஆசை முதலியவற்றை நீக்கி, ஆத்ம தியானம், பிறஉயிர் நட்பு, தத்துவம் அறிதல் போன்றவற்றைச் செய்வாயாக.

வறும விகடதுடி

குரு வணக்கம்

விசித்திரமாய் அருள்வேதம் கடவுள் போற்றி
விகடதுடி எடுத்துரைத்த முனியே போற்றி
அஞ்சாமல் என்னாவில் அருள்வாய் போற்றி
அனைவருக்கும் எடுத்துரைக்க அருள்வாய் போற்றி
என்னாளும் குருவினடி வணக்கம் போற்றி
என்னருகில் வந்தருளும் ஈசாபோற்றி
இவ்வுலகில் இந்நூலை உரைத்தாய்போற்றி
இகத்திலுள்ளோர் பிழைக்கவென்று ஈந்தாய்போற்றி.

பொருள்:-

விசித்திரமான இந்த வற்ம விகடதுடி எனும் வேதத்தை எடுத்து வழங்கிய கடவுளுக்கும், அகஸ்திய மாமுனிவருக்கும், என்நாக்கில் இருந்து, அனைவரும் அறியும் பொருட்டு எப்போதும் என்னுடைய அருகில் இருக்கும் என்குருவானவரும், என் அருகில் இருக்கும் ஈசனுக்கும், இந்த உலகில் உள்ளோர்கள் பிழைக்கும் பொருட்டு இந்த நூலை எடுத்து உரைத்த என் குருவின் பாதங்களைப் போற்றுகின்றேன்.

காப்பாக சொல்லிவரும் நூலதிலே
கருத்தான மூலிஎல்லாம் நரம்பிலுண்டு
வீசியதோர் பாதத்தின் மேலே நின்று
விளல்வீசிக் கொடிபோடும் "பருத்தியுண்டு"
ஆச்சரியம் அங்குலம்தான் இரண்டு தள்ளி
அழகான "வல்லாரை" அங்கே பாரே
வல்லாரை அறியவென்றால் வகைதானென்ன
வலிநோக்கும் மேல்நரம்பு ரெண்டும் நீக்கி 1

வட்டமாய் விரல்பிடித்தா லோடிவரும்
வகையான அதன்சாறு தேகமெல்லாம்
உத்தமனே கண்டறிவாய் வலிதீரும்
உண்மையாய் அங்குலம் ஒன்று தள்ளி
இத்தியமாய் "இஞ்சி" யதை ஆட்டிவிடு
இஞ்சியதற் கப்பாலே இசைந்து நிற்கும்
உத்தமமாய் "செவ்வராளி" அங்குஉண்டு
செவ்வரளி தொட்டாக்கால் சிலிர்க்கும்தேகம் 2

கைகால்கள் எல்லாமே அசந்துவிழும்
அன்னேரம் சன்னியது கூடிவரும்
பையவே அதற்கப்பால் சேர்ந்து நிற்கும்
"வில்லை" யதாம் வில்லையதை தொட்டு விட்டால்
கையவே விட்டுவிடும் சன்னியதும்
வில்லை யதற்கப்பாலே வீசிநிற்கும்
பையவே "பாலூறி" அதற்கும் பேராம்
பாலூறி தொட்டாக்கால் பரிதவிக்கும் தாகம் வரும். 3

அந்நேரம் சன்னியது கூடிவரும் முன்னேரம்
பாலூறிக் கப்பாலே படர்ந்து நிற்கும் தாமரையாம்
செந்தாமரையை அமர்த்திவிட தணிந்துவிடும் தாகமெல்லாம்
தாமரைக்கு அப்பாலே தழைத்து நிற்கும் வேம்பாகும்
தன்வேம்புஅதை தொட்டுவிட விறுவிறுத்து வாய்கசக்கும்
வேம்பதற் கப்பாலே விள்ளாதே கொடுப்பைதான்
பொன் கொடுப்பையை தொட்டுவிட குணமாகும் இக்கூறு
கொடுப்பைக் கப்பாலே கூறு கெட்ட வெள்ளறுகு
வெண் வெள்ளறுகை தொட்டாலே
விறைத்து விக்கலுடன் கண்கலங்கும்

வெள்ளறுகின் மேல்நோக்கி
மேன்மையுள்ள மொசு மொசுக்கை
நல்மொசு மொசுக்கை தொட்டாக்கால்
மோசம் போன ஜீவன் வடும்
விள்ளாதே மேன்மையுள்ள தலங்குணங்கள்
வீணர்களும் அறிந்தாக்கால் துன்பம்துன்பம்
சொல்லாதே யாவர்க்கும் இந்த சூட்சம்
சொன்னபடி கருத்தாக அறிந்து பாரே. 5

ஆங்கார முள்ளதொரு காலமதில்
அவ்வுலகம் மூலியாகி அருளறிந்து
ஓங்கார ஒலிகொண்டு என்னைப்பார்த்தேன்
இங்கிருக்கும் மூலிஎல்லாம் மூலிஅல்ல
பாங்காக இந்நூல் மூலிமுறை கண்டவர்க்கு
காணாமல் போன ஜீவன்வந்து சேரும்
ஊங்கார மூர்க்கமுள்ள கோபமதை
உத்தமனே நீயும்தான் தள்ளிப்போடு. 6

மாபெரிய பூசைதன்னை மறந்திடாதே
மகத்தான குருநிலையும் மறந்திடாதே
மாயமாய் இன்னமொரு மூலி சொல்வேன்
சொல்வேன் சூட்சுமத்தின் சூட்சுமம்தான்
தானாக சுறுக்காக முளைத்தமூலி
சுறுக்காக முளைத்த உடன் படராமூலி
தொட்டாக்கால் வாடி என்ற பேருமுண்டு
துளசிபோல் மணக்காத.மணமும் உண்டு. 7

மாயவரால் மாய்மாலம் செய்யும் மூலி
மங்கையர்க்கு மாயவனார் வகுத்த மூலி
மாமாரி பெய்கின்ற மாய்கையிலே
மணியாக முளைத்தது அந்தமூலி
மாகொடிகள் குன்றிவிட்டால் குடல் கண்துள்ளும்
மரணம்போல் வேர்வையுடன் மயக்கம் கொள்ளும்
மாமூலி கொண்டாக்கால் அதன் அருகில்
அழகாக இருக்கிறது ஜீவ மூலி. 8

அட்சணமே தொட்டுவிடு அயர்ச்சி மாறும்
பட்சமுடன் பார்த்துநீயும் பலன் கொள்வாயே
அட்சணமே மூலியது அறுந்து போனால்
அநியாயமாய் கொல்லும் தெரிந்த வாறே
இட்சணமே மூலியுடைய சாஸ்திரத்தை
இவ்வையகத்தோர் காணவென்று வெளியிடாதே
துட்சமுள்ள அசுரர்க்கும் மூர்க்கருக்கும்
துன்பம்தரும் அன்பில்லா வம்சருக்கும். 9

வகைகேடோர் வாய்மை கெட்ட மைந்தருக்கும்
வையகத்தில் மகனே நீ ஈவாயானால்
சோகையுடன் வேல்விழிகள் மயக்கம் கொள்ளும்
சொல்பேச்சை கேட்காட்டால் மண்டை நோயும்
பாகையுடன் கருத்தில்லா புத்தி மாறி
மாறாட்டம் கொண்டு நீயும் கானகத்தில்
காக்கையைப் போல் நீஅலைந்து சாவாய் சொன்னேன்
கருத்தினிலே கொண்டுநீ நூலைக் காறு. 10

ஈவதுதான் ஆருக்குஅப்பா கேளுகேளு
வாய்மையாய் பூசைநிலை மறவாதார்க்கும்
தின்மையுள்ள தர்மநிலை மறவாதார்க்கும்
மாற்க நிலை தவறாத மாந்தருக்கும்
மின்னும் மானிடரில் முப்பிறவி உள்ளவர்க்கும்
முழுமையான மனஉறுதி உள்ளவர்க்கும்
ஈந்தாயானால் புத்தியுடன் முக்தியுண்டு
இந்நூலின் தன்மையிது இறுக்கிக் கொள்ளே. 11

பார்வையுள்ள ஜெபதபங்கள் உனக்குஉண்டு
பக்குவமாய் இருத்தினால் வெளிச்சம் பாரே
பாரேநீ பச்சைமூலி இரண்டும் சொல்வேன்
பாங்காக ஆண்களுக்கு வலது பக்கம்
பாரேநீ பெண்களுக்கு இடது பக்கம்
பேர்பெரிய பச்சைஇலை இதுதான் பாரே
சாரேநீ இதன்குணத்தை அறிந்து கொண்டு
சத்தியமாய் நினைவில் கொண்டு செய்வாய்பாரே. 12

பாரப்பா பாலருக்கும் பாவையர்க்கும்
பாங்கான அடிவயிற்றில் அடியில்தானே
ஆரப்பா அன்பாக வளருதப்பா
அழகான இம்மூலி குணங்கள் கண்டால்
கூறப்பா குடிகெடுக்கும் வற்மம் எல்லாம்
கூப்பிடவும் கேட்காமல் பறந்தே போகும்
மாறப்பா மசக்கமெல்லாம் விட்டேயோடும்
மாறிவிடும் விறுவிறுப்பும் வாய்கசப்பும். 13

மாறாமல் நின்றுவிட்டால் மகிமை போச்சே
மாய்கை போல் மகிமையிலா பிரளிசெய்யும்
சோராமல் பிடரியிலே பிசகாமல் தான்
சோபையுடன் மெய்மூலி தாக்கு தாக்கு
கூறாமல் தாக்கியே தடவிவிட்டால் தயவாக
கொல்லும் பார்வையில்லா மயக்கம் மாறுந்தானே
மாறுமே வெள்ளறுகின் மூலிக்காலம்
மாறாட்டால் மெய்மூலி தொட்டால் மேன்மை. 14

வற்ம மரண கண்டி

காப்பு

ஆயுர்வேத முன்னோர் அறிவுன் ஓதிவைத்த
நோய்பல முறிவுதன்னை ஆராய்ந்துடன் பார்க்கவென்று
வாய்மையாய் தெறிந்துயானும் மருந்துகள் பற்றோடு எண்ணை
தூய்மையாய் தெரிந்து யானும் சுகம்பெற உண்ணச் சொன்னோம்.

பண்டிதனே வற்மமது அறியவென்றால்
பார்த்திடுவாய் குருநாடி கைநாடி தேர்ந்து
கண்டிதமாய் நாடியது காலந் தப்பி
கலந்து ஒரு நாடியிருகையில் வீசில்
பண்டிதனே வறுமமென்று அறிந்து நீயும்
பார்த்திடுவாய் தெளிவறிந்து பரனைப் போற்றி
கண்டிதமாய் செய் முறையை நன்கறிந்து.
கணக்காக செய்முறை கைசெய்வாயே. 1

கேளப்பா வற்மந்தான் கணக்கு சொல்வேன்
கெடிதான "வாத வற்மம் அறுபத்திநாலு"
கேளப்பா "பித்த வற்மம் இருபத்தி ஆறு"
திறமாக "சிலேற்பனந்தான் ஆறதாகும்"
நாளப்பா வாதவற்மம் நயந்து செய்வாய்
நடுவான பித்த வற்மம் பயமேயில்லை
மாளப்பா சிலேற்பனந்தான் கொண்டால் நீயும்
வளமாக எண்ணாதே மரணம் பாரே. 2

அடி முறை

முருக்கிக் கேற்றி மடக்கிக்கோ
திருநெத்திக் கொண்டொரு குத்த
முனையது தடவ கடமுடஎன
கொண்ட நெஞ்சி னகத்தொருகுத்த
மாறிச் சாண்ஒன்னு தட்ட
அடிவயிற்றில் ரண்டொரு குத்த
தரையில் ஏத்தி வெட்ட சுவடுமாறி நின்னு
தட்ட கணுக்காலில் நின்னு தட்ட.

நரம்பு அடகம்

அசாத்தியக் குறி

பாதமுதல் சிரசுவரை முழுச் சுற்றும்
பாங்கான வற்மம் முறிவு வந்தால்
நாதனருளாளே நானும் சொன்ன
நல்லஒரு அசாத்தியம் கூறக்கேளே
பாதக்கால் பெருவிரல் நகத்தில்
படு கணக்காக நெல்லிடை மீதே நரம்பில்
நாதனே அரைஇறைதான் முறிந்து விட்டால்
நல்லதொரு நாழிகையும் மூன்றே முக்கால்.

அப்பனே நாழிகைதான் மூன்றே முக்கால்
அதிமயக்கம் பின்இடக்கண் வலியுமுண்டாம்
தப்பாமல் புத்திகுழம்பி கேடுண்டாம்
தரித்திரமாய் பிணியதுவும் வருகுமாமே
அப்பனே குளிர் அதுவும் கூறாகாது
அடைவுடனே காய்ச்சல் கொள்ளும் மாறும்
தப்பாமல் பதினொன்றில் மாறுமேதான்
தானே மரறிய இடக்கால் குணமிதுதானே. 2

இன்னுமே காலத்தினுள்ளே கேளு
இதமான நெட்டுளர் இறை எடுத்து
உன்னுமே காலத்தின் வெள்ளையில்தானே
கன்னியே முறிவுக்கும் குணமிதுதானே
முன்னமே முட்டு சிரட்டைக்கும் நேரே
முறையான மறுபுறம் "குளிப்புற வற்மம்"
அன்னமே அதில் ஓரிறை முறிந்ததானால்
ஆனதொரு மயக்கமும் குளிரும் காய்ச்சல். 3

வந்தபடி குணமான மூன்றுஏழு
பதினொன்றில் கொல்லும் பார்த்து கொள்ளே
இந்தபடி இடக்காலின் குணமிதுதானே
என்று நீ அறிந்துமே தேறிக் கொள்வாய்
வந்தபடி கால் முட்டுச் சிரட்டைக்குத்தான்
கண்டாயோ நாலுவிரல் அதுக்கு மேலே
அந்தபடி ஓரிறைதான் முறிந்ததானால்
அடைவுடனே குளிர் காய்ச்சல் வருகும்பாரே. 4

பதமான குளிர் காய்ச்சல் இருபத்திஒன்றில்
பாங்காக இருந்துவிடகூறக் கேளாய்
இதமான மர்மங்கள் கூறக் கேட்பாய்
இன்முதுகில் முண்டெலும்பி லதனில்தானே
பதமான இரண்டிறைக்கு அடுத்துமே
அப்பனே "தாரை வர்மம்" என்பார் கேளு
இதமான தவறின்றி ஓரிறை முறிந்தால்
இடுகாட்டுப் பயணமே பதினொன்றில்தான். 5

மாரிக் கண்புருவ மேலே மாதே
மத்தியிலே இறைஒன்றில் அரை முறிந்தால்
கூறியேக் குளிருடன் காய்ச்சல் வந்தால்
குறையாது மூன்று முதல் ஏழுக்குள்தான்
பாரினிலே மரணமாம் பார்த்துக் கொள்ளே
பக்குவமாய் நீஅதையும் அறிந்து செய்யே
கூறிக் கொள் வர்மமதை குணமதாக
குவலயத்தில் இருந்து தவம் செய்வோருக்கே. 6

வாகான வயிறுஅது முறிந்துமே தான்
வந்து விட்டால் குடல்அதுவும் வெளியேதானே
வேகமாய் நாழிகை மூன்றேமுக்கால்
விந்தையாய் குடலதையும் உள்ளே போட்டு
வாகாக கட்டியே தைத்தாயானால்
வழியதுவும் இருக்குதப்பா உயிர் பிழைக்க
சாகாமல் இருந்துவிட இந்தமுறை
தப்பாமல் செய்துவிட சுகமதாமே. 7

கேடான நாழிகைதான் கழிந்துவிட்டால்
கெடிதான மூன்றுமுதல் ஏழில்தானே
பாடான படுஉதிரம் சேராதப்பா
பக்குவமாய் கைமுறையும் பார்க்கத்தானே
கூடான காரை எலும்பின் மீதே
கருதியே ஓரிறை அடுத்துமேதான்
பாடான அரைஇறை முறிந்து விட்டால்
படுகுளிர் காய்ச்சலுடன் மரணம் மூன்றில். 8

சொன்னாரே எல்லாரும் செழிக்கக் காதில்
சிறுதண்டடுத்து காலம் அரை இறைதான்

சொன்னாரே கொண்டாக்கால் ஈராறு
நாழிகைதான் என்று இதமாய் கழிக்கவே
சொன்னாரே கடைக்கண் ஓரிறை அடுத்து
காலமே அரைஇறை முறிந்து விட்டால்
சொன்னாரே நாழிகைதான் தொண்ணூறென்று
துல்லியமாய் நலமாக கழிக்கவேதான். 9

தேடியே சிரசுமுட்டி நாடியே உயர்தலத்தில்
சீராக அரை இறை முறிந்து விட்டால்
கூடியே பதினைந்து நாழிகை கழிக்கும்
குணமிதுதான் பாங்கான மறுபுறமுமே
காடியே கையது வெள்ளையில்தானே
கண்ணியே அரை இறை முறிந்தால்தானே
ஓடியே ஒன்பது நாழிகை ஊக்கம்சொன்னார்
உண்மையாய் சாத்திய அசாத்திய முற்றே. 10

நரம்பு சூத்திரம்

சிரசிற்கும் காலுக்கும் இடையில் இறைவன் வகுத்த நரம்பின் ஆக்கைக் குறிகளும், நரம்பு ஓட்டங்களுக்கு விபரமும்

வலது கால் மூட்டுக்கு கீழ் குருநாடி நரம்பு
அதன் மேலே நரம்பு ஒண்ணில் நாடி நரம்பு மூன்று
அது நீக்கி விசை நரம்பு ஏழு
அதில் பிரிவு நரம்பு எழுபத்தி ஏழு
ஆக் இருபுறமும் மூட்டுக்குக் கீழ் நரம்பு எண்பத்தி நாலு
மூட்டுக்கு மேல் மூணுக்குக் கீழ் நரம்பு ஓட்டம் 73
அதில் நடு நரம்பு மூன்று, மேலே கொக்கி நரம்பு - 1
மூணுக்குக்கீழ் இருபக்கமும் ஆக்கநரம்பு 73
அரை இளந்தலத்துக்கு மேல் தொப்புளின் கீழ்
குறுக்குப் பொறுத்துக்குக் கீழ் அதன் தோலில்
இருபக்கமும் பூட்டு நரம்பு 2 அதில் வற்மம் - 4
அதில் பிரிவு நரம்பு 42 அதில் ஆட்டம் நரம்பு - 3
ஆக நரம்பு - 46
இருபுறமும் கொப்புளுக்கு மேல் நெஞ்சுக் கொழுந்துக்கு கீழ்
வலம் இடம் உள் பூட்டு நரம்பு 2, அதில் ட்ரிவு நரம்பு - 64
விசைநரம்பு - 4 ஆக நரம்பு - 28
நெஞ்சுக் கொழுந்துக்கு மேல் காறை எலும்புக்குக் கீழ்
இருபக்கமும் விசை நரம்பு - 2 அதில் பிரிவுநரம்பு - 96
நெஞ்சுக்கு மேல் காறைக்கும் கீழ் கைக்கு விசை நோக்கி
இடம். வலம் ஆட்டம் நரம்பு - 2, மேல் உள்சாரம் நரம்பு - 3
ஆக நரம்பு - 100
கரத்துக்கு மேல் சங்குப்பூட்டுக்குக் கீழ் வலம், இடம்
கழுத்து அடி நரம்பு இருபக்கமும் - 2 மேல் ஆட்டநரம்பு - 2
ஆக நரம்பு - 6, பிற நரம்பு - 104 ஆக நரம்பு -110

அதன் மேல் சிரசின் கீழ் காது உள் நரம்பும், பிற நரம்பும். பூட்டு நரம்பும் - 12, சிரசுக்கும் விசை நரம்பு - 3, ஆக நரம்பு - 15 இருபுறமும் சரி, பிறத்தே பிடரியில் ஆட்டம் நரம்பு - 1, அதில் மடிவு - 2, ரண்டில் உப்புக்குதிக்கும் பிடரிக்கும் வலத்தே வாற நரம்பு வலது காதுக்கும் ஆக நரம்பு - 1, அதில் பூட்டு - 1, விசை - 2, அதில் பிரிவு உள் நரம்பு சார நரம்பு நீக்கி மேலே வலது கைக்கு நரம்பு - 68, இடது கைக்கு நரம்பு - 67, அரைக்கு மேல் இடத்தே

நரம்பு - 90, வலத்தே - 91, மூளையிலிருந்து வலத்தே நரம்பு - 106, இடத்தே நரம்பு - 105 இரு புறங்கால் ரண்டுக்கும் சரி.

இதில் உள் சூத்திரம் கண்டறியவும். உள் சாரம் - 18, அதில் நால் 36, தட்டு - 6க்கும் விபரம் மேல் தட்டு நீக்கி பஞ்சபூதம் அரசுக்கும், மூலத்துக்கும், மேல் தொண்டை பதப்புக்கும் கீழ் அடக்கம் கொப்புழின் கீழ் - 1, அதன் மேல் நெஞ்சங் கொழுந்துக்கும் கீழ் - 1, கொழுந்துக்கு மேல் பூட்டெலும்புக்குக் கீழ் - 1, அதின் மேல் எலும்பு முறுக்கும் அடி வறுமத்துக்கும் கீழ் - 1 அதன் மேல் பதப்பின் கீழ் - 1, ஆக பஞ்சபூதம் 5-க்கும் தட்டு - 5.

ஆக தட்டுக்கு மேல் அடக்கம் வலத்தே காறை எலும்பு நடுதானம் முறுக்கும், நேரே உள் மூலத்துக்கும், கீழ் நாடிக்கும், சங்கு பூட்டுக்கும், முன் நேரே மூலம் வரையும் நரம்பு அடக்கம் - 96, அதில் நரம்பு பூட்டுக்கு தலம் அறிய விபரம். வலது காலில் குருநாடி.

வற்ம குரு நாடி

திரிபுரம் எரிஈசன் திருப்பொருளை தினம் போற்றி
  செப்புவேன் விகடதுடி நாடிநிலையை எண்ணி
பாரிலுள்ளோர் நயத்துடனே நற்புடந்தான்
  பாங்காக அறிவதற்கு நயந்து சொல்வேன்
கூறியே வைத்துவிட்டேன் அடக்கக் காலம்
  கொண்டவர்க்கு குரு நாடி மின்னல் கொண்டு
மாரியே குளிர்ந்து தேகம் வியர்வை தோன்றும்
  விழி காணக் கண்மூடி மயங்கும் தானே
தானடா பித்த வற்மம் கொண்ட பேர்க்கு
  தாகமுடன் படபடக்கும் பித்தநாடி
பானடா பிறட்டி மேலே பின்னல் கொள்ளும்
  வாய் கசந்து சந்திக்கும் காய்ச்சல் உண்டாம்
ஊனடா சுரம் ஓர் ஏழில் மாறும்
  மாறாட்டம் கொண்டதோர் வாதவற்மம்
மானடா மலம் பிடிக்கும் வாய்வு வரும்
  வயிறுடனே முதுகு ஒட்டி வீக்கம் உண்டாம்
கூனடா குறுக்குடனே உளைச்சல் குத்து
  கொடியவிசம் போலே சத்தம் காணும்
வீணடா பெரியோர்கள் சொன்னபடிநாள்
  பதினெட்டுக்குச் செல்லும் செல்லும்தானே.

வற்ம வில்லும் விசையும்

உரை நடையில்

ஓம் நமசிவாய நம.

1. பரி சிரமம் உள்ளவர்கள் பார்த்தால் அறியலாம். எண்ணாமிரம் முடிச்சும், வாய்வு பத்தும், பூதம் ஐந்தும், நெஞ்சுப் பிரதியும், பிஞ்சில்லாதொளியும், சாகா தலமும், வில்லும் விசையும், அறிந்தவர்களுக்கு பலநூல் சாஸ்திர சமரச லோகங்கள் எத்தனை இருந்தாலும் அவைகள் மனிதனின் கைதிருஷ்டி பிரதிபிம்பம் இப்படி அறிவது இல்லாவிட்டால் உலகிற்கு துக்கமே.

2. "ஆமைக் காலம்" என்பது பொக்கிளினுடைய துவார வழி கீழாகும். அந்த ஸ்தலமானது தலைச் சோற்றில் இருந்து ஊறி, சரீரத்தில் பரந்து வேரினுடைய அமிர்தம் கொண்ட விருட்சத்தில் தழைத்து, ரெத்தம் கலந்து ஓடி கருவிகள் அதன் அதிர்ச்சியால் அசைய, ஆகாயக் காற்றை உள்ளிழுத்து வெளியில் தள்ளி பிராண கலைகள் கிரியை செய்ய ஜீவன் சூட்சுமமாயிருக்கின்றது.

3. குடல் பெட்டியில் மணிக்குடல் முப்பத்தி இரண்டு முழ நீளமும், நாளக் குழல்களும், சீங்குழல்போல் குருநாடியும் பன்னீராயிரம் சிறு நரம்பும், ஞானஸ்தலங்களும், பூர்வீகமும், பாறாத லிங்கம் பதிவாகிய அறிவும், அமிர்ததாரை சுற்றும் அங்கங்களும், சுருங்கி பெருத்து தழையும் சுருதிக் குழல்களும், பின் கலையும், இவைகளெல்லாம் உச்சிமுதல் பாதம் வரை எங்கிருந்தாலும் பொக்குளே இவைகட்கு யதாஸ்தானமாகும்.

4. தாரெலும்பு பதினாலும், நெஞ்சுப்புரத்தெழும்பு பத்தும் எட்டும், கொக்கி, தொண்டை, கழுத்து, புஜம், கூம்பு, நாக்கு அண்ணாக்கு, கண், மூக்கு, செவி, உச்சி, சந்து, இடுப்பு, தாரை லிங்கம், அடிவயிறு, உள்ளங்கால், மூட்டு, கரண்டை, விரல் இவைகளிலெல்லாம் பகுப்பாய் பிரித்து குணசீலமாய் வற்மம் கொண்டஸ்தலமும் கண்டு மாத்திரையும், பரிசிரம சீலமும் அறிந்து பரப்பிரம்மத்தை நினைத்துக் கையணைத்து சிகிச்சை செய்ய வேண்டும்.

5. மனிதனுடைய புத்தியும், சீலமும், கைப்பாகமும், அநுபவ நிச்சயமும், தாழ்மையும், வேண்டும். சமயங்கண்டு காலங்களுக்கு அடங்கல் நரம்புகளைப் பிடித்தால் தந்தி போல வேலை செய்யும். சுகம் உண்டாகும். காலினுடைய மூட்டில் இரண்டு வில்லும் மூட்டின் சிரட்டையைத் தளர்த்தி கை கோர்த்தாற்போல் பிடித்திருக்கின்றன.

6. இது முட்டினுடைய கைமடக்கிப் பரிசோதித்தால் அறியலாம். காலினுடைய கண்ணில் மூன்று விசை நரம்புகள் உண்டு. விரல்கள் இருபதிலும் மொழிகளில் இருபது விசை நரம்புகள் கூடுகின்றன. கால் முட்டினுடைய மடக்கும், கை முட்டினுடைய மடக்கும் சுளி நரம்பிலாகும். குண பேதங்களின் படி தாரையிட்டு கையனைக்கு வேண்டும் நடக்க முடியாமல் காலில் குத்தும் வேதனையும் உண்டாகும். ஆனால் புத்தியாய் கால் விரல் கொட்டு தட்டி சுகப்படுத்தவும்.

7. மனிதன் ஊக்கோடு கூடி இருக்க விழுந்தால் அந்த அயம் முழுவதும் இடுப்பில் வந்து சேருகிறது. அந்த அதிர்ச்சையால் விசை நரம்பு சூடேறி குடலின் பொக்குளின் ஸ்தானத்தில் மண்டிக் கட்டும், மூலத்தில் கால் பெருவிரல் கொண்டு ஊன்றிப் பிடிக்கவும். நாலு பிரிவும் கண்டு மாத்திரையால் அடங்கலைப் பிடிக்கவும். மூலத்தின் காரெலும்பு வந்த பொய்கையின் குழியில்.

8. யோனியில் பெண் உடம்பில் சரிவாய் அந்த குழியில் மூன்று அடங்கல் உண்டு. சரிந்து நின்றோ, சுமந்தோ, ஓடியோ உயரத்திலிருந்து விழுந்தோ இருப்பின் அதன் விசை கொண்டு பெண்ணுடம்பின் சரிவாயிலும், யோனியின் கீழ்பாகத்திலும், உள் தொடையிலும் மூன்று நாடியும் ஒத்திதென்றால் மூலத்தின் மூன்று நாடி காலினுடைய உட்கண்ணும், பலகை எலும்பினுடைய எந்திரக் கோணலும், துண்டு அடுக்குச் சிப்பியுமாம்.

9. சிப்பி உருளை தூங்கிப் போனால் அகத்தே காலினுடைய பெருவிரல் ஸ்தானத்தில் தன்னுடைய கால் பெருவிரல் கொண்டு குத்தி அசைக்கவும். உட்கார்ந்து இருக்கவும், அசையவும், நடக்கவும் சாத்தியம் உண்டாகும் பின்னே பக்கங்களில் கால் நரம்பு பின்னலுண்டாகி பெரு நரம்பு, பெட்டி, கடைக்கால் இவைகளில் வேதனையும் நடக்க முடியாமலுமிருந்த ரோகியை நடக்கச் சொல்லி சூட்சுமமாய் நின்று கால் பெருவிரல் கொண்டு மூலத்தினுடைய கோரை எலும்பில் குத்தவுந் தீரும்.

10. விரைப்பு உண்டானால் அசாத்தியம் எனக் கண்டு கொள்ளவும். ஆயங்கள் எல்லாம் இடுப்பில் வந்து சேர்ந்தபடியால் விசை நரம்புகள் தளர்ந்து சுருங்கி இருக்கும். விரையல் இல்லையென்றால் உடைத்த தேங்காய் கொண்டு ரோகியை கவிழ்த்துக் கிடத்தி இடுப்பில் வைத்து அசைத்துக் கொண்டிருக்க வேண்டும். வேதனையை உடனுக்குடன் கேட்டறிந்து கொள்ள வேண்டும். பின்னே தேங்காயை அடியிலும் ரோகியை மேலேயும் மலத்திப் பிடித்து கீழ் பூட்டு முட்டின் மேல் உள்துடை சந்தினுள், நரம்பிலும் அதன் கீழ் உள்ள நரம்புகளிலும் உள்ள முடங்களுக்கு.

11. கால் முட்டினுடைய மடக்குக் கோணில் புழு ஆடியது போல் சிறு நரம்பு எந்திரம் குருகி நடக்க முடியாமல் இருக்கும். அதைப் பிடித்து விரல் கொண்டு குத்தவும். நடக்கச் சொல்லி பிடியுள்ள நரம்பைக் கேட்டு அறியவும். முட்டிற்குக் கீழேயுள்ள வர்மங்களுக்கு சிரட்டைக் குழியில்தான் நரம்பு சுருளும்.

12. இதற்கு எந்திரத்தில் குத்தி எலும்பிலிருந்து கீழ் நோக்கி காலினுடைய கண்ணில் படத்தைத் திருப்பித் தட்டவும். முடம் தீர்ந்து விடும். நரம்பினுடைய சுளுக்கு தீர்ந்து சுகப்படும். முட்டினுடைய மடக்கிலும் உயரவில் எலும்பினுடைய இடையிலும் குத்தினால் கால் விறைப்பும், பின்னலும், உள்வேதனையும், வீக்கமும், உண்டாகும். நடக்க முடியாது.

13. அந்த முட்டினுடைய சிரட்டையில் அடங்கல் உற்பத்தியானது, அவ்விடத்திலிருந்து குதிகாலினுடைய விசை எலும்பு கண்ணின் மேலே பதிந்திருக்கின்றன. இந்த கால் கண்ணினுடைய இசைவுக் குழியில் குத்தினால் வீக்கமும், கால் விசை எலும்பு வெட்டும், நடக்க முடியாது. இரண்டு காலிலும் இது போலவேயாகும். வில் எலும்பு மூலத்தில் உருளைச்சிப்பியினுடைய அகத்தாகும். இதன் துடர் விசை நரம்பு பெருவிரல் மேலேயும் மற்ற நரம்புகளிலும் சுற்றி இருக்கின்றன.

14. சிறு விரலின் இரண்டு விரல் மேலே குத்தோ உதையோ கண்டால் கண் உளைச்சலும், சிகப்பும், சரீர விறைப்பும், குத்தும், கழிச்சல் வேதனையும் உண்டாகும். முட்டின் உயர முடமானால், அடித்துடையிலும் முட்டின் கீழானால் மடக்கிலும், குழியிலும் சுருள் நரம்பு உண்டு. அது வில்லும், விசையும் சேர்ந்ததில் சென்று கொள்ளக் கூடியது. அப்படிக் கொண்டால் அசாத்தியம்.

15. மடக்கும் பொய்கையும், துண்டும், இசையும், அடங்கல் நிதானங் கண்டு முழங்காலினுடைய எலும்பு சிரட்டையைப் பிடிக்கவும். அதில் குத்தோ இடியோ கொண்டால் வீக்கமும், உருளைக்கு விதனமும், கால் அசைக்காத நிலைமையும் உண்டாகும். கவிழ்த்துக் கிடத்தி இடுப்பில் இருந்து கீழ் நோக்கி இரண்டு காலையும் நீட்டி ஒப்பமாய் வைத்து உலக்கை போட்டு சவட்டவும். சவட்ட அசாத்தியம் போகும். இடுப்பிற்கு கீழேயுள்ள முடங்கள் எல்லாம் தீரும். இவைகளுக் கெல்லாம் இப்படியே சவட்டி தீர்க்க வேண்டும். பெருவிரல் நரம்பு அற்றுப் போனால் தரிப்புக் கண்ணில் காயம் ஜன்னியுண்டாகி சரீரம் வளைந்து போகும்.

16. கூவளம் வேரை பசுவின் பாலில் அரைத்துக் கலக்கி தாரையிடவும், பசுவின் நெய்யில் குமரிச்சாறு சேர்த்து தாரையிடலாம். எள்ளும் சுக்கும் அரைத்துப் பூசலாம். இம்மூன்று விதமும் செய்யலாம்.

17. காலினுடைய வெள்ளை முறிந்து தரிப்பு ஏறினால் எருமை மோரில் கைத்தோன்னி அரைத்து தாரையிடவும். இதற்கெல்லாம் வில்லினுடைய விசை மாறுகிற வரை தாரை குறையாமல் போட்டுக் கொண்டு இருக்கவும். வில்லினுடைய கால்கண்ணில் இசைவில் சிறு நரம்புகளுக்கு உணர்வு உண்டாகும்.

18. கறண்டைக் கண்ணினுடைய மொளியில் கவராயிருக்கின்ற வில்லில் கவராயிருக்கின்ற குடல் போன்ற விசை நரம்பு கறண்டையில் துடர்ந்து அடியில் இருக்கும் விசை நரம்போடு கூடுகின்றன. கையினுடைய விரல்களிலும் இது போலவே ஆகும். அப்படி வந்த நரம்பு மேலேறக் கரண்டையில் இருந்து முழங்கால் வழியும், அங்கால் வழியும் கூடி முட்டினுடைய விசை நரம்பில் பிரிவாகின்றன.

19. அதில் ஒரு கண்டமும், வில்லு நரம்பும், புறலோகமும் முட்டின் சாய்வில் இருப்பாகும். இப்படி இருப்பாகி கெட்டியாய் சிப்பியிலும், குறுக்கின் தாரைக் குழியிலும் சந்திரனை ஒட்டி இருக்கின்றன. கண்ணாடி எலும்பின் முன்வசமாய்த் துடைக்கெட்டைச் சேர்த்துக் கெட்டினது போல் வில் எலும்பும், விசை நரம்பும் உள் சூத்திரமாய் இரண்டு மார்பிலும் அகவழியே கூடி இரண்டு விசை நரம்புக் கொக்கியிலும், முதுகினுடைய தாரைவரையில் இரண்டாகவும் புறங்கழுத்தின் பேன்குழியில் சேருகின்றன. புறங்காதினுடைய மோடெலும்பினுள்ளும் இப்படி வசங்களில் உண்டாகி தலையோட்டை ஏந்திப் பிடிக்கின்றன.

20. இதன் பிரகாரம் மனிதன் சரீரத்தில் வில்லும் விசையும், இசையும் எழுபத்திராயிரம் நரம்பும், எண்ணாயிரம் முடிச்சும், முன்னூற்றுப் பதினாறு சுற்று நரம்பும், துவார வெளிகளும், வர்மப் பொய்கைகளும் உண்டாகி, அதில் சரியாய் மறுபுறம் திரும்பினால் அசாத்தியம் பிழைக்காது. மற்ற எல்லாவற்றிற்கும் வில்லும், விசையும் பரீட்சை செய்து பார்த்துப் பிடித்தால் அசாத்தியமுள்ள வர்மங்களும் எழுந்திருக்கும்.

21. சுண்டைவேர், வெள்ளருகு, துளசி, விஷ்ணுகிரந்தி கொழுந்து, குன்னிவேர், விறாலிஇலை இவைகள் வகைக்கு களஞ்சு ஆறு, நாகதாளி, அமுக்கறா, வையந்தாளை, குடங்கல், சந்தனம், பூவத்து, சீரகம், கொம்பரக்கு, ஆளியரிசி, திப்பிலிமூலம், கொட்டம், கச்சோலம், சிறுபுன்னையரிசி, ஏலம் வகைக்கு களஞ்சு ஆறு, அரைப்படி நீரில் க்ஷாயமிட்டு அரைக்கால் படியாக்கி மூன்றுநாள் ஆறு வேளை இப்படியே தினம் புதிதாகக் கொடுக்கவும். நரம்பினுடைய சுளுக்கு வற்மங்கள் சுகப்படும்.

22. ஆடாதோடை, அமிர்தவள்ளி, இசங்கு, குப்பைமேனி, நஞ்சறுத்தான், நாயுருவி, ஆடுதீண்டாப்பாளை, வேலிப்பருத்தி வகைக்குப் பலம் மூன்று, கார்கோலரிசி, சிவதை, கொத்தமல்லி, கண்டங்கத்திரி, சீரகம், கோரோஜனை திப்பிலி, மண்சட்டிபொடி, சாதிக்காய் வகைக்கு களஞ்சு இரண்டு ஒரு படி ஜலத்தில் கஷாயமிட்டு ஒரு உழக்காக காய்ச்சி ஒரு நாளைக்கு இரு வேளை மூன்று நாள் கொடுக்கவும். கூட்டிலே கொண்ட எட்டு வற்மங்களும் தீரும்.

23. முடில்லாதாளி, தைவேளை, சம்பங்கி, வேங்கை காதல், பிச்சிமொட்டு, தாமரை வளையம், சாரைக் கிழங்கு, முத்தங்காய், அமிர்த வள்ளி, மலைதாங்கி, கருவிளாஞ்சி வேர், செந்தட்டி வகைக்கு களஞ்சு பத்து, சீரகம், வால் மிளகு, குரோசாணி ஒமம், நெல்லிக்காய்த் தோடு, செவ்வியம், கிருமி சத்ரு, ஏலம், கார்கோலரிசி வகைக்கு களஞ்சு மூன்று, ஒருபடி நீரில் கஷாயமிட்டு கால்படியாக காய்ச்சி ஐந்து நாள் பத்துவேளை குடிக்கவும். குடலினுடைய கொளுந்து பள்ளை வற்மங்களும் சுற்று நரம்பினுடைய விஷங்களும் சுகமாகும்.

24. தூதுவளை வேர், ஆவாரை வேர், வெள்ளருகு, குறுந்தட்டி, செந்தட்டி, சூரிவேர், பூலா விருட்சம், தேவதாரம், சடாமாஞ்சி, மருது மூலம், கண்டங் கத்தரி வகைக்குக் களஞ்சி இரண்டு, ஒருபடி ஜலத்தில் கஷாயம் போட்டு ஒரு உழக்காக காய்ச்சி ஆறுநாள் பன்னிரண்டு வேளைகுடிக்கவும். நெஞ்சுக் கூட்டில் உள்ள சுற்று நரம்புகளின் கோச்சு குத்து கொளுத்து, அபார ஆத்தும துடிப்பு, கபாலயிடி, இவைகள் சுகமாகும்.

25. வெள்ளறுகு, பிரமி, சிவனார் வேம்பு, பிள்ளை நெருஞ்சி, மலைதாங்கி, துன்றி, இசங்கு, தூர்துவளை வேர், குட்டித் தக்காளி, வெள்ளைக் குடங்கல், திரிதேவி, தாராவேர், வகைக்குப் பலம் ஒன்று, அக்கறா, மதுரம், சீரகம், தகரம், ஏலம், கொத்தமல்லி, கொம்பரக்கு வகைக்கு ஆறு, வெள்ளரத்தை களஞ்சி மூன்று. மூன்றுபடி நீரில் போட்டு ஒரு உழக்காக்கி மூன்று நாள் ஆறுவேளை கொடுக்கவும். உள்வற்மம், கொழுந்து கோச்சல் உண்ணும் மின்னுல், இடி, இருமல், சுவாசகாசம் இவைகள் சுகம் உண்டாகும்.

26. அறுகன்வேர், குறுந்தட்டி வேர், ஆடாதோடை வேர், கூவளத்தின் வேர் வகைக்கு பத்துபலம். திப்பிலி, அமுக்கறா, நாகணம், தாளிசபத்திரி, சிறு நாகப்பூ வகைக்கு களஞ்சி மூன்று, இரண்டு படி நீரில் கசாயம் இட்டு வற்ற வைத்து பின் கொம்பரக்கு பலம் ஒன்று, திப்பிலி பலம் கால் இவைகளை பொடித்து துணியில் அரித்து மேல் பொடியிட்டு ஆறு நேரம் குடிக்கவும். உள்வற்மம், கொழுந்து கோச்சல் நரம்பு, ஈரல், கூம்பு இவைகளின் விஷங்களும், உள் கொழுந்து வேதனையும், சுகமாகும்.

27. கண்டங் கத்திரி, செந்தட்டி, கருஞ்சுண்டை வேர், தும்பை வேர் வகைக்கு பலம் ஒன்று. அமுக்கறா, திப்பிலி, மதுரம் குங்கிலியம் வகைக்கு களஞ்சி மூன்று, மூன்றுபடி ஜலத்தில் கஷாயம் வற்ற வைத்து ஏலம் மேல் பொடி போட்டு பன்னிரண்டு நேரங் கொடுக்கவும். சகல வற்மங்களில் உள்ள கொழுத்தும், வேதனையும் சுகமாகும். வற்மங்களினால் முடங்கி கிடப்பவர்களுக்கு சுரிசாத்து, அமிர்தவள்ளி அமுக்கறா வகைக்கு மூன்று களஞ்சு எடுத்து ஒருபடி ஜலத்தில் கஷாயம் வற்ற வைத்து குளிகை உரைத்து கொடுக்கவும்.

28. நாகணம், சிங்கி, ரசம், புனுகு, இருவேலி, பச்சை கற்பூரம், ஏலம், கண்டங்கத்திரி, அமுக்கறா, திப்பிலி, வகைக்கு களஞ்சி மூன்று, திப்பிலியும், மிளகும் கசாயம் செய்து அந்த நீரில் மேற்படி சரக்குகளை முப்பது நாழிகை அரைத்து பயறு அளவு உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு ஜன்னிக்கும், வலிப்புக்கும், இஞ்சிச் சாறும், தேனும் சேர்த்துக் கொடுக்கவும்.

29. மீரை களஞ்சி மூன்று, சூடம் களஞ்சி இரண்டு, புனுகு களஞ்சி ஒன்று, கோரோஜனை களஞ்சி அரை, ஏலம், கண்டங்கத்திரி, வால்மிளகு, வகைக்கு க்ளஞ்சி மூன்று, கூவளத்தின் வேர் கருஞ்சுண்டை வேர் இவைகள் சேர்த்து கசாயமிட்டு இருபது நாழிகை அரைத்து மிளகு அளவு உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு பெரும் சுவாசத்திற்கும், வலிப்பிற்கும், கபத்திற்கும், திப்பிலி கசாயம் செய்து அதில் கொடுக்கவும். பொருமலுக்கு இஞ்சி, தும்பைப்பூ இவைகளின் சாற்றில் கொடுக்க சுகம்.

30. கற்பூரம், கச்சோலம், மீரை, சந்தனம், சிப்பி, முத்து, பவளம், சங்கு, உத்திராட்சம், காண்டாமிருகப் பால், அன்னபேதி, வெண்காரம், செவியம், அபின், பளுக்காய், கடுகு ரோகிணி வகைக்கு களஞ்சி இரண்டு முருங்கைப் பூவை வேப்பன் பழச் சாற்றால் அரைத்து பயறு வண்ணம் உருட்டி இஞ்சியும், கொளுஞ்சி வேரும் கசாயமிட்டு மாத்திரையை உரைத்து கொடுக்கவும் சுகமாகும்.

31. தூதுவளைவேர், கருஞ்சுண்டைவேர், இசங்கின்வேர், குட்டித் தக்காளி வேர், அமுக்கறாவேர், திப்பிலி, மல்லி, கார்கோலரிசி, சிங்கி, கற்கடக சிங்கி, வெள்ளரத்தை வகைக்கு களஞ்சி இரண்டு சேர்த்து வெயிலில் வைத்து தேனில் கொடுக்க காயங்கள், வற்மங்களில் உள்ள ரத்தக்கட்டு இவைகள் சுகம்.

32. செந்தட்டி, சாரணைக் கிழங்கு, மலைதாங்கி, கருங்குடங்கல், வேலியிலை, ஆசாளி, வெள்ளைக் குங்கிலியம், மதுரம், திப்பிலி, பூலா விருட்சம், சீரகம், ஏலம், கண்டங்கத்திரி, மிளகு, இலவங்கம், வகைக்கு களஞ்சி மூன்று இவைகளை வெயிலில் வைத்து உலர்த்தி பொடித்து பசுவின் நெய்யில் கொடுக்க வற்மங்களும், கொழுத்து, கபம், குன்னல், இவைகள் சுகமாகும்.

33. திப்பிலி, பத்திரி, சிறுநாகப்பூ, கண்டங்கத்திரி, கற்கடக சிங்கி, தேற்றான் விதை, கொட்டம், கரும்பிடம், வெள்ளை நொச்சி, காக்கணம் வேர், பொன்னாவரை வேர், இவைகளை ஒரிடையாய் சேர்த்து வெயிலில் வைத்துப் பொடித்து தேனில் கொடுக்கவும். காரீரல், வெள்ளீரல் சம்பந்தமான கோச்சல், தரிப்பு, கபம், இருமல் இவைகள் சுகமாகும்.

ஐந்தெண்ணை

34. கூவளத்தின் வேர், இசங்கின் வேர், விராலிவேர், ஆவாரை வேர், தொட்டால்வாடி வேர், கொடிவேலி வேர் இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, குறுந்தட்டி பலம் இருபது. மூவிலை ஐந்துபலம் இவைகளை ஐந்துபடி நீரில் கசாயம் வைத்து, கடுகு, வெள்ளரத்தை நாகணம், சந்தனம், அமுக்கறா, பத்திரி, கொம்பரக்கு, திப்பிலி மூலம், தேவதாரம், சீரகம், கசகசா, செண்பக மொட்டு, சமுத்திராப் பழம் வகைக்கு மூன்று கழஞ்சு வீதம்; இருவேலி, முத்துச் சிப்பி, குங்குமப்பூ வகைக்கு களஞ்சி ஒன்று, ஆவின் நெய், தேங்காய் நெய், பன்றி நெய், நல்லெண்ணைய், வேப்பெண்ணைய் வகைக்கு கால்படி, மருந்தெல்லாம் கசாயமிட்டு வடித்து எண்ணெயில் கலந்து கடுகு பதமாக காய்ச்சி குடிக்கவும், பீனிசம், தரிப்பு, புறத்திடுதலும் மூட்டு வற்மங்களும், பிடி நரம்பு வரட்சைகளும், விசை நரம்புக் குற்றம், கொளுந்து, உள்வேதனை, கபம், இருமல், வெட்டு விறையல் இவைகள் சுகம்.

முக்கூட்டு எண்ணை

35. ஆவாரை வேர், கருஞ்சுண்டை வேர், செந்தட்டிவேர், சாறணைக் கிழங்கு, முள்ளில்லா வாடி, குடங்கல், நாகதாளி வகைக்குப் பலம் ஒன்று, இலையும் தழையும் சேர்த்து இரண்டுபடி ஜலத்தில் கசாயம் இட்டு ஒரு உரியாக. வற்ற வைத்து கச்சோலம், கண்டங்கத்திரி, திப்பிலி, அரிசி வகை ஆறு, கொம்பரக்கு, அமுக்கறா, ஜாதிக்காய், குங்குமப்பூ, பளுகாய், மனோசிலை, கொட்டம், செவியம், செஞ்சந்தனம், வகைக்கு களஞ்சி மூன்று. ஆமணக்கெண்ணைய், தேங்காய் எண்ணை, நல்லெண்ணைய் வகைக்குப் படிகால் ஒன்றாகச் சேர்த்து இடங்களி வெள்ளத்தில் காஷாயம் மருந்துகள் சேர்த்து வற்ற வைத்து இறுத்து எண்ணையில் கலந்து மெழுகுபதம் வடித்து சகல வற்மங்களுக்கும், கொளுந்துகளுக்கும் மேலிட்டுத் தடவி விட சுகம். இசைவிலும், சுளியிலும், கூம்பின் கூட்டிலும் கொண்ட வற்மங்களுக்கு உள்ளுக்கு கொடுக்கவும்.

நெய்

36. முள்ளில்லா வாடி, அமுக்கறா, கடுகு, மல்லி, கொட்டம், சந்தனம், கொம்பரக்கு, வகைக்கு களஞ்சி மூன்று, கால்படி பசுவின் நெய்யில் மருந்துகளை அரைத்து கலக்கி காய்ச்சி மெழுகு பதமாக வடித்து உட்கொள்ள வற்மங்களினால் உண்டான வறட்சி தீரும், சரீரம் புஷ்டிக்கும்.

எண்ணை

37. ஆமணக்கெண்ணை, நல்லெண்ணை, வகைக்குக் கால்படி, கொம்பரக்கு, திரிபலை, திரிசாதி வகைக்கு பலம் ஒன்று, சதாவேலி, கொடிவேலி, அருக்கன் வேர் கஷாயத்தில் அரைத்து எண்ணெயில் கலந்து மெழுகு பதமாக வடித்து சேர்த்துக் கொள்ளவும், வற்மத்தால் குன்னி நடக்கிறவர்களுக்கும், உள்சுவாசம், கோச்சல், கொளுத்து, இருமல் முதலியவை சுகமாகும். ஒரு நேரத்திற்கு கரண்டி எடை வீதம் உள்ளுக்குக் கொடுக்கவும். நடக்க முடியாமல் இருப்பவர்களுக்கு விசை வில்லுடைய ஸ்தலம் நோக்கி எண்ணையிட்டுத் தடவவும், கைஉத்தேசம் பார்த்துச் செய்யவும்.

38. சரம் அடங்கிலுமுள்ள பின்னல் நரம்பினுடைய விஷங்களும் விசேஷத்துவமாம். விசைவில்லினுடைய உள்ளே எழுபத்தாறு வற்மம் உண்டு. மற்ற வற்மங்களுக்கு வில்லினுடைய எந்திரங்களைப் பரீட்சிக்க வேண்டாம். அவைகள் ஆதார வற்மம் சங்கங்களாகும்.

39. தண்ணீரில்லா மேனியும், சுளியும், சிப்பும், உருளையும் விசையும, வில்லும், கண்டவர்களுக்கு ஒன்றும் கஷ்டம் இல்லை. கால் கை திடமும், ஓர்மையும், பரிசிரமமும், ஆயங்கள் நிச்சயமும், சுவட்டினுடைய பெருக்கமும் நிச்சயம் அறிய வேண்டும்.

திருமேனிஎண்ணை

40. குப்பைமேனிச் சாறு, தைவேளைச் சார், நவர இலைக்கொடி, மரக்கொடி, நாயுருவிசார், வேலிச்சார், நத்தைச்சூரிச் சார், குருந்தொட்டி, மொசுமொசுக்கை இலைச்சார், இலுமிச்சம் சார் இவைகளொடு காஞ்சிரை வேர், கெருட கொடி, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கருஞ்சீரகம், கார்கோலரிசி, இவைகளுடன் துத்தம், துருசு கூட்டிக்கொள்.

41. நற்சீரகம், கொட்டம், ராமிச்சம், அரிதாரம், கஸ்தூரி, மதுரம், கோரோஜனை, அபின், வெள்ளைக் குங்கிலியம் இதில் சாறு வகை ஒரு ஆழாக்கு வகைக்கு எடுத்துக் கொள். கடைமருந்து வகைக்கு ஐந்து கழஞ்சி எடுத்துக் கொள், நல்லெண்ணை ஒரு நாழி எடுத்துக் கொள். கடை

மருந்துகளை இடித்து பொடியாக்கி சாறுடன் கலந்து நல்லெண்ணையில் இட்டு காய்ச்சி மெழுகு பதமாக வடித்து எடுத்துக் கொண்டு தேய்க்கவும்

42. இதனால் வற்மங்கள் தீரும். வற்மத்தால் வந்த ஜன்னி, மண்டையிடி, மண்டைக் குத்து, மாற்றானால் செய்யப்பட்ட வற்ம நோய்கள், நரம்புப் பிடி, அலவு சென்னி, ஆயாசம், மயக்கம், கிறுக்கு, உள்தளர்ச்சை, உச்சி வலி, உச்சிக் குத்து முதலியவையும் வற்ம நோய்கள் எல்லாம் தீரும் என்பது பொதிகைமலை முனி உரைத்த உண்மைதானே.

சுவாதி எண்ணை

சொல்லவே திரிகடுகு பழையோடாலும்
சொற்பெரிய மதுரமொடு தேவதாரம்
நல்லதொரு அரத்தையொடு மாஞ்சி கொட்டம்
நான்முகப்புல் அக்கிறா சந்தனம்
வல்லபுகள் கார்கிலும் முத்துச் சிப்பி
வகையான இருவேலி றாமிச்சம் சிறுதேக்கு
எல்லை மணிக் குங்கிலியம் கரியபோளம்
இயல்பான நாகப்பூ பூலாவிருட்சம். 43

தானேகேள் கண்டில் வெண்ணை பளுக்காய்
மோதகம் அசூர்னகம் வேப்பன்பட்டை
தானேகேள் காயம் கிருமிசத்துரு
தயவான கருஞ்சீரகம் சோலம் கோலம்
தானே கேள் திரிசாதி ஏலம் சதகுப்பை
தன்மையுள்ள கடல் நுரையும் சிறுநாகப்பூ
தானேகேள் மருந்தைஎல்லாம் இடித்து நன்றாய்
தயவாக வகைவகைக்கு களஞ்சி ரெண்டு. 44

இரண்டான ஆவின்நெய் புங்குஎண்ணை
சென்னைக்காய் எண்ணை நல்லெண்ணையும்
திரண்ட தேங்காய் எண்ணை திறமாய் சேர்த்து
குணம்பெறவே வகைவகைக்கு படிதான் ஒன்று
விரண்டான ஆவின்பால் வெள்ளாட்டுப்பால்
விசித்திரமாய் கந்தப்பால் தேசிப்பாலும்
திரண்டான முலைப்பாலும் தானே வாங்கி
திறமான சம்பழச்சார், கும்பழச் சார், நிம்பழச்சார் 45

என்மகனே எட்டிச்சார் மட்டிச்சாறும்
எதுவான வெப்பாற்றிப் பழத்தின் சாறும்

என்மகனே எல்லாமே வகைக்கு படிஒன்று
எள்ளளவும் பிசகாமல் சேர்த்திடுவாயே
என்மகனே சந்தனமும் வேங்கைக் காதல்
இயல்பான கருங்காலி பொன்னாவரைபட்டை
என்மகனே மதுவான அத்தி இத்தி ஆல்
அரசு குறுந்தொட்டி பட்டைவகை பலம்தான்ரெண்டு 46

ஆகவே இருகுறுணி நீரிலிட்டு
அட்டவாக கசாயம் ஐநாழியாக்கிக்கொண்டு
ஆகவே பெரிதான உருளி தன்னில்
வகையான மருந்து முதல் எண்ணை பாலும்
போகஇந்த கசாயம் அதும் கூடசேர்த்து
பொங்கமுடன் எருக்கிலையும் நொச்சி மேனி
தாகுபெற வல்லாரை கொடுப்பை வெற்றிலை
தயவான கைதோணி சங்குக்குப்பி 47

சங்கென்ற வகைக்கு சார் படிதான்பாதி
பரிவாக இதை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து
பொங்கியது போகாமல் அனல் எரித்து
பொருந்தவே மெழுகு பதமாகக் காய்த்து
தாங்கியதோர் புனுகுச் சட்டம் வெட்டிவேரும்
பச்சைபாதி மிச்சத்தாலே எல்லாம்
எங்கும் ஒரு நிலையாக கணேசனுக்கு
எண்ணையதை வடிகட்டி பூஜைசெய்யே. 48

செய்யவே அந்தி சந்தி பத்துநேரம்
கொள்ளுவது காசிடைதான் வேளையொன்று
பையவே தேகமெல்லாம் எட்டுநேரம்
பாங்காக உருவிவிடு எண்ணை போட்டு
நையவே வெண்ணீரில் முழுகச் சொல்லு
நயமான பருவற்மம் பன்னிரெண்டும்
தொய்யவே தொடுவற்மம் தொண்ணூற்று ஆறும்
துரிதமொடு உள்வற்மம் எல்லாம் தீரும். 49

கேளப்பா வாதபித்த சிலேற்பனங்கள்
கெடியான கைவிஷங்கள் சூனியங்கள்
பாளப்பா பேய்பூத பிசாசினாலும்
பலநரம்பு தெற்றலுடன் பரிசினாலும்

நாளப்பா வைத்திருந்து சிரசோடெங்கும்
வளமாக பூசிவர எட்டு நேரம்
கேளப்பா பாகமுடன் பத்தியங்கள்
கெடிதாக கூறுகிறேன் கெவனம் கேளே. 50

கடினமடா மோகத்தைத் தள்ள வேண்டும்
புளியுடனே உப்பு இனிப்பு நீக்கவேண்டும்
அடிமையைப்போல் பசும்பயறு கூட்டிக் கொள்ளே
அப்பனே சொன்னதொரு வற்ம சாஸ்திரம்
கடினமுள்ள மருந்துடனே குணபேதங்கள்
கண்டு பேதமென்ற ஸ்தலங்களின் இடமும் சொல்லி
அடிமனமே அசாத்தியம் சாத்தியம் வில்விசையும்
அழகாக குருபாதம் போற்றி முற்றே. 51

வற்ம சூத்திர நிகண்டு அகராதி – 300 ஒடிவு முறிவு ஞானம்

ஓம் நமச்சிவாய நம

அண்டபிண்டம் எண்டிசையும் ஒன்றதாகி
அண்டபகிரண்ட மதின் புறமுமாகி
அண்டபிண்டம் திரிகிரிதை நாலுயோனி
அதிலெழுந்த ஊர்வனமும் பறவை தேவர்
கண்டிருந்த மனிதாதி பரங்கள் யாவும்
கதிப்பான நீர் வளமும் கரிதி நாற்கால்
கொண்டிருந்த எழுதோற்றம் ஒன்றாய் நின்ற
குணமான பொருளாதி குருவேகாப்பு. 1

ஆதியந்தங் கடந்த பொருள் நற்குணமாய்
நின்ற அகண்டபரிபூரணமே அளவில்லாத
ஜோதிஎன்ற நிர்மலமே சூட்சா சூட்சம்
சுடர்ரவி மதிஎன்றும் முச்சுடரும் தாண்டி
வீதியென்ற ஒலி இறைக்குள் ஒளியாய்யெங்கும்
மெய்ப்பொருளாய் எப்பொருளும் நிறைவதாக
சாதியென்ற சாதிக்குள் உயிராய் எங்கும்
தானாக நின்றிலங்கும் மூலம் காப்பாம். 2

மூலமுதல் ஆறுஸ்தலத்தோடே மேலாய்
மூலவெளி தலமதிலே மேலாதாரம்
பாலவெளி ஸ்தானமது தான்கடந்து
பதியான முப்பாழும் கடந்து மென்மேல்
நாலாக மேல் குகையில் குடியிருந்து
வந்த வழிதனைக்காண தினம் நினைந்து
ஆலவிஷம் உண்டசிவன் அடியினைத்தினம்
அன்புடன் பணிந்து ஐங்குருவும் காப்புதானே. 3

ஐந்துருவும் மூன்றுருவும் ஒன்றாய்க் கூடி
அதனாலே ரெண்டுருவும் களங்கமின்றி
தேய்ந்தது காண் அண்டபகிரெண்ட மெல்லாம்
தொல்லையற்று நின்ற குருநாதாஉன்னை
ஆய்ந்துகண்டு சேர்ந்தவர்க்கு நீயே தஞ்சம்
அல்லாது வேறுண்டோ அமைச்சர் கோவே
மாய்ந்த குருநாதா உன்னடிபணிந்து
மறவாமல் இன்னுமொரு காப்புதானே. 4

இன்னுமொரு ரெண்டாகி நின்றாய் நாதா
எதிர்க்குமொரு முப்பாழில் குடிதானேறி
இன்னமொரு மூன்றாகி பதியில் வாழ்ந்து
இல்லறத்தை நல்லறமாய்ச் சுத்திபண்ணி
குன்றுமணி போலிருந்து வாழும்நாதா
பிரணவத்தில் வளர்ந்தெழுந்த மூர்த்தி
சென்றுசுடர் மணிவிளக்காய் பூர்ணமாய் நின்ற
செஞ்சுடரோன் கமலபதம் காப்புதானே. 5

மலரான குண்டலியாள் தாயின் செய்கை
வல்லவே பிரணவத்தோ டொன்று சேர்த்து
தலமான வளிகளெல்லாம் பெருகிச் சென்று
சதுரான பெருவெளியாய் காயத்தோடே
நிலையாகி மறுபடியும் முன்பின்னாகி
நிர்ணயமாய் முதல் கடையாய் நடுவுமாகி
பலவகையாய் உயிராகி உடலுமாகி
பதிக்கரசாய் ஏவல்செய்யும் ஸ்தலமே காப்பு. 6

ஸ்தலமான ஸ்தலத்தோடே அசைவு புக்கி
தானுமதில் ஏறிமலர் மணத்தைக் காண

ஜலமாகி வந்தவளி தன்னைக் கண்டு
சந்தித்து மேல்வீட்டில் குடியுமேறி
பலஉணர்வால் உடலாகி உயிராகி
பகர்கருவாய் நின்ற பதினாறு காப்பாய்
நிலைபெருகி ஒருகுருவாய் நின்ற நாதா
நின்னருளை என்மீதில் நிகழ்த்தக் காப்பே. 7

நிகழ்த்துவாய் அண்டபகி ரண்டமெல்லாம்
நின்றாடும் மணிசூட்சத் தப்பாலேறி
புகழ்த்துவாய் உன்னையன்றி வேறேயுண்டோ
புல்லர்களை ஏன்படைத்தாய் புனிதநாதா
ஜெகத்தில மைந்திருக்கும் வளிக்கடங்கா நாதா
தன்னை யொரு பாகமாய் அமைத்துக்கொண்டு
அகத்திலிருந் தகஞானதீபம் காண
அருள்புரிந்து எனைக்காப்பாய் அண்ணல் கோனே. 8

அண்ணலே உலகதிலே வாழும் மாந்தர்
அடிகாயம் முறிவு விழுந்தல்லலாலும்
விண்ணடியில் புனையற்று விழுகையாலும்
விழுந்து அங்கம் சிதறுண்டு நொறுங்கலாலும்
மண்ணதிலே வெகுநாளாய்த் துக்கமுற்று
மற்றவரால் வற்மமது கொள்கையாலும்
திண்மையுடன் இவைகளாலே பலத்துக்காக
செப்புகிறேன் எண்ணையொடு கஷாயம் மாத்திரை. 9

மாத்திரையும் கிருதவகை துவாலை போக்கும்
வகையான நசியமுடன் தூளின் போக்கும்
சேர்த்துடனே ஔஷதங்கள் செய்யும்போக்கும்
செய்யாமல் நிலைதனை அசாத்தியத்தை
பார்த்தரிந்து நீவிலக ஸ்தலத்தின் போக்கும்
பண்பாக ஈடுகொண்ட குணத்தின் போக்கும்
காத்துமுறை செய்து உயிர் காக்கும் போக்கும்
கசடர்களை கைகொண்டு செய்யும் போக்கும். 10

போக்காக கால்கொண்டு செய்யும் போக்கும்
பொட்டணத்தில் கிளிகள் ஊணும் போக்கும்
தேக்கமற தெளிவாகச் சொன்னேன் பாரு
தெளிவுடனே உண்மையதை தெரிந்து பாரு

ஆக்கையுடன் குருபரனை நினைத்துக் கொண்டு
அன்னியர்தன் உயிரை உன்உயிர் போலும்
வாக்குமனம் ஒன்றாகி நின்று கொண்டு
வற்மங்கள் முறிகாயம் எல்லாம்காணே. 11

காணவே அபகுறிகள் தட்டுமென்று
கண்டாயோ அகலநீ விலகி நில்லு
ஊணவே தீருமென்ற நிஜமும்கண்டால்
உத்தமனே செய்துநீ வசதியாக
வாழ்நாள்தான் பிரியுமென்று நிஜங்கள் கண்டால்
வல்லவனே அருகினிலே சருகவேண்டாம்
தூணதுபோல் நின்றிருந்து குறியும் பார்த்து
சூட்சமமாய் யோசிக்க சூட்சம்தானே. 12

சூட்சாதி சூட்சுமத்தைக் கண்டு நீயும்
சுருக்காக விபரமெல்லாம் அறிந்து பார்த்தால்
ஆச்சரிய மாயிருக்கும் ஸ்தலங்கள் கண்டால்
அதுபெருகி குளிர்ந்து இருக்கும் அறிந்துபாரு
பாச்சலுடன் அத்தலத்தில் பிராணவாயு
பற்றியே சிக்கருப்பு உயிருண்டென்றால்
மாட்சிமையாய் நீ அறிந்து ஸ்தலத்தில் தேறி
மறவாமல் இருவினையும் வகுத்துப் பாரே. 13

வகுப்பாகப் பார்க்கையிலே படுகாலத்தில்
வற்மங்கள் கொண்டதென்றால் சீனம் செய்து
தொகுப்பறவே பிராணகலை நாலும்சிக்கி
தோன்றினதால் பிராணனுக்குக் குற்றமாகும்
பகுப்புடனே சிக்கலது தீர்ந்ததென்றால்
பகையான வற்மங்கள் இல்லையென்பார்
நகைப்புடனே அறுத்தடைத்த வாசல்வழி
அணுகி நிற்கும் எட்டுவிரல் கலை எட்டாமே. 14

எட்டான கலையுடனே பிராணன் நாலும்
ஏகினதால் ஈராறு கலையுமென்ன
கட்டான ஈராறும் வழிஎட்டாகி
கருதினால் தொடுவற்மம் தொண்ணூற்றாரும்
நெட்டிடவே இதுகளெல்லாம் நூற்றெட்டோடு
நேர்ந்ததினால் நூற்றெட்டு வற்மமாகும்

மட்டுறவே இவையறிந்து வற்மந்தீர
மறவாமல் வகை விபரம் அறிந்து செய்யே. 15

அறிந்துநீ செய்களங்க மற்றுக் காணும்
அரண்மூல் குருபரனை மனதில் கொண்டு
தெரிந்தவரை நிதம்பணிய தலமுங்காணும்
செங்கதிரில் மதியொடுங்கி சிறப்புஞ் சேரும்
அறிந்தஉடன் மயிர்பாலம் தாண்டிப்போக
வழிகளெல்லாம் செம்மையாய்க் காணலாமே
நிறைந்திட்ட மூலவெளி பெரும்பாழ் தன்னில்
நேர்ந்த நல்கலை சுழியில் ஒடுங்கிக் காணும். 16

காணுமே இருவழியாய் நின்றொலிக்கும்
கலைநாலும் சொச்சமது வழியில் நிற்கும்
ஆணவமே புக்கும் வழி ஒன்று கூடில்
அதில் மூன்று கலைதானும் அடர்ந்து நிற்கும்
பூணுகின்ற பிராணகலை நாலுமொன்றாய்ப்
புக்கினதால் படுவற்மம் பன்னிரெண்டாம்
வேணுமென்று பதினெட்டு வற்மம் ஒன்றில்
விபரமுடன் இரட்டையாய் வகுத்துத் தானே. 17

வந்த வகைவிபரம் இப்படியே கண்டால்
மங்கையர்க்கு குறைந்த வற்மம் "பீஜக்காலம்"
சொந்தமென்ற இந்தவற்மம் ஒன்றும் நீக்கி
தொகைகாரை ஒரு நூற்று ஏழாம் பாரு
சந்தமுறை இப்படியே இருக்குதென்று
ஜடம் பார்த்து கூறுகண்டு அமர்த்தல் செய்து
இந்தமது முறை செய்தால் அமராதென்றல்
வேறு கொண்டைக் காலம்தால் வந்ததென்னே. 18

காயமென்றால் படுகாயம் கனத்தாடு
கதிர் குலைகள் நெருக்குண்டு நிறம்வேறாகல்
நேயமுடன் நூலற்று இயங்கிற்றானால்
நெடிக்குமுன்னே நெட்டிளிதல் கலையாய்பாய்தல்
தோயமுடன் பெருவியர்வை அலர்தல் கண்டம்
சுருங்கியே கழுத்துரையில் வலித்தண்ணார்தல்
தூயதலை உருளல் யிரண்டுருளல்
கண்விழித்து மேல்சொருகி விழும் சீறல். 19

சீறலுடன் கைகாலால் சேட்டை செய்தல்
ஜடம் வெதும்பி குளிர்ந்திடுதல் ஜடம்வெளுத்தல்
மாறியே கருடனுடைய பார்வைபார்த்தல்
வழி பிசகிபோவதற்கு நடையே கொள்ளல்
ஏறியே பலனதிகம் காட்டிப் பின்னால்
இடரா கல்தேகம் விரைத்து உளறுதல்
மாறியே கடைக் கண்ணில் நீரொலித்தல்
மயங்கியே அதிமூர்ச்சை கபம் வர்த்தித்தல் 20

வர்த்தனையாய்ப் பீஜம் கலங்கி மூலம்
வலுவற்று இசைவு தளர்ந்திடுதல்
கறுத்த விரை போலேயதில் வேகமாகி
கண்டவரை கைகாலால் உதைக்கலாதல்
வியர்த்து மிகவெருகி குளிர்ந்திடுதல்
இசையென்ற பொறிதளர்ந்து மயக்கமாதல்
பார்த்துமிகச் சிரித்தல் வேர்வையும் கபமுங்
காட்டும் பயப்பட்டு நடுநடுங்கி மயக்கமுறல். 21

நடுங்கி மனம் பேதலித்து மணங்களித்தல்
நல்லகண்ணும் மேல்செருகி பஞ்சி பார்த்தல்
அடங்கிமிக நடுவணையில் குன்மம்ஏறல்
அதனாலே ஜடம் கவிழ்ந்து நிமிராதாதல்
திடம்கண்டு துயில் கீரல் பொறுமி ஏறல்
சிக்கிஏறி குறுக்கேபார்வை குத்தி வேர்வைவிக்கல்
மடமயிலே இக்குறிகள் கண்டதென்றால்
மறுகாலம் பலவிதத்தால் மாறச் செய்யே. 22

மறுகாலம் செய்திடவே கொஞ்சமாகும்
மாறாமல் அதிகமென்றால் மைந்தாகேளு
விருதாவாய்ப் போம் உயிர்தடைபடாது
வேறிளகி பிராணகலை வேறாமென்றால்
சருவ தொழில் பார்த்தாலும் பலனொன்றில்லை
சந்தேகம் கொண்டதென்றால் அமர்த்திப் பாரு
குருமுனியார் சொன்னமொழிப் படியே சொன்னேன்
கூறறிந்து இந்தமுறை கண்டு நில்லே. 23

நில்லென்ற தலங்களது உச்சி மூக்கு
நேர்கொண்ட ஸ்தலமதுதான் திவளையாகும்

வெல்லென்ற நடுவரியில் காட்டம் வாரி
விசையான நேர்சுருக்கி கொண்டைக் கொல்லி
கல்லென்ற பஞ்சவர்ண அருகே நடுவாம்
காதில் கொண்ட வெள்ளீரல் வாரிஎல்லாம்
சொல்லென்ற தொண்டை நடுப் புறமேயாகும்
சுகமான பித்தக்காய் ரெண்டின் பக்கம். 24

பக்கம் என்ற எட்டெலும்பின் மத்தியில்
பகரும் உள்ளங்கையுடனே காலுமாகும்
அக்கம்என கதலிவளம் நெருக்கலாகி
ஆவியென்ற மூச்சடங்கி அத்தலமில்லாமல்
சிக்கனவே மேல் கீழும் வாசியாதல்
திறமான வாரி மேலெலும்பு தாழ்தல்
பக்கம்என்ற அதனடுத்ததில் பூணெல் தாழ்தல்
பதிந்த நடுஇசையான அசைந்து குன்மம்ஏறல் 25

அசைவான நாசியது மூலம்சேரல்
அதனாலே மூங்கில் வட்டம் விரிந்து தோன்றல்
கசையான குண்டலியில் உளைமையான
கதிர்மூலம் மேல்சென்று பதிந்தங்கு கொட்டி
விசையான கத்தரிக்கோல் விசை கொள்ளாமல்
மேல்வாசல் விசையற்று தளர்ந்து கோணல்
அசையாமல் நின்றிசையும் விசைதளர்ந்து
அரைக்கும் கீழ் செத்தசவம் போலேயாதல். 26

ஆகவே இதுமுதலாய்க் குறிதலங்கள்
அறிந்துநீ கூடியது மட்டும் பாரு
பாகமாய்ச் செய்தாலும் பலிக்காதென்றல்
பண்பாக விலகிநீ அகன்று நில்லு
தோகையரும் நீ வதைகள் செய்தாயென்று
சொல்லுவார் என்று கண்டால் அகன்று பாறு
வேகமறிந்து இப்படிச் செய்வாயென்று
விளம்பிநீ வேறேஆள் பார்க்கச் சொல்லே. 27

சொல்லுகிறேன் கனத்தஅடி கொண்டு அங்கம்
கொதுவியே அறிவற்றுத் துவண்டு காணல்
வெல்லாமல் அடிகொண்ட காயத்தாலே
வேகித்து பஞ்சகர்த்தாள் நிலைதளர்ந்து

பல்லுயிர்க்கும் தானாக இருந்தான தம்பம்
சரிந்து நிலை பிசகிப் போனதாலே
அல்லுபகல் மூன்றுதினம் கடருமாகில்
அவருயிரும் தோஷமில்லை அறிந்து கொள்ளே. 28

குண்டலினி முறிவு

அசைவென்ற குண்டலியின் பாகம்
அணைத்திருக்கும் குண்டுரண்டும் விலகுமாகில்
அசையாமல் காலுரண்டு மொன்றாய் சேர்த்து
மட்டுரவே முட்டுரண்டும் ஒன்றாய்க் கூட்டி
பிசையாமல் குண்டுமணிக் குண்டினால்
புறம்போகாக் கச்சைவரிந் திருக்கிக்கூட்டி
இசையாமல் உறுதியுடன் நடுவரியில் சதுரப்பந்து
உத்தமனே தாக்கிவிரல் தன்னை கூட்டே. 29

கூட்டியே இந்த நிலை கலைவில்லாமல்
கருதியே முறிவெண்ணை கதிக்கத்தாக்கு
மட்டுறவே தொண்ணூறு நாட்சென்றாக்கால்
வசவெண்ணெய் தாக்குவாய் என்றமட்டில்
திட்டமுடன் எண்ணைய்ரெண்டும் ஒன்றாய்க் கூட்டி
செலுத்துவாய் மண்டலந்தான் செல்லும் மட்டும்
மட்டாக வந்ததென்றால நன்மையாகும்
வழிவிலகி நிற்குமானால் திண்மையாமே. 30

மணிபந்தம் முறிவு

என்றாலோ மணிபந்தம் விலகிஏறி
இதமாக நொறுங்குண்டு சவ்வோடேகில்
நன்றாகக் கண்விலகிப் போகுமென்றால்
நலமான ஐந்துவரி எலும்பின் பின்னே
நின்றிசையும் பேரெலும்போ டதனை ஒக்க
நிசமான பிணையதில் தாக்கிக் கொண்டு
குண்டுமணி ஐந்துமதைப் பற்றச்செய்து
குறையாமல் அச்சுரெண்டும் ஒன்றாய்ச் சேரே. 31

சேரேநீ அச்சதனைப் பூணைக்கட்டி
சிறுகடுகும் விலகாமல் செலுத்தி வைத்து
நீரதிகம் கொண்டுதானால் சேராவண்ணம்
நிசம்கண்டு துவாரமிட்ட வழியெல்லாம்பார்

பாரதிகம் நடுங்காமல் பஞ்சு சேர்த்து
பண்பான முறிவெண்ணை தாரைசெய்து
சீரேநீ மூன்றுநாள் கூடிப் பார்த்து
சிறப்பாகத் தொண்ணூறு நாள்சென்றாக்கால் 32

சென்றவுடன் வசவு யெண்ணை தாக்கு
செல்லுமே மண்டலந்தான் கழிந்தபின்பு
தான்திறந்து அச்சுதனை விலக்கிப் போடு
தயவாகக் கையதனால் இதமும்செய்தால்
வான்முருகர் கிருபையினால் நன்மைகாணும்
வழிமறந்தால் திண்மையது வந்துசேரும்
நின்வழியாய் இந்தமுறை செய்து கண்டால்
நிலைபிசகிப் போகாது திடம் கண்டாயே. 33

திடம்காணும் இந்தமுறை அசைவு கெட்டில்
சீனிமுறிந்திட்டாலும் சவ்வு அற்றாலும்
அடவுதவறா நிலையாய் மனமுறைந்து
ஆக்கையற்றுப் போனாலும் கண்டு செய்ய
மடமயிலே குருபாத மறவாய் நெஞ்சே
மற்றொருவர் அறியாமல் தியானம் செய்து
கடன்துலைக்க இப்படியே வந்ததென்று
கருதியே மனமுறைத்துக் கண்டு செய்யே. 34

முட்டு நகண்டால்

கண்டுநீ செய்திடவே இன்னமொன்று
கடுமையாய் முட்டு நகண்டு விட்டதென்றால்
மண்டான சிரட்டையது சவ்வற்றேகி
மறுபுறத்துச் சவ்வகன்று விசைகொண்டாக்கால்
கொண்டாலோ மீள்வதற்கு அருமையாகும்
குதிங்காலில் நரம்பற்றால் இதுபோலாகும்
பன்டான பெருவிரலும் இதுபோலாகும்
பகர்ந்த உட்புறமும் இதுபோலாகும். 35

பிட்டிநடு

ஆகுமே மூணாம் கீழ் தாரைக்குள்
அடிகொண்டு விசைதளர்ந்து வரிநெரிந்தால்
வாகுபெற முறிவெண்ணெய் தாரைசெய்து
வகுப்பாகக் கீழ்மேலாய் அலகையொட்டி

பாகமுடன் அணைவழியே கச்சை கட்டி
    பதிந்திருத்திக் கையதனால் இதமும் செய்தால்
வேகமுடன் நொறுங்கெலும்பு சரியாய்க் கண்டால்
    விபரமாய் வசவெண்ணை தாக்கத் தீரும். 36

வாரிப் பூணெலும்பு முறிந்தால்

தாக்குவாய் நடுவரியில் வாரிப்பூணு
    தானே அற்று நொறுங்கியது முறிவு கொண்டால்
போக்கும் உயிர்மீள்வதற்கு அருமையாகும்
    பொன்னெட்டி நாலுவிரல் உள்ளே கொண்டு
தாக்குமே நெட்டதுவும் கவிழ்தல் கண்டால்
    தானவனாய் பலபாகம் செய்திட்டாலும்
நீக்குமே உயிரதுவும் உடலைவிட்டு
    நிசமாக விலகிநீ அகன்று நில்லே. 37

நிசமாகும் கதலி வனத்தீடு கொண்டு
    நீளசைவு [illegible] [illegible] விசைதளர்ந்து
தசவாய்வு தானுமே வெதும்பல் கொண்டு
    வாகுபெற வெருவி அனல் குளிருமாகில்
கசமான கபமூர்ச்சை வேர்வைகண்டால்
    காலனார் உடன்வருவார் என்று நீயும்
குசமான மருந்து பலவிதம் செய்தாலும்
    கூண்டைவிட்டு உயிர் அதுவும் கடக்கும்தானே. 38

கடக்குமந்த ஆக்கிறாணப் பாலம்தன்னில்
    கனத்த அடியால் குருந்தில் சோரை கண்டால்
சடமெள்ளால் பிரபாலமதில் வீக்கம் கொண்டு
    செவ்வையன்றி பலவழியாய்ப் பேசக்கண்டால்
மடமயிலே மீள்வதற்கு அருமையாகும்
    மருந்து பல செய்தாலும் அதிகம் கண்டால்
திடம்பேசி செய்யாதே அகன்று நில்லே
    ஜெயம் வருமோ எப்படியோ என்றுசொல்லே. 39

சொல்லுகிறேன் கைபுஜத்தில் ஈடுகொண்டு
    சூட்சமமாய் சிப்பியது தாழ்ந்து போனால்
வல்லதிது கைமுறையாய் மைந்தா நீயும்
    வலுத்திருத்தி இருத்திவைத்தும் உரையாதென்றால்

வெல்லுகின்ற கால்வெள்ளைப் பதிவில் தாக்கு
விளங்கவே கையதனால் பிடித்துச் சேர்த்து
நில்லெனவே தலம்பதிய வைத்துக் கொண்டு
நேரான வில்லதிலே நாணும் பூட்டே. 40

பூட்டியே முன்வசத்தில் குறுக்கே தாக்கி
போற்றியே பந்ததனைப் பதியச் செய்து
தாட்டிகமாய் மறுதோளில் தாக்கும் கட்டி
சரியான முன்தோளில் ஆப்பிள் வைத்து
கட்டியே முறிவெண்ணெய் கழிக்கத் தாக்கு
கழிந்தபின் மூன்றுநாள் சென்றே பின்பு
ஈட்டியே புறமுறிவால் மூன்றில் பாரு
இல்லாட்டால் ஐந்துநாள் கூட்டிப்பாரு. 41

அஞ்சுநாள் கூட்டிப்பின் இதங்கள் செய்து
அடவாகத் தொண்ணூறு நாளும் சென்றால்
மஞ்சவே வசவெண்ணெய் மண்டலந்தான்
மறக்காமல் கூட்டிப்பின் கை இதம்செய்து
துஞ்சலுற்ற சவ்வளர்ந்து பற்றிப் போகும்
சுகமான கையதிலே எலும்பும் சேரும்
நஞ்சுண்ட சிவனார்தன் அருளினாலே
நல்வழியாம் இதுஉரைத்து நாடிச் செய்யே. 42

நாடியே முழங்கையில் பிலமுரைத்து
நன்றாக மூட்டதினுள் விசைநரம்பு தானேரிச்
சாடி முழங்கையெலும்பு மூட்டைவிட்டுத்
தான்வெளியில் சாடிவிசை கொண்டுதென்றால்
கூடிய மட்டும் உள் செலுத்தினாலும்
கூடாது என்றுநீ உறுதி கண்டால்
ஆடியே கால் வெள்ளைப் பதிவிலேற்றி
அகங்கையால் பிடித்திழுக்க முன்போலாகும். 43

முன்போலே ஆக்கியதை தாக்கிவிட்டு
முருகியே பற்றதனைப் பதியச் செய்து
பொன்போலே நாணேற்றி விசை முடுக்கி
பொரியாக அகற்றல் படுநீக்கல் செய்து
தன்மயம்போல் முறிவெண்ணை தாக்கல் செய்து
தான் பெலத்தால் வசவெண்ணை தாக்குவாய் நீ

முன்போலே ஆகுமடா பலமும் காணும்
முளிச் சலத்தைப் பாராமல் தெளிந்து செய்யே. 44

தெளிவான கவளியது கீறல் கொண்டு
சினமான காலமதில் உற்றுக் கொண்டால்
பழியாக ஒருவேளை வந்து சேரும்
பகர்ந்த இடையின் கலைதான் நீக்கிக் கொ்ண்டால்
வெளியான முறிவெண்ணை கழிக்கத் தாக்கி
வேண்டியதோர் விரலதனை மட்டாய்க் கட்டி
அழியாதபடி இதமாய்ச் செய்து கொண்டால்
அசடொறுநாள் வராது என்று எண்ணிப் பாரே. 45

அறிந்திருந்தால் விரலின் மத்திகீறி
அகங்கையில் வற்மந்தான் விசையாய் கண்டால்
சிறிந்திருந்தக் காய்ச்சலோடு குளிரும் காணும்
செயலான 'வியர்வை கபம் சீதம்தோன்றும்
அறிந்திருந்த அறிவைஎல்லாம் குறைத்துப் போடும்
அட்வாகப் பலவிதமாய் கோட்டி செய்யும்
பிரித்திடுங்காண் உயிரதுவும் உடல்விட்டு
பிழையாதே [illegible]தனைப் பேணிப்பாரே. 46

பேணிப்பார்தோள் புஜத்தின் நெட்டிதாழ்ந்து
பெலந்தேராதிருந்து சொல்லக்கேள் உடலேவில்லில்
நாணேற்றி உத்தமனே கூட்டிப் பந்து
சேர்த்து கதிப்பாக முறுக்க ஒரு கச்சைகட்டி
தோணப்பா முறிவெண்ணை கழிக்கத் தாக்கி
தொண்ணூறு சென்றவுடன் கையிதம் செய்யே
பேணப்பா இவ்விதமே செய்தாயானால்
பேரருளால் முன்போலே யாகும்பாரே. 47

கையிதமே செய்து வசவெண்ணை தாக்கு
கதிப்பாக முட்டதிலே தாளைத் தாக்கு
பையவே மறுதோளில் தாங்கிக் கெட்டி
வைஇதமே செய்து கொண்டால் நன்மையாகும்
உய்யவே இந்தமுறை வருந்திச் செய்ய
இதமேதான் கொண்டாக்கால் நன்மையாகும்
ஜெயமாகும் இந்தமுறை தான் செய்தாலே
ஜெயம்தான் இந்தவிதம் திட்டம் பாரே. 48

பார்த்திடு நீ வாரிஎலும்பு முறிந்துதாழ்ந்தால்
பதியான நிரப்பிலே குழிதோண்டி
சேர்த்திடவாய் முறிதலத்தில் நடுவில்
சேரே மறுபுறத்தை நிரப்பில் தாக்கு
போற்றிடுவாய் இருபுறமும் உருட்டி நீக்க
பொன்போலே எலும்பதுவும் சேரும் கண்டாய்
ஆற்றிடுவாய் விதமறிந்துடன் பற்றையிட்டு
அறிவாக முறிவெண்ணை தாக்குவாயே. 49

தாக்குநீ எண்ணையது குறைவில்லாமல்
தன்கையால் இதம்செய்ய சுகமே காணும்
ஊக்கமுடன் பூணெலும்பு ஊனம் தாழ்ந்தால்
உண்டாகி முறிந்துடனே தாழ்ந்ததென்றால்
ஆக்கமுடன் முன்போலே அடவுசெய்து
அனைத்துருட்டி மறுபுறமும் தாக்கப் பாரு
நீக்கமுடன் செருமியது முன்பாகத்தை
நிஜம்கண்டு செய்துவிட வினையற்றேகும். 50

ஏகியே அலைவதிலே அதிகமாகி
இதம்பிணைத்து கெட்டியது நின்றுகொண்டால்
வாகுபெற வசவெண்ணை புறமும் உள்ளும்
வார்த்துபின் அங்கு சவ்வை அகற்றிநீக்க
தோகையறே முன்போலே ஆடிநிற்கும்
சுகமாக குருவருள் நாடிச் செய்தால்
ஆகுமடா நீ நினைந்து அவரிடத்தில்
அன்பாகக் கேட்டறிந்து அருளைப்பாரே. 51

அருளான எலும்பு முறி வெளிவிட்டேகில்
அனந்தறிய ஆறுவிரலுக் கதிகமானால்
வெருளாம லிருந்தாலும் நிஜமாகாது
வெளிப்பட்ட துள்செலுத்தச் செல்லாதென்றால்
மருளாக்க குறுகினதைக் கீறிப்பின்னே
மன்னவனே இனம்கண்டு செய்ய நீயும்
பொருளாக உள்செலுத்தி வைக்கவென்றால்
புத்திரனே தலங்களிலே படுமென்றால் நீ. 52

படுகாயம் கொள்ளாமல் அகலநீக்கி
பணிவாகக் கீறியதை உள்ளே தாக்கி

நடுவான காயம் முறிதலத்தில்
நன்றாக இரணமுற்ற இடங்களெல்லாம்
விடுவதிகம் சாறாமல் இடைவருத்தி
வலிகண்டு கெட்டதிகம் நெடுங்காவண்ணம்
நடுவழியாம் இடைபின்னல் அலவு சிக்கிளி
நல்வழியாம் அதில் நெருங்கப் பற்றிடமேலே. 53

பற்றாமல் அற்ற சவ்வு விலகிடாமல்
படுத்திருக்க முறிவெண்ணை உள்ளே தாக்கி
மற்றான இடங்களிலும் எண்ணை செல்ல
வழிகண்டு முறிகாயம் ஆறிப்போனால்
வெற்றான முறிவெண்ணை நிறுத்திப் போடு
போடுவாய் வசவெண்ணை காலங்கண்டு
தெற்றாமல் தீருமடா கோடிக்காயம்
திரைசூழும் புவனமெல்லாம் தெளியுந்தானே. 54

தெளிவான பீஜவித்து மேலேஏறி
திசைபிசகி வலமிடமாய் நின்று கொண்டால்
வழியான துறைகளெல்லாம் பார்த்தாலுந்தான்
வந்திறங்கி நில்லாட்டால் வந்து கேளு
எளிதாக மேல்புறத்தில் பக்கம் பற்றி
இரண்டு கையிட்டு விரலால் பிடித்துக்
குழியான மேல்குழியில் பெருவிரலால்
குவித்திறக்கி அசைத்தெடுத்துக் கொண்டு சென்று 55

சென்றுகொண்டு விட்டுநீ முன்பக்கத்தில்
சிறுகச்சைக் கத்தரிக்கோல் போலேகட்டு
நின்றாடும் நீர்களெல்லாம் சுண்டிப்
பின்னே நீர் நிலைத்து நின்றிடாமல்
அன்றாடம்தான் ஔஷதங்கள் செய்திடு நீ
அன்புரைத்தால் மீளஒன்றும் செய்யவேண்டாம்
நின்றாடும் குருபரனை நினைத்துக் கொண்டு
நிலைகெட்டுப் போகாமல் தியானம் செய்யே. 56

தியானமது மனமதிலே மறவாவண்ணம்
ஜெபித்திடு நீ பரமகுரு வருளினாலே
ஜெயமுனக்குத் தந்துவர மளித்து நிற்பார்
செய்வதெல்லாம் பலவிதமாய் வாய்க்கும் கண்டாய்

கயமான கண்காளா திருத்திட்டாலும்
கண்ணான அருள்மனதில் கண்ணால் காணும்
நயமான இவ்வழியே முன்னிட்டுச் செல்
நமன்வரினும் பயமில்லை நளினம் காணே.

நளினமென்ற உச்சிதனில் பார ஈக்கு
நன்றாக அதன் அகத்தில் முறிவு கண்டால்
வழியான தட்டல் முட்டல் விசையாய்க் கொள்ளல்
மிதமான மாத்திரைக்கு மிஞ்சிக் கொள்ளல்
வழியான அதன் நடுதலத்தில் கொண்டு
வாகித்து நெடுக்கமுற்று செருமிக் கொள்ளல்
அழிவு கண்டு பாகமதாய் முறைகள் செய்தால்
அடுக்காது என்றுநீ அகல நீங்கே. 58

நீங்கிடும்நீ படுவற்மம் பதினெட்டுக்கும்
நிலையான தொடுவற்மம் தொண்ணூறாருக்கும்
வாங்கிடுநீ தலங்களெல்லாம் அறிந்து கொண்டு
வகையறிந்து செய்தாலே நன்மையாகும்
அங்குநின்ற இடைபிங்கலையும் சுழிமுனையும்
அறிந்து அதனில் வழிஅறிந்து தேர்ந்து செய்தால்
பாங்குபெற இவ்வழிகளெல்லாம் தேற
பலவழி களுண்டாகும் என்று கூறே. 59

கூறான ஈராறு கலையின் மார்க்கம்
கூறயிலே ஒளியாகி எவ்வளியுங் காணும்
ஈறானகலை நாலு பரத்தின் கூறாம்
இயல்பினால் பரமகுரு தீபமானால்
வேறான சிவகிரிதான் தந்தையாச்சே
வெற்றிபெற இவ்வருளும் நாடிச்சேர்ந்து
கூறான அதனுடனே கூடும் அந்த
கூறும் வெளியான சக்தி கலை வன்னியாச்சே 60

வன்னியென்ற சக்தியவள் தாயுமானாள்
வகுப்பான சிவகிரிதான் தந்தையாச்சு
சென்னிதீபம் வாதமது அதுவேயானால்
செழிப்பான நாதமது உயிருமாச்சு
கன்னியென்ற தாயவளும் சலத்திலானாள்
கதிப்பான சலமதுவும் பிருதிவியாச்சு

முன்னமுவே பிருதிவியது அப்புமாச்சு
ஏகாந்த இருப்பிடமும் மன்னும் ஆச்சே. 61

ஆச்சப்பா மண்ணதுவும் அண்டத்தாச்சு
அண்டம் என்ற பிரம்மதலம் பரத்துள்ளாச்சி
வாச்சப்பா பரம்தானாய் நின்றவாறாம்
வழுவாத யோனிக்கரு தோற்றம் ஏழும்
நீச்சப்பா இதன் உள்ளும் புறமுமாகி
நின்றணுவுக் கணுவான நிகரில்லானை
ஆச்சர்யம் உணர்ந்து மனம் உருகும்போது
அறியாத தொன்றுனக்கு அதனைத் தேறே. 62

தேறுகின்ற குருபரனை நினைத்துத் தேர்ந்து
தெளிவாக ஆராய்ந்து தலத்தைக் கண்டு
கூறுகின்ற மயக்கமதை நீக்கித்தள்ளி
குருபரனை உள்கொண்டு குறித்துப்பாரு
ஏறுகின்ற சரமதனை அடக்கினாக்கால்
எல்லாமும் இதற்குள்ளாய் இருப்புமாகும்
வேறுகின்ற விரலாலே சுவாசம் பாரு
விரைவான ரவிமதியின் பலத்தைப் பாரே. 63

பாரென்று நாடியைநீ தேர்ந்து பாரு
பத்தென்ற தசநாடி தன்னைப் பாரு
கீரென்ற வாதமது மிஞ்சிக் கொண்டால்
திறமாகும் கதிர்மதி ரவியின் கீழே
வீரென்ற பித்தமது மிஞ்சிக் கொண்டால்
விரைவாக உந்திமுதல் கண்டம் மட்டும்
காரென்ற சிலேற்பனந்தான் மிஞ்சிக் கொண்டால்
கண்டமுதல் உச்சிவரை காணும்மட்டே. 64

மட்டுமிட்டு மூவருமே சிதறி யுத்தம்
ஆனாலே ஒளிகுறைந்து இருளுமாகும்
விட்டுரண்டு நாடி ஒன்றாய் இசையுமாகில்
விசையாக இருஸ்தலத்தில் ஈடுகாணும்
கட்டுவிட்டு மூன்று மொன்றாய் தொந்திப்பானால்
கபவேர்வை சீதமொடு ஜன்னி மூர்ச்சை
கட்டுவிட்டு சண்டைசெய்வோர் ஆர்தான்என்று
தானறிந்து சயம்பிடித்தோர் என்று கூறே. 65

கூடியே மூன்று மொன்றாய்ப் பதுங்கினாலும்
குரூரமாய்ச் சாடியது மோதினாலும்
ஆடிநின்ற பித்தமது நிலைவிட்டாலும்
அதனாலே அபகுறி வந்தணுகும் பாரு
தேடிநின்ற வாதமது சிலேற்பனத்தில் ஏறில்
சீதமொடு கபவேர்வை ஜன்னி விக்கல்
ஓடிநின்ற ஐயமது வாதந் தேறில்
உற்றபல அபகுறிகள் உறுதியாமே. .66

உறுதியுள்ள வாதமதில் சிலேற்பனம் சேரில்
உறைப்பான பித்தமதில் வாதம் சேரில்
இறுதியுள்ள கபமதிலே பித்தம் சேர்தல்
இசைந்த கபம் பித்தமதில் உற்றுச் சேர்தல்
குறியதுநீ கண்டாலே மருந்து செய்நீ
குணமான பித்தநிலை குறைந்திட்டாலோ
அருதியாம் உடல்எதுவும் உயிரைவிட்டு
அம்பரத்தில் போற்றுமென்று அறிந்து போற்றே. 67

போற்றி அந்த நாடியது பின்பக்கத்தில்
புகழாக விலகியது கடக்குமாயின்
மீறிநின்ற குளிர்சுரங்கள் மயக்கம் மூர்ச்சை
மிகவாக தன்பாகம் அருள் காணும்
தேற்றி நின்ற நாடியது முன்பக்கத்தில்
தொடர்ந்து நடை கொண்டாலோ கடினமாகும்
சாற்றினதோர் விசை நரம்பின் வழியே சென்று
சாடிநிற்கும் கபாலம் வரை மயக்கம்தானே. 68

மயங்கி நின்ற நாடியது கபத்திலுற்றும்
மாறியக் குறையில் சாடி மோதில்
பயங்கிலேச முற்று அதிககடின மூர்ச்சை
பரந்தேறி விக்கல்கபம் ஜன்னி தோன்றும்
நயமாக மருந்து பலவிதம் செய்தாலும்
நாடியது கோபமுற்று மிஞ்சிக் கொண்டால்
ஜெயம் வருகா தொருநாளும் மீளாதென்றே
செப்பினார் மலைமுனிவர் ஜெகத்துள்ளோர்க்கோ 69

உள்ளபடி வாதமது ஒரு பங்கதாகி
உற்றபித்தம் அரைப்பங்கு சிலேற்பனங் காலாய்

கள்ளமற்று நடைகொண்டால் பிணியொன்றில்லை
கண்டுகொள்நீ வன்னியது மிஞ்சிக் கொண்டால்
பள்ளமேடில் வாதவண்மை அறிந்து நீயும்
பாங்குடனே முப்பொருளை ஆய்ந்து கொண்டு
விள்ளுகின்ற நாடியது வன்னிவாதம்
மிகுந்திருக்கும் வாசிவட்ட நாடிகாணே. 70

வட்டமடா மூலமென்ற குண்டெலிக்குள்
வகுத்திருக்கும் சிவகலை மேலே சாடி
விட்டதினால் பஞ்சவர்ண தூக்கு தாண்டி
விபரமடா இதைத்தானே அறிந்து நீயும்
அட்டதிசையில் ஊடாடிச் சாய்ந்து
அம்பரத்தில் பாய்ந்துமிக அடங்கா நின்று
கட்டாத காளையடா அதனைக்கட்ட
கதிர் திரைக்குள் சந்திரனைக் கண்டுபாரே. 71

கட்டிநின்று இடகலையின் மார்க்கம் கேளு
கருதுகின்ற வலக்கால் பெருவிரலைத்
தொட்டு நின்று குதிகாலில் விசை கொண்டேகி
தொகுத்து நின்ற கத்தரிக்கோல் விசையில் புக்கி
மட்டுரவே இடதுபக்கம் சாய்ந்து மேலே
வகுப்பான செவிக்குத்தி மேல்பக்கத்தில்
திட்டமுடன் சுற்றி அந்த பிடரிப்புக்கி
திடமான இடதுகாது உள்ளுட் ஆடி. 72

ஊடாடி அசைவுக்கு வழியுமாகி
உள்ளசபை ஆக்கிரான வழியே சாடும்
கூடாத பிங்கலைதா னிடது காலில்
குறிகொள்ளும் பெருவிரல் குதியிலுற்று
ஆடாத கத்தரிக்கோல் விசையில் நின்று
அணைத்திளகி வலது பக்கத்துள் ஊடாடி
நாடாத கபாலம் வரை சுற்றும் மீள
நளினமுடன் சுற்றியந்த அசைவுக் கெட்டில். 73

அசைவு வழி கட்டுண்டு பெருவிரலில்
அணைத்திருக்கும் பின்கலை என்றிருந்துபாரு
நிசமான சுழிமுனைதான் மூலக்குய்யம்
நின்றிலங்கும் கத்தரிக்கோல் நடுவிலுற்று

வசமான குறுக்கெலும்பில் முன்பக்கத்தில்
வகுத்திருக்கும் நடுத்தாரை வழியாய் ஏறி
குசமாக மதிவளரும் தலத்தில் புக்கி
குய்ய முனையாயிருக்கும் குறித்துப் பாரே. 74

குறியாக மயங்கும் காரணமே சொல்வேன்
குறிப்பான காலங்கள் கொள்ளும்போது
குறிநடனம் புரியும் விசை தளர்ந்து
குறிப்பான நாதவிந்து விசைவிட்டேகி
பரிநின்ற பிராணகலை சிக்கல் கொண்டு
பொரியான பஞ்சகர்த்தா நிலை பிசகினதால்
அறிவிழந்து மயங்கி பின்னும் பிராணகலை
நாசிமுனை முட்டிநின்றதால் உணர்வுண்டாச்சே. 75

உணர்வாக சொன்னபடி தன்னைத் தேர்ந்து
உரையாத வலிகளையும் ஆய்ந்து பார்த்து
புனையானதைப் பல உண்ர்வாய்ச் செய்து
புகலாத பாதைகளை செவ்வையாய் தேறி
குணமாக சொன்னவகை யல்லால் வேறு
குறிதலத்தில் அடிகாயம் கொள்ளுமாகில்
சினமான இருவழியும் ஆய்ந்து கொண்டு
செய்திடு நீ மறுகாலம் ஜெகத்துள்ளோர்க்கு. 76

காலமது கொண்டெழும்பும் போதுகேளு
கடினமுற்றுக் கொண்டதென்றால் குணங்கள் மாறும்
சீலமுடன் ஒத்தபடி கொள்ளாதென்றால்
செனமான வெகுவான குணங்கள் தோன்றும்
ஆலவிஷம் ஏறுவது போலே கண்டால்
அமர்த்தினால் அமராதே இருந்ததென்றால்
ஞாலமதில் ஒருபோதும் மீளாதென்று
நாட்டினார் மலைமுனிவர் நகருள்ளோர்க்கே. 77

நகரான உலகத்தில் நவிலார் சூட்சம்
நன்றாக சூட்சுமத்தை ஆய்ந்து தேறி
சுகமான நன்மை திண்மை அறிய வல்லார்
சுகிர்தவரம் தன்னைப் பழித்த நிந்தையாகும்
சுகம்மாறி அது ஆங்காரம் கொண்டு
சும்பரத்தை கெணியாத அசடர்தம்மை

சுகமாக எண்ணினதால் அபத்தம் வந்து
சருகாமல் அவரிடத்தில் சாரும்தானே. 78

தானேகேள் ஒருநாளும் பரத்தைக் காணான்
தன்குருவாம் என்றவரைச் சார்ந்து நில்லான்
ஊனேதான் ஒருநாளும் உயிரும் காணான்
குவலயத்தில் யாரும்எதிர் இல்லை என்பான்
நானேதான் என்று சொல்லி பணம்பறிப்பான்
நானிலத்தில் உள்ளவரை நெகிழ்விப்பானே
மானேகேள் இப்படியுள் ளோனை எல்லாம்
மடையனென்று தெரிந்துநீ விலகிநில்லே. 79

உள்ளபடி நூற்றெட்டு தலங்கள் கண்டால்
சாவும் உணர்வாகும் அத்தலங்கள் உயிருமாகும்
கள்ளமுற்றால் அத்தலங்கள் பிணியாகும்
கள்ளமற்றால் அத்தலங்கள் சுகமுமாகும்
உள்ளுணர்ந்தால் அத்தலங்கள் வாசிஏறல்
உற்றதினால் மயக்கம் வந்து சேரும்
புள்ளடிபோல் அத்தலங்கள் கண்டபேர்கள்
புகலார்கள் ஒருபோதும் புவியுள்ளோர்க்கே. 80

புகலாத தலங்களது மாத்திரைக்கு
பூறாக மிஞ்சியது கொண்டதென்றால்
சுகமுறவே ஒரு போதும் மீறாதாகும்
சுழியிடையின் நடுவழியே காய்மேனும்
அகமறியாது ஆங்காரம் கொண்டு பேசும்
அறிவிலா மானிடர்கள் அறியாமல்தான்
ஜெகமறிய மலைமுனிவன் அறிந்து கூறும்
அசாத்தியமாய் முடியுமது அறிந்து பாரே 81

முடிவான அத்தலங்கள் எல்லாம் வேறே
முன்பின்னால் முறிவீடு சதவு வெட்டு
அடியான குத்துடனே மொழிவிட்டேகல்
அசைவற்றல் சவ்வற்றல் ஆர்க்கை தெற்றல்
கடிவெளிகாயம் உள்ளுடைவு மொளிசெருமல்
வேறுபட்டுப் பலவிதமாய் நின்று கொள்ளல்
இடபிங்கலை சுழிமூன்றின் வழியாய் ஏறி
இடைநரம்பு சுளுக்கல் கொண்டு நின்று கொள்ளல் 82

கொள்ளவே இதுமுதலாய் பலம் கைக்கும்
குணமான பரமகுருவின் அருளை வேண்டி
மெள்ளவே கொண்டுற்ற விதங்கள் ஆய்ந்து
வெகுளியற்ற மனக்கண்ணை திறந்து கொண்டு
பள்ளமே யதிலிறங்கி ஏறிப்பார்த்தால்
பருவமாய் முன்னும்பின்னும் பாதை நீக்கி
விள்ளாத பாதைவழி ஏகமீழ்க
மிதமான அவயவத்தின் வாறுகாணே. 83

வாறுகண்டு புனைதாக்கி கெட்டும் வைப்பும்
வகையான அகற்றலொடு நெடுக்கல் கொண்டு
ஈறுமுதல் நடுவான இடங்கள் கண்டும்
இடமில்லா தலங்களிலே புனைகள் கண்டும்
தேறுதலாய் மனக்கண்ணை திறந்து கொண்டு
தேறாக வந்ததென்றால் மாறிக் கொண்டும்
கூறுகளின் வகைகண்டு செய்து நின்றால்
குணமாகக் காணுமது குருவின் ஆணை 84

குருவான பரமகுருவின் அருளினாலே
குறைவற்மம் செய்தவரை சென்று கண்டால்
கருவான குணம் காணும் இளக்கமானால்
காணவே மட்டாகக் கொண்டதென்றால்
வெருளாமல் இளக்கமாய்க் குறிகள் தானும்
வேற்றுமையாய் மாத்திரைக்கு மிஞ்சி கொண்டால்
பொருளாகக் குறிகளெல்லாம் பேதமாகி
பேதமது வேகமதாய் வாரிக் கொள்ளும். 85

கொள்ளுமே அத்தலங்கள் முறிவு கொள்ளல்
குணங்களற்று அவகுறிகள் காணும் பாரு
விள்ளுமே தூர்குறிகள் மிஞ்சிக் கொண்டால்
விதமாக அசாத்தியமென்று அறிந்து நீங்கு
கள்ளமாய்க் குறிகளது மிரட்டாய்க் கண்டால்
கடரும் நாள் இத்தனைஎன்று அவறிற்சொல்லு
தெள்ளுகின்ற வழியறிந்து பாகம்செய்தால்
சினத்துடனே அபத்தம் வந்தணுகாது பாரு. 86

என்றிடவே வாசியதில் உற்றுக் கொள்ளில்
இராகும் காலமது தண்ணீரானால்

சென்றிடவே வாதமதில் கடினம் முப்பத்தாறும்
திங்களதி வன்னிபதிலுற்றுக் கொள்ளும்
கொன்றிடவே காற்றோடு நீயும் கூடி
கொதிப்பாகும் சிலேற்பனமது மிச்சங்கேளே
வென்றிடவே இன்னம்நீ விபரம் வேண்டி
விளக்கமுடன் கேட்பதனால் சொல்வேன்கேளே. 87

மிஞ்சமே புனல்தீயும் காற்றுங் கூடி
முழிப்பான சுழிமுனையில் வினைதான் கொண்டால்
தஞ்சமில்லை ஒருநாளும் மீளாதப்பா
சாற்றுகின்ற காயமது வன்னியென்றால்
அஞ்சலென்ற மூவிரண்டு ஆறுஆண்டுக்குள்
அருசமாய்ச் சேர்ந்து விசை கொள்ளும் பாரு
அஞ்சலுற்ற காலமது வாசியானால்
அதனாலே மூவாண்டுக் குள்ளே சாவாம். 88

சாகாமல் மிஞ்சிடாமல் கொண்டதென்றால்
சமர்த்தாக இருந்தமுறை சரியாய்க் காணும்
போகாமல் பூவாகி யிருந்ததாலே
புகலுவாய் ஒன்றரை என்றறிருந்து பாரு
மேவாமல் அதிகமுற்றால் அரையரைக்கால்
மேதினியோர்க் கிந்தமுறை மெய்யாம்பாரு
ஆவலது மிஞ்சியந்த வழியறிந்து
அன்புடனே கூடியது மட்டும் பாரே. 89

பாரேநீ அக்கினியி லுற்றுக் கொள்ளில்
பதிவான காலமது தண்ணீரானால்
சேரேநீ மூவாறு திங்கள் சென்றால்
சினமாக அக்கினியி லுற்றுக்கொண்டு
பாரேநீ வாசியானால் கூடிப்புக்கி
வளமான மும்மூன்று திங்கள் சென்றால்
கூறேநீ முப்பொருளும் ஒன்றுமாகும்
கூடியே கொள்ளுமொரு திங்கட்குள்ளே. 90

உள்ளான தண்ணீரில் உகந்து கொண்டால்
உடனக்கினி தண்ணீர் கலந்து புக்கி
வில்லாதே பரிசமது நோய்க்குள்ளாகி
வெளியுருளில் ஒருபோதும் சுகமுறாமல்

கொல்லாத நோய்களெல்லாம் உடனேகொண்டு
கொதிப்பாகி உயிருடலை நீங்கும் பாரு
கள்ளமுற்று கொண்டு முன்னே அபிஷேகித்து
காலமது நீங்கும்வரை கருதிப்பாரே. 91

கருதுகின்ற வாசி அக்கினியைச் சேர்த்து
கலந்துரைத்து மூலக் குண்டெலியினுள்ளே
வெருவிநின்ற தண்ணீரும் இறைகோணத்தில்
வீற்றிருக்கும் சந்திரபுஷ் கரணிக்குள்ளே
அருமையென்ற ஆகாயம் கருவுமாகி
அடர்ந்திருக்கும் சதாசிவத்தின் மனோன்மணிக்குள்
உருகிநின்ற வாசியின் வீடறுகோணத்தில்
உற்றதொரு அக்கினி முன்கோணத்தில்தானே. 92

வாதபித்த சிலேற்பனத்தின் தணம்தானே
வகை அமிர்தால்ஷ்கரணிக்கு மேலேதானம்
சூத சுழிமுனையில் சந்திரபுஷ்கரணி கீழாய்
சுகமான அத்தாணம் குண்டலியாம்
மூதான முப்பத்திமூன்று வயதும் முப்பத்திநாலு
மாதமும் சேர்த்து மகாலம்தானே
நாதனே முப்பத்தி நாளுக்கு மேல்
அறுபத்தி நாலுவயது எட்டுமாதம். 93

பித்தகாலம் அறுபத்து ஆறுவயதுமுதல்
விறையான நூறு வயது வரக்கும்
சத்தான வாதகாலம் என்று அறியவும்
சத்தியமாய் கலைகள்சுடர் அக்கினி அண்டம்
முத்தான பூமி பரப்பிரும்மம் சக்திசிவம்
முறையான அக்கினி சுடர்கலை நாலு
இத்துடனே ஈறான கலைகள் நாலு மனதியங்கி
புக்கினதால் படுவற்மம் என்றறிந்து கொள்ளே. 94

தாமப்பா திலர்த காலத்தின் நேரே
தவறாது சுற்றமிர்தம் பொருத்துக் குள்ளே
நாணப்பா ஓடிவு முறிவு வெட்டு குத்து
நன்றகக் கொண்டதனால் மூர்ச்சையானால்
ஊணப்பா மூன்றுடனே ஐந்து ஐந்து
ஏழு ஒன்பது மூவாறுடனே முப்பாதறாம்

ஏனப்பா எண்ணஞ்சோ டொன்றுமாகும்
 ஏற்றமருந்து ஔஷதமாம் தொண்ணூறு நாளே. 95

நாளிலே காயம்வரும் மாண்டு போவான்
 நல்காயம் எழும்புவதும் மூவாறாலே
தாளாமல் வாய் வெளும்பி பித்தம் சுண்டி
 தண்ணீர்தான் இடைபின்னி சுழியிலேகி
பாழானா விஷம்போலே பறந்து பொங்கி
 பிரயாசம் போல் வேன்வை கபம் மூர்ச்சை
தேளான தோஷம் மிகமரணம் மூவராலே
 துடர்ந்து வந்த காயத்தின் வகையிதாமே. 96

தாமென்ற உந்திப் பெருங்குடலைப்பற்றி
 தயவான ஒட்டீரல் ஒன்று காணும்
நாமென்ற மண்ணை நாக்கென்றும் சொல்வார்
 நன்றன முறிவதிலே கொண்டிட்டாலும்
சாமென்ற மூதண்டம் நெருங்கினாலும்
 சடுதியாய் பிடரிநரம் பற்றிட்டாலும்
நாமென்று செய்யாதே அகன்று நில்லு
 நமன் வருவா னென்று கூறி நாட்டினோமே. 97

நாட்டினோம் இன்னமொரு பெருமை கேளு
 நல்லதொரு மூங்கில்வட்டம் பின்பக்கத்தில்
சூட்டிவைத்த மூணெலும்பு என்று பேராம்
 தொல்லையாய்ப் பிளந்துதான் கொடுங்குண்டாகி
ஆட்டிவைத்த குண்டலிதான் சுண்டுமாகில்
 அப்போது மரணம் வரும் சுண்டதாகும்
நாட்டினால் மரணம் இல்லை சிகிச்சித்தாலும்
 நாதரார் ஆணை இந்த இடம் தீராதே. 98

முடத்தினால் கால்களது சுண்டிவாடி
 முக்கியமாய் அரையின்கீழ் பெலமில்லாமல்
இடமதிலே கிடப்பாச்சு என்னசொல்வேன்
 எப்போதும் பேதிஜலம் அறியாதோடும்
அடவறியார் தடவுமுறை செய்வாராகில்
 அதனாலே ஜீவனது போனாலும் போம்
நட ணமிடும் வாசிநிலை ஆய்ந்து செய்தால்
 ¿லமான தோஷம் உனக்காகாதென்றே. 99

என்றதொரு பஞ்சவர்ணக் குளிகை நெருங்கி
ஈரலென்ற கூம்பற்று இறங்கி போனாலும்
நன்றெனவே எழுந்திருப்பான் தன் சாரத்தால்
நடுநடுங்கி பித்தனைப்போல் பிரமை பேசும்
கண்டிடவே வற்மமில்லை என்றும் சொல்வார்
காயமென்ற சன்னியதன் கோட்டியென்பார்
கொன்றிடவே நாழிகைதான் மூன்றே முக்கால்
குருவருளால் இந்தமுறை கூறினேனே. 100

கூறுகிறேன் மார்பின் இருவிரலின் கீழே
கொடியதொரு முறிவாகி அப்பைதாழ்ந்தால்
மாறாமல் முறிவழியே விசைதான் போகும்
வலுவற்றுக் குறைந்தாலும் மரணமாகும்
கூறவே சிவன் உமைக்குச் சொன்ன வார்த்தை
செந்தில் வடிவேலவரும் எனக்குச் சொன்னார்
ஆறுமப்பா யான்அறிந்து இந்நூல்சொன்னேன்
அரனருளால் இன்னமொன்று வழுத்துவேனே. 101

வழுத்துகிறேன் முத்துச்சரம் பலகைமூலம்
வரியாக அடுக்கிவைத்த முதலாம் காண்டம்
கொழுத்திடவே பிரண்டதுதான் முறிந்திட்டாலும்
கோறான நெட்டெலும்பின் நடுப்பூட்டப்பா
பழுதுறவே விலகியதும் பிரண்டிட்டாலும்
பதினாலும் துண்டு எல்லும் விலகினாலும்
விழியதனால் காணாது ஆய்ந்துபாரு
வெல்லாது என்று கண்டால் விலகிநில்லு. 102

நில்லென்ற புறவரியின் கூம்பின்கீழ் நேர்த்தியாய் இருபுறமும்
பித்தக்காய் விலகாமல் பதிவாக இருக்கும் பாரு
வில்லென்ற வில்பூட்டின் பக்கம் தன்னில்
வேந்தனே பித்தக்காய் என்றும் சொல்வார்
மல்லென்ற அடி இடிகள் அதிலே கொண்டால்
பீஜவரை ஒளித்தாற்போல் விலகிப் போகும்
வில்லென்ற வில்போலே கூனிப்போகும்
விசனமொடு குருக்குளைவு தன்சாரம் காணும். 103

காணுமே மூன்றின் மேல் ஜன்னிகாணும்
கடுமையாய்க் கொண்டதென்றால் மரணமாகும்

தோணவே தடவி விடு மெதுவாகவானால்
சுருக்கான பருத்திச்சார் உள்ளே தாக்கு
பூணுவாய் காயராஜாங்க எண்ணெய்
புகழாகக் கொடுத்துடனே மேலே பூசே
ஆணவமாய்த் தடவிவிடு மெள்ளமெள்ள
அடங்கலிலே பிடித்திடவே அமருந்தானே. 104

அமரும் அந்த தலங்களிலே முறிவுகொண்டு
அப்பனே காயமது மிஞ்சினாக்கால்
இமரவே சிகிச்சையிலே மாறிநிற்கும்
இல்லையென்று பத்தியத்தை இகழ்வாராகில்
தமரகமாய் அடங்கிநின்ற ஜன்னிவேகம்
தானெழும்பி மூர்ச்சைவரும் மூவாண்டுக்கும்
நமனைவெல்ல மருந்துண்டோ நாட்டுக்குள்ளே
காதாக்கள் உரைதெளிந்து துகைசொன்னோமே. 105

துகையான பெருவிரலில் கவளிக்குள்ளே
சூட்சுமமாய்க் காலம் முறிவுக் குத்து
அகத்தோடே மறுபுறத்தில் சாடுமானால்
அப்போது மரணமது தவறுமாகில்
வெகுவாய்ப் புண்ணாறிப் புரையுந்தீரும்
எப்படியும் மூன்றின்மேல் சுரமுங்காணும்
துகையுடனே ஐந்தேழில் ஜன்னிவந்து
சட்டெனவே மரணமது கடத்திடாதே. 106

கடந்ததொரு தானமடா லாடமையம்
கதிர்மதியாம் பிரகாச வட்டத்துள்ளே
அடர்ந்திட்ட நாதவிந்து அடங்கும் வீடு
ஆறான மாளிகைக்கும் மேலாம் வீடு
பகர்ந்திட்ட தத்துவங்கள் ஒடுங்கும் வீடு
பாரமென்ற பிரமாண்டம் ஆதிவீடு
துரந்திட்ட ஓம்காரமுற்ற வீடு
சூட்சமென்ற பிராணாயம் இருந்தவீடு. 107

வீடான ஸ்தலமதுதான் நொறுங்குமாகில்
விசையாலே ஆடுகின்ற பொறிகளெல்லாம்
மூடோடே இடிந்து விழும் பஞ்சகர்த்தாள்
மூலமாய் நின்றதொரு பிராணவாய்வு

ஆடிநின்ற பாவைசரம் அற்றாற்போலே
அசைகின்ற வசைகளெல்லாம் அடங்கும்பாரு
கூடிநின்ற ராஜாக்கள் மூவரோடு
குடிவிட்டுப் போகுமென்று பகர்ந்தவாறே. 108

பகர்ந்திட்ட கரமதிலே கொண்டைமத்தி
பண்புடனே மையமது ஓடியுமாகில்
தகையாக மாழுமடா செய்ய வேண்டாம்
தலம்விலகி முறிவுமென்றால் சாற்றக்கேளு
முகர்ந்திடவே சன்னிவந்து அணுகாவண்ணம்
முந்திநீ தைலமதை உள்ளேதாக்கு
கெதியாகத் தைலத்தை போட்டு நீயும்
கிருபையுடனே கட்டுகிற விபரம் கேளு. 109

கேளுநீ எலும்பதனை சரியாய் வைத்து
கெட்டியாம் துணியதனை சுற்றிக் கொண்டு
ஆழவே தைலமதை போட்டுக் கொண்டு
அதன்மேலே அலகுவைத்துப் பதியக்கட்டு
நீளுநீ பஞ்சு வைத்துத் தைலம்போடு
நிமிறாமல் அண்டைவைத்துப் படுக்கச்சொல்லு
பாழுநீ பத்தியத்தை விட்டிடாதே
பறிந்தாலும் அவதியுண்டு பார்த்துக் கொள்ளே. 110

பார்த்திடுவாய் பன்னிரெண்டில் பிரித்துப்பாரு
பதிந்தஸ்தலம் புண்ணானால் அலகை மாற்று
சேர்த்திடுவாய் துணியதனால் சுற்றிக் கட்டி
திடமாக முன்தைலம் தாரை தாக்கு
கோர்த்துவரும் முன்போலே எலும்பு சேரும்
குணமாகும் புண்ணாறும் புகையுந்தீரும்
ஆர்த்துவிதம் இப்படியே ஆழ்ந்து செய்தால்
அசடில்லை என்று சொல்லி அறிந்திட்டோமே. 111

சொல்லுவோம் புறந்தலை கேசம்பற்றி
தொகுத்துவைத்த பிடரிஎன்ற ரேகைக்குள்ளே
நல்லெனவே முறித்தாலும் பொறுக்கும் மூன்றில்
நாலைந்தில் குளிர்சுரம் உண்டாகும் பார்
மெல்லெனவே மேல்நோக்கி அண்ணாந்தேதான்
விதம்மாறி முறிந்துவிடும் கண்டந்தானும்

மல்லனவே சன்னிகபம் வேர்வை காணும்
மரணமது ஒன்பதுக்குள் வழுத்தினோமே. 112

வழுத்துகிறேன் இடதுகலை சூரியனாகும்
மாறிவந்த பின்கலைச் சந்திரனாகும்
அழுத்துகிறேன் குண்டலியே வாசிமூலம்
அண்டசரா சரங்களெல்லாம் அடங்கியோடும்
பழுதுடனே மாறிவரும் நொடிக்குள்ளேதான்
பதிடுக்கி எழும்பிவிடும் முன்னும்பின்னும்
வழுத்துரவே சுழிமுனையின் வழியேபோக
வானிருந்த ஸ்தலம் சேர பரத்திலேரே. 113

பரமறிந்தான் சரமறிந்தான் பாசமற்றான்
பற்றான பகைவிட்டான் பலத்தையற்றான்
உருவமறிந்தான் ஐவருடக் கூறுகண்டான்
உடலறிந்தான் உளவறிந்தான் உண்மைகண்டான்
கருவறிந்தான் நிருவியென்ற கமலங்கண்டான்
கதிர்மதியும் ஒடுங்கிநின்ற தலமுங்கண்டான்
கரையறிந்து துரையறிந்து கண்டபேர்கள்
காசினியில் அவர்பெரிய ஞானிகாணே. 114

காணபிலே கிளிநடுவில் உருளைப்பூட்டு
கட்டுவிட்டு விலகியது விலகுமானால்
தோணவே எடுத்திருத்திப் பிடிக்கச் சொல்லி
துடைகால் பெருவிரல் இரண்டும் வைத்து
வேணுமே சவட்டியந்த குண்டில் தாக்கி
விலகாமல் பந்ததனை இருத்திவைத்து
சாண் அகலம் பலகையதை மேலே வைத்துச்
சட்டகம் போல் கச்சைசுற்றி நெருக்கிக் கட்டே. 115

கட்டுவாய் முன்போலே துண்டுரண்டுக்கும்
களராமல் கணுக்காலும் அதுபோலப்பா
முட்டாமல் வசவெண்ணை தாரை போட்டு
முப்பதிலே பிரித்துநீ மிதிக்கச் சொல்லு
விட்டுவிடு நொந்ததென்றால் எண்ணை போடு
விசனமாய்க் கொழுத்துவிடில் தடவத்தீரும்
தொட்டுத்தான் காட்டுவது போலே சொன்னேன்
தொல்லையென்று நினையாதே துணிந்து சொல்லே. 116

கொய்யடா அமுதநிலை தலம் மூவைந்தும்
தெளிவாகச் சொல்லுகிறேன் தெளிந்து கேளு
ஐயடா இத்தலமும் வற்மத்தானம்
அமுர்தநிலை யறிந்தவனே ஆசான் ஆசான்
எய்யடா வளர்பிறையில் இடமாய் ஏறும்
இறங்குவது தேய்பிறையில் வலப்புறமேயாம்
வையடா சரநிலையே கலையின் தானம்
மைந்தனே சொல்லுகிறேன் வகுத்துக்கேளே. 117

வகுத்த பெருவிரலினுடனே பிறதாரைக்கும்
மைந்தனே பரடுமணி முழந்தாள் குய்யம்
தொகுத்திட்ட உந்தி தொப்புள் கைமூலம்
துடர்கழுத்து வாயுடனே கபாலம் கண்ணும்
மிதித்திட்ட லலாடம் உச்சி ஸ்தலம் மூவைந்தும்
வேந்தனே நாமிசையும் அமுர்தஸ்தானம்
பதித்திட்ட இத்தலமே அதிகம் மிஞ்சி
பாடாக முறிவதிகம் கொள்ளுமாகில். 118

கொள்ளயிலே சரம்பிசகி வேர்வை தோன்றி
கொதிப்பான அனல்மீறி கபம்உண்டாகி
விள்ளையிலே காயச்சன்னி வந்துமாழும்
வேந்தனே இக்குணம்தான் இல்லாவிட்டால்
மெள்ளவே உள்ளுக்குநீ காயராஜாங்கம்
விபரமாய் முறிவதிலே பஞ்சு வைத்து
கொள்ளவே முறிவெண்ணை தாரைவிட்டு
கூசாமல் பத்தியம்பார் குணமாய்ப் போமே. 119

குணமாச்சு தென்று நீ மறந்திடாதே
கொற்றவனே அவதி தொண்ணூறாகும்
நினைவாச்சு கைதனிக் கொண்டையின் மேல்
நிஜமாய்ப் புஜத்தினிரு விரலிலேதான்
வினையாச்சு ஒடிந்த சூட்சம் பிறகேசாடி
விலகி நின்றால் மரணமது மூன்றுக்குள்ளே
தனிவாச்சு அடப்பனென்ற காலம்பற்றி
சடுதியிலே முறிந்தாலும் மாழும்பாரே. 120

பாரப்பா படங்காலின் நடுவுதள்ளி
பதியவே ஒடிந்ததென்றால் சொல்லக் கேளு

ஏறப்பா இத்தலத்தில் வற்மந்தானும்
இல்லையென்று சொல்லாதே கடுமையாகும்
சாரப்பா சன்னிகரம் வேர்வை காணும்
தவறாமல் ஒருவேளை வந்து கூடும்
தாரப்பா அதன்முன்னே காயராஜாங்கம்
கருத்தாகக் கொடுத்து மத்திப்பைப் போடே. 121

மத்திப்பு வைத்துமுன் கட்டச் சொல்வேன்
மரத்திலே மொளிபோலே செய்துகாலை
பக்குவமாய் வளைவதிலே பதியவைத்து
பற்றிட்டுப் புறங்காலின் அளவையொட்டி
சத்தியமாய்க் கச்சைகொண்டு இறுக்கிக்கட்டி
தயவாக விரலிடையில் பஞ்சுசேர்த்துச்
சற்றுமே தவறாமல் வசவெண்ணை போட்டு
சார்பாக ஐயெட்டில் அவிழ்த்துப் பின்னே. 122

பின்னேநீ மெதுவாக நடக்கச் சொல்லி
பிடியிருந்தால் தடவி முன்தைலம் போடு
தன்னமே தொண்ணூறு நாள் சென்றக்கால்
தரைதனிலே மிதித்திடலாம் உறைத்துப் போமே
இந்நாளும் பத்தியத்தை விட்டிடாதே
இன்னமொன்று சொல்லுகிறேன் இதமாய்க் கேளு
இன்னமே முழங்காலில் மத்திநீக்கி
அப்பனே இருபுறத்தில் எதுவானாலும். 123

ஆனாலும் எதுவிதத்தில் ஒடிந்திட்டாலும்
அப்போது எடுத்துமுன்போல இதமாய்வைத்து
தானாக முனையதைத் தள்ளியேதான்
சார்வாக பஞ்சுவைத்துச் சரியாய்க் கட்டி
ஊனமில்லா முறிவெண்ணை தாரைபோட்டு
உரைப்பான அடைவதிலே படுக்கச் சொல்லு
வானாக அவிழ்த்து நாற்பதில் தானும்
வசவெண்ணை அதன்போலே போடுபோடே. 124

தொடைமுறிவு அதன்பிறகு உறைந்து விடும்
உறையாதாகில் தொண்ணூறு சென்றபின்பு
மிதித்துமுன்போல் நடந்திடலாம் முடமுந்தீரும்
விபரமாய்ச் சொல்லிவிட்டேன் வெளியாயப்பா

பதிவாகத் துடைமுறிந்தால் கட்டுமுன்போல்
பரமகுரு பாதமதை மறவாதே நீ
சதியொரு நாள் வராது: ...கும்மட்டும்
சாஸ்திரத்தில் சொல்லிவிட்டேன் சட்டந்தானே. 125

சட்டமென்ற துடைமேலே கிண்ணியின்பூட்டில்
தங்கி நின்ற உருளைபெரும் செப்பிரண்டும்
விட்டுமே விலகியது நகண்டு போனால்
மேவி முடம்தீர்வதற்கு வருத்தமாகும்
திட்டமாய்க் கட்டுதற்கு விபரம் சொல்வேன்
எடுத்திருத்தி இருகாலும் இழுக்கச் சொல்லி
திட்டமாய்க் காலினுள் தலத்தைத் தட்டி
சேரவே மிதித்துமுன்போல் குண்டில் தாக்கே. 126

முன்போலே குண்டதிலே அணைத்துவிட்டு
உரைப்பதற்கு விலகாமல் வைத்துபின்கேள்
அன்பாகப் பலகையது முன்கை நீளம்
அதுபோலே ஒருபல்கை குறுக்கே கட்டி
இன்பமாய் மூலம் நேர்வரியின் நேரே
இதமாக ஒட்டிவைத்துக் கட்டக்கேளு
அன்பாகக் குறுக்கே வைத்த பலகைசொச்சம்
வளர்கச்சை சுற்றியிடம் சந்தினூடே. 127

சந்தோடே மாற்றியது வலது சொச்சம்
தான்சுற்று வலதுகால் சந்து மாற்றி
பந்துரண்டும் இருபுறமும் கச்சைக்குள்ளே
பதியத் தாக்கிவிட்டு இன்னும் கெட்டு
இந்தவிதம் கத்தரிக்கோல் போலே கட்டி
இதம்பதமாய் பீஜவிதை நசுங்காவண்ணம்
செந்துடையும் சேரக்கட்டி துவாரம்
மலப்பையதை தைலமிடவுந்தப்பாதே. 128

தப்பாமல் வசவெண்ணை இன்னம் போடு
தயிலமது போட்டுப்பார் தொண்ணூறு மட்டும்
கைப்பாகம் கைத்தடி பிடித்து நிற்கச் சொல்லி
கால்தூக்கி மெதுவாக நடத்திப்பாரு
பையப் பலமதுவும் கொள்ளும்பாரு
பாரினிலே இந்தமுறை யார்சொல்வார்கள்

நெய்ப்பாக மண்டலந்தான் அரைச் சென்றாக்கால்
நிஜமாகக் கட்டதனைப் பிரித்துப் போடு. 129

ஜெயமாக இன்னுமொரு முறிவுகேளு
செப்புவேன் புஷ்பாதி நடு ஒடிந்தால்
தயவாக ஒடிவு முறிவு கொள்ளுமாகில்
சடுதியிலே இடிவிழுந்தாற் போலே மாள்வார்
மாயமாக இத்தலம் விட்டகல நீங்கி
மாறியே எலும்பு ஒடிந்து உள்ளே தாழ்ந்தால்
ஜெயமாகக் கடினமடா முன்போலாக்க
சூஸ்திரமாய் கட்டதனைச் சுருக்காய்ச் சொன்னேன் 130

சுருக்காக முதுகின்பின் இருகை வாங்கி
துணிந்துதான் கள்ளர்களைக் கட்டல்போலே
முறுக்குவாய் இருகையின் மூட்டின் மேலே
இதமாகக் கச்சையினால் இறுக்கும் போது
முறிந்துடனே தாழ்ந்ததொரு எலும்புதானும்
முன்போலே ஆகுமடா முனைந்து பாரு
மருந்து முன்போல் தாளாமல் கட்டச் சொல்வேன்
வரிவரியாய் முட்டதனில் துணியைச் சுற்றே. 131

சுற்றியே பந்ததனைக் குழியில் வைத்து
சூஸ்திரமாய் மரத்தினால் பிறைபோல்செய்து
பற்றவே பந்தினால் மேல் இருத்திவைத்து
பதியவே இருதலையும் சரடுபோட்டு
மற்றதொரு புறத்தாக்கிக் கட்டிக் கொண்டு
வசவெண்ணை தொண்ணூறு நாளும் போடே
சற்றுமே பிசகாது முன்போலாகும்
சாதனமாய்ச் செய்துவிட்டேன் சமர்த்தாய்ச் செய்நீ 132

சமர்த்தாக முன்சொன்ன ஸ்தலங்கள்தானும்
சட்டெனவே ஒடிந்துபுறந்தள்ளிப் போனால்
நிமிர்ந்து முன்போல் ஆக்கியதைக் கட்டச்சொல்வேன்
நிறப்பாக எலும்பதனைப் பிடித்துத் தாழ்த்தி
அமர்த்திடவே பந்ததனை மேலே வைத்து
அடைவாக ஒடெடுத்துத் துணியைச் சுற்றி
கமத்துவாய் பந்ததனை மேலிருத்திவைத்துக்
கச்சைகொண்டு மாறாப்புக் கட்டிப்போடே. 133

மாராப்புக் கட்டி வசவெண்ணை போடு
    மண்டலமே கழிந்தபின்பு அவிழ்த்துப் பார்த்தால்
சீராக ஊறிவரும் ஊறாதாகில்
    செலுத்துவாய் வசவெண்ணை திங்கள் மூன்று
வேரோடி உறைத்ததுபோல் நிரப்பாய்ப் போகும்
    வெளியாகச் சொன்னேன் நான் விபரமாகக்
குருபரனை வணங்கி தான் செய்தாயானால்
    குணக்கேடு வாராது குருவின் ஆணை. 134

குருவருவாளின்ன முந்தன் நாசிதன்னில்
    கூர்ந்து நடுமுறிவதிலே கொள்ளுமாகில்
பெருகவே மயக்கம்வரும் வேர்வை தோன்றும்
    பிறகெழுந்து முன்சுகம் போல் ஆவான்கண்டாய்
வருகவே வார்த்தையது சிணுங்கிப் பேசும்
    வன்சுரங்கள் அஞ்சில்வரும் சன்னி தோன்றும்
இருமலொடு வாந்தி சக்தி வலியுண்டாகும்
    இதம்வாரா தெப்படியும் மரணந்தானே. 135

தானான தருணராஜாங்க எண்ணெய்
    தவறாமல் சொல்லுகிறேன் தயவாய்க் கேளு
பானான நீரொட்டி பரங்கி மாவின்
    பட்டையுடன் வேங்கைமரக் காதல்தானும்
தானான நறுநன்றிக் கிழங்குமுத்தம்
    கருங்குறிஞ்சி நிலவாகை அவுரிவேராம்
கானான கருங்காலி சின்னி வேரும்
    நன்றான கருநொச்சி ஆடாதோடை. 136

தோடையடா கெருடனுட கொடியின் வேரும்
    தொகுப்பான வேலிஎன்ற பருத்திவேரும்
வாடையடா வெண்நொச்சி நிம்பன்பட்டை
    வகையான பசுவசம்பு கொழிஞ்சி வேரும்
சடையடா தும்பை ரெண்டு மிளகு தாளி
    சரியான வெள்ளறுகு கிரந்தியொடு
பீடையடா தில்லைபெரு மரத்தின்பட்டை
    பிரிவான குண்டலத்தின் இலையும் வேரே. 137

இலையுடனே அடபொதியன் வில்வப்பட்டை
    எதிரான கரும்பாசி இலையும் வேரும்

விலையுடனே மூவிலை தேசாரின் வேரும்
வெற்றி சங்கு தூதுவளை செந்தட்டி வேரும்
வலைஎன்ற கன்னி நரி இலந்தை வேரும்
வகையான புல்லாமணக்கின் வேரும்
சலைஎன்ற ஆடுதீன்டாப் பாளை வேரும்
சரியான கடலாடி வேரும்கூட்டே. 138

கூட்டே நீ கற்பூரவள்ளி வேரும்
கொடிவேலிக் கிழங்கு மாவிலங்கின் பட்டை
நீட்டேநீ அழிஞ்சியுடன் தொட்டால் வாடி
நிலப்பனையும் சிவனார்தும் வேம்புமாகும்
முட்டேநீ சதாவேரி வஜ்ரவல்லி
முக்கியமாய்ச் சவுந்தர வல்லிவேரும்
ஆட்டேநீ காக்கணம் வேர் கருஞ்சுண்டைவேர்
அப்பனே சடைகஞ்சா கருவிளாஞ்சேர். 139

கருவானின் உள்ளியுடன் காட்டு மாறான்
கதிப்பான நீராவும் காட்டுச் சேனை
தருவான வண்டாளை முசுறு முட்டை
தானான முகுடம் பொரிகாஞ்சுரை வேர்
குருவான இவைகளை வகையொன்றுக்கு
பலமிரண்டாய்க் கூர்ந்தெடுத்து சதைவுசெய்து
வெருளாமல் இரண்டுபதக் குளநீர் விட்டு
வெர்தெடுத்து ஐநாழியாக வாங்கே. 140

வாங்குவாய் மறுபாண்டம் தன்னில் சேர்த்து
வைத்துபின்பு கசாயம் ஒன்று இன்னம் கேளு
பாங்குபெறும் கம்பிளியும் குரங்கு மண்டை
தனிஆந்தை கருவாலி பூநாகங்கேள்
தாங்குபெறு மூஞ்சுறு வலியனொடு
தயவாக இவையெல்லாம் ஒன்றாய் சேர்த்து
ஓங்கப்பா இன்னமும் நான் உறைப்பேன் தானே
உள்ளபடி தெளிந்துநீ அறிந்து செய்யே. 141

கேளப்பா வேங்கை ஒட்டகக் குழம்பு
கெடுகடுவாயதின் குளம்பு பூனைமண்டை
ஆளப்பா பரிகரியின் குளம்பு நீர்நாய்
அதன்மண்டை நலமான கருடன்தலையும்

வேளப்பா கழுதைவண்டு குளஅட்டை நாரை
வெண்டலையோ டாமை ஓடு வகைக்கு ரெண்டே
கேளப்பா இத்தனையும் சேர்த்து நீயும்
கெவனமுடன் தனித்தனியே வைத்துக் கொள்ளே. 142

கொண்டிரண்டு பலமாகச் சதைவு செய்து
இருபடிக்கு முறியிட்டுக் காய்ச்சி வாங்கி
கொண்டிடுவாய் நாழியாய் இறுத்து
குணமான முன்கஷாயத் தோடே சேர்த்து
உண்டாகும் சரக்கு வகை பால்பழங்கள்
உரப்பாக வைப்பு வகை சொல்லக் கேளு
பண்டான வெப்புக் காஞ்சுரை பூலாத்திப்
பகருகின்ற இலுமிச்சை பழத்தின் சாறே. 143

சாருமடா பாளைவள்ளிக் கிழங்கின் சாறும்
சரியான செம்மறியின் கிழங்கின்சாறும்
வாருமடா சம்பா வெற்றிலையின் சாரும்
வகையுடனே கூறுகிறேன் இன்னம்கேளே
ஆகுமடா ஆடுதிண்டாப் பாளைசாரும்
அடர்காணம் சித்திரமூலம் காணி சாறும்
வாகுமடா பாலச்சார் துவரைச் சாறாம்
தும்பைரண்டு குப்பைமேனி தைவேளை
வேலிபருத்தி தோடை 144

தோடையடா வஜ்ரவல்லி நொச்சி சாறாம்
துவர்நவரை கருங் குழஞ்சி கஞ்சாசாறாம்
வாடையடா புகையிலைச்சார் கும்மட்டிச் சாறாம்
வகையான ஆதளம்சார் கருவேப்பின்சாறாம்
பீடைவண்டு தீண்டாமரத்தோலின் சாறாம்
மெய்குறிஞ்சி இரண்டு பொடுதலை கொழிஞ்சி
சாடையடா வசம்பு மஞ்சள் மூடில்லாதாளி
சதாவேலி கார்த்திகையும் முதப்பனாகும். 145

ஆகுகிரந்தி மரக்கொடி மாறாவும்
அடல் நாகப் பழத்தோடே ஆட்டின்பாலும்
வாகுபெற கழுதைப்பால் குதிரைப்பால்
வளர்முலைப்பால் சாராயம் தென்னங்கள்ளும்
வேகமுடன் வகைக்கு ஒரு படியுமாகும்
விட்டொக்க முன்பாண்டத்திட்டுக் காய்ச்சி

சேகரமாய் ஐந்திலொன்றாய் காயும் போது
　　சேருவெளிச்சி வேம்பு விளாம் பிசினே. 146

விளாம்பிசினும் பரங்கி தில்லை இலவம்பிசினும்
　　வெள்ளை குந்திரிக்கம் கரியபோளம் கொம்பரக்கு
இளாம் சாம்பிராணி சதகுப்பை ஆதாளிச்சாதி
　　மூன்றும் முறையாக கூட்டிடுவாயே
வளம்பெறவே சித்தரத்தை சிறியதேக்கு
　　வகைக்கு ஒரு பலம்கூட்டி இடித்தரைத்து
குளம்பெறவே நீரொட்டி தென்னை புன்னை
　　குயிலும் மயிலும் மலம்பாம்பும் புங்குமாமே. 147

புங்குடனே மலம்பன்றி வெள்ளாட்டு நெய்
　　போம் இலுப்பை நிம்பெண்ணை பதியொன்றாகும்
அங்குஇவை வகைக்குஒரு படியும் சேர்த்து
　　நீங்காமல் கிண்டியதைக் காய்ச்சும்போது
பாங்குடனே நிச்சயமாய் நேர் பதினாலு
　　பார்த்திடவே அருகிருந்து அகலாவண்ணம்
பொங்கியது பாழாகப் போகாவண்ணம்
　　புத்தியாய் காய்ச்சிடவே புகழக் கேளு. 148

புகழக்கேள் திருகடுகு திருமுனிவர் கஞ்சா
　　புத்தியுறும் காரமஞ்கும் சேர்த்துப்பின்னே
மகிழம்பூ நாகணமும் அரிசி ஆலும்
　　வால்மிளகு பெருங்காயம் அரத்தை அக்கிறா
புகழப்பத்து ஏலமுடன் சதகுப்பை
　　பஞ்சவனும் சூடன் குறோசாணி மஞ்சள் உள்ளி
துகலதுத்தய கீரிசாத்துஞ் சேங்கொட்டைகெந்தம்
　　துருசு மனோசிலை காந்தம் வேம்பாடந்தானே. 149

வேம்பாடம்பட்டை நறும்பிசினும் மாஞ்சி
　　விடையது கஸ்தூரிமஞ்சள் கரியசீரகம்
கொம்பரக்கு முந்திரிக்கைப் பழம் காயம்
　　குந்திரிக்கம் கடல் தேங்காய் சமுத்திராப்பழம்
வம்பாத பெருஞ்சீரகம் கடகசிங்கி
　　வாலுளுவை அதிமதுரம் சிவதை தேக்கு
சாம்பராணி கடுகு சந்தம் பூலாவிருட்சம்
　　செண்பகப்பூ மல்லிகை மொக்கு அமுக்கூரந்தானே. 150

தானேகேள் குக்கில் கல்மதம் கல்லடையும்
மச்சம் குங்குமப்பூ இருவிகரமேதை மீரை
தேனேகேள் வெட்டிவேர் கோரோசனை கஸ்தூரி
சிறப்பாக வகைக்கு இரு கழஞ்சி கூட்டி
மானே கேள்வாரமுடன் கம்பி இளம் பருவம்பார்த்து
வடித்ததனைக் குப்பியில் வைத்துக் கொண்டு
தானேகேள் சிறுதுவாய் தைலம் பிரயோகித்தால்
தீராத முறிவுகாயம் தீரும் காணே. 151

காணேநீ அத்தைலம் பொறுதிலங்கள்
கண்டமுடம் அசைவு முறிவுக்கெல்லாம் இட்டால்
வீணே போமென்ற தனை எண்ணிடாதே
விளையாட்டுப் போக்சென்றும் நினைத்திடாதே
பூணேஉன் கருமவினை எல்லாம் தீரும்
புகலாதே அடவுமுறை வெளியிடாதே
ஆணை நானென்று சொல்லி தைலமிதை
ஆறுபோது உட்கொள்ள ஜன்னிபோச்சே. 152

சன்னிகபம் விக்கல் வேர்வை சாராது
ஜலமலங்கள் படி வலம்போம்
அன்னி நாவரட்சை பரிதாபமூச்சை
அனல் மீறல் உள்குளிர்தல் அதிகம் போகும்
சென்னிமுதல் சகல காய நிலையும் போகும்
செரியாமை புளித்தேப்பம் சிரங்கும் தீரும்
கன்னிகைக்கு தசவாய்வு ஸ்தலத்திலாகும்
கலைமூன்றும் வாசிநிலை சரியாய்ப் பாயும் 153

சரியாகும் பொருளுந்தன் தலத்தில் சேரும்
தத்துவங்கள் ஒத்துநிற்கும் பஞ்சகர்த்தாள்
பிரிநாடி நிலைக்குள்ளே உயிராய் நின்றால்
பிராணகலைக் குருநாடி நேரே நிற்கும்
துரிதமாய் மூலவட்டம் பிரகாசிக்கும்
துண்டமொடு கண்டவெளி அசைந்து நிற்கும்
கரிமுகனும் கணபதியும் உமையம்மாதும்
கண்டமதிலேரி மண்டலம் நிற்பாரே. 154

மண்டலத்தில் நாலு பொருள் நின்றுலங்கும்
மறைஎன்ற மறைஎல்லாம் நிறைந்து காணும்

தெண்டிரையும் அண்டபகி ரண்டமெல்லாம்
சேர்ந்துமே குருவங்கே பதிந்து நிற்பார்
கொண்டதொரு ஆறாறு தத்துவங்கள்
நிலைநின்ற பஞ்சதத்துவத்தில் ஆடிநிற்கும்
பண்டிருந்த முச்சுடரின் நிலையில் மூன்றும்
பதிந்தங்கே விளையாடித் திரியுமாமே. 155

திருவாசி விளையாடி அகமகிழ்வாய்
செயலாக அளித்தாக்கால் செய்குவாளாம்
அரியரனும் உண்டான நாதவிந்து
அருவுருவாய் கருவாகி ஒருவராகும்
பகிமீதில் விளையாடும் திருப்பொருளும்
பகல் கதிரோன் இந்திரன் ராவில் நடத்தும்
சரியாகப் புரிந்து கரம் ஒருநிலையாய்
சடையாமல் இத்தைலம் பிரயோகம் செய்யே. 156

செய்யேநீ பிரமோகம் குறைநோய்க் குட்டம்
சேர்ந்த மகோதரம் பாண்டு பீலிகை
ஐய்யோ போம் கவுசிவலி தீரும்சோகை
ஆந்திரமும் சிலேற்பனங்கள் தொண்ணூற்றாறும்
கையஉள் வாத பித்த குடல் வாதங்கள்
காமாலை வீக்க மொடு கனத்த சூடு
உய்யபோம் நோய்களெல்லாம் மூட்டோடேதான்
உன்குருவைத் தான்வணங்கி உகந்து கேளே. 157

கேளப்பரீ காயராஜாங்க எண்ணை
கெடியாய் கைபாகமதாய் வழங்கக் கேளு
வாழப்பா மருந்தினத்தின் விபரம் எல்லாம்
வழுத்துகிறேன் அதன்விபரம் வணங்கிக் கேளே
சூளப்பா அத்தியுடன் வேம்பின் பட்டை
சுகமான பனிச்சையுடன் உதியன்பட்டை
நாளப்பா தென்னையுடன் விரியன்பட்டை
நலமான பறங்கி மாமுருங்கைப்பட்டை. 158

பட்டை என்ற முருக்கினுடன் ஆயணியாம்
பதிவான அரசிலுப்பை மருதின்பட்டை
வெட்டுவாய் மாவிலங்கு இலுப்பைப்பட்டை
விதமான கதம்பைச்சார் தேசிச்சாரும்

கூட்டுவாய் எட்டியுடைய பழத்தின் சாறும்
குணம் வேம்பு விரியதனின் பழத்தின் சாறும்
நாட்டுவாய் விளாத்தினுட பிஞ்சுசாறும்
நலமான பச்சை பாக்கதனின் சாரே. 159

சாருடனே அத்தியொடு பனிச்சைக் காயும்
சாற்றுகிறேன் தென்னம்பூ நாகல் பிஞ்சும்
வீறுடனே பூலாத்தி பேய்க் கும்மட்டி
விதமான ஊமத்தன்காய் நீரொட்டிக்காய்
கூறான கூடத்தும்பை பெருந்தும்பைச் சார்
குழியானை குழிழிண்டான் பச்சிலைச் பார்
சூரான அவுரி முறி பொருந்திச் சாறு
சுகமான செந்நெருஞ்சி குப்பைமேனி 160

மேனியென்ற வெள்ளை நொச்சி ஒடு ஒடுக்கி
மேலான இசங்கின் இலை ஆடாதோடை
மாளிஎன்ற வேலியுட பருத்திச் சாறும்
தைவேளை தூதுவளைசாறும் கூட்டி
இனிஎன்ற கற்பூர வள்ளிச் சாறும்
பச்சையாம் புகையிலைச் சார் இடித்துக்கூட்டி
கூனிஎன்ற வக்ரவல்லி துவரைச்சாறு
குதிகருணை மாகாளிச் கிழங்குச் சாறே. 161

சாறான நிலப்பனை செம்மறிக் கிழங்கு
சதுரப்பால் வள்ளி சதாவேரி யாகும்
வேறான ஆட்டின்பால் செண்பகப்பால்
விதமான நல்முசுட்டைத் தண்டின் சாறும்
பாறான புங்கின்பால் பிறாயின் பாலும்
பகர்கழுதைப் பால் நாலாங் கள்ளிச் சாறும்
ஆறான மாவின்பால் ஆவின்பாலும்
அப்பனே இருவேலி நகரையாமே. 162

ஆமென்ற தில்லைப்பால் இவை வெவ்வேறு
அறிவாக நாழிகொண்டு ஆகக்கூட்டி
தாமென்ற அனல்மூட்டி நெருப்பைப் போட்டு
தவறாமல் பாதிமட்டாய் வற்றக்காய்ந்தால்
ஓமென்ற களிப்பாக்கு கொம்பரக்கு
உத்தமனே கரியென்ற போளமாகும்

கூமென்ற பாடமில்லாப் புகையிலைதான் சுக்கு
நெல்லிப்பட்டை மாறான கொண்டை மூலம் 163

மூலமென்ற செந்திரியவேர் மதுவள்ளி
மூங்கில் வேர்தாய் செவி புல்லாமணக்கு
பாலமென்ற தக்காளி செருப்படியும்
பாலவேர் மருக்கான வெள்ளருகும்
வேல்என்ற அழிஞ்சில்வேர் அரசின்பட்டை
விதமான கழற்ச்சிவேர் கண்டங்கத்தரி
துலாமென்ற நிலவாகை வேங்கைக் காதல்
சுகமான நீர்பூலா குப்பிவேரே. 164

வேரான தோடைவேர் கருஞ்சுண்டைவேர்
விதமான பூலா விருட்சம் சிறுதேக்காகும்
காரான உளுந்துடனே காணமாகும்
கனமான பணங்கிழங்கு உடும்பிறைச்சி
சூரான நல்மிளகு ஞாயிரின் வேர்
சுகமான வெட்டிவேர் தாளைவேராம்
கூறான பலம் வகைக்கு ஒன்று தூக்கி
குணமானகால் குறுணி இளநீரில் தாக்கே. 165

தாக்கிடு நீ தீளித்துப் பாதிவற்றி
தயவாகக் கோழியிடித்துப் பிழிந்து சேரு
போக்கியே புங்கெண்ணை மலம்பாம்யெண்ணைய்
புகழான நீரொட்டி யெண்ணையுடன்
தூக்கியே சுகமான புன்னை எண்ணை
துணிவுடனே மயிவெண்ணை தானும் சேர்த்து
பாக்கியே நிம்பெண்ணை இலுப்பைஎண்ணை
பதறாமல் எண்ணை வகை ஒன்பதாமே. 166

எண்ணையது வகைவகைக்கு நாழியாகும்
இதமாகச் சேர்த்தபின்பு சொல்வேன் கேளு
வின்னேகேள் விளாம்பிசினும் பறங்கிமாவின்
வெளிச்சப் பிசின் வேப்பன் பிசின் முருங்கைபிசின்
கண்ணேநீ இலுப்பைப் புன்னை பிசினும் கூட்டி
கலந்தெரித்து வற்றவைத்து நாலில்ஒன்றாய்
சொன்னேன்கேள் இதுபோல வற்றக் காய்ந்தால்
சொல்வேனே தவறாமல் கடைமருந்துமே. 167

சொல்லுவேன் திரிகடுகு தூரிசு துத்தம்
சுகமான நவச்சாரம் பூலத்தேலம்
வெல்லுவேன் செவ்வுள்ளி ஓமம்காயம்
விடையம் இருதாரம் நெல்லிக்காய் கெந்தகம்
நல்லதொரு சதகுப்பை கடுகு கார்கோலம்
நாகணமுங் கரியபோளம் இண்டரத்தை
அல்லகரு மனோசிலையும் வேம்பாடம்பட்டை
அரிசி ஆறும் முந்திரிக்கைபழம் தற்கோலம். 168

கோலமென்ற செண்பகப்பூ கரியசீரகம்
கொம்பரகு சேங்கொட்டை வால்மிளகு.
தைலமென்ற குங்குமப்பூ பவளப்புற்று
சடாமாஞ்சி நறும் பிசினும் இன்னங்கேளே
மூலமென்ற குந்திரிக்கம் சாம்பிராணி
முச்சாதி ரசம் காந்தம் அஞ்சனக்கல்
சூலமென்ற பொன்மெழுகு சந்தம் நாகம்
கோலமொடு கீரி சாத்து வசம்பு கூட்டே. 169

கூட்டேநீ அபின்குடன் மேதை குக்கில்
குப்பையுடன் கஸ்தூரி உலுவாய்த்தானும்
காட்டேநீ சிறுதேக்கு நறுக்கு மூலம்
கல்மதம் பச்சைக்கற்பூரம் மீரை
சூட்டேநீ வெண்காரம் நாவியாகும்
சுருக்கான இருவியுடன் எல்லாம் ஒன்றாய்
தூட்டேநீ வெவ்வேறு வகை வகைக்கு
துல்லியமாய் தூக்கிஎடு சொல்லக்கேளு 170

கேளப்பா கால்பலந்தான் எல்லாம் வாங்கி
கிருபையுட்ன் பொடிபண்ணி தூவிக்காய்ச்சி
வேளப்பா கம்பியுட பதத்தில் வார்த்து
விதமாக அரித்து நிறுத்திவைத்துக்கொண்டு
ஆலப்பா ஆறுமுகனை பூசைசெய்து
அவர்பதத்தை அனுதினமும் சிரசிலேற்றி
நீளப்பா தைலத்தை எடுத்து மைந்தா
நினைவாக பக்குவமாய்ப் பதனம் பண்ணே. 171

பதமான தைலமதை தொட்டுமெள்ள
பார்த்தறிந்து முறிகாயத் திட்டுள் தாக்கு

விதமான கைவிட்டுப் போகும் முன்னே
வீராகப் பிரயோகம் செய்திட்டாக்கால்
மதனமுடன் முறிகளும் கபமும் சன்னி
மறிவான தளங்களெல்லாம் செம்மையாகும்
சீதமுட்ன் நரம்பெலும்பு அற்றதெல்லாம்
செம்மையாம் சவ்வுகளும் பொருந்தி நிற்கும். 172

நிற்குமே அற்றதொரு பையும் சவ்வும்
நேராகத் தான்பொருந்த ஊறிச் சேரும்
துர்குணங்கள் காயமதில் பூப்பெறாமல்
தொடுத்துடனே அடிக்கடிநீ பார்த்துக் கொள்ளு
புக்கிநின்ற காய்ச்சல் பனி ஜன்னி சீதம்
புகழான மயக்கமொடு வலிகள் விக்கல்
திக்கற்ற மூர்ச்சை கபம் அலகுப்பூட்டல்
தீருமடா தைலமதால் திடம்காண்பீரே. 173

திடமதிலும் இடர்வந்து சேராவண்ணம்
இதமான வசவெண்ணை சொல்லக் கேளு
அடவ்டனே நிலவாகை வீழிகொற்றான்
வலுவான செம்பருத்தி அடைக்காய் வேரும்
திடமுஞ்சை கடலாடி வெள்ளருகு
தின்னவனே மூடிளில்லாத் தாலியாகும்
மடசில்லரி வேராமணக்கு கருவிலாஞ்சி
செருப்படியும் மதுக்காரை காக்கை நொச்சி. 174

நொச்சியுடன் செந்திரிய வல்லிமூலம்
நுகர்பயிலி மலைதாங்கி தடைச்சிவேரும்
அச்சமில்லா அடம்பானும் மஞ்சனத்தி
அருகுசிறுதேக்கு ஆலம்பூ நீர்பூலாவும்
நிச்சயமாய் குறுந்தொட்டி இதுகள் எல்லாம்
நினைவாக ஓர்வகைக்கு பலமும் மூன்று
பட்சமுடன் பதக்குநீர் தன்னிலிட்டு
பார்த்தறிந்து இருநாழியாக வாங்கே. 175

வாங்கியே அதனோடு கூட்டிச் சேர்க்க
வலுவான எட்டிப்பழம் பூலாத்தி
ஆங்குபெற கற்பூர வள்ளிச் சாறும்
அதனோடே நீர்முள்ளி தேசிச்சாறும்

சாங்கு கண்டங்கத்திரி ஆடுதின்னாப்பாளை
சங்குபுஷ்பம் அதனோடே குமரிச்சாறும்
நீக்குநின்ற இளநீர் ஓட்டின் பாலும்
நிச்மாக இதுகளெல்லாம் வகைக்கு நாழி 176

வகைவகைக்கு இவைகளெல்லாம் நாழிவார்த்து
ஒருபாண்டம் அதிலே ஒன்றாய்ச் சேரு
சிகையாகத் தீயெரித்துப் பாதியானால்
சேர்ந்திடவே கடைமருந்தின் விபரம் கேளு
அகம்மகிழும் சுக்குடனே பூலத்தேலம்
அதிவிடையம் குரோசாணி ஆளிதேற்றான்
நகைபுரியும் சிற்றரத்தை வசுவாசியும்
நாங்கணமும் திரிபாலை கற்கடகசிங்கி. 177

சிங்கியொடு கொட்டம் இருவேலிப்பச்சை
செயலான அகில் வெட்டி அஞ்சனக்கல்
பொங்கு சனநாயரொடு தேவதாரம்
புகழான மல்லி இரு சீரகமுமாகும்
அங்குநின்ற தாளிசையும் கிறம்பும் மீரை
அழகான கீரிசாத்து பூக்காய் முந்திரி
வாங்கியே இதுகளெல்லாம் வகைகழஞ்சாய்
வடிவாக இடித்தரைத்துச் சேர்த்துக் காய்ச்சே. 178

காய்ச்சிநீ மெழுகுபதம் வடித்து வைத்து
கண்டறிந்த இந்த எண்ணை பிரயோகத்தால்
சூட்சமடா முறிவுகளின் பின்னல் கொண்டு
சுருக்கி மிக அசையாமல் நின்றிட்டாலும்
சூட்சமுடன் முறிவுகளில் விஷநீரேறி
குத்தியே நீர்நிலைத்து வீங்கினாலும்
பாச்சலுடன் அஸ்திகளில் முறிவுநீங்கி
பதிவகன்று முன்பின்னால் நின்றிட்டாலும். 179

நின்றாலும் சவ்வகன்று நின்றிட்டாலும்
நிலைசரியாய்ச் சேராமல் அகன்றிட்டாலும்
நன்றான வட்டமிட்ட கண்ணிளகி
நகண்டதுதான் முன்பின்னாய் திரண்டிட்டாலும்
சென்றாடும் கைபாதங்கள் சரியாய்ச் செய்தால்
சதிகேடு இல்லையடா வசவுண்டாகும்

அன்றான தியானமந்தை செய்து நீயும்
அப்பனே குருபரனை அறிந்து தேறே. 180

அறிந்துசேர் அதிசாரம் காய்ச்சல் தீர
அறைகிறேன் கஷாயமொன்று சொல்லக்கேளு
செந்தவரை வல்லாரை சீந்திற்தண்டும்
சேர்ந்துவரை குவளைவேர் குருந்தமுட்டி
பிரிந்துவிட இசுங்கன்வேர் இளந்தென்னம்பூ
பிசகாமல் பருத்திவேர் முசுட்டைத் தண்டு
மரித்திடக்காய் மாதளங்காய் முந்தங்காயும்
மருதுதோல் உளிஞை ஓரிலையுங் கூட்டே. 181

கூட்டேநீ இருதும்பை அத்திப்பிஞ்சு
குணமான களிப்பாக்கு வாழைப்பூவும்
ஈட்டேநீ இருவேலி இசுங்கின் பூவும்
மய்யாலம் மாதுளம்பூவும் பருத்திப்பூவும்
சிட்டேநீ நாகலாத்தி இலவின் பட்டை
சிறபோன கொட்டி நெய்தல் பிரமிநன்றி
நீட்டேநீ சிறுநெருஞ்சி தோடை தூதுவளை
நெல்லிக்காய் விளாம்பிசினும் அருகன்வேரே. 182

அறுகுடனே திரிகடுகு விடையம் வங்கம்
அரிசி ஆறு திரிசாதி குரோசானி ஓமம்
நறும்பிசினும் உலுவாயும் நற்சீரகம்
நாகப்பூ மகிழம்பூ கொம்பரக்கு
கொருவுடனே வகைக்குக் கால் பலமுமாகும்
கிருபையாய் ஐந்திலொரு பாகந்தன்னை
மறுபடியே சதவுசெய்து இளங்களிநீரில்
மறுக்காமல் உழக்காக்கி இரண்டு நேரம். 183

உழக்கான கஷாயத்தில் நெய்தேன் சேர்த்து
உடனருந்த இரண்டுவேளை ஐந்து நாளும்
பழக்கமாய்க் கொண்டவுடன் அஸ்திவெக்கை
பாழான கழச்சல் என்ற அதிசாரங்கள்
நிழல்கூட நிகழாமல் சுண்டல் வாடும்தேகம்
திடீரெனவே ஊறிவிடும் தெளிந்துபோகும்
நழுகாம லிந்தமருந் தருந்துவோர்க்கு
நாடாது வெகுநோய்கள் காயங்காணே. 184

காணுமென்ற பையறாத் தைலம் சொல்வேன்
கடுகுரோகிணி சுக்கு ஓமம் கொட்டம்
வேணுமென்ற அதிமதுரம் திரிபாலைதான்
விதமான திரிசாதி சிறுநாகப்பூ
பேணுமென்ற குங்குமப்பூவும் கூட்டி
பெலமான நாகணமும் சிறியதேக்கும்
பூணுமென்ற சந்தனம்ரண்டு பூலாவிருட்சம்
புகழான செவ்வள்ளி கீரிசாத்தாகும். 185

ஆகுமே பூலத்து வெண்குந்திரிகம்
அரிதாரம் சாம்பிராணி கஸ்தூரி மஞ்சள்
வேகுமே சாதிலிங்கம் பவளப்புத்து
வெந்தயமும் வசுவாசி கரியபோளம்
வாகுமே அரிசி சனிஞாயந்தானும்
வகையான பஞ்சவன் பழுக்காய்மேதை
தோகுமந்த கோரோஜனை கஸ்தூரி காந்தம்
துடுக்கான நவச்சாரம் கண்டிவெண்ணை. 186

வெண்ணையொடு குரோசானி முந்திரிக்கை
விதமான நவச்சாரம் சீனிக்காரம்,
கண்ணேகேள் ஏலமொடு சித்தரத்தைகச்சோலம்
சித்திரை திற்பிலியும் பச்சைதானும்
பெண்ணேகேள் இலவங்கம் அதிவிடையம்
விழலரிசி கார்கோலம் புனுகு மீரை
பெண்ணேகேள் ஆதாளி பெரிய சீரகம்
பிசகாமல் ஓர்கழஞ்சி வீதம் கேளே. 187

கொண்டுநீ இடித்தரைத்து நன்றாகத்தான்
குணமான பாத்திரத்தில் வைத்துக் கொண்டு
தெண்டகில் குருந்தட்டிவேர் வெள்ளைக் குன்றி
செயலான நிலப்பனையின் கிழங்கு வாடி
பண்டான பலையதின் கிழங்குமாகும்
பகர்வேம்பு கரிஞ்சியொடு இலஞ்சிப்பழம்
திண்டான நாவலதின் பட்டையோடு
திறமான செறியணங்கு வில்லைசேரே. 188

வில்லையாம் மூவிலை ஓரிலையுமாகும்
இதமான மிளகின்வேர் அறுகின் வேராம்

சொல்லும் எழுத்தாணிவேராம் பேரறுகின்வேராம்
சுகமான பழம்பாசி தாளிவேராம்
வல்லநரி இலந்தைவேர் வெப்பூலாவும்
மருக்காரை தாமரையின் வளையும்கூட்டு
வெல்லுமே பனைவேர் சேம்புத்தண்டு
விதம் ஆலம்விழுது கொடிசுரை மூலம்தான். 189

மூலமுடன் சிவன்வேம்பு வஜ்ரவள்ளி
மூக்கவரை சின்னிவேர் முசுட்டைத் தண்டு
கோலமென்ற வெள்ளறுகு வீழிவேராம்
குணமான மூங்கில் பொன்னாவரை வேராம்
பலமான நெருஞ்சிவேர் வண்டாலம் வேர்
தொகுப்பான குருதுள்ளி கோடைசூடி
நலமான தாழை விளிர் அகத்தி வேரும்
நல்லதோடை தக்காளிவேர் இதுகளெல்லாம். 190

விதமான வகை பலமொன்று தூக்கிஎடு
சதைத்து இளநீர் வெள்ளம் பதக்குவிட்டு
பதமுடனே எட்டொன்றாக்கி இறுத்து வைத்து
பலவிதமுள்ள எண்ணைவகை தன்னைக் கேளே
கதியுடைய ஆமணக்கு பசுவோடு எள்ளு
காரணமாம் வேம்பு புங்கு மயிலின் நெய்யும்
மதியுடனே வகை நாழியொக்கச் சேர்த்து
மயங்காமல் ஆவின்பால் ஆட்டின் பாலும். 191

மேவியதோர் தேங்காய்ப்பால் அடர்புங்கு
அழகான செண்பகப் பாலொடுக்கிச் சாறு
சேவியமாய் கருநொச்சி குப்பைமேனி
சிறட்'பிஞ்சி இறைச்சிப் பச்சிலையின் சாறும்
பவிதமுடன் ஆடுதின்னாப் பாளைச் சாறும்
பகர்தும்பை வஜ்ரவள்ளி அவுரிச்சாறும்
ஓவியமாய் குழிமீண்டான் சாற்றினோடே
உயர்நாகல் பட்டையுடன் பறங்கிப்பட்டை 192

பறங்கி மாபட்டையுடன் கதம்பைச் சார்தான்
பார் உதியன் பட்டையுடன் வகைக்கு நாழி
அறம்பழியும் முன்மருந்தில் சேர்த்துக்கொண்டு
அடுப்பேற்றி தீளித்துப் பாதிவற்றித்

திறம்பெறவே முன்மருந்தைத் தூவிக்கிண்டி
திறமாக நாலிலொன்றாய்க் சுண்டக்காய்ந்தால்
நிறம்பெறவே விளாம்பிசினும் குந்திரிக்கம்
நிசம்கோழிக் கருவும் அத்திப் பிசினும். 193

அத்தியென்ற பிசினோடே நறும்பிசினும்
அடவான கொம்பரக்கு வகை கழஞ்சாய்
பத்திபெற பொடித்திட்டுச் சுண்டக் காய்ந்தால்
பதமாக கம்பியுடபதத்தில் வாங்கி
சித்திபெற அறித்தெடுத்து உபயோகித்தால்
திண்மை யென்ற கலைகளிலே முறிவுகொண்டு
அமர்த்தியது திறவுகண்டு வெளிகண்டாலும்
அடவாகக் குத்தியதைத் தைத்துக் கெட்டி. 194

கட்டியபின் இந்தஎண்ணை அதில்படவே
கணிதமுடன் புண்ணாறும் புரையுந் தீரும்
வட்டமிட்ட கண்விலகிக் கொண்டதென்றால்
வரி கண்ணினுள் செலுத்திப் பிரயோகித்தால்
திட்டமுடன் மாமிசத்தில் பையற்றாலும்
திறமுடன் பொருந்தியது சதை பெருக்கும்
நட்டநடு துளையிலுள்ள மூச்சுவேறே
நடுவழியில் ஏகமிக போய்விட்டாலும். 195

வழிபிசகிப் போகாமல் தைத்துக் கட்டி
வரிசையுடன் தைலமிட உறுதியாகும்
வெளிசெரும மண்டை நொறுங்குண்டு மூர்சிசை
மேவியே வந்தாலும் சாந்தியாகும்
பலிதாக அத்தியின் நூல்சங்கிலைம்
பஞ்சவர்ண குகைவிரந்து கொருங்கி சதைத்திட்டாலும்
வெளிப்படவே கலத்துறை வழிகளெல்லாம்
ரெத்தமாய் அடர்ந்துமிகப் பிரண்டிட்டாலும். 196

பிரண்டிடவே பலன் இறங்கல் காணாவிட்டால்
பிசகாமல் செய்துவிடு பழியுந் தீரும்
அருண்டளையும் பிராணயமும் தீபமேறும்
அல்லாமல் பலகாயம் நிவர்த்தியாகும்
சொரிந்திடவே தைலமதைப் பிரயோகித்தால்
சூட்சாதி சூட்சமெல்லாம் மூலம் சேரும்

அருந்தவத்தோர் சொன்ன மருந்திதுவேயாகும்
அன்பாகச் சொல்லிவிட்டேன் சுகமாய்த்தானே. 197

சுகமான நிலவாகை கொற்றான் சாறும்
சோற்றுக் கற்றாழையோடு பருத்திச் சாறும்
அகமான தென்னம்பூ சங்கு புஷ்பம்
அடர்வேம்பு காஞ்சிரையின் பழமீதல்லாம்
நிகரமிடை சமனாகக் கொண்டு நீயும்
நிசமான பசுவெண்ணை தானும் ஒப்பம்
புகழுடைய மூன்றுநாள் இட்டுக் கொண்டால்
புகழாகத் தீட்டியே தடவத் தீரும். 198

தடவியுமே தீராதுபோகுமானால் திறமான கஷாயத்தை
சேவித்துப்பார் மிஞ்சினால் தைலம் சேர்த்து
அடவுடனே காய்ச்சியதை மெழுகதாக்கி
அரித்தெடுத்து இட்டுக் கையணைத்துப் பாரு
திடமுடனே தீருமடா துவாலைசெய் நீ
சீராகப் பாதத்தில் மருந்தொழித்து
படியுடனே ஒன்றாகச் சேரும்மட்டும்
வகைகண்டு நன்றாகச் சிகிச்சைசெய்யே. 199

செய்யவே சாறுமது நின்று கொண்டால்
க்ஷணத்திலங்கும் நேரம் வகித்துப்பாரு
பையவே சாறும் நின்ற மறுநாளில்
பாங்காக வற்றும்மட்டும் ரகித்தல் செய்து
நையவே ஒன்றாக ரகித்தபின்பு
நன்றாகத் தேகமதில் துவாலை செய்து
துய்யவே பத்து நாள் வரையும் செய்து
தொகுப்பாகக் கையணைத்துத் தடவிப்பாரே. 200

தடவிநீ பார்த்திடவே கொழுத்திருப்புத்
தடங்கள் விட்ட நரம்புத்தொற்று உடனே தீரும்
அடவுடனே கொண்டபோதே அணிவகுப்பாய்
அழகாகத் தீருமடா அறிந்து செய்நீ
திடமுடனே மனமுரைத்து ஆய்ந்து பார்த்து
செப்பிய முப்பொருளை சிந்தை கூர்ந்து
ஜடமறிந்து அனுப்பான வழிகளெல்லாம்
க்ஷணத்திலே தீர்க்கவழி பார்த்துச் செய்யே. 201

செய்யவே குன்றிவேர் தைலம் கேளே
சிறியதென்று எண்ணாதே தேர்ந்து செய்வாய்
ஐயவெண்குன்றி வேர் அமுதவள்ளி
ஆமணக்கு குறுந்தொட்டி ஆடாதோடை
வெய்யிசங்கு வில்வவேர் அருகன்வேர்
அரும்புல் லாமணக்கின்வேர் நற்துளசி வேராம்
வையனார் வழம்பாசி அடபதியன்வளர்
ஆடுதீண்டாப்பாளை காக்கணம் பூலாவேரும்.

முறையான பருத்திவேர் கத்தரிவேர் 202
காயம் என்ற ஆதளை மாதளைத்தின் வேரும்
சரிவேலை மேனி சங்கங் குப்பி
சீனம் என்ற சிறுகீரை அவுரிவேராம்
சிறையான சின்னி கன்னி ஆவாரை வேர்
இவைகளொக்க ஒருபலமாய் எடுத்துநன்றாய்
நறுக்கியே ஞாலமதில் எடுத்து நன்றாய்
நையவே சதவுசெய்து இளநீர் தாக்கே.

தாக்கிநீ இருகுறுணி இளநீர்வெள்ளம் 203
தன்னிலிட்டு ஐநாழியாக வற்றி
பாக்கியவமென் தனை இறுத்து பாண்டத்தூற்றி
பரிவான வேம்பு மிச்சம் பழத்தினோடே
நீக்கிய மாதளம்பழமும் கூவளைதான்
நிசம் பருத்தி கொன்றைச் சாராம் அணி
பாக்கியமென்ற பசுவின் பாலும் ஊற்றி
பரிவான தகரையின் சாறும் சேரே.

சாகமென்ன நீர்முள்ளி விராலிச் சாராம் 204
சரியான செங்கிளநீர் பொன்முசுட்டை
ஆகமென்ன மேனிநல் தகரைதரா
அடவான உளிஞை தாமரை கொளுஞ்சி
பாகமென்ன கருணை வகைச்சார் நாழி
பத்திரமாய் முன் மருந்தோடு ஒன்று சேர்த்து
வேகமென்ன மருந்தெல்லாம் ரசித்துக் கொண்டு
வேப்பெண்ணைய் நறுநெய் எள்ளின் எண்ணை.

இதமாக தேங்காய்நெய் வகைக்கு நாழி 205
மெல்லநீ ஐந்துவகை ஒன்றாய்ச் சேர்த்து

விதமாக ரகித்துப் பின் அடுப்பிலேற்றி
உள்ளபடி பாதிவற்றிச் சுண்டக்காய்ந்தால்
பதமாக உறைக்கிறேன் கடைமருந்து
பாங்குட்னே ஏற்றமுடன் உற்றுக் கேளே
விதமாக திரிகடுகு ஜாதிமூன்று
விதமான திரிபலையும் உலுவாக் கொட்டம் 206

கொட்டமுடன் நாகணமும் கொத்தமல்லி
கொடிதான கச்சோலம் சீரகம்ரெண்டும்
அட்டியில்லை வசுவாசி நாகப்பூவும்
ஆசாழி சிங்கி அதிமதுரம் மேலாம்
கெட்டியடா மாயக்காய் கிறாம்பு அதுவும்
கெட்டிடும் நீ அகிலப்பூ பச்சைப்பூரம்
திட்டமுடன் கஸ்தூரி சவ்வாதாகும்
திறமான குறோசாணி கரியபோளம். 207

போளமொடு பூவத்து செண்பகப்பூ
நலமான அரிசியென்ற சனிஞாயிறு
தாயகமாய் இருவேலி ஓமம் தேற்றான்
சரியான விளாலரிசி புனுகும்கூட்டி
நீயறிவாய் ரோசனையும் சித்தரத்தையும்
நினைவாக வன்மிளகு பேரரத்தையும்
வாயமுடன் இம்மருந்தைக் கழஞ்சி வீதம்
வாங்கிஇடித்துத் தூளாக இட்டுக் காய்ச்சே. 208

காய்ச்சிடுநீ மெழுகுபதம் உடனே நீயும்
காய்த்தெடுத்து வடித்துநீ வைத்துக்கொண்டு
கூச்சலுடன் வதைகாயம் கொண்ட பேர்க்கு
கொடுத்து விடு ஐந்துநாள் பத்து நேரம்
ஆச்சரியமாய்த் தீரும் தொண்ணூற்றாரும்
அடர்ந்ததொரு பதினெட்டும் அடர்காயம் போம்
நீச்சுநிலை அற்ற வழி கடத்து பொங்க
நின்றாலே பிராணகலை மீண்டும் சேரும். 209

மீண்டும் கபம் சேருமடா கபத்தில் வேர்வை
மீளாத உடல் உயிரோடு ஒன்று சேரும்
நீண்டுநிலை தளர்ந்து உயிர்ஆறும் பொங்கி
நெருக்கமுற்றுக் கொண்டாலும் தீரும்பாரு

தூண்டாத படுகாயம் மெய்யயர்ந்து
துயரம் உரக் கொண்டெழுந்த மயக்கம் தீரும்
தீண்டாத தலைதனிலே பனியால் நீர்தான்
ஏற்றுகபம் மீறித் தானே பொங்கியேதான். 210

பொங்கிநின்ற விஷநீரால் மேனி சோர்ந்து
போனதினால் மரணம்வந்து சூழாவண்ணம்
பாங்குடனே தைலமதை தவணை ஐந்து
படிப்படியாய்க் கொண்டிடவே சயமற்றோடும்
தாங்கிநின்ற உயிர்உடல் ஆயாசம் கொண்டு
தளர்ந்து நின்ற உடல்அதிலே மயக்கம் தீரும்
மங்காதபடி இதமாய்ச் செய்து கொண்டால்
வலி காயம் தீரும்டா அறிந்துபாரே. 211

அறிந்துபார் வாதஜன்னி தைலம் ஒன்று
அறைகிறேன் ஜன்னிகபம் காயந் தீரும்
சொரிந்துவார் நொச்சி இசங்கோடு ஆடாதோடை
செயல் ஆடுதீண்டாப்பாளை மேனியொடு
அறிந்துபார் முருங்கை தும்பை கருங்குறிஞ்சி
அழகான செந்நெருஞ்சி நிம்பம்பட்டை
அறிந்துபார் எருக்கிலையும் ஊமத்துமா
மறுவேலி பருத்தியுடன் பேய்க் கு டி. 212

கும்மட்டி வீழியுடன் மிளகுதாளி
குணமான தூதுவளை நெருஞ்சி கும்
இம்மட்டில் சாறுவகை நாழி சேர்த்து
இதைப் பாண்டத்தில் ஊற்றி முசிறுமு
அம்மட்டில் பூநாகம் குழியான் தெண்டில்
அரையாமல் முஞ்சுறு பாம்புக் கண்டம்
செம்மையுடன் இட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி
செயலாக பாதிமட்டாய் சுண்டக் காய்ச்சே. 213

சுண்டமட்டாய்க் காய்ந்த பின்பு சுருக்குத்தாக்கி
சொல்லுகிறேன் கடைமருந்து சுகமாய்க் கேளு
கொண்டிடும் திரிகடுகு நவச்சாரம்தான்
குணமான திருமுனிவர் காயம் உள்ளி
விண்டிடவே கருஞ்சீரகம் அபினும் கூடன்
விதமான பழுக்காயும் குக்கில் மேதை

பண்டான சித்தரத்தை ஆழியாவும்
பகர்சாந்து வசம்பு வலுவாய் மஞ்சள் மிளகு 214

மஞ்சளொடு சாதிலிங்கம் இவைகளெல்லாம்
வடிப்பாக இடித்துடனே தூளதாக்கி
அஞ்சாமல் நிம்பெண்ணை படிதான் ஒன்று
அதிலூற்றி நாலொன்றாய்ச் சுண்டக் காய்த்தால்
தஞ்சமுடன் கடைமருந்தும் இட்டுக் காய்ச்சு
தயவாக மணல்பருவம் அறிந்து வாங்கு
பஞ்சரித்து ஜன்னியது மூர்ச்சையாகி
பரந்தேறி வேர்வைகபம் மயக்கம் கொண்டால். 215

கண்டாலோ பொரிதலங்கள் பதிய உண்ணும்
கைகாலும் இடைகுறுக்கும் குளிர்ச்சை காணும்
சுண்டியது தீராவிட்டால் உள்ளே தாக்கு
சுகமான ஜன்னிகபம் வேர்வைகாயம்
கொண்டிருந்த முச்சுடரும் பொரிதளர்ச்சி
கொழுத்துடனே கலைமாறல் உடனே தீரும்
திண்டாகும் அறிவளர்ச்சை மயக்கம் மூர்ச்சை
தீருமென்ற முனிசொன்ன மொழிமாறாதே. 216

தோடை வேர் கிருதம்

மாறாத இருமல் ஐயம் தீரவேண்டி
வழுத்துகிறேன் தோடைவேர் கிருதமொன்று
வேறான தோடைவேர் சித்தாமுட்டி
வில்லைவேர் நறுநன்றிங் கிழங்கினோடு
சீராக வகைவகைக்குப் பலந்தான் பத்து
செப்புகிறேன் நல்சீரகம் கொம்பரக்கு
கூறாக வகை ஐந்து பலமாய்த் தூக்கி
குறுணிநீர் விட்டதனை எட்டொன்றாக்கே. 217

ஆக்கியபின் உளிஞ்ஞை குன்றி செந்தட்டி
அடங்காத பாதிரியும் பருத்தி சுண்டை
நோக்கியபின் சங்கு குமிழ் விடயத்தோடு
நுகராத் தூதுவளை கண்டங்கத்தரி
சீக்கிரமாய் இதுகளொட வேரும் பாரு
செங்கமல வளையம் பாராய் நல் முசுட்டைக் கொடி

நீக்கமில்லா வெள்ளருகும் மாலைதூங்கியொடு
நிறைசரியாய் அரைப்பலமாய் சதைத்து வாங்கே. 218

சதைத்திடுவாய் இறுகுறுணி ஜலத்தினூடே
தணலெரித்து எட்டொன்றாய் முன்நீரில் சேர்த்து
கருதிடவே எள்ளெண்ண ஆமணக்கெண்ணை
காறாவின் நெய் படிஒன்று வகைக்குச் சேரு
வகுத்திடுவாய் மேல்மருந்து கோழியொன்று
வரித்தவளை அதுமூன்று அணில்தான் மூன்று
குறித்த கரும்பூனைஒன்று எலிதான் மூன்று
குறையாமல் இடித்துஇதனை எண்ணை தன்னில். 219

இயம்புவேன் கடைமருந்து இன்னம் கேளு
மண்ணமுறு மாஞ்சி கொட்டம் மதுரம் சிங்கி
தியம்புவேன் வால்மிளகு திரிசாதி கண்டிலெண்ணெய்
திண்ணமுடன் குங்குமப்பூ மாயக்காய் ஏலம்
இயம்புவேன் திரிகடுகு கச்சோலம் பெரும்
சீரகம்தான் எண்ணமுறும் மரமஞ்சள்
தியம்புவேன் திப்பிலி மூலம் இருவேலி
திடமான குறோசாணி கசகசாவே. 220

கசகசா தற்கோலம் அரிசிஆறும்
கனமான திப்பிலியும் நாங்கணம்தான்
நிசமான தாளிச பத்திரி நாகப்பூ
நிச்சயமாய் சந்தம் வகைக்கிரு கழஞ்சி
விசயாகப் பொடித்ததனை எண்ணெய் தள்ளி
விதவியே கிண்டிநன்றாய் அனலைமூட்டி
வசமாக மெழுகுபதம் தாக்கும் போது
வடிகலசந் தன்னிலிட மருந்து கேளே. 221

கேளப்பா கோரோசனை கஸ்தூரி மீரை
கொடியாகக் கால்கழஞ்சி இட்டுவாங்கி
ஆளப்பாஆனை முகர்க்கு பூசைசெய்து
அருந்திடுவாய கழஞ்சி எண்ணை பத்துநாளும்
நாளப்பா இருபது பொழுதுண்ணும் போது
நாடி இடை கொண்டவற்மம் இருமல் மேகம்
மாளப்பா அண்ட சுரம் வரட்சை சோம்பல்
மாறாத எலும்புருக்கி உள்ளுருக்கி 222

உருகச்செய்யும் இளைப்பு ஈளை விசர்பு வாயு
ஓடுமடா கிரிச்சனங்கள் நீர்க்கடுப்பு
பொருக்கு மண்டைஇடி மயக்கம் கண்புகைச்சல்
போம் கைகால் நோக்காடு இருகிருமி மூலம்
பறக்குமடா கிறாணிமுதல் தேகம் பொன்னாம்
பலநோய் போம் தத்துவங்கள் நேரேநிற்கும்
அறையாமல் தீருமடா நோய்களெல்லாம்
ஆனந்தம் துலங்குமடா அதிகம் காணே. 223

ஏலாதித் துவாலை

காணவே ஏலாதித் துவாலையொன்று
பகருவேன் ஏலமுடன் ஜாதிக்காயும்
வேணுமே மாயக்காய் கோரோசனை
விதமான சந்தனமும் புனுகும் கூட்டு
தோணுமே குங்குமப்பூ வெள்ளிவித்து
குறையாமல் வகைக்கு ஒரு கழஞ்சிவிதம்
நாணாமல் பன்னீரால் அரைத்துக் கொண்டு
நற்கதலி எட்டு பூலாத்திப்பழம். 224

பாழானஇது வகைக்குக் கழஞ்சி ரெண்டு
பத்திரமாய்த் தூக்கி எடுத்து உறவுசெய்து
வழுவாமல் இரண்டு மொன்றாய் ரகித்துப்பின்பு
வார்த்துடனே அதன் அளவு எண்ணைசேரு
முழுதுமொன்றாய் ரகித்தபின்பு சொல்லக் கேளே
முக்கியமாய் நற்சீரகம் மதுரம் சிங்கி
நழுகாத நாகணமும் சிறுநாகப்பூ
நன்றான மாதுளையின் பழமுங் கூட்டே. 225

கூட்டிநீ கத்திரியொ[illegible] ,முதவள்ளி
குணமான தாமரையின் வளையம் சேரு
வாட்டமுள ஆம்பல் கொட்டிக் கிழங்கு நெய்தல்
வகுப்பான வகைவகைக்குக் கழஞ்சியாகும்
மாட்டியே இளநீர்தான் இருநாழிகைக்குள்
மகிமையாய் கஷாயமிட்டு எட்டொன்றாக்கி
தாட்டிகமாய் முன்மருந்தை அதில்ரகித்து
சரியாகப் பத்துநாள் துவாலை செய்யே. 226

பத்துநாள் கழிந்தபின்பு துவாலைமாற்றி
பத்திரமாய்த் தடவியதைத் தாக்கிப்பாரு
நித்திரைகளில்லாமல் கிரிவெப்பால்
நின்றதொரு உள்ளணலும் நரம்பு தெற்றும்
அஸ்திசுரம் வறட்சை அரோசிக மும்காந்தல்
அடவான நரம்பு வெட்டல் குன்னல் தீரும்
உற்றுநின்ற வாசியினால் காயத்தாலும்
உண்டாகும் வினைகளெல்லாம் நெகிழ்ந்துபோச்சே. 227

கஷாயம்

நிகழாதே கஷாயமொன்று சொல்லக்கேளே
நிலவாகை மலைதாங்கி அறுகுரெண்டு
துகழான வெட்டிவேர் ஆம்பல் மூலம்
சுடா கோடைச் சூடியுடன் ஆடாதோடை
வகையான நல்தகரை தீண்டா நாழி
நலமான திருப்பனுடன் செந்நெருஞ்சி
தயவான முன்னைவேர் இலந்தை வேரும்
தவசு என்ற முருங்கைவேர் பூலாவேரே. 228

பூலாவும் நீர்துள்ளி முள்ளிக் கீரை
பொன்முசுட்டைத் தண்டுடனே வெள்ளைக்குன்றி
மேலான ஆவாரைவேர் நத்தைச்சூரி
வெள்ளறுகு சித்தாமுட்டி வீழிவேராம்
பாழான மூங்கில் பழம்பாசி நன்று
பத்திரமாய் ஓரிதழ் தாமரையும் நெய்தல்
மேலான பேய்புடலாம் காக்கை நொச்சி
மல்லிகைவேர் குருந்த லெழுத்தாணி வேரே. 229

எழுத்தாணி உளிஞ்ஞை கொட்டம் கொம்பரக்கு
ஏலமொடு வசுவாசி அரத்தை சுக்கு
தழுதான பச்சை மிச்சம் அகிலுமாஞ்சி
தாரம் மல்லி திரிபலை மதுரம் தேக்கு
நழுக்கான நாகணமும் கிறாம்பூ சந்தம்
நற்சீரகம் கொத்தமல்லி சானிஞாயிறு
ஒழுக்கமுடன் வகைவகைக்கு கழஞ்சி மூன்று
உடன் சதைத்து மூன்றிலொரு பாகந்தன்னை 230

பாகமெல்லாம் பங்குவைத்து நாழிரெண்டு
    பரணிலிட்டு எட்டொன்றால் இறுத்து வாங்கி
ஆகமிதை இருவேளை மூன்று நாளும்
    ஆறுவிசைக் கொண்டிடவே அகலும் மேகம்
வேகமுள்ள நரம்பு வலி கொழுத்து விசை
    விசை நரம்பில் கொண்டிருந்த வறுமந்தீரம்
வாகுபெறும் குளிர்காய்ச்சல் வரட்சிக் குன்மம்
    வற்ம சயம் முழுவதும் போம் சூட்சம்பாரே. 231

காய ராசாதி எண்ணை

சூட்சுமமாய் பசுவின் நெய் சென்னைஎண்ணை
    சுருக்கான தேங்காய் எண்ணை நிம்பத்தெண்ணை
நிச்சயமாய் எள்ளெண்ணை ஐந்துக் கூட்டி
    இயலான மேல் மருந்து இயம்பக் கேளு
பச்சமுள்ள தொட்டாக்கால் வாடிச்சாறும்
    பாத மூடில்லாத்தாளி விறாலிச் சாறும்
அச்சமில்லா தூதுவளை வேலிப்பருத்திச் சாறும்
    அடவாக வகைவகைக்குப் படிகாலாமே. 232

ஆமேகேள் அக்கிறா சிங்கி சீரம்
    அதிமதுரம் கொம்பரக்கு அரத்தை சுக்கு
தாமே கேள் திரிசாதி திப்பிலி கொட்டம்
    நலமான அரிசிஆறும் கழஞ்சி ஒவ்வொன்றும்
தாமேகேள் முன்சாறும் எண்ணையோடு
    தயவாகப் பொடிதூவி அடுப்பில் ஏற்றி
போமேகேள் கூவளத்தின் பழத்தின் சாறும்
    புகழாகத் தான்சேர்த்துப் புகட்டிக் காய்ச்சே. 233

காய்ச்சியே மணல்பருவம் ஆகும்போது
    கருத்துடனே வடிகலசந் தன்னில் கேளு
ஏய்ச்சியே வெண்குந்திரிகம் பொடித்து இட்டு
    இறக்கி வடிகரண்டி இடைஉள்ளே தாக்கு
தாக்கப்போம் சயம் ஈடுஇருமல் கக்கல்
    பொல்லாத இளைப்புஈளை கொழுத்துக் குத்தும்
வீக்கம்போம் விரைவாதம் வலிநரம்புத் தெற்றல்கபம்
    விளம்பக்கேள் காயராசாதி எண்ணை தேற்றே. 234

குக்குடத் தைலம்

விளம்புகிறேன் குக்குடத்தின் தைலம் ஒன்று
வேகமாய்ச் சர்வவற்ம மாட்டிற்கெல்லாம்
தளம்பெறவே கருங்கோழி கொண்டு வந்து
தலைகுடல்கால் முடிதள்ளி எண்நாழிநிரில்
நலம்பெற இடித்திட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி
நன்றாக இறுத்துஅதன்மேல் கஷாயம் கேளு.
அளுந்தாமல் நாயுருவி உளிஞ்சை வில்லை
யாமிசங்கு தொட்டி வகைக்குபலம் பத்தாமே. 235

ஆமேகேள் முக்குறுணி இளநீர் வெள்ளம்
அனலெரித்து எட்டொன்றாய் இறுத்துவாங்கி
தாமே கேள் கஷாயம் ரெண்டும் மூன்றாய்ச் சேர்த்து
தக்ககடை மருந்ததனைச் சாற்றக் கேளே
நாமே கேள் அதிலிடையம் திரிபாதியும்
நற்சீரகம் அக்கிறவும் திப்பிலி கிறம்பும்
ஓமே கேல் அரிசி ஆறும் மதுரம் அரத்தை
உறுவாயும் கொம்பரக்கு களஞ்சி கூட்டே.. 236

காலை துயிலெழுதல் காணாமலே புணர்தல்
மாலைக் குளித்து மனை புகுதல் - சாலவே
உற்றாரோடுண்ணல் உறவாடல் கற்றாயோ
இவ்வைந்தும் காக்கை குணம்.

கூட்டுநீ ஆவின்நெய் படிதானொன்று
குணமான நல்லெண்ணை அரைதானப்பா
பூட்டுநீ ஆமணக்கெண்ணை கால்தான்
புகழாக முன்சாறும் எண்ணை சேர்த்து
ஆட்டுநீ கற்கவகை அதிலேதூவி
அடுப்பேற்றி அனலுற்று மெழுகதானால்
காட்டுநீ வடித்து மணல் கறண்டிவீதம்
நலமான பிணியாளுக்கு உள்ளே பாய்ச்சே. 237

பாச்சப்பா மூன்றுநாள் ஆறுவேளை
பாலகனே முருங்கைஇலை சோறுமப்பா
ஆச்சப்பா பத்தியமே குறித்துக் காத்தால்
போகுகின்ற பிணியதனை இயம்பக்கேளு
மூச்சுவிடக் கூடாத கொளுத்துக் கக்கல்
குறைகேடாய் வந்தசயம் இருமல்விக்கல்
போச்சுதடா பழையசுடு இழுப்புஇருமல்
பொன்போலாம் தேகமெல்லாம் தங்கம் மனே. 238

நாசித்தூள்

செம்மையுள்ள நாசித்தூள் ஒன்று சொல்வேன்
செயலான திரிகடுகு தூரிசு ஓமம்
நன்மைஎன்ற கடல்பழமும் தலைப்புண்ணாக்கும்
நவச்சாரம் வகைசமனாய்த் தூள்பண்ணியே
தின்மையின்றி செவிநாசி ஊதினாக்கால்
தீருமடா மயக்கமொடு அலகுப்பூட்டல்
உண்மையிது சன்னிவிஷம் பேயுந் தீரும். 239

கொள்ளாதே நசியமொன்று சொல்லக்கேளு
குணமான தும்பையொடு துளசிசுக்கு
விள்ளாதே மலையாளி மண்ணில்வேந்தன்
விரைவான லவணமொடு மேனிச்சாறும்
தள்ளாதே இதுகளெல்லாம் பிழிந்துகொண்டு
தான்ஊற்று நாசிசெவி கண்ணில் தானும்
உள்ளான அலகுப்பூட்டல் மயக்கம்ஜன்னி
ஓடுமேடா உண்மையிது உறுதிபாரே. 240

பொட்டணம்

உறுதிஎன்ற சிநேக பொட்டணத்தைக் கேளு
ஓர் அரத்தைக் குதிரைப்பழம் கடல்மாஞ்சி
மறுக்குவாய் ஏலமொடு செண்பகப்பூ
மகிழம்பூ புன்னரிசி கிராம்புக் கொட்டம்
திரிகடுகு நாகணமும் அதிமதுரம்
நிறமான அகில்வசம்பு சீனம்பச்சை
நறுமலராம் குங்குமப்பூ உலுவாயுள்ளி
நற்கடுகு தகரை ஆழிவிரையுங் கூட்டே. 241

கூட்டியே இதுகளெல்லாம் தேசிச் சாற்றால்
குணமான அரைப்பற்றால் நிழலில் இட்டு
வாட்டியே காயகமது மிஞ்சியேறி
வலிவேர்வை ஜன்னிகபம் சீதமுற்றால்
பூட்டியே பொடியைநீ கியாழங்கூட்டி
முறிதலங்கள் உச்சிமுதல் பதியஒற்று
நீட்டியே நிம்பஎண்ணை தன்னில்ஒற்று
நின்றுவிடும் வேர்வைவலி திட்டந்தானே. 242

வெள்ளறுகு கிஷாயம்

திட்டமாய் வெள்ளறுகு கியாழம்கேளு
திறமான வெள்ளறுகு ஓரிலைத்திருப்பன்
நட்டமில்லா பருத்திவேரு ஆமணக்கு
நல்லல் புல்லாமணக்கு சொரியாணம்வேரு
சட்டமில்லை இசங்கு வெட்பூலாவேரும்
சங்குபுஷ்பம் தோடைசிறுவளுதலை வேர்
சிட்டமுள்ள நன்றிபழம் பாசியோடே
இதமான குருந்தொட்டி அருகன்வேரே. 24.

அறுகுடனே வெள்ளரியின் வித்துபூலா
அலர்சின்னி மூங்கில்வேர் துரவி சீந்தி
சிறுகீரை மலைதாங்கி பொன்னாவரை
சியலான சதாவேலி உளிஞ்ஞையாகும்
மறுபடிகேள் பேய்புடலாம் நத்தைச்சூரி
மானான குட்டி தக்காளியாகும்
ஒருவிதமாய் பாச்சொட்டி முசுமுசுக்கை
கேள்வெள்ளைக் குன்றி செம்பருத்திதானே. 244

செம்பருத்தி வேறுடனே பிச்சிப்பூவும்
சேர்ந்திரிய வலுவேர் மாதளங்காய்
அம்பரமாய் தாமரை வளையம் கூட்டி
ஆம்பல் நெய்தல் கொட்டிமூலம் அகத்திவேரும்
வேம்புகின்ற நாயுருவி கொளிஞ்சி வேரும்
விரிவான வல்லாரை அடபொதியன்
தேம்புடனே தென்னம்பூ முகுட்டைத்தண்டு
திறமான இத்திமலர் நீர்முள்ளியும். 245

நுள்ளியுடன் மதுக்காரை தோடைப்பூவும்
நூதன்மாய் நிலவாகை வேர்தன்னோடே
அள்ளிஎடு களஞ்சிரெண்டு அனலும்மூட்டி
அழகாக இறுகுறுணி நீரில்தாக்கு
கள்ளமற முன்னாழி யாக்கிக் கொண்டு
கலந்திடுநீ உடனதிலே ஆட்டின் பாலும்
துள்ளுகின்ற ஆவின்பால் இளநீர் மூன்றும்
துரிதமாய் வகைநாழி சேர்த்துக் காய்ச்சே. 246

காய்ச்சிடுநீ இரு நாழியாக்கிக் கொண்டு
கருத்தாக இறுத்ததிலே இன்னம் கேளு
நிச்சயமாயத் திரிகடுகு திரிசாதிதான்
கொம்பரக்கு கொள்ளைநிறக் கோரோசனை
ஆச்சரியம் கஸ்தூரி புனுகுசவ்வாது
அதுகளைநீ ஓர்களஞ்சாய் பன்னீர்விட்டு
மாச்சறலேநீ அரைத்து வைத்துக் கொண்டு
வகுப்பான கஷாயமதில் அரைஉழக்கே. 247

அரைஉழக்காய் பதினொறு நேரங்கொள்ளு
அரைத்துநீ பதினாறில் ஒன்றாய்க் கூட்டி

கரைத்துடனே இரண்டுமொன்றாய் ரகித்துக் கொண்டு
காணாமல் ஓடிவிடும் உள்ளின் வெக்கை
ஒருவிதமுந் தீராத அஸ்தி நோவு
உள்ளாடி கள்ளங் கொண்டிருந்த காயம்தீரும்
வரும்காய்வேறி மேகம் பித்தவறட்சை சயம்
கொளுத்திக் கனல் கூம்புக் கல்கொண்டே. 248

கொண்டாடும் பஞ்சவர்ணக் குகை வறண்டு
கொடுங்கனலாய்ச் சீமேகம் கொண்டிட்டாலும்
தீண்டாகிக் கபத்தில் நெஞ்சோ ஈளை
சேர்ந்திளகி அனுதினமும் சீர் கொண்டாலும்
பண்டான வெக்கையினால் வாசிமிஞ்சி
பரத்துடனே முத்தலங்கள் சூடுந்தானே
கண்டானே இந்தவித மருந்தை யெல்லாம்
கருத்துடனே செய்தாக்கால் நிதியுமாமே. 249

சூடான ரவிமிஞ்சி மதியில் மேவி
தொக்கி மதிசென்று மேல்வெதும்பித் தாவி
ஆடாத விசைகளையுந் தளரப்பண்ணி
அம்பலத்தை அறியாமல் அறிவகன்று
கூடாத வாக்குகளைப் பேசினாலும்
கொண்டிளகி வெக்கையது மிஞ்சினாலும்
பாடிவைத்தேன் இம்மருந்தைக் கொள்ளுவார்க்கு
பலனாகச் செய்யுமிது பரமன் ஆணை 250

முக்கூட்டு எண்ணை

பரமனின் ஆணை சொல்வேன் பகரக்கேளு
அயன் என்ற முக்கூட்டு எண்ணைகேளு
அரனாரும் உமையாளும் வனத்திலேகி
ஆனைமுகன் தன்னைப்போற்றல் வாருபோலும்
குருவான வாலைகண்டன் தலைவணங்கி
கூறுகிறேன் முக்கூட்டு எண்ணைகேளு
நரிஇலந்தைப் பத்தரிச் சுண்டைதப்பான
நறுநன்றி துளசிவேர் ஆடாதோடை. 251

தோடையுடனே இசங்குசங்கு வேலிசெந்தட்டி
தூய தாதுவளையுடன் அழகு அமுதவள்ளி

வாடிவேர் அறுகன்வேர் மேனிவேரும்
 வல்லாரை மதுக்காரை புல்லாமணக்கு
கூட்டிநின்ற வெண்குன்றி சித்தாமுட்டி
 குறுந்தொட்டி எழுத்தாணி வெப்பூலாவும்
நாடுகின்ற நல்தகரை பொன்முசுட்டை
 நற்துளசி வேர்சித்ர மூலிவேரே. 252

வேரான கொடுப்பைவேர் கண்டங்கத்தரி
 வெள்ளறுகு கடலாடி வேறும்ஃ்ஆகும்
கூறான அத்திப் பொன்னாவரை வேர்
 குணமான தக்காளி பொன்நெருஞ்சி
பாரான ஆனையறுகு அதனின் வேரும்
 பகர்பருத்தி அத்திப்பழம் பாசிவேரும்
வேரான தாமரையின் வளையம் கொட்டி
 பெலமான ஓரிலையும் மூவிலையுமாகும். 253

ஆகுமே வகைவகைக்கு பலந்தானொன்று
 அப்பனே எடுத்துஒக்க ஒன்றாய்க் கூட்டி
வாகுபெற நறுக்கியதைச் சதைவு செய்து
 வகுப்பாக நால்குறுணி இளநீர் தாக்கி
பாகமுடன் ஐநாழி ஆக்கிக் கொண்டு
 பகருவேன் ஆட்டின்பால் ஆவின்பாலும்
சுகமுள்ள பருத்திப்பால் தேங்காய்ப் பாலும்
 சுகமான கொடுப்பைச் சார் கொல்லைச் சாறே. 254

சாறுடனே இவைகளெல்லாம் வகைக்கு நாழி
 சரியாகக் கஷாயமதில் உறவு செய்து
ஏறுடனே கோழியொன்று இடித்துச் சேரு
 வகுப்பாக ரண்டம் நறு நெய்சேரு
ஊறுகின்ற எள்எண்ணை இரண்டும் ஒப்பாம்
 உடன் மூன்றும் முன்னாழி யாகச்சேரு
கூறுகின்ற பாதிவத்தி சுண்டக் காய்ந்தால்
 சுகமான சுக்குடனே திப்பிலிதானே. 255

திப்பிலியும் நாகணமும் கரியபோளம்
 மூலம் கொம்பரக்குத் தேக்கு பற்படாகம்
இப்புவியில் அரத்தை தாணி மாயக்காயும்
 இயல்பான நற்சீரகம் கொட்டம் ஏலம்

தப்பில்லா தற்கோலம் தாளிசையும் கிறாம்பு
    பத்திரிதான் மதுரம் கசகசாகுங்குமப்பூ
அற்பமென நினையாதே சிறுநாகப்பூ
    அன்பான திரிபலை கச்சோலமே. 256

கச்சோலம் புனுகு கோரோஜனை மேதை
    கண்டி லெண்ணை முந்திரிப்பழம் கஸ்தூரி
அச்சமற இதுகளைநீ வகைக்கு ரெண்டு
    அரிகழஞ்சி வீதம் இடித்தரித்துக் கொண்டு
கொச்சம் போல் தூவி அனலெரித்து வாங்கி
    கூறுவாய் மெழுகுபதம் தன்னாய் காச்சி
பச்சமுடன் இருவேளை பத்து நாளில்
    பண்பாகக் கொடுத்துவிடு பயமொன்றில்லை. 257

இல்லையென்ற தாதுநிலை கெட்டபேர்க்கும்
    இணங்கி நின்ற மேகமது கொண்டபேர்க்கும்
வல்லபமாய் படுகாயம் கொண்ட பேர்க்கும்
    வற்மத்தால் இருமல் கபம் ஆனபேர்க்கும்
பொல்லாத மயக்கம் வந்து சூழ்ந்த பேர்க்கும்
    பொறி தளர்ந்து வேகமற்ற புதல்வருக்கும்
கொல்லாமல் கொல்லுகின்ற அஸ்தி சூட்டில்
    கூத்தவனாம் படுகாலம் கொண்ட பேர்க்கும். 258

படுகாலம் கொண்டடங்கல் எல்லாம் பார்த்து
    பரிதவித்து மயக்கமுற்ற பலபேர்க்கும்
நடுவான பஞ்சவர்ண குகையிலீடு
    நாவறட்சி நரம்புவலி கொண்ட பேர்க்கும்
தடியடிகல் பட்டுடனே மயக்கமுற்ற
    சகலருக்கும் இந்த எண்ணை பிரயோகித்தால்
அடிமிசகிப் போகாமல் குற்றம் தீரும்
    அயன் முக்கூட்டெண்ணை நீ அறிந்துபாரே. 259

குக்குட கியாழம்

கூர்ந்துபார் குக்குடத்தின் கியாழம் ஒன்று
    குறிப்பாய்க் கேள் வெள்குன்றி வில்லைவேரும்
சேர்ந்துபார் சிற்றாமுட்டி தமிளாமை வேர்
    திறமான கருஞ்சூரைடை அறுகன் வேறும்

கூர்ந்துபார் நிசமான சிறுபீளையும்
கூசாமல் சீந்திலுட தண்டும் சேர்த்து
சேர்ந்துபார் செந்தட்டி தோடைவேரும்
சுகமான மாதுளைதான் ஐந்தே ஆகும். 260

ஐந்தாளுவளர்குண்டை தாராவேரும்
ஆனாலும் தூதுவளை தக்காளி வேரும்
துஞ்சாத நெய்வள்ளி நறுநன்றி வேர்
தோல் உளிஞ்சை தரமுள்ள தாளிவேரும்
தஞ்சமுள்ளக் கரும்பு சதாவேலி வேரும்
தானான விஷ்ணு கிரந்தியொடு
வஞ்சமில்லா வகை வகைக்குப் பலமொன்றாக
வாங்கியே சதைத்து நீ வைத்துக் கொள்ளே. 261

கொள்ளவே அரிசிவகை ஆறுமாகும்
குணமான அமுக்கூரம் சீரகம்தான்
விள்ளவே கொம்பு திப்பிலி மூலம்
விதமேல் சித்தரத்தை சிறியதேக்கு
தள்ளவே திரிபலையோடு ஈருள்ளி
தாளிசமும் தக்கோலம் சிறுநாகப்பூ
மெல்லவே கச்சோலம் ஜாதிமூன்று
மேவிளடு கற்கடகசிங்கி தானே. 262

தானான லவங்கம் அயமோதகந்தான்
தவறாமல் சந்தம்ரெண்டு ராமிச்சம்வேரோடு
தேனான சடாமாஞ்சியது அமுக்கிறா
திறமான வால்மிளகு மகிழம்பூவும்
வானான திரிகடுகு வகை வகைக்கு
வாங்குவாயே கழஞ்சி இரண்டு வரிசையாக
தானாகச் சிதைத்து முன்மருந்து மொன்றாய்க்
கணக்காக முக்குறுணிப் புனலில் தாக்கே. 263

தாக்கவே குக்குடம்தான் ஒன்று வாங்கி
தவறாமல் குடல் முடிகள் களைந்துவிட்டு
ஆங்கியே கஷாயமதில் நொறுக்கிப் போட்டு
அனல் எரித்து வற்றியது எட்டொன்றானால்
நீக்கியே கஷாயமதில் உழக்கிறுத்து
நினைவாகச் சீனிமேல் பொடியுமிட்டு

போக்கியே ஆறுநாள் குடிக்கும் போது
புதுமையாக நோய்தீரும் புகழக் கேளே. 264

கேளப்பா சுமை வறட்சை கூம்புனக்கல்
கெடியான சயம் காசம் கொளுத்து தீரும்
நாளப்பா கல்லெறியின் உள்காயம் மாறும்
நலமான சயரோகம் எட்டும் தீரும்
பாழப்பா மேகமொடு பித்த வாய்வு
சளிகபமும் அஸ்திசுரம் பறந்து ஓடும்
சூளப்பா வற்மம் நூற்றி எட்டுந் தீரும்
சுகமாகும் என்று முன்னோர் சொன்னநூலே. 265

கஷாயம்

நூலான சயம் வறட்சை வற்மம் தீர
நுணுக்கமாய் கசாயம் ஒன்று சொல்லக்கேளு
பாழான முத்தங்காய் சித்தாமுட்டி
பண்பான பொடுதலையும் வில்லை வேரும்
காலான கொடுப்பையொடு உளிஞ்சை வேரும்
கறுத்த சுண்டை வேறுடனே நிம்பன்பட்டை
மேலான செந்தட்டி அறுகன் வேறும்
குட்டிதக்காளியுடன் பனம் புல்தானே. 266

தானான வேலியென்ற பருத்தி வேரும்
தாராவேர் நறுநன்றி அமுதவள்ளி
ஊனான வல்லாரை வெள்ளைக் குன்றி
ஓரிலையும் விஷ்ணுவின் கிரந்தியோடு
தேனான வகைவகைக்கு கழஞ்சி பத்து
திறமாக நிறுத்தெடுத்து செப்பக்கேளு
கோனான ஜாதிக்காய் கிறாம்புபத்திரி
குரோசானி சுக்கு அரத்தை ஓமமாமே. 267

ஆமேகேள் தாளிசை கொம்பரக்கு கொட்டம்
அமுக்கூரம் முந்திரிக்கை நற்சீரகம்
வாமேகேள் அக்கிறா அரிசி ஆறும்
வகைவகைக்கு முக்கழஞ்சாய் வாங்கிக்கொண்டு
நாமேகேள் மருந்தை எல்லாம் சதைத்து ஒன்றாய்
நாயகமே பங்கு வைத்து ஆறில் ஒன்றை

போமேகேள் இடங்களில் இளநீரில் போட்டு
புகழாக இட்டுடனே அனலை மூட்டே. 268

மூட்டியே எட்டொன்றாய் காய்த்து வற்றி
முகந்திறுத்து பசுவின் நெய் மேலேவிட்டு
ஊட்டிநீ இருவேளை அந்தி சந்தி
உறுதியாய் கோரோசனையும் உ.ரைக்க நன்றாம்
நாட்டமுடன் நாலுநாள் பன்னிரண்டு நேரம்
நலமாகப் பத்தியத்தை நாடிப் பார்த்தால்
கோட்டிமுதல் தண்டிடிகள் கொண்டவற்மம்
குவளைசயம் ஓடுமடா திண்ணம்தானே. 269

திண்ணமுடன் காரீரல் வெள்ளீரல்
தீராத கூம்புவற்மம் சயவற்மம் போம்
எண்ணமுடன் இளைப்பு இருமல் ஈளை கோளை
எய்ப்பிளைப்பு அஸ்திகரம் இருமல்காயம்
வண்ணமுடன் உள்கொழுத்து வலிகபம்போம்
வாய்வு கபம் நெஞ்சடைப்பு எரியும் தீரும்
கண்மணியே நரம்பு தெற்றல் உழுக்குந் தீரும்
கைகண்டது இந்தமுறை தேகம் பொன்னே. 270

தெற்றிப்பூ கஷாயம்

பொல்லாத சயவற்மம் வறட்சை தீர
சொல்லுகிறேன் தெற்றிப்பூ கஷாயம் கேளு
நல்லதொரு தெற்றிமலர் படிமூன்றப்பா
நவலுகிறேன் பிச்சிப்பூ படிமூன்றப்பா
வல்லதொரு வேணுநன்றி இம்மூன்றுடன்
வல்லாரையொன்று .வில்லையொன்று இசங்கு ஒன்று
மல்லியொன்று நினைவாக திரிசாதி கொம்பரக்கு
மதுரம் திப்பிலி சுக்கு சீரகம் வால்மிளகுமாமே. 271

ஆமேதான் வெண்தூபம் அரிசி ஆறும்
அக்கிறா கற்கடக சிங்கி இன்பஏலம்
போமேதான் வகைவகைக்கு கழஞ்சி மூன்று
புகழாகச் சதைத்து இரு குறுணிநீரில்
காமேதான் அனலிலிட்டு எட்டொன்றாக
காலிருந்து மீரைமேல் பொடியுமிட்டு

ஓமேதான் கோழிரெத்தம் தானும் ஊற்றி
உள்ளுக்கு கோரோஜனை தானுமிட்டே. 272

இட்டுநீ கொடுத்திடவே சயம் வறட்சை
ஏகுமடா இளைப்பீளை இருமல் கக்கல்
விட்டுவிடும் உள்கொழுந்து மேகவெட்டை
வீறான உள்வர்மம் ஆறுந் தீரும்
நிட்டைஎன்ற அஸ்திவெக்கை நயனச்சூடு
நீங்கும் அஸ்திசுரம் தாது பெலமுண்டாகும்
ஒட்டாது தெற்றிமலர் கஷாயத்தாலே
உண்மையிது முனிஉரைத்தார் உலகில்தானே. 273

திருமேனி எண்ணை

தாமென்ற திருமேனி எண்ணைகேளு
தரணியுள்ள மானிடர்க்கு வற்மந்தீர
நாமென்ற மேனிச்சார் தைவேளைச் சார்
நாயுருவி திமிளாமை கையாஞ் சாறு
போமென்ற சம்பா வெற்றிலையின சாறு
புகழாக மொசுமொசுக்கை றாமிச்சைசார்
ஆமென்ற குறுந்தொட்டி பழத்தின் சாறும்
அப்பனே வகை ஒன்றுக்கு உழக்கதாமே. 274

ஆகுமே பாண்டமதிலரித்து விட்டு
அழகான காஞ்சிரா வேரும் கெருடன்வேரும்
வேருமே நறுநன்றிக் கிழங்கினோடே
வெட்டிவகை வகைக்கு பலமொன்று விபரமாக
பாகமாய்ச் சாறதனில் அரைத்துப் போட்டு
பத்திரியும் சாதிக்காய் கரிய சீரகம்
போகவே கார்கோலம் துருசுதுத்தம்
பொருந்தும் நல்சீரகமும் தேவதாரம். 275

தாரமொடு கொட்டம் றாமிச்சம் சந்தம்
தனி மீரை மேதை கஸ்தூரியாகும்
வாரமுடன் கோரோசனை வெண்பிசின் அபினும்
கீரி சாத்து அக்கிறா சித்தரத்தை மதுரம் ஏலம்
காரமுடன் ஓர்கழஞ்சி இடித்தரைத்து
கருத்த நல்லெண்ணை படி ஐந்துவிட்டு

தீரமுடன் பாண்டமதில் எல்லாம் ஒன்றாய்
தீ எரித்து மெழுகுபதம் வடித்து வையே. 276

வையேநீ தைலமதை சரீரந் தன்னில்
வளர்பாத மட்டுந் தேய்த்து நன்றாய்
செய்யேநீ ஜாமமது மூன்று சென்றால்
செயலான வெந்நீரில் முழுகும் போது
பையவே மண்டையிடி மண்டைக்குத்து
பறக்குமடா நரம்புபிடி திமிருமாறும்
உய்யவே அலவாடி ஜன்னி வற்மம்
ஒரு காலும் மாறாத மண்டைக் குத்தே. 277

குத்துடனே ஆயாசம் மயக்கம் விக்கல்
கூறுகெட்டு ஓடுமடா கிறக்கந்தானும்
சக்தியுடன் உச்சிவலி மூலச்சூடு
சரம்பிலக்கும் நரம்புபிடி கொழுத்து தீரும்
வித்தான உள் கொழுத்து மண்டைச் சூலை
விரண்டோடும் வாதசுரம் முதலாய்த் தீரும்
சித்தான காயம்முதல் வற்மம் தீரும்
திருமேனி எண்ணையிது தரணியோர்க்கே. 278

தன்வந்திரி எண்ணை

தாரணியில் மனுவோர்கள் ரோகம் தீர
தன்வந்திரி எண்ணையொன்று சாற்றக் கேளு
சீரணியும் வேம்புபுங்கு முருங்கை தென்னை
சிறந்த மாவிலங்கு அழிஞ்சி செங்கத்தாரி
வாரணியும் தாணி கொன்றை அரசுஅத்தி
வளமான இவைகளுடைய பட்டையாகும்
பாரினிலே யாழியும் வெள்ளை நொச்சி சித்திரமூலம்
இருவாத மடக்கி ஆம்பல் அவுரி வேரே. 279

வேறோடே எழுத்தாணி ஆமணக்கின் வேரும்
வேங்கையுடன் காதலீபலம் மும்மூன்றாகும்
வாறடா தூணிஜெலம் எட்டொன்றாக்கி
வற்றவைத்து அதன்மேல் சார் கூறக்கேளே
கூறடா கைதோணி குப்பைமேனி
நிகர் வாதமடக்கி சங்கு குப்பி நொச்சி

ஆறடா ஆமணக்கு முத்துத் தோடை
அடர் நாறன் எருக்கிலை வெள்ளறுகு தாளி 280

பொடுதலை பிரமி இரண்டு வகையொன்றுக்கு
பொருமையாய் சாற்எடு வெவ்வேறாய் அளந்து
அடுகவே ஆமணக் கெண்ணை எள்ளும் சென்னை
அழகான வேப்பெண்ணை ஆவின்நெய்யும்
இருகவே வகையொன்று படி நாழிவீதம் வாங்கி
நலமான கற்கவகை நவிலக் கேளு
தருமனா தாளிவிளாம் மல்லி திரிகடுகு பச்சை
சந்தனம் இரண்டரத்தை சிறு தேக்குந்தானே 281

தானான தாரம் வெந்தயமோடு ஏலம்
தனி வேப்பூலா தாளி கொட்டம் வங்கம்
ஆனாலே தற்கோலம் சிறுநாகப்பூ
அரத்தை திப்பிலியுடனே அடுத்த திப்பிலி
மானே கேள் சனிஞாயிற் மூன்று ஜாதி
மாஞ்சி கொப்பை செவ்வள்ளி ஓமம் சூரம்
கோனான வாலுளுவை கஸ்தூரி மஞ்சள்
கொட்டம் குலிவிந்தம் குரோசானியாமே. 282

ஆமப்பா செவியமுடன் கார்சீர் கோழி
அழகு நறுநன்றி பொன் மெழுகு சோலம்
போமப்பா பெருஞ்சீரகம் சிவதை வேலி
பூநாகம் ராமிச்சம் சாஸ்திர பேதி
நாமப்பா குக்கில் நறுக்கு மூலம்
நவிலரக்கு மீரை செங்கிளநீர் மூலம்
தாமப்பா ஓன்னேகால் கழஞ்சி வீதம்
தவறாமல் வாங்கிஇடித்து அரைத்துக் கொள்ளே. 283

கொள்ளுமுன் சொன்ன எண்ணை சாறோடுஎல்லாம்
குணமாக உருளிதன்னில் அடுப்பிலேற்றி
விள்ளுநீ அனல் மூட்டி வற்றக் காய்த்து
வேறாகக் கல்பதம் வருதல் கண்டு
வள்ளுநீ கோரோஜனை நீளத்திரத்திலிட்டு
வடித்து வைத்து சனிபுதனில் மெழுகு உட்கொள்
அள்ளிநீ மெழுக வெந்நீர் வற்மம் எல்லாம்
அருஞ்சுரமும் புறவீச்சும் வலியும் போமே. 284

போகுமே உஷ்ணத்தால் வந்த மேகம்
பொல்லாத இளைப்பிருமல் மந்தாரகாசம்
சாகுமே கர்னீகவாய்வு கபால வாய்வு
எப்பிளைப்பு பித்தசயம் ரோகம் போகும்
ஆகுமே மெய்நோவு நடுநடுக்கம்
அனலெரிவு கைகால்கள் கண்ணு காந்தல்
வாகுமே புறமேகம் சொரி கரப்பான்
வண்டுகடி சில்விஷமும் மாறுந்தானே.

தானான அறையாப்பு லிங்கப் புற்று
தனிப்பவுளைதிரம் மூலமுளை கண்டம...
ஊனான குறைநோவு குட்டம் ஊரல்
யோனிப்புண் சூலை பிளவை வீக்கம்
பானான கரப்பானொடு கிரந்திவெப்பு
பல்லரணை பல்லோசி பக்கசூலை
வேறான கண்டத்தில் பொறியல் வெட்டை
வெளுப்பு தடிப்பு சொரிகள் போம் கண்டாமே. 286

கண்டாயே கறண்டி எடை உள்ளேகொள்ளு
கனத்த பக்கவாதம் மேகவாதந் தீரும்
விண்டாமோ நடுக்குவாதம் குடல் வீக்கம் போம்
விசைநரம்பில் பட்டுவந்த முடக்கந் தீரும்
மண்டலம் மூன்றதனில் வந்த மயக்கம் தீரும்
மறையோர்கள் முறைப்படியே செய்த பேர்க்கு
பண்டான வற்மவகை சயகாசங்கள்
பறக்கும் இந்த எண்ணை முறை பாடும்வாறே. 287

மாறாடி நெய்

வாறான மாறாடி நெய்யைச் சொல்வேன்
வாழுமந்த காள்கத்தின் பூனை ஒன்றின்
கூறான தலைகுடல்கால் தொலியும் தள்ளி
கொத்தியதை முக்குறுணி புனலில் இட்டு
மாறாமல் எட்டொன்றாய் வற்றக் காய்த்து
மைந்தனே இறுத்தபின் சொல்லக்கேளு
தாறாவும் தோடை கொற்றான் தானும்
தனியமிர்து நாயுருலி வில்லைவேரே. 288

வில்லையொடு செஞ்சட்டி செங்கு நெற்றி
வெண்குன்றி சதாவேலி பருத்தி வேரும்
இல்லைஎன்ற குறுந்தட்டி கொடுப்பை விராலி
இதமான பொடுதலை வல்லாரையோடு
தொல்லைஎன்று எண்ணாதே பலம்பத்து
துரிதமாய்க் கொண்டுவந்து சதைத்து வாங்கி
இல்லையே இரு குறுலை நீரிலிட்டு
தீளித்து எட்டொன்றாய் எரித்து வாங்கே. 289

வாங்கியே முன்கஷாயத்தோடே சேர்த்து
வரிசையுள்ள கடைமருந்து வழுத்தக்கேளு
தேங்கியே திரிகடுகு திரிபலைதான்
திரிஜாதி வால்மிளகு அரத்தைத் தேக்கு
ஏங்கியே அதிமதுரம் மாயக்காயும்
இருசீரகம் கொம்பரக்கு ஏலம் சந்தம்
ஆங்கியே திற்பிலிமூலம் சோலம் கோலம்
அரிசிவகை ஆறுடனே அக்கிறாவே. 290

அக்கிரா கற்கடக சிங்கிநாகம்
அகில்பச்சை சடாமாஞ்சில் கசகசாவும்
மிக்கறா செண்பகப்பூ வங்கப்பத்திரி
மேவரிய தாளிசமும் தேவதாரம்
தக்கதாம் வெண்துாபம் கண்டிவெண்ணெய்
தயவான சதகுப்பை வகையொன்றுக்கு
ஒக்கவே ஓர்கழஞ்சாய் இடித்தரைத்து
உற்றதொரு கஷாயத்தின் எண்ணைய்கேளே. 291

கேளப்பா ஆவின்நெய் நாழியாகும்
கெடியான நல்லெண்ணை மூஉழக்காம்
ஆளப்பா நிம்பெண்ணை உரியுமாகும்
ஆமணக்கின் எண்ணை உரிதானப்பா
வாளப்பா நீரொட்டி தெங்கின் எண்ணை
வகைக்கு உழக்கு சென்னை எண்ணைய் தானம்
நாளப்பா முன்மருந்தோடு சேர்த்து
நலமான உருளிதன்னில் ஊற்றிக் காய்சே 292

காய்ச்சியே கல்பதம் ஆகும்போது
கலசமதில் கஸ்தூரி கோரோஜனை

வாச்சுதே மேதை மீரை வெண்காரம்தான்
சமனாய் இட்டு வடிகட்டி குப்பிக்குள்வை
ஆச்சுதே கரண்டியினை ஆறு நாளும்
அப்பனே நோய்தேகம் வயசு கண்டு
போச்சுதே சயங்கள் ஈடுஎல்லாம்
காயம் பொல்லாத குவளைவலி கபமிளைப்பே. 293

இளைப்போடு குத்திருமல் ரத்தவாடை
எப்பிளைப்பு தேளைஇடி கைகால் கடுப்பு
களைப்போடு குருக்குளைவு கொழுத்துக்குத்து
கண்ணெரிவு தலைசுற்று உச்சிக்குத்து
உளைப்போடு வாதபித்த சிலேற்பனத்தாலே
உண்டாகும் வற்மமொடு உள்ரோகம் போம்
தளைபோடும் தேகமெல்லாம் பொன்போலாகும்
தாதுபெல முண்டாலே தாரணியோர்க்கு. 294

வெள்ளாட்டு நெய்

தரணியோர்க்கு இன்னமொரு நெய்தான் கேளு
தானான வெள்ளாட்டின் குறுக்கெலும்பை
சரணமென்று எடுத்துவந்து கொத்தி நன்றாய்
சதைத்துடனே இளநீர் வெள்ளம் பதக்கிலிட்டு
நிர்ணயமாய் எட்டொன்றாய் இறுத்து வைத்து
கேளேநீ ஆவின் நெய் நாழியாகும்
அரமென்ற முத்தெண்ணெய் உரியுமாகும்
திறமான நல்லெண்ணை நாழி கேளே. 295

கேளப்பா திரிகடுகு நற்சீரகம்
கெருடபச்சை ரெண்டு திரிசாதி ஏலம்
நாளப்பா அதிமதுரம் கொட்டமிச்சம்
நல்ல வெண்தூபமொடு கொம்பரக்கு
தாளப்பா வால்மிளகு சிங்கி மூலம்
தளர் சோலம் கோலம் சிறுநாகப்பூ
ஆளப்பா செண்பகப்பூ முந்திரிக்கை
அக்கிறா அரிசிஆறும் களஞ்சிஒன்று வகைக்கே. 296

ஒன்றான குன்றிச்சார் தேசிச்சாறும்
ஓரிலைச்சார் தோடைச்சார் கொடுப்பைச்சாா

நன்றாக வகை வகைக்கு நாழியாகும்
நாயகமே கடைம்மருந்தை இடித்தரைத்து
நன்றாக அடுப்பேற்றி அனலை மூட்டி
ஐயனே கல்லுபதம் வடித்தெடுத்து
குன்றாமல் கரண்டிபிடை ஆறுநாளும்
கூட்டோடு வற்மமெல்லாம் குலைந்து போச்சே. 297

போச்சுதே அஸ்திசுரம் வறட்சை மேகம்
புணர்சூடு கூம்புணர்தல் வறட்சை வெட்டை
கோச்சுதே கொழுத்தி வலி சயயிருமல்
குவளை கக்கல் குறுக்குவலி பல்நோய்தீரும்
வாச்சுதே வற்ம வெள்ளாட்டின் எண்ணை
வைத்து அருந்துவோர்க்கு வயது நூறும்ஆகும்
ஆச்சுதே இந்த முறை அறியார்மூடன்
அறிந்தவனே வற்ம வைத்திய ஞானியாமே. 298

முருங்கை எண்ணை

நூறான சிறு உழக்கு சிறுபிடிகள்
சுலபமாய்த் தீரஒரு எண்ணை கேளு
கேரான முறுங்கையிலை கரியுப்பும் ஆகும்
முறையான சிவந்தகொடு வலியின் கிழங்கும்
சீரான சதைத்து நல்லெண்ணை தன்னிலிட்டு
தவறாமல் மணல்பருவம் தன்னில்காய்ச்சி
கூறான பிடிஉழக்கு தலமறிந்து தடவத் தீரும்
மறைதவறா தொவ்வொன்றும் செய்துபாரே. 299

செய்துபார் குருமுனிவர் சொன்ன வார்த்தை
ஜெகமதிலே ஒருபோதும் தப்பாதப்பா
எய்துபார் தப்பாமல் பாடிவைத்த இந்த
நிகண்டகராதி நித்தியு சத்தியம் நிறைந்த நூலே
கொய்துபார் கரைத்திதனை ஜெகமுள்ளோர்க்கு
கரைகாணா முறைகளையும் சொல்லிவைத்தேன்
மொய்த்துபார் வர்ம வைத்தியம் செய்யும் பாகம்
முன்னாகச் சொல்லி விட்டேன் முந்நூறும் முற்றே. 300

வற்ம கண்டி – 2

ஓம் நமச்சிவாய நம

காப்பான ஜெனனத்தில் மனுவோர்க்கெல்லாம்
கைகண்ட தலங்குறிகள் கருத்தாய்ச் சொல்வோம்
நாப்பான கஷாயமொடு கிறதம் என்னை
தயவான தடவுதட்டு அமர்த்தலோடு
காப்பான குணக்குறிகள் அகக்குறியும் புறக்குறியும்
கூர்மையாக ஆப்பான ஆணியைப்போல்
வாப்பாக அறைவேனே நீகேளப்பா
வகைஆயுள் சீர்பாதம் நெற்றிகாப்பே.

பாரப்பா கணபதியும் கந்தன் பாதம்
பரிவான சந்திரனை தலைமேல் கொண்டேன்
சீரப்பா சீர்பாதம் மறவாமல் தான்
வற்மகண்டி சிறப்புடனே அறுபதையும் குறுக்கிப்பாட
நேரப்பா இருதயமது கலங்காமல்தான்
நீங்காமலே இருந்து குடிகொண்டேதான்
சீர்பாதம் குருமுனிக்கும் புத்திசொன்ன
சிறந்த மயில் வாகனனே காப்புதானே. 2

நெற்றிநடு புருவத்திலிருந்து தானே
நேராக நெல்லிடைக்கும் தாழ்வதாக
உற்றதொரு திலர்தவற்மம் கொண்டால் கேளு
உண்மையிலே அடிகொண்ட ஆளுந்தானே
அற்றதலை அண்ணாந்து நிமிர்ந்திருக்கும்
அறிந்துபார் முற்றுமே நாழிகைதான்
உற்றதொரு மூன்றே முக்காலுக்குள்
உரைத்தெனன்று குருமுனி மொழிந்தார்தானே. 3

தானான நாழிகைதான் கழிக்கும் முன்னே
தயவுடனே இளக்குமுறை தன்னைக் கேளு
கானான சிரசில் ஓர் அடிஅடித்து
கண்டமுடன் தடவிக் கருணைகூர்ந்து
ஈனான நெஞ்சில் ஓர்அடி அடித்து
ஈசனை நினைத்து நீ செய்தாயானால்

ஊனான உண்டான வற்மம் தீர்ந்து
உடன் எழுந்திருக்கும் என்றுமுனி இயம்பினாரே. 4

செப்பினோம் இன்னமொரு செய்திகேளு
செயலான கடைக்கண்ணின் இறைக்குக் கீழே
நட்புடனே அதில்தானே நட்சத்திரகாலம்
நன்மையுடன் அடிபட்டால் குணத்தைக்கேளு
கப்புடனே கண்ணுரெண்டும் சிவந்து கொண்டு
கடிசீராய் நாசியில்நீர் ஒழுகும்பாரு
செப்பினார் நாழிகைதான் பதினெட்டுக்குள்
செயலாகப் பார்த்து நீ அறியவென்றே. 5

பாடியதோர் நாழிகைக்கு முன்னதாக
பண்பாக இளக்குமுறை பகரக் கேளு
நாடியே மறுபுறத்தில் கைவிரித்து
நன்றாகவே யடிக்க மாத்திரை கேளுகை
நாடியே ஓங்கி ஓர்சாண் அளவில்தானும்
அடித்திருத்தி எடுத்துக் கொண்டு கேளு
தேடியே சுக்கு வைத்துக் காதுரெண்டும்
திறமாக ஊத உயிர் திரும்பும்பாரே. 6

பாரப்பா சிறு காதில் தண்டில்தானும்
பண்பாக அறுகுபத்தி செவிக்குத்திக் காலம்
காரப்பா குத்திடிகள் அடிகள் கொண்டால்
கண்ணிரண்டும் தள்ளியே சோரைகாணும்
தீர்வப்பா இதற்கு நாழிகைதான் கேளு
திறமாக நாலைந்து மூன்றேயாகும்
ஏறப்பா மறுபுறத்தில் விரல் மடக்கி
ஏத்தியே குத்திநீ இளக்கிக் கொள்ளே. 7

கொல்லவே பிடரியின் குழியில்தானே
குணமாக முடிமுடிந்த தலத்திலப்பா
மெள்ளவே அதில்பிடரிக் காலமென்றே
விசையாக இடியடிகள் பட்டால்கேளு
விள்ளவே முகம்சீறி முகமுங்கோணும்
விசையான நாழிகைதான் பதினெட்டுக்குள்
துள்ளியே உச்சியிலோர் அடிஅடித்து
உதறியே விட்டுவிட உரைத்தார் தாமே. 8

உரைத்தபடி கழுத்தின்மேல் கீழ்நாடி தன்னில்
உத்தமனே அருகுபற்றி உறக்கக் காலம்
உரைத்திடுவோம் அதில்பட்டால் குணத்தைக் கேளு
வாய்பிளந்து நாக்குத்தள்ளி குறட்டையிட்டு
உறங்குமப்பா தனக்கடங்கா நாழிகைதான்
தப்பாது தொண்ணூறு கழிக்கும் முன்னே
உறைத்தேனே கைமுறையாய் சொல்லுகிறேன்
உண்மையாக நீஅறிந்து கண்டுபாரே. 9

கண்டுகொண்டு இளக்குதற்கு முறைமைக்கேளு
கைமடக்கிப் பிடரியிலே அடித்துக் கொண்டு
திண்டுமுண்டாய்ச் செய்யாதே அதற்குத்தானே
திறமான செய்முறைதான் சொல்லக்கேளு
விண்டுகொண்டு இருசாண் நீளத்தில்தானும்
இதமாகவே தடவி இளக்கிக் கொள்ள
உண்டுமடா இன்னுமொரு செய்தி கேளு
உச்சியிலோர் அடிஅடித்து உதறித்தூக்கே. 10

தூக்கிவிட்டு இன்னுமொரு அடவுகேளு
சுகமான காரை எலும்பு அறுகுபற்றி
தாக்கிடவே தாள்வேதி வளர்குழி என்றுபேரு
தயவாக இதில் திவளைக் காலமாகும்
நோக்குமே அதை இளக்கு முறையைக்கேளு
நுட்பமாய் உச்சியிலோர் அடியும்போடே
ஆக்கமுடன் முதுவரியில் புறங்கால் கொண்டு
அழகாகத் தட்டிவிடு சத்தியந்தானே. 11

சத்தியமாய் இன்னுமொரு அடவுகேளு
தயவான நெஞ்சில் கூம்பெலும்பில்தானே
நித்தியமாய் இருவிரலின் கீழேதானே
நேர்வர்மம் இதில் கொண்டால் குணத்தைகேளு
சத்தியமாய் உடல் குன்னும் உடல்வியர்க்கும்
வெகுவான வாயில்நீர் ஒழுக்கும் பாரு
பத்தியமாய் நாழிகைதான் பதினைந்திற்குள்
பழைமையுட னிருக்குமென்று பார்த்துசொல்லே 12

சொல்லவே இளக்குமுறை சொல்லக் கேளு
சுகமாக முதுவரியில் புறங்கால் கொண்டு

அல்லலுடன் ஒருதட்டு தட்டிக் கொண்டு
அப்பனே நெஞ்சில்ஓர் அடியும் போடே
வல்லபமாய் உச்சியிலோர் தட்டும்தட்டி
வாங்கியே உதறிவிட பிடிகள் போச்சே
நல்லபடி யாகவேதான் இதே இளக்கால்
நல்லநேர் வற்மத்தின் குணங்கள் போச்சே. 13

போச்சப்பா குறுக்கெலும்பின் நால்விரலின் கீழ்
புகழான அடப்பக்காலம் அதற்குப் பேராம்
ஆச்சப்பா அதில்வற்மம் கொண்டால் கேளு
அவனுடைய வாயில் பல் பூண்டுபோகும்
ஓச்சப்பா ஒருதலமே தான் துடிக்கும்
உரப்பாகக் கண்பொடு பொடுப்பாய் அடைக்கும் திறக்கும்
காச்சப்பா இதனுடைய குணத்தைக் கேளு
கனமான நாழிகைதான் கண்டு கொள்ளே. 14

கண்டு கொள்ள நாழிகை முப்பதுவேயாகும்
கருத்தாக அதற்குள்தான் இளகும் காலம்
உண்டுகொண்டு ஒருமுழத்தில் புறங்கால் கொண்டு
உத்தமனே மறுபுறத்தில் தட்டொன்று தட்டி
கொண்டு கால்மூட்டால் முதுவரியில் தடவித்தாழ்த்து
குணமாக உச்சியிலோர் அடியும் போடே
கொண்டை முடிதூக்கி உதறிவிட்டால்
குணமாக எழுந்திருந்து நடப்பான்பாரு. 15

நடத்தவே தொப்புள்நாலு விரலின்மேலாய்
நன்றாகவே உறுமிக் காலமாகும்
அடக்கமாய் அதில்வற்மங் கொண்டால் கேளு
ஆள்அழைத்தால் கேளாது மதிமயக்கம்
அடக்கமாய் உறுமியே அமறல் காணும்
அழகான விழி விழித்திருக்கும் பாரு
கிடக்கவே நாழிகைதான் அதற்குக்கேளு
கிள்ளவே ஆறுடனே பத்தும் ஆச்சே. 16

ஆச்சப்பா ஒரு முழத்தின் கீழேதானே
அடவாகத் தட்டொன்று உள்ளங்காலில்
பேச்சப்பா முதுவரியில் பேசாமல்தான்
புத்தியுடன் ஒருதட்டு தட்டியேதான்

ஆச்சப்பா இடது நாசியிலேயும்
இதமாகவே இறக்கி ஊதிக்கொண்டால்
மூச்சப்பா போகுமடா மூர்க்கமுடனே
முன்போல உயிர்அதுவும் திரும்பும்பாரே 17

போகவே விலாவில் முன்டெலும்பின் கீழே
புகழாக இருவிரலின் கீழேதானே
ஏகவே வலிய அத்திச் சுருக்கிக் காலம்
ஏக்கமுடன் இதில்கண்டால் குணத்தைக் கேளு
சாகவே பிடித்து ஒரு முழத்தில் தானும்
தயவாகவே குறுக்கு முழமே தள்ளும்
ஆகவே நாழிகைதான் பதினெட்டாகும்
அப்பனே அதற்குமுன் இளக்கிக் கொள்ளே. 18

கொள்ளப்பா எடுத்திருத்தி விலாவில் தானும்
குணமாக மறுபுறத்தில் புறங்கால் கொண்டு
அள்ளப்பா ஒருதட்டு தட்டியேதான்
அழகாக உச்சியின்மேல் கைபிணைத்து
கொள்ளப்பா ஒருஅடிதான் அடித்துக் கொண்டு
குணமாக கைகால்கள் தடவியேதான்
விள்ளப்பா உதறிவிட எழுந்திருந்து
விபரமுடன் போவான் என்றறிந்து கொள்ளே. 19

அறிந்து கொள்ள அதன் ஓிறையின் முன்னே
அப்பனே சிறியஅத்திச் சுருக்கிக் காலம்
முறிந்து கொண்டால் காலம் இரண்டும் குணமொன்றாகும்
முறையுடனே நாழிகையும் அதுபோலப்பா
தெறிந்துநீ மறுபுறத்தில் புறங்கால் கொண்டு
தீர்க்கமுடன் உரைதேர்ந்து பதறிடாமல்
அறிந்து நீ இளக்குதற்கு முன்போல்தானே
அழகாக பாலகனே உதறிப் போடே. 20

உதறவே கொப்புளின் நால் விரலின்கீழே
உத்தமனே மூத்திரத்தின் காலமாகும்
சிதறவே அதுகொண்டால் குணத்தைக் கேளு
சுறுசுறுப்பாய் மூத்திரம் விழும் துளிபோலே
சிதறவே கண் விழித்துப் பார்க்கும் பாரு
சிறப்பாகவே செவியும் கேளாதப்பா

இதம்பெறவே நாழிகைதான் இருபத்தொன்பது
இயல்புடனே இருந்ததென்று இயம்புவீரே. 21

இயம்பவே இளக்குமுறை தன்னைக் கேளு
இயல்பாக அச்சவ்வில் மறுபுறத்தில்
நயம்பெறவே நாய்க்கால் பொருந்துதன்னில்
நன்றாக புறங்கால் கொண்டுதானே
பயம் பெறவே சம்மட்டி இறக்கிக் கொண்டு
பண்பான உச்சியிலோர் அடியும் போடே
சுயம்பெறவே இந்தமுறை சரியாய் செய்தால்
சுத்தமாய் காலத்தின் குணங்கள் போச்சே. 22

போடவே கல்லிடையின் காலம் கொண்டால்
வித்து மேலேறித்தான் இருந்ததானால்
சாடவே குணமதுதான் சொல்லக் கேளு
சணத்திலே வித்திரண்டும் தலங்காணாது
தேடவே செத்ததுபோல் கிடக்கும் பாரு
திறமாக வாயில் நுரைதள்ளிக் காணும்
ஆடவே அசையாமல் உயரமாக
அண்டை கூட்டியே மேலேநீ எடுத்துவையே. 23

வையப்பா உச்சியின்மேல் கைபிணைத்து
வலுவாக அடித்துவிட்டால் வித்து தாழும்
செய்யவே உடனிடதுக் கையால் கொண்டு
சிறப்பாகவே பிடித்துத் தண்ணீர்கொண்டு
வையப்பா மூன்றுவிரல் வீதியுள்ள
பழந்துணியைத் துவைத்ததிலே சுற்றிப்போடு
மெய்யப்பா விதையதுவும் அடியில் நிற்கும்
விதமாகச் சுக்கிட்டுக் கஞ்சி கொள்ளே. 24

கொள்ளப்பா எந்த வற்மங் கொண்டாலுந்தான்
குணக்கேடாய் அடிகள்பட்டு மயங்கினாலும்
தெள்ளப்பா பயம்கொண்டு கிடந்தாலும்தான்
திடீரென்று சென்றிளக்க உபாயம் கேளு
விள்ளவே இதற்கெல்லாம் அடக்கக் காலம்
விபரமுடன் தானெடுத்துச் செய்து கொள்ள
விள்ளவே எடுத்திருத்தி விலாவு ரெண்டும்
விதமாகப் பிடித்திருத்தித் தூக்குவாயே. 25

இருத்தியே பிலத்தில்ஒரு இடிஇடித்து
இதமாகக் கைமேலே கைபிணைத்து
வருத்தியே உச்சியில் ரெண்டடி அடித்து
வாகுடனே பிடரிக்கும் மூலத்திற்கும்
வரியிலேதான் புறங்கால் மடக்கியடித்து
வாகாக இளக்குமுறை அடுத்துக்கேளு
நிறுத்தியே நெஞ்சுதனில் கைகொடுத்து
நினைவாக உறக்கலர் அடியும் போடே. 26

போடவே காதுரெண்டும் சுக்கால் ஊதி
பொட்டெணவே உடம்பெல்லாம் தடவிக்கொண்டு
தேடவே காலுரெண்டும் கீழேநோக்கி
திடமாகத் தூக்கியே உதறிவிட்டால்
ஆடவே சற்குருவைப் போற்றிக் கொண்டு
அன்பாக பிரமனுடைய கடாட்சத்தாலே
திடமான. காலமெல்லாம் இளகுமென்று
செப்பினார் தெரிந்து கொண்டு சீரைப்போரே. 27

போமப்பா இந்தமுறை ஒருவருக்கும்
புகலாதே கொடுக்காதே பாவம் பாவம்
ஆமப்பா கொடுப்பதற்கு வருஷம் பன்னிரண்டு
அடைக்கலமென்று பாதம் பணிவாராகில்
சீமப்பா சீப்பாதம் மறவாமல் அவனுக்கீந்து
சிறப்புடனே அவனைநீ சீஷனாக்கி
காமப்பா வித்தை எல்லாம் அவனுக்கீந்து
களிப்புடனே இளக்குமுறை அவனுக்கீயே. 28

இளக்கவே யாருக்கென்றால் செப்பக்கேளு
இன்பமுள்ள மனிதர்க்கும் பொருள்தந்தோர்க்கும்
பழக்கும் உறவுள்ளோர்க்கும் பகை உள்ளோர்க்கும்
பண்பான சண்டாளர்க்கும் இளக்கவேணும்
இளக்கமுள்ளான் பொருள்தந்து சரணமென்றால்
மெலிவகற்றி அவன்தனையும் விளக்கிக் கொண்டு
களங்கமில்லா மனதாக இருந்து கொண்டு
கையடங்கல் தனையறிந்து அறிந்து தேறே. 29

தேறப்பா குருவினுடைய பாதம் போற்றி
தினந்தோறும் சிவபதத்தை மறந்திடாமல்

தேறப்பா பாலமது போட்டாப் போலே
சிறப்புடனே சொல்லிவிட்டேன் தலங்களப்பா
வீரப்பா செய்யாமல் அடக்கிக் கொண்டு
விதமுடனே சாத்தியம் அசாத்தியம் பார்த்து
நீறப்பா வெண்மையாய்ச் சொல்லிவிட்டேன்
நினைவுகெட்ட மானிடனே உற்றுக் கேளே. 30

காணவே சொன்னதெல்லாம் மெய்யென்றெண்ணி
கறுத்தாக வற்மமது கொண்ட பேர்க்கு
தோணவே பிழைகுறியும் சாகுறியும் பார்த்து
சுருக்கவே நமசிவாய என்று ஓதி
வேணவே ஜலமேந்தி முகந்தெளித்து
வெற்றிபெற அன்னப்பால் அடுப்பிலேற்றி
ஓணவே திரைவளைத்து அகத்திலாக்கி
ஈசன்பாதம் தனைநினைத்து இளக்கிக் கொள்ளே. 31

கொள்ளவே கருங்கோழி இடித்த சாறும்
குணமுடனே மதுசேர்த்து மத்தித்தேதான்
விள்ளாதே உள்ளுக்குக் கொடுத்து விட்டு
விதவிதமாய் மாறிப்போம் அகன்று விடுமே
கள்ளமில்லை இதுபோலே சூட்சம்பாரு
கரைகண்ட முனியோர்கள் சொல்லமாட்டார்
சுள்ளியிலே தீயதுதான் பிடித்தாற் போலே
சுத்தஎண்ணை சொல்லுகிறேன் சூட்சம் பாரே. 32

சூட்சுமமாய் பசுவின்நெய் சென்னை எண்ணை
துணையுடனே இலுப்பையெண்ணை நல்லெண்ணைதான்
பட்சமுடன் தேங்காயெண்ணை விட்டுப் பின்பு
பண்புடனே மேல்மருந்து இயம்பக் கேளு
பட்சமுடன் தொட்டால் வாடி மூலிதானும்
பாங்குடனே பாதமூட்டில்லாத் தாளிதானும்
அச்சதுரத் தூதுவளை வேலிச்சாறும்
அழகாக வகைவகைக்கு படி காலாமே. 33

ஆமேகேள் கிறாம்பு சிங்கி சீரகம் ஏலம்
அன்பான மதுரமொடு அரத்தை சுக்கு
நாமேகேள் கோரோசனை திப்பிலியும்
நலமுடனே குங்கிலியம் வகைக்கழஞ்சாய்

நாமேகேள் முன்சாறும் எண்ணையோடும்
தயவாக பொடிதூவி அடுப்பில்ஏற்றி
போமேகேள் கூவளத்தின் சாறும் சேர்த்து
புகழாகவே அதனைக் கூட்டிக் காச்சே. 34

காய்ச்சியே மணல் பருவந் தனில்வடித்து
கருத்துடனே வடிகலசந் தன்னில் கேளு
பாய்ச்சியே வெள்ளைக் குங்கிலியம் சேர்த்து
இறக்கியே கரண்டியிடை உள்ளே கொண்டால்
போச்சுதே சயமொடு இருமல் கக்கல்
பொல்லாத வற்மமொரு ஈளைஈடு
காய்ச்சலொடு உள்கொழுத்தும் விரைக்கும் வாதம்
விள்ளாதே உடம்புபொன்னாம் விளக்கம்பாரே. 35

கூடாரத் தைலம்

கொள்ளப்பா கூடாரத் தைலம் ஒன்று
கூறுகிறேன் சகலஈடும் தான்அகல
விள்ளப்பா கருங்கோழி கொண்டு வந்து
தலைமுடிகால் நீக்கி யெண்ணாழி நீரிட்டு
நள்ளப்பா எட்டொன்றாய் வற்றக் காய்ச்சி
நலமுடனே இறுத்ததன்மேல் கஷாயம் கேளு
அள்ளப்பா நாயுருவி உளிஞ்ஞை வேறும்
மயமான குறுந்தொட்டி பலம் பத்தாமே. 36

ஆமேகேள் முத்தூணி நீரைவிட்டு
அடவாக எட்டொன்றாய் இறுத்து வாங்கே
போமே தோன்றிய கஷாயம் இரண்டு
துல்லியமாய் ஒன்றாகச் சேர்த்துத் தானே
ஆமேதான் கடைமருந்தைச் சாற்றக்கேளு
அழகான திரிசாதி விடையம் சீரகம்
ஆமேதான் அரத்தையொடு ஏலம் மல்லி
அன்பான மதுரமொடு வெந்தயமாகும். 37

புகழாத இவைகழஞ்சி இடித்துக் கூட்டே
புகலுகிறேன் ஆவின்நெய் படிதானொன்று
திகழாத நல்லெண்ணெய் படிஅரைதான்
திறமாக சித்தெண்ணை படிஅரைதான்

புகழாக முன்சாறும் எண்ணை சேர்த்து
ஆட்டுவாய் கற்கவகை மேலே தூவி
அழகாக அடுப்பேற்றி மெழுகதானால் வடித்து
நாட்டுவாய் கரண்டிவீதம் பிணிக்கு உட்கொண்டால். 38

கொள்ளவே மூன்றுநாள் ஆறுநேரம்
குணமாக முருங்கை இலை சாறுமல்லால்
உள்ளவே எண்ணையதைக் குடித்துக் காத்தால்
ஏகுகின்ற பிணியதனை இயம்பக்கேளு
துள்ளவே மூச்சுவிடா கொழுத்துக் காலம்
முறைகேடாய் வந்ததொரு சயம் இருமல்
புள்ளவே பழைய ஈடு அனைத்தும் போகும்
புகழாக கூறிவிட்டேன் தேர்ந்து செய்யே. 39

குறுந்தொட்டி கஷாயம்

இயல்பாக இன்னுமொரு கஷாயம் கேளு
இன்பமுடன் கொழுத்து முதல் வறட்சைதீர
இயல்பாக குறுந்தொட்டி இசங்கு வில்லை
ஆக்கமுடன் அறுகன்வேர் ஆடாதோடை
அயல்பொதியன் கிழங்கு நன்னாரி உளிஞ்சை
அடைவான வெள்ளைக்குன்றி சூரியுடனே
கயல் விழிபோல் சிறு நெருஞ்சி கடலாடிவேர்
சமூலம் வகையொன்று பலம் ஒன்றாக. 40

பாகமுடன் கடைமருந்து திரிசாதி சுக்கு
மிளகுடன் கற்கடக சிங்கி ஏலம் கழஞ்சியொன்று
ஏகமுடன் இடித்து இருநாழி எட்டொன்றாக்கி
வேறேவடி சீனிமேல் பொடியும் தூவி
பாகமுடன் கஷாயமது திரிநாள் மட்டும்
ஜாலமது செய்யாமல் குடித்துக் காத்தால்
தாகமுடன் சயரோகம் கக்கல் விக்கல் தீரும்
தன்மையாய் பொதிகைமுனி விளம்பினேனே. 41

தூதுவளை கஷாயம்

காணவே அறுகுசங்கு உளிஞ்ஞை வில்லை
கைக்களவாய் குறுந்தொட்டி தூதுவளைவேர்
வேணவே பலம்பத்து வகையொன்றுக்கு
விட்டுவிடு ஜலம்தூணி இளநீர் வெள்ளம்

தோணவே ஒக்கஒன்றாய் அடுப்பிலேற்றி
துல்லியமாய் அனலை மூட்டி எரித்துதானே
காணவே மூவிரண்டுபடியாய் வற்றக் கட்டி
வடிக்க கசாயமதை இறுத்தி வையே. 42

உண்மையிலே புகையிலை புளியுப்பும் தள்ளு
உத்தமனே பச்சைஜலம் தொட்டியதே
கண்ணான கசாயமது குடித்து வந்தால்
காணாது தலைசுற்றல் கக்கல் விக்கல் ஈளை
புண்ணான உடம்பெல்லாம் பொன்போலாகும்
மெய்கொடுக்கும் பலங்கொடுக்கும் பலமுண்டாகும்
சண்ணுமடா உள்கொழுத்து புறக்கொழுத்து
சதிகேடாய் வந்த ஈடும் அகன்றுபோமே. 43

மற்றொரு கஷாயம்

போகுமே இன்னுமொரு கஷாயம் கேளு
புகழாக மதுரம் நற்சீரகம் மாஞ்சில்
ஏகுமே கழஞ்சிதான் ரண்டாய் வாங்கி
ஏற்றமுடன் உளிஞ்ஞையுடவேரும் சேர்த்து
ஆகுமே செந்தட்டி சாரணைவேர்
அடவாக இருநாழி எட்டொன்றாக்கி
போகுமே குடித்திடநல் ஈளை விக்கல்
புல்லர்போல் நடுங்கி ஓடும் நவிலக்கேளு. 44

புதுமை எண்ணை

நவிலுகிறேன் கண்டங்கத்திரி நொச்சி தோடை
நயமாகச் சார்வகைக்குப் படிகாலாக
கோவின்நெய் உழக்கதுவே தேங்காயெண்ணை
குணமான நிலவேரும் களஞ்சிபத்து
நவிலுகிறேன் பத்திரி மாஞ்சியுடனே
நணுகாமல் வகைக்கு களஞ்சி மூன்றதாமே
அவிலுகிறேன் சாறுடனே எண்ணை நெய்யும்
அடைவாக மருந்தெல்லாம் சேர்த்துப்போடு. 45

நன்றான மெழுகுபதம் தன்னில் காய்ச்சி
நலமுடனே எண்ணைவடி கலசந்தன்னில்

சூன்றாத கோர்மேதகம் புனுகுச் சட்டம்
    குணமான குந்திரிக் கொட்டம் வைத்து
நன்றாக நெய்பதுதான் கரண்டி வீதம்
    நாளாறு பொழுதாக உண்டபேர்க்கு
குன்ந்த வாய்காந்தல் உளவு குத்து
    கூர்வான கைகால்கள் உளவு நோவு. 46

பேர்க்கென்ன உடல்வறட்சை தலைநோய் வேர்வை
    பொல்லாத இருமலுடன் நெஞ்சிளைப்பு
தார்க்கென்ன நரம்புபிடி உள்முறிவு
    தகர்ந்துவிடும் எண்ணையுட புதுமையோடு
யார்க்குமே சொல்லாதே எண்ணையப்பா
    அறிவான பத்தியமும் அறிந்துபாரே
பேர்க்குமே இன்னுமொரு கசாயம் சொல்வேன்
    பேராசை கொள்ளாமல் அடக்கம் காரே. 47

தேறவே முருங்கைவேர் தோடைவேரும்
    திகழ் உளிஞ்ஞை பேய்புடலம் அருகன்வேரும்
மீறவே வெண்குன்றி தக்காளிசூரி
    மிளகாறு சிற்றாமுட்டி திரிகடுகாகும்
ஏறவே சிறுகாகம் அடுக்கராவும்
    திரிபாலை சிங்கியதும் பலம் ஒன்றாக
வாறவே வகைவகைக்கு களஞ்சி மூன்றாய்
    வாங்கியே அதைஇடித்து வைத்துக் கொள்ளே. 48

வாங்கியதோர் மருந்தைஎல்லாம் தறித்துப் போட்டு
    வரைபுனல் இருநாளில் எட்டொன்றாக்கி
தாங்கியே இறுத்துவைத்து சீனிபோட்டு
    தளமாக அருந்திடுவாய் பத்தியமாக
வாங்கியே குடித்துவர சயம் வறட்சை
    ஏற்றதொரு நெஞ்சிலடி வலியும் தீரும்
தேங்கியதோர் வலச்சிக்கல் தொகுப்போடேதான்
    தீருமென்று இருவகையை அனுக்காய் சொன்னேன். 49

தோடைவேர் கஷாயம்

செய்யவே தோடைவேர் கசாயமொன்று .
    சொல்லுகிறேன் தோடைவேர் பலம்நூறப்பா

பையவே இருதூணி அத்திப்பூவும்
பாங்காகப் போட்டதிலே அனலைமூட்டி
நையவே மூவிரு நாழியாக்கி
நாயகனே இறுத்ததிலே வைத்துக் கொண்டு
கையோடே கொம்பரக்கு களஞ்சிஏழு
கட்டவே இருநாழியை எட்டொன்றக்கி 50

ஆக்கியே இறுத்ததனை நாளொன்றுக்கு
அடைவாக இருபோது மூன்றுநாள்உண்ணு
பாக்கியே முருங்கையிலை கருவாடாகும்
பத்தியமாம் வேறொன்றும் ஆகாதப்பா
நீக்குமடா நரம்புபிடி இழுப்புக் குத்து
நிச்சயமாய் குடலதிலே நோயும் தீரும்
போக்கிவிடும் சயரோகம் வறட்சை தீரும்
பொல்லாத முடம் தீரும் பேணிப்பாரே. 51

வசவெண்ணை

மெளுகிடவே வசவெண்ணை சொல்லக்கேளு
முத்தெண்ணை ஆவின்நெய் பன்றிநெய்யே
தளுகுவாய் பழச்சாறும் படிதான் வாங்கி
சங்கைபெற வெந்தயமும் களஞ்சிவீதம்
நளுகாமல் வெந்தயத்தைக் குமரிச்சாற்றால்
நாயகமே தான்அரைத்து ஒன்றயச் சேர்த்து
வளுகாமல் குமரிச்சார் வற்றும்போது
வார்த்தெடுத்து தைலமதை முறிவில் போடே. 52

போட்டிடவே தைலமது வற்றிடாமல்
புண்ணியனே தினந்தோறும் தடவிவாங்கி
நாட்டிலுள்ள மானிடர்கள் நாலுகால் ஜெந்து
நாயகனே கோழிமுதல் முறிவுக்கெட்டே
ஊட்டியுடை உள்முறிவு ஈடுக்கெல்லாம்
கூடாரத் தைலம்முன்னே பாடினோமே
நாட்டிலுள்ளோர் அறியவென்று முறிவுக்கெல்லாம்
நாயகனே எண்ணையது திடமாய்ப் போடே. 53

அப்பனே மரமேறி முறிந்ததானால்
அன்புடனே தன்னறிவால் வந்தாலும்தான்

தப்பாமல் திட்டுதிடலேறி முறிந்தாலும்தான்
    பட்டனெவே அண்ணாந்து ஒடிந்தாலும்தான்
அப்பாலே பனையேறி விழுந்தாலும் தான்
    அப்படியே விழுந்து ஒடிந்து சிதறினாலும்
தப்பிதமாய் வந்துவிட்ட முறிவுக்கெல்லாம்
    தயவான எண்ணைஒன்று கூறுவேனே. 54

ஆலம்பால் எண்ணை

கூறுவேன் ஆலம்பால் படிதான்ஒன்று
    குறுந்தொட்டி நன்னாரி தெற்றிவேரும்
தேறுவேன் காட்டுச்சி இறைச்சி நாழி
    தேன்படிகால் சிவதை விளாம்பிசினுமாமே
வேறுகையான் மீரை களஞ்சியொன்று
    வாலுளுவை படிஅரைக்கால் எண்ணைநாழி
ஆறுகின்ற எண்ணையால் அனலில் வைத்து
    அழகாக வடித்திறுத்தி வைத்துக் கொள்ளே. 55

கூடாரக் கஷாயம்

கொள்ளடா கூடாரக் கசாயம் ஒன்று
    குறுந்தொட்டி அறுகன் வேர் அமுதவள்ளி
விள்ளடா வில்லைவேர் செந்தட்டிவேர்
    குணமான கொத்தான்வேர் ஆமணக்கும்
நள்ளடா வகை பலம்தான் தறித்துப் போட்டு
    நாயகமே கற்கவகை திரிகடுகு
சொல்லடா திரிசாதி அரிசிஅறு
    சுகமான களஞ்சி வகை கூடப்போடே. 56

போடப்பா முத்தூணி புனலில் அப்பா
    புதுமையாய் அரைநாழியாக வற்றி
நாடப்பா முட்டையிடும் [illegible]
    நல்கோழி முடிகுடல் கால் களைந்து[illegible]போட்டு
ஆட்டப்பா கசாயம் அதில் நொறுக்கிப் போட்டு
    அடுப்பேற்றி உழக்காக்கி இரு நேரம்தான்
மாட்டியே மறக்காமல் கொடுக்கவேதான்
    மகிமையால் தீரும்அந்த நோய்கள் கேளே. 57

தீராத நரம்புபிடி இடுப்புக்குத்து
    துடிதுடித்தல் ஆயாசம் மயக்கம் வீக்கம்

மாறாத ஈஸ்ளசயம் மாந்த் தோஷம்
சக்தியுடன் நெஞ்சு வறட்சை நெஞ்சுக்காந்தல்
ஏறாத தளர்ந்தவிந்து பலத்துடன் ஊறும்
மாறாது இந்தமுறை உனக்கே சொன்னேன்
மாறாமல் தேகமது பெலமுண்டாகும்
மாமுனிவர் கூற்றுஇது பொய்க்காதப்பா. 58

விள்ளுகிறேன் இன்னுமொரு கஷாயம் கேளு
விதமான அவுரிவேரும் வெந்தயமும்
தெள்ளுகிறேன் திப்பிலியும் மிளகும் ஆச்சே
திறமான முப்பாலை சிங்கி தோடை
அள்ளுகின்ற சீர்புடலம் வெண்குன்றியும்
அறுகுகொத்தான் அமுக்கறா அரத்தையோடு
கொள்ளுகின்ற கொட்டமுடன் உள்ளியாகும்
குணமான சிறுநெருஞ்சி வேறுமாகும். 59

நேரப்பா கருஞ்சுண்டை சூரிவேரும்
நின்னவாக வகையொன்று பலமொன்றாக
பாரப்பா முப்பத்தி ரெண்டு எட்டொன்றாக்கு
பாங்காக சீனியிட்டு திரிநாளுட்டே
கூறப்பா பத்தியமாய்க் கொண்டபோது
கூறுகிறேன் உள்சுரங்கள் அறுபத்து மூன்றும்போம்
ஆரப்பா கை செய்பாகம் கண்டுதேறி
அன்பாகச் சொன்னகவி அறுபதும் முற்றே. 60

வற்ம சூத்திரம் – 50

ஓம் நமசிவாய நம

ஆதி பராபரத்தினுடைய அருளேபோற்றி
ஆனந்த குருபரனின் அருள்தான் போற்றி
கோதில்லா முப்பத்திரெண்டு உருப்புக்குள்ளே
குருமுறையாய் பீரங்கி நூறு சொன்னேன்
நீதிவழுவாத வொறு வற்மமெல்லாம்
நிலவரமாய்ச் சொல்லிவிட்டேன் நிலத்துள்ளோர்க்கு
வேதனைக ளில்லையடா சூத்திரந்தான்
விபரமாய் ஐம்பதிற்குள் விளம்பினேனே.

விவரிப்பேன் எண்ணையொடு கஷாயம் கிருதம் 1
மேலான தடவுமுறை கஷாய்ந்தானே
விவரிப்பேன் ஒற்றலுடைய பாகம்எல்லாம்
விள்ளுகிறேன் நிர்ணயமாய் குருமுறைதான்
சௌகரிப்பேன் சண்டாளர் அறிவாரோதான்
சாஸ்திரத்தைப் புரட்டிவைப்பான் சதிகாரன்தான்
எவருக்காய் இந்நூலைச் சொன்னேன் என்றால்
எண்ணெழுத்தை அறிந்தவர்க்கு இயம்பினேனே.

இயம்புகிறேன் ஆசானை அடுத்துக் கேளு 2
இல்லாவிட்டால் எவர்க்கும்தான் வம்புரைத்த
வியம்புகிறேன் வழிகள் போல வழிகளெல்லாம்
வகை வகையாய் எடுத்து வகுத்துவைப்பேன்
நயம்பெறவே சாஸ்திரங்கள் நன்றாகத்தான்
நல்லபடி ஆராய்ந்து சூட்சமுள்ள
மயக்கமுள்ள வற்மங்கள் எல்லாம்தீர
மருந்துவகை எல்லாமே துணிந்து செய்யே.

செய்வது குணங்களுட் குறியறிந்து 3
குருஅருளால் குருதொட்டுக் காட்டிச் செய்தால்
நைவதென்றால் நோயதுவும் நழுகிப்போகும்
நல்முறையாய் நானறிந்து நாட்டில் வைத்தேன்
பொய்யருக்கும் புரட்டருக்கும் பலியாதப்பா
புண்ணியவான் ஆனாக்கால் பலிக்கும் சூட்சம்

எய்வதெல்லாம் எவருக்கும் கிடைக்கும் சொன்னேன்
இல்லாட்டால் கிடையாது ஏரியில்வீழ்வான் 4

ஏதெனிலே விழாமல் குருவைப் போற்றி
இணங்கு மொழி பிசகாமல் இசைந்தால் சரி
சரிஎன்று உலகர் முன்னமே பாரு
சாஸ்திரத்தை மெய்யென்று நம்புவார்கள்
அரிதான நூல்கண்டு திறவுகோல்தான்
அடங்கல் முறை பதினாறில் அடக்கிவைத்தேன்
நரிஎய்த வகைபோலே எய்யாமல்தான்
ஆசாரம் குருவோடே நாடிநில்லே. 5

நாடிநின்ற வகையைக் கேள் குருவைத்தானே
நல்மனதை வருத்திக்கொள் நாள்தோறும்தான்
தேடிநின்று குருவசனம் மறவாமல்தான்
தினம்தினம் தான் நீகேட்டு திடம் கொண்டாக்கால்
பேடியில்லை என்நோயும் செய்தால் வாய்க்கும்
பிசகொன்றும் இல்லையடா பேணிக் கொள்ளு
சோடித்து நான்புகல்வேன் எல்லோருக்கும்
சூட்சநிலை அறியாமல் துள்ளுவாரே. 6

துள்ளாமல் செய்வதற்கு சாத்தியங்கள்
சுறுக்காகத் திறவுகோல்தான் திறந்து பார்த்தால்
விள்ளாதே திறவுகோல் அதுவின் மேன்மை
தேர்ந்தோர்க்கு வேதனைகளில்லை சொன்னேன்
தள்ளிவிட்டுக் கொடுத்தாக்கால் தன் மாத்திரைமீறி
சாவார்கள் பாவமடா சாபத்தாலே
அள்ளிவிட்டேன் சாஸ்திரங்கள் அனைத்துக்குள்ளும்
அருமருந்து கஷாயம் கிருதம் தைலம்தானே. 7

கண்டங்கத்திரி கிருதம்

சாபந்தான் எய்யாமல் சார்ந்து நில்லு
தன்மையுள்ள அம்பிகையை சார்வதாகும்
சாபமில்லா கண்டங்கத்திரி கிருதம் சொல்வேன்
சயம் பழைய வற்மம் முதலாய் தீர்வதற்கு
சாபமில்லா கத்தூரியும் காயும் தோடை
கணக்கில்லா வகை சாறு படியதாகும்

ாபமில்லா பசுவினுடைய நெய்யும் நாழி
பாடுகிறேன் கெதியினெண்ணை நாழி. 8

எண்ணையுடன் கற்கவகை இயம்பக் கேளு
எடுசுக்கு திப்பிலியும் அரத்தை ஏலம்
திண்ணமுடன் வால்மிளகு அக்கிறா சிங்கி
சேர்வகைக்கு களஞ்சியடா திறமதாக
நுண்ணறிவாய் பூநாகம் பலமதைந்து
துணக்கமுள்ள மயில்தூவல் கரியதொன்று
வண்ணமுடன் இதுகளெல்லாம் கலந்து வற்றி
வடிபருவ வேளையிலே பத்திரபாகம். 9

பாத்திரத்தில் வெள்ளையடா குந்திரியம்
வடியிடு ரோசனையும் வகைக்குக் கழஞ்சி
சூத்திரமாய் மெழுகுபதம் வடித்துவாங்கி
சுருக்காகக் கறண்டிஅளவு உள்ளே கொள்ளு
சாத்திரமாய் இருஆறு வேளையப்பா
தன் மக்காள் பத்தியந்தான் விட்டிடாதே
ஏத்திவிடு எட்டாம்நாள் முழுகச் சொல்லு
இசைவாக பத்தியம்தான் நிறுத்திக் கொள்ளே. 10

குறுந்தொட்டி எண்ணை

பத்தியந்தா னில்லாமல் முழுகஎண்ணை
பாடுகிறேன் குறுந்தொட்டி இசங்குநன்றி
முத்தினதாய் தழுதாழை மூலமப்பா
முறையோடே வகைவகைக்கு பலந்தான்பத்து
கொத்தியறிந்து அறுகுறுணி எட்டொன்றாக்கி
கூசாமல் அரித்தெடுத்து கூறக்கேளு
சாத்தியமாய் கோவையொடு மொசுமொசுக்கை
தானிடித்து வில்லையொடு இலைசாறு நாழி. 11

சாறுடனே கடைச்சரக்கு சேருகொட்டம்
தனிஏலம் மதுரமுடன் சீரகம்தான்
கூறுகிறேன் குறோசாணி கிறாம்பு மூலம்
கொழுத்த சந்தம் இருவேலி கோலத்தோடு
வீறுடனே பலம் ஒன்றாய் வாங்கியப்பா
விட்டரைப்பாய் பசுவின்பால் நாழிதன்னில்

வீறுகொள்ள நல்லெண்ணை நாழி தன்னில்
விட்டொன்றாய் அனல்மூட்டி எரித்து வாங்கே. 12

வாங்கியது சரல் பருவம் வடித்துக் கொண்டு
வளமாக வெந்நீரில் முழுகும்போது
தாங்களில்லா நரம்புபிடி உளைச்சல் குத்து
தாகமுடன் இளைப்பு சயகாசங்கள்
ஏங்கியே இருக்கும் இந்நோய்களோடு
ஏமமொடு சிறக்கும் சக்தி இடறு செய்யும்
தூங்கியே நிற்குமந்த மூன்றுபேரில்
துல்லியமாய் வாதமுடன் காயம் தீரும். 13

கருங்கோழித் தைலம்

தானாகக் கருங்கோழி தைலம் தன்னை
தாரணியோர் மெய்திடவே சொல்லக்கேளு
மானேகேள் கோழிகுடல் கால் தலை தள்ளி
வகையாக துண்டித்து குறுணிநீரில்
கோனேகேள் எட்டொன்றாய் குறுக்கி வாங்கி
குறுந்தொட்டி கடலாடி உளிஞ்ஞை மூலம்
ஏனேகேள் பலம் வகைக்கு பத்தாய்க் கொண்டு
இன்பமாய் முக்குறுணி எட்டொன்றாக்கே. 14

ஒன்றுக்கு கஷாயமதில் விளக்கின் எண்ணை
உத்தமனே நறுநெய்யும் எள்ளின் எண்ணை
நன்றாக வகைநாழி சேர்த்துக் கொண்டு
வாங்குவாய் திரிசாதி மதுரம் சீனம்
நன்றான திப்பிலியும் மதுரம் ஏலம்
நாட்டுமல்லி வெந்தயம் கோரோசனைதான்
குன்றாமல் வகைபலம் காலாய் வாங்கி
குணமாக இடித்து வடித்துரைத்துச் சேரே. 15

அரைத்துடனே கரைத்தொன்றாய் பாண்டம் ஊற்றி
அனல்மூடி காய்த்து பற்றி மெழுகதானால்
உரைத்தபடி தப்பாமல் வடித்துக் கொண்டு
உத்தமனே உண்டிடுவாய் ஈராறுவேளை
திறமுடனே உண்டிடவும் பத்தியம் கேளு
திறமாக புகையிலையும் புளியும் தள்ளு

துரத்துதற்கு வெந்நீரால் முழுகுவாய் நீ
சுகமாகத் தீருகிற நோயைக் கேளு. 16

கேளப்பா காயமுடன் சுமை கபங்கள்
கெடியான குரல்கம்மல் கொளுத்து நோவு
நாளப்பா சோரை காயம் வறல்காயம்தான்
நடுக்கமுடன் கிரிவுடன் மெலிவு கைகால்
சூளப்பா குத்துடனே விக்கல் ஈளை
சுளுக்குடனே நெஞ்சு மாரடைப்பு தானும்
தூளப்பா பருதிமுன் பனிபோலாகும்
சுகமான தைலமதை துணிந்து செய்யே. 17

பரஞ்சோதி கஷாயம்

துணிந்து செய் பரஞ்சோதி கஷாயம் கேளு
தூதுவளை இசங்குடனே கண்டங்கத்திரி
பணிந்த வில்லை சித்தாமுட்டி வகைசேர்பலம்
பார்த்தெடுப்பாய் இளநீர்தான் படியேயொன்று
அணிந்த சடைமீது கெங்கை அழகாய் கொண்ட
அவனை தினம் தியானித்து அருளைபெற்று
கனிந்த பழம் கைமேலே இருந்தாற் போல
கஷாயமதில் இவைஅனைத்தும் சமனாய் கூட்டே. 18

கூட்டுவாய் கொம்பரக்கு கழஞ்சி ஆறு
குணமாக சதைத்து ஒரு கிளியாய்க் கட்டி
வாட்டமில்லா முன்இளநீர் கஷாயத்திட்டு
வகையாகப் படிஇரண்டும் எட்டொன்றாக்கி
நாட்டமுடன் இருநேரம் சீனிபோட்டு
நன்றாக அருந்திடுவாய் திரிநாள்மட்டும்
கூட்டிடுவாய் அதுவோடு கிருதம் சேர்த்து
கொண்டிடுகில் திண்மையது கூறப் போமே. 19

குக்குட கிஷாயம்

கூறுகிறேன் குக்குட கியாழந்தன்னை
குடல்தலையும் வால் சிறகும் காலுந்தள்ளி
மாறுபட துணிகையுடன் துண்டுதுண்டாய்
துணிந்து அறிந்திட்டு நல் பாண்டந்தன்னில்
வீருள்ள நன்னாரி வேரும் வேண்டும்
வகைபலங்கள் ஐந்தாக ஆக்கிக் கொண்டு

ஆறுமடா முக்குறுணி புனலில் இட்டு
அடவாக அனலெரித்து வற்றக் காய்ச்சே. 20

காய்ச்சியிட்டு மூன்றுபடி குறுக்கிக்கொண்டு
காலையொடு மாலையொடு இருநேரந்தான்
துய்ச்சமுடன் ஈராறு நேரந்தானும்
துடர்ந்துகுடி பத்தியம் புளியுமப்பா
போச்சுதடா தேகமதில் கொண்ட காயம்
துடிதுடித்து மயங்குகின்ற வற்மம் எல்லாம்
மூச்சுவிடா கொளுத்துடனே பிடித்த நோவு
முடக்குமுதல் இழுப்புடனே ஓடும்தானே. 21

மிளகுவேர் கஷாயம்

தானான மிளகுவேர் கஷாயம் கேளு
சர்வசுரம் ஈடுமுதல் ஓடிப்போக
மானான மிளகு வேர் வளையமுட்டி
மாதோடை உளிஞ்ஞை குட்டி நத்தைச்சூரி
தேனான நற்கொளிஞ்சி காஞ்சொரி
தித்திக்கும் அமிர்தெனவே மாதுளைமூலம்
ஏனான திரிகடுகு திரிபலாதி
இசைந்த கடக சிங்கியுடன் அரத்தைதானே. 22

வரங்குவாய் புடலமொடு அமுக்கூரந்தான்
வகை வகைக்கு கழஞ்சுதான் இரண்டதாக
ஆங்குடனே சதைத்திட்டு கஷாயம் முன்போல்
அழகாக எட்டொன்றாய் ஆக்கி சீனிபோட்டு
பாங்குடனே பத்தியமாய் குடி அப்போது
பறக்குமடா உடல்கொழு சுமை கபங்கள்
ஏங்கமுடன் எச்சலில்லா மூச்சடைப்பு திட்டு முட்டு
எங்கே என்று ஓடுமடா இசைந்து கேளே. 23

இசைந்துள்ள கஞ்சியொன்று இடரேதீர்க்க
எடுத்திடுவாய் சிற்றாமுட்டி உளிஞ்ஞை இரண்டு
அசைந்திடித்துப் பலம்பத்து தூணிநீரால்
அழகாகக் குறுணியதாய்க் குறுக்கிக் கொண்டு
இசைந்தெடுப்பாய் ஆதாளி அரிதானொன்று
இசைவுடனே அரிசிஆறு அமுக்கூரம்தான்

அசைந்திடவே குறுக்கி ஆறுபடிதானாக்கி
அடைவுடனே குடித்திடுவாய் காலை மாலை. 24

மாலையிலே குடித்திடுவாய் ஈராறுவேளை
மாறிவிடு புளியுப்பும் பத்தியம் தான்
சாலவே சயம் விக்கல் அரோசியம்
சாதலுடன் தளர்ச்சையுமே சார்ந்திடாது
பாலருடன் கிழவருக்கும் கெர்பிணிக்கும்
பாச்சடா கஷாயமது புரிந்து செய்தால்
தாலமதில் பிறந்தவர்க்கு ஈடுமுண்டோ
சண்டாளர்க் காகாதே சரணம்தானே. 25

தானான பூச்சொன்று சொல்லக்கேளு
தள்ளு இடிசதை நோவு முறிவுக்கெல்லாம்
வானான மரமஞ்சள் வரட்டு மஞ்சள்
வகையான சுக்குடனே சதையின் குப்பை
நாணமுள்ள ஓரிலையும் முருங்கையிலையும்
எள்ளுமே எடுத்திடுவாய் வகைவகைக்கு சமமாய்
பானமுள்ள மதுதன்னில் அரைத்து வெதுப்பி
பாங்காகத் தானெடுத்துப் பூசினாக்கால். 26

போமப்பா தாரையொன்று புதுமையாக
புகட்டுவேன் உலகத்தோர் பிழைக்கவென்று
நாமப்பா நறுநெய்யும் எள்ளின் எண்ணை
நலமுடனே ஏரெண்டத் தெண்ணைமூன்று
தாமப்பா குமரியுடைய சாறுநாழி
தயவாகச் சீனியது உழக்கேபோட்டு
ஓமப்பா நெல்பொரியும் பருவம் பார்த்து
உத்தமனே தானிறக்கி நோவில்போடே. 27

போடப்பா சர்வசயம் தீரவென்றால்
பொடியொன்று சொல்லுகிறேன் புதுமையாக
நாடப்பா இஞ்சிசீரகம் சுக்குமல்லி
நாயகனே கழஞ்சி ஐந்ததாகும்
தோடப்பா திப்பிலியும் விடையம் ஏலம்
திடம் பெறவே வகைவகைக்கு கழஞ்சியொன்று
கூடப்பா கோரோசனை அரத்தை சுக்குஅக்கிறா
குணமான வால்மிளகு மதுரம் வாங்கே. 28

வாங்குவாய் இடை சரியாய் கழஞ்சி ரெண்டு
வறுத்திடித்து சூரணத்தை பிடி சீனிசேர்த்து
பாங்குடனே பத்தியமாய்க் கொண்டபேர்க்கு
பறக்குமடா கொளுத்து சுரம் தாகம்மேகம்
ஏங்கலுட இழுப்பு கபம் ஈளை காயம்
சுமைகள் திட்டி சத்தல்பேதி சீதம்தானும்
தாங்கலில்லா ஆயாசம் கிறக்கம் மூர்ச்சை
தளர்ச்சையொடு சயம் காயம் தீரும்காணே. 29

காணப்பா கோழியுடைய கஷாயம் கேளு
கருத்தான முத்தமொடு கொடுப்பை முட்டி
நாணப்பா உளிஞ்ஞையொடு பொடுதலை வில்வம்
நல்பருத்தி வெண்குன்றி கறுத்த சுண்டை
தோணப்பா தக்காளி வேப்பின் பட்டை
குருக்குடனே செந்தட்டி அறுகு சூரி
காணப்பா பணப்புல்லு விஷ்ணுமூலி
நல்தாரா வல்லாரை உருவி வேரே. 30

வேரோடே கழஞ்சி ரெண்டு இதுகளெல்லாம்
விள்ளுகிறேன் நான் ஏலம் சுக்குடனே
சாரோடே வால்மிளகும் மதுரம்ஏலம் அக்கிறா
சாந்தமுள்ள சீரகமும் திரிகடுகும்
சேரடா அரிஆறும் ஓமம் இரண்டும்
திடம்பெறவே அமுக்கூரம் மாஞ்சிகாரம்
பாரடா வகை இரண்டு கழஞ்சி வாங்கி
பாலகனே சிவந்தஉள்ளி உழக்கு ரெண்டு. 31

இரண்டோடே குக்குடமும் காலே போக்கி
குணமாக நாலுதுண்டாய் தறித்துக் கொண்டு
கண்டாயோ நால்நாழி இறுகுறுணி புனலதிலே
கண்கூடாய் காணும்பார் கருதி வெந்து
விண்டாயோ ஆறுபடியாக்கிக் கொண்டு
விள்ளுகிறேன் இருநாழியதிலே வாங்கி
முண்டாயே இளநீர்பால் வகைக்கு நாழி
முறையோடே நால்படியும் ஒன்றதாக்கே. 32

ஆக்குவாய் கொம்பரக்கு குங்குமப்பூ
அடவாக வகைக்குஒரு கழஞ்சி வாங்கி

தாக்குவாய் கிழிகட்டி அதிலேபோட்டு
தயவாக எட்டொன்றாய் இறுத்து வாங்கி
நோக்கவே இருகழஞ்சி மீரை சீனி
நுணுக்கமுடன் மேல் சேர்த்துக் கொண்டபோது
தாக்குமடா ஈர்வாடு அகன்று போகும்
சதைசெய்யும் கொழுத்துகபம் சாறாதன்றே. 33

சாராமல் இருப்பதற்கு முறிவு கட்டும்
சாந்தமுடன் ஒற்றல் ஒன்று சொல்லக் கேளு
தராவின் இலையை வாங்கி கூறாமல் ஒருபிடிதான்
சதைத்து கெட்டி நல்லெண்ணை தனிலே வெந்து
பாராமல் முறிவுதான் சிவக்கு மட்டும்
பார்த்தெடுத்து அனத்திவிடு பாகமாக
ஆரார்க்கும் சொல்வோமோ இந்தப் போக்கு
அறிவுள்ளோர் அறிவார்கள் அறிந்து செய்யே 34

ஆலம்பால் எண்ணை

செய்வதற்கு ஆலம்பால் எண்ணெய் கேளு
ஜெகத்திலுள்ள மானிடர்க்கு முறிவுதேற
ஆய்வதற்கு ஆலம்பால் நாழிகூட்டி
அடவுடனே கட்டுச்சி சதைதான் நாழி
வையகத்தோர் வலையான தோலும் ஒன்று
வகையாக தான்சேர்த்து இன்னம் கேளு
மொய்வதுகேள் நன்னாரி ராமிச்சோடு
உத்தமனே வகைக்கு ரெண்டுகழஞ்சிவாங்கு. 35

வாங்கியே இடித்தெல்லாம் ஒன்று சேர்த்து
வளமாக நல்லெண்ணை தன்னில் தானே
வாங்கியே அடுப்பேத்தி சிறுதீபம் போட்டு
சிதறாமல் கிண்டி வடித்துக் கொண்டு
நீங்காமல் தைலமிட்டு நவநாள் மட்டும்
நினைவோடே செய்துவர வாய்க்கும் சொன்னேன்
தாங்காத புண்புரைகள் முறிவு கெட்டு
சதைதள்ளல் போன்றவையும் சாறாதென்றே. 36

குளியல் எண்ணை

என்றதொரு முறிவு கண்டவர்களுக்கு
குளிக்க எண்ணைஒன்று விளம்புகிறேன்கேளு

ஒன்றதொரு மேனிச்சார் காணச்சாறும்
நன்றெனவே வகைசாறு நாழியாகும்
நன்றான திரிகடுகு தகரம் கொட்டம்
நான் சொன்னேன் சனி ஞாயர் அரத்தை பாலை
நன்றாக வகைவகைக்கு கழஞ்சிரெண்டாம்
கலந்தரைத்து எண்ணைநாழி தன்னில் காய்ச்சே. 37

காய்ச்சியே வடித்திடுவாய் சரல் பருவம்
கைகண்ட தைலமது குளித்து வந்தால்
போச்சுதே நரம்புபிடி அசைவு நோவு
புண்போலே நோவுகின்ற நோக்காடெல்லாம்
காய்ச்சலொடு கண்மயக்கம் கண்டுவீக்கம்
கண்வலி காதில்வலி கவிட்டல் நோவும்
மூச்சேதான் விடுமுன்னே தீருமென்று
முனியுரையின் வாக்கியத்தை முனைந்து செய்யே. 38

வசவு எண்ணை

முனைந்து செய் வசவுஎண்ணை வைக்கும் மார்க்கம்
முறையோடே சொல்லுகிறேன் குமரிநீரும்
புளைந்து பழம் பிழிந்தெடுத்த சாறு ரெண்டும்
புனைமுருங்கை இலைச்சாறும் கூட்டிச்சேரு
நனையாமல் தனிச்சாறும் வகைக் குழக்கு
நல்லெண்ணை தேங்காஎண்ணை ஏரண்டஎண்ணை
ஆனநடை வகைஉழக்கு அதுவோடொக்க
அடக்கிவை தோடைவேர் கசகசாவேர். 39

கசகசா நன்னாரி சூரை வித்தும்
கட்டாக முக்கழஞ்சி கருதியாட்டி
அசவில்லா தொன்றர்க அரைத்துக்காய்ச்சி
அழகான மெழுகுபதம் வடித்துக் கொண்டு
வசைலாகப் பொரிதனிலே முக்கூட்டிட்டு
வளமாகத் தடவிவந்தால் வசனிப்பேன் கேள்
வசையாத ஸ்தலமுண்டோ முறிவுகண்டால்
மடையர்க்கும் மட்டியர்க்கும் வசனிக்காதே. 40

தோடைவேர் கஷாயம்

தோடைவேர் கஷாயம்தன்னை சொல்லக்கேளு
வகையான் தோடைவேர் பலந்தான் பத்து

இடையுடனே கொம்பரக்குக் கழஞ்சி மூன்று
இதமாகப் பொடித்துக் கிளிகட்டிக் கொண்டு
எசவுடனே எட்டொன்றாய் வற்றக்காய்ச்சி
என்மகனே அரித்தெடுத்து வைத்துக் கொண்டு
அசைவுடனே தேன் சீனி மேதை
அரிசியிடை இட்டருந்த அகலும் ஈடே. 41

ஆடாதோடை நெய்

இயம்புவேன் ஆடாதோடை நெய்தான் ஒன்று
ஈடென்ற சகல சயம் தீரவென்று
இயம்புவேன் தோடைவேர் கண்டங்கத்திரி
இயல்பான நிலவாகை நன்னாரி சீந்தில்
இயம்புவேன் சந்தம் வில்லை முத்தம் இசங்கு
இருள் காட்டில் உள்ள குருவி கருந்துடரி
இயம்புவேன் கருத்தசுண்டை காணு சதாவேலி
வெள்ளருகு தூதுவளை உளிஞ்ஞை தாராவேரே. 42

வேரான இரண்டுபத்து பலமும் வாங்கி
விள்ளுகிறேன் தூணி நீரில் எட்டொன்றக்கி
காராவின் நெய்படிதான் ஒன்று கேளு
கடைமருந்து சீரகம் இரண்டு கற்கடகசிங்கி
நேரான திரிகடுகு திரிசாதியும்
நிலமதுரம் கொட்டமொடு விடயம் குப்பை
சேரடா வேப்பிலை அரத்தை மாஞ்சி
திடமுள்ள வால்மிளகு ஏலம் மல்லி. 43

மல்லியும் கெருடக்கல் தகரம் ஓமம்
வாங்குநெய் கோரோசனை கல்மதமும் தங்கம்
சொல்லிவிட்டேன் வெள்ளியொடு வகைக்குரண்டு
துணிந்தெடுத்துப் பாகமுடன் பொடியும் செய்து
அல்லலில்லா தோடைகத்தரி கையான் சங்கு
அரிகரும்பு தூதுளைப்பூ சோலம் சட்டி
வல்லியரே வகைக்குசாறு படியாய் வாங்கி
வெள்ளாடு உடம்பு ரெத்தம் படிதான் வாங்கே. 44

வாங்கியே இதுகளெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து
வரும்பாண்டம் அதிலூற்றி அனல் மூட்டி

ஓங்கியே கிண்டிவற்றி மெழுகதாக்கி
குருபொருளைத் தான்வடித்து முடித்துக்கொண்டு
தாங்கியே நோயாளி தனக்கு நெய்யை
தடமோங்கி ஈராறு நேரம் கொண்டால்
ஓங்கியே ஓடுமடா தோடை நெய்யால்
என் சொல்வேன் தீரும்நோய் தன்னைக் கேளே. 45

கேளப்பா வறும்மது நூற்றெட்டால் கொண்ட
கேடுசயம் எட்டுடனே வறட்சை ஈளை
நாளப்பா அஸ்திசுரம் அஸ்திக் காய்ச்சல்
நாள்தோறும் வந்திடும் காந்திச்சூடு
சூளப்பா அரோசிகமும் கிராணி வாய்வு
சுளுக்குடனே கொளுத்து வலி வன்னி
ஆளப்பா கடைத்துரும்பு போலேதானே
அகலுமடா நெய்யினுடைய பெருமைதானே. 46

பெருமை பெறும் சாத்தியத்தின் குணத்தைக்கேளு
பெலத்த பித்த நாடியது பிசந்ததானால்
அருமையுள்ள வற்மமதில் அனல்தான்மீறி
அடங்கல் தலம் தான்குளிர்ந்து முறிவு குன்னும்
திருதிரென நெஞ்சிலிடி ஏங்கல் விக்கல்
திட்டுமுட்டு கொளுத்துடனே சுவாசம் காணும்
வரும் கபங்கள் குவளைபோல போலே
வரும் சத்தில் அன்னமது திகட்டும் பாரே. 47

காணாத நாடிநிலை மூன்றும் பம்மும்
கண்மயக்கம் காய்ச்சல்சுரம் கடினம் காணும்
தோணாது சொல்குளறும் மறதிமெத்த
தும்மல் கபம் அடிக்கடிதான் சுழட்டும் வாய்நீர்
காணாது பித்தமுடன் புலம்பும் தோற்றம்
காணுதே வாய்குளறும் நடுநடுங்கும்
வாணாளை வாங்கும் இந்த குறிகள்கண்டால்
வையகத்தான் இதை அறியா மயங்குவானே. 48

மயங்காமல் குறிகுணத்தை சொல்லிவிட்டேன்
மாய்கையிலே வீழாமல் நிலையில் நில்லு
தியங்காமல் சூஸ்திரத்தில் சொன்ன பாகம்
துணிந்து முறை பிசகாமல் மருந்தைச் செய்தால்

பயங்காட்டி ஏழைகளைக் கெடுக்க வேண்டாம்
பழநூலை நீ அறிந்து பார்த்து நில்லு
தயங்காமல் தனித்தியானம் செய்து கொண்டு
தந்திரம் போல் மருந்துகளை பிரயோகிப்பாயே. 49

நில்லென்ற வழிதப்பி நடந்தாயானால்
நிலை இரண்டும் வாய்க்காது நிலையாய்ச் சொன்னேன்
சொல்லொன்றும் தப்பாது சூட்சம் பாரு
துணிகரமாய் வினையொன்றும் செய்திடாதே
கொல்லாத வற்ம வைத்திய சூஸ்திரம்தான்
சொல்லிவைத்தேன் ஐம்பதிற்குள் அடக்கமாக
பொல்லாதிலா அடக்கம் ப்தினாறும் பீரங்கி நூறும்
புகழாக செய்திடுவாய் நூலும் முற்றே. 50

1. கண்டத்தின் மேல் திலர்தகாலத்திலிருந்து சீறுங் கொல்லியுள்பட சுற்றளவை எடுத்து இரண்டாய் மடக்கிப் பார்த்தால் சீறுங்கொல்லியும் திலர்த காலமும் அறியலாம். அதை இரண்டாய் மடக்கினால் திலர்த காலத்திலிருந்து ஒட்டு வர்மமும், செவிக் குத்துக் காலமும், குருத்துக் குற்றியும், சுளியாடி வற்மமும், உச்சி வர்மமும், கோர்ச்சைக் காலமும் அறியலாம், அதுபோல இடமும், வலமும் கண்டுகொள்க.

2. அதை இரண்டாக மடக்கினால் நட்சத்திரக் காலமும் முன்வெட்டி வர்மமும் அறியலாம். அதை இரண்டாக மடக்கினால் கண்மணி வற்மமும், கண்ணாடிக் காலமும் பால வர்மமும் அறியலாம். பின்புறத்தில் சீறுங் கொல்லியிலிருந்து நாலாய் மடக்கி கீழ்நோக்கி வளைமுடிந்த வர்மமும், காக்கடைக் காலமும், நெட்டி வற்மமும் அறியலாம். அது போலவே இடமும் வலமும் ஆகும்.

3. கண்டத்தில் தொண்டை நடுவில் அளவெடுத்து இரண்டாக மடக்கினால் முன்நாக்குத் தள்ளி வற்மமும், பின் நாக்கு வற்மமும் அறியலாம். அதை இரண்டாக மடக்கினால் கண்டத்தில் இடத்தும், வலத்தும் நடுக்கு வற்மமும், காறக் குழி வற்மமும் அறியலாம் அதை இரண்டாக மடக்கினால் கீழே தும்மிக் காலமும், மேலே உறக்கக் காலமும், வலது பக்கத்து நேர் மூத்திரக் காலமும் அறியலாம். இட, வலமும் இதுபோலவே.

4. தும்மிக் காலத்திலிருந்து கீழ்பக்கம் உந்தி வற்மத்தை அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் நேர் வற்மம் அறியலாம். நேர் வற்மத்திலிருந்து வலது பக்கம் அளவெடுத்தால் அடப்பக்காலம் அறியலாம். அதன் கீழ்பக்கம் பார்த்தால் சுருதி வற்மம் அறியலாம். மேல் பக்கம் பார்த்தால் புஜ வற்மம் அறியலாம். அதை இரண்டாய் மடக்கினால் நடுக்கு வற்மமும், எல்லு வற்மமும் அறியலாம், கீழ் உறுமி வற்மம் அறியலாம், இத்தனையும் பரந்த அளவே.

5. முன் மார்பு, குறிக்காலம் இரண்டும் அளவெடுத்து நேரே அளந்து பார்த்தால் மேல் பக்கம் திவளைக் காலம் அறியலாம். வெள்ளீரல் வற்மத்தையும் அறியலாம். கீழ் காரீரல் வற்மத்தையும் அறியலாம். அதை இரண்டாய் மடக்கினால் சித்திரைக் காலம் அறியலாம். எலும்புருக்கியும் அறியலாம். அதுபோல வலது பக்கமும் அளவு நூல்சரி. அத்திக் காந்தாரியின் கீழ்பக்கம், எலும்பு வற்மம் நேரே மேல் பக்கம், காரீரல் வற்மமிது நாலுக்கும் நடுவானஸ்தலம் குற்றிக்காலம்

6. குற்றிக் காலமும் உந்தியில்ருந்து சடையாந்த காலமும் சுற்றளவு எடுத்து அதை இரண்டாய் மடக்கினால் இடத்தும் வலத்தும் உந்திக்கும்

நேரே மேல் இளங்குறுத்து வற்மம். அதை இரண்டாய் மடக்கினால் சிறிய அத்திச் சுருக்கியும் அந்த அளவில் தானே நேர் வலிய அத்திச் சுருக்கியும் அதை விலகி நேர் அளவில் முண்டெல்லு வற்மமும் ஆகும். இது போலவே இடத்தும் வலத்தும் உண்டு.

7. வளமுடிந்த வற்மத்திற்குக் கீழ் உந்தி வற்மத்திக்கு மறுகாலமும் அதை அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் கொம்பேறி வருமத்தை அறியலாம். அதை இரண்டாக மடக்கினால் நெஞ்சில் நடு வற்மத்துக்கு நடுக்கு வற்மத்திற்கு மறுகாலம் அறியலாம். மேல்அறியலாம். கொம்பேரி வற்மத்துக்கு மறுகாலம் கீழ்பாகம் உறுமிக்காலத்துக்கு மறுகாலம் அறியலாம்.

8. இனி பூட்டில் தள்ளெலும்பு மேலெலும்பில் காக்கட்டை காலத்திலிருந்தும் நெடிய அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் சிப்பித் தூங்கி ஸ்தலவற்மம் அறியலாம். அதை இரண்டாய் மடக்கினால் மேல் பக்கம் சிப்பி வற்மம் அறியலாம். தள்ளுஎலும்பிலிருந்து மேல்பாகம் அந்த மடக்கிப் பிடித்தால் நாவாரி எல்லு வற்மம் அறியலாம்.

9. சிப்பித் தூங்கிச் சதையிலிருந்து நேரே புறதாரை பிடித்தால் அகத்தில் வார்வற்மம் அறியலாம், சிப்பி வற்மத்திலிருந்து அளவெடுத்தால் கைபுஜம் பொருந்து அறியலாம். இதுபோலே மறுபுறமும் உண்டு.

10. சிப்பி வற்மத்திற்கு அகதாரை புஜவர்மத்தை சேர்ந்ததுஅது பள்ளையின் உள்ளே கொண்டது. மறுகாலம் புஜவர்மம். அதற்கு இடத்தும் வலத்தும் உள்ளே கொண்ட வற்மத்திற்கு புறதாரை என்று அறிக. உந்தியிலிருந்து கீழ்பக்கம் கல்லிடைக் காலம் வரை அளவெடுத்து இரண்டாக மடக்கினால் மூத்திரக் காலம் அறியலாம். அதே அளவை மூத்திரக் காலத்திலிருந்து இடம் வலம் திருப்ப பதப்பு வற்மம் அறியலாம்.

11. பதப்பு வற்மத்திலிருந்து அந்த நூலை அதே அளவோடு கீழ்பாகம் எடுத்துப் பார்த்தால் அங்கு உருளை விசை நரம்பு அறியலாம். கல்லிடைக் காலத்திற்கு மறுகாலம் தும்பு வற்மம். கல்லிடைக் காலத்திற்கு இருந்து முன்சொன்ன அளவு பிரகாரம் வலது பாகம் வித்து வற்மம் அறியலாம்.

12. கல்லிடைக் காலத்திலிருந்து அந்த நூலை இரண்டாக மடக்கினால் லிங்கத்தின் நடுக்கு வற்மம் அறியலாம். அந்த நூலை கல்லிடைக் காலத்திலிருந்து அளவெடுத்துப் பார்த்தால் மும்மூர்த்தி வற்மம் மூன்றும் அறியலாம். இந்த ஒன்பது வற்மமும் செய்யக் கூடாது. செய்தால் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவம் உண்டு. அகத்தில் சந்தெலும்பு, சதைஎலும்பு, கீழ்படை காலு வெள்ளைக்கண்ணு சரிந்து விட்டு வரும். அந்த நூலை இரண்டாக மடக்கினால் வரும் வறும இடம் முறிந்தால் பிழையாது.

13. அதன் மேல் பக்கம் ஒரு வற்மமும் கீழ்பக்கம் ஒரு வற்மமும் அங்கே உண்டு. அந்த நூலை இரண்டாய் மடக்கினால் சரியாய் முறிந்த ஸ்தலம் தொண்ணூறு கழிய வேண்டும். அதில் அகதாரையும், புறதாரையும் இரண்டு வற்மங்கள் உண்டு.

14. அடித்துடை மொழியுள்பட அகநரம்பு விசை உள்பட கீழ்பாகம் கீழ்நோக்கியும், மேல்பாகம் மேல் நோக்கியும் வந்த வற்மம் எட்டும் நரம்பு முறிந்தாலும் பிசகினாலும் குற்றம் தீராது. முட்டுச் சிரட்டையுள்பட சுற்றளவை எடுத்துப் பார்த்தால் சிரட்டை பிசகியிருப்பதை அறியலாம்.. அதை மூன்றாய் மடக்கினால் வலதுபக்கம் பதைப்பு வற்மம் அறியலாம். அதிலிருந்து ஒரு சுற்றுவிட்டு அளவெடுத்து பார்த்தால் மொளி பொருந்து வற்மம் அறியலாம் முட்டுகண்ணு வற்மத்திலிருந்து கரண்டைக் கண்ணு அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் குதிரை முகமும் கீழ்பாகம் நுனிநாக்கும் முறிந்தால் பிழையாது.

15. நுனிநாக்கு வற்மத்திலிலிருந்து கீழ்பாகம் அதை இரண்டாக மடக்கினால் வயதாதி வற்மம். மேல்பக்கம் தும்மிக்கால வற்மமும் தொண்ணூறு கழிய வேண்டும். கபில் கண்ணும் பெருவிரல் நுனியும் அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் பாதசக்கர வற்மம் அறியலாம். முறிந்தால் பிழையாது. பாதசக்கர வற்மத்தின் மேல் பக்கம் பார்த்தால் மொளி பொருந்து வற்மம் அறியலாம். மறுபுறத்தில் கண்ணு வற்மம் அறியலாம்.

16. அதை இரண்டாய் மடக்கினால் கண்ணு வற்மத் திலிருந்து குதிங்கால் வற்மம். அதை இரண்டாய் மடக்கினால் நரம்பு நடுக்கு முடிச்சி வற்மம் அறியலாம். அங்கே முறிந்தால் பிழையாது. இதுபோலே மறு பக்கமும் உண்டு. மேல்பாகம் கையில் கமுக்குழி பொருந்திலிருந்தும் முழங்கை வெள்ளை மொழியிலிருந்தும் அளவெடுத்து இரண்டாக மடக்கினால் நடுக்கு வற்மத்திலிருந்து மேல்பக்கம் பார்த்தால் அங்கே முறிந்தால் பிழையாது. அது கழிய நாற்பத்தோரு நாள் ஆகும்.

17. புறங்கை மொழியிலும் முன்சொன்ன அகத்து வெள்ளையிலும் அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் நடுவிரல் இருந்து கீழே அளவைப் பார்த்தால் நாடி சுத்தி வற்மம் அறியலாம். அதில் முறிந்தாலும் பிழையாது. முட்டின் சுற்றளவை அளவெடுத்து இரண்டாய் மடக்கிப் பார்த்தால் மேல் பக்கம் கைமண்ண வற்மமும் கீழ் பக்கம் மொழிபொருந்து வற்மமும் அறியலாம். அதை இரண்டாய் மடக்கினால் முடிப்பதப்பு வற்மமும், புறதாரை பினை நரம்பு வற்மமும் அறியலாம்.

18. கையில் பெருவிரல் விட்டு சுற்றளவை எடுத்து இரண்டாய் மடக்கினால் அகதாரை புறதாரை சர்க்கரை வற்மமும் அறியலாம். அதை

இரண்டாய் மடக்கினால் மொளி பொருந்து வற்மம் புறதாரை அறியலாம். நாலு விரலில் மொளி சுற்றளவு எடுத்து சிறுவிரல் மொளியிலிருந்து மேல்பக்கம் சொர்ண வெற்றிக் காலம் மூன்றும் அறியலாம். சொர்ண வெற்றிக் காலத்திலிருந்து அந்த நரம்பின் மேல்பாகம் நெடுக்கு வற்மம் மூன்றும் அறியலாம்.

19. பெருவிரலில் இருந்து கை மணிக்கட்டு வரைக்கும் உள்பட நேர் அளவெடுத்து இரண்டாய் மடக்கி அதை இரண்டாய் மடக்கினால் கவளிக்காலம் அறியலாம். கோழிக் கழுத்து வற்மம் சுற்றளவை எடுத்து இரண்டாய் மடக்கினால் கோழிக் கழுத்து அகதாரை அறியலாம். பிறதாரை பிரந்தல வற்மம் அறியலாம். இதுபோல இடத்தும் வலத்தும் கண்ணுவற்மம் இரண்டும் கண்டு கொள்க. அவ்விடம் முறிந்தால் குற்றம் தீராது.

20. •பிழைக்கும் மேல் எழுதிய வற்மங்களுக்கு மற்றுமுள்ள பிரமாணங்கள் பார்க்கவும் முன்னே எழுதியுள்ள வற்மங்களுக்கு அறிந்தவர்க்கும் இப்படித் தெரிந்தால் மாற்றனை செய்து கொள்ள வேண்டும். அறியாமல் செய்த பேர்கள் 18ல் கொண்ட ரோகங்களில் ஒன்றில் பட்டு மரிப்பான்.

21. வர்மம் சகலமும் இளக்குவதற்கு அடங்கல் சொல்லுகிறேன். யாராவது வற்மம் கொண்டால் சகல குரு கடாட்சத்துடன் உள்பயந்து இளக்க வேண்டும் இலகுமா இளகாதா என்றறிய சோதனை முகத்தில் அடக்கக் காலம் பிடித்து அறியவும். அடங்கல் காலம் அறிய இரு செவியும் பிடித்துக் கொண்டு அமர்த்தி நாசியிலும், வாயிலும் இரு கைகொண்டு அமர்த்திப் பார்த்தால் கொஞ்ச நேரத்தில் ஜீவன் இருந்தால் ஆள் அதிகம் மூச்சு முட்டிச் சஞ்சலப்படும். இப்படி பரீட்சித்து சாரமில்லையானால் மூக்கு இரண்டிலும் வெற்றிலையும் நல்மிளகும், உப்பும், தும்பை இலையும் சேர்த்து அரைத்துப் பிழிந்து இரண்டு சொட்டு வீதம் இரண்டு மூக்கிலும் விட்டால் உயிர் இருந்தால் கழுத்தை தூக்கி அசைப்பான். இப்படிச் செய்தும் அசையவில்லை என்றால் வெற்றிலைச் சாற்றில் நல்ல மிளகை உரைத்து கண் கருவிழியில் போடவும். உயிர் இருந்தது என்றால் கண்ணில் நீர் வடியும். இமைகள் பொடுபொடு என்று அசைந்து விழிக்கப்பார்க்கும். இதிலும் அசையா விட்டால் வேலிப்பருத்தியைப் பிழிந்து சாறு எடுத்து இரண்டு சொட்டு நாசியில் நசியம் இடவேண்டும். உயிர் இருந்தால் கழுத்தை அசைப்பான்.

22. இதிலும் ஜீவன் இல்லாவிட்டால் சரீரத்தை கிள்ளிப் பிடிக்கவும். பிடித்த இடம் குளிர்ந்து இருக்கும். அப்படி இருந்தால் உயிர் இல்லை என்று அறிக. பிடித்த இடம் முன்போல் ஆனால் ஜீவன் உண்டு. அதை விடுத்து தலையைப் பிடித்து தூக்கினால் உடலில் தொய்வு ஏற்படும். தலை

குளிர்ந்து இருக்கும். முன் சொன்ன அடக்க காலத்தின் கீழ் சொன்ன பரீட்சை பிரகாரம் ஜீவன் உண்டாகியிருந்தால் ஒன்றரைநாள் வரை நிலமைக்கு தக்கவாறு சமாதானம் சொல்லவும்.

23. இப்படி சமாதானம் சொல்லியும் கேட்காவிட்டால் உடையவரின் சம்மதத்தின்படி நாம் அறிந்தபிரகாரம் அடங்கலில் கொண்டோ அல்லது அடிபட்ட இடத்தின் ஸ்தலம் திடப்படுத்தியோ மறுகாலங்கள் கையமர்த்தியோ இளக்கிப் பார்க்க வேண்டும். இதல்லாமல் அகதாரை தும்மிக்காலம், கீழ்கல்லிடைக் காலம், வரைகொண்ட வற்மங்களுக்கு மறுகாலங் கொண்டால் முன் பிறங்கை அமர்த்துவது தவிர தட்டக்கூடாது.

24. இடப்பக்கம் விலாவுக்கும், வலப்பக்கம் விலாவுக்கும் கொண்டிருந்தால் முன் சொன்னது போலே கையமர்த்தி விடவும். எடுத்து இருத்தி முன் சொன்னது போல் சுக்கு பொடித்து நாசியிலும், செவியிலும் ஊதி கைபொத்தி உச்சி பதைப்பில் சுக்கைச் சவைத்து ஊதி உச்சியைக் கசக்கி பாகமாய் இடதுகையை அடியிலும் வலது கையை மேலும் நாலுவிரல் உயரம் கையுயர்த்தி தட்டொன்று தட்டி இடத்தும் வலத்தும் இரண்டு கைகொண்டு தடவி விலங்கு வர்மத்தில் கொண்டு கையமாத்திக் கொள்க.

25. இரண்டாவது முன்புறம் தும்மிக்காலம் வரையில் புறம் வளமுடிந்த வற்மம் வரை தடவிக் கையமர்த்திக் கொள்க. இந்தப் பிரகாரம் கண்டத்தின் மேல் ஐந்து இடங்களிலும் செய்து கொள்க. அங்கே இருந்து கண்டத்திற்கு கீழ் தும்மிக் காலத்திலிருந்து கீழ்க் கல்லிடைக் காலம் வரை பிறதாரை வளமுடிந்த காலத்திலிருந்து சடைப்பிறந்த காலம் வரை கைநிறை பிணையாமல் முன்னும் பின்னும் ஒன்றுபோல தடவி முன் சொன்ன தலம் இரண்டிலும் கை அமர்த்திக் கொள்க. இது போல கமுக்குழிக்குள் இடத்தும் வலத்தும் கையிட்டு அச்சிக் காந்தாரி வரை தள்ளெலும்பில் கையமர்த்திக் கொள்க.

26. இது புறங்காரை எலும்பு நடுக்கு வற்மத்திலிருந்து வலது புறம் புறதாரை தோள்புறம் உலர்ந்த ஸ்தலத்திலிருந்து கை நிறையோடே தடவி முன்டெலும்பின் வறுமத்தில் பிடித்து கையமர்த்திக் கொள்ளவும். முன்புறம் சிறிய அத்திச் சுருக்கியில் தடவி அமர்த்திக் கொள்ளவும். இப்படி இருபக்கமும் கண்டுகொள்க. கீழ்புறம் உந்திக்கும் கீழ் மூர்த்திக்கு மேல் 9 வற்மமும் கொண்டால் முன் பிரமாணப்படி செய்யவும்.

27. கைகால் நோவுமானால் கைகுழியிலிருந்து ஒரு விரல் மேலே கைநிறைய் தடவி கோழிக்குத்து வற்மத்தில் கையமர்த்தி இதுபோல மறுபுறத்தில் அக்கையிலும் அமர்த்தி கையை ஒன்றி உதறி விரல்களை இழுத்து நிமிர்த்தி

விடவும். இப்படி நாலு அடங்கலும் ஒரு கையில் செய்க. அதுபோலே காலில் அகம் உள் கையிலும் புறதாரை சிப்பியிலிருந்து தடவிக் காலின் கண்களில் கொண்டு நிறுத்தவும்.

28. இது போலவே மறுகாலிலும் செய்யவும். விரல்களை எல்லாம் இழுத்துவிட்டு ஒன்று உதறி விடவும். மேலே சொன்ன கண்டத்தின் அடங்கல் ஐந்தும் செய்து நாடியைப் பிடித்து ஏந்தி பின்கலையும் பிடித்து இடத்தும் வலத்தும் அசைத்து விடவும், கண்டத்தின் கீழ் கையிரண்டும் முன் பக்கத்தில் கட்டி புறதாரை நின்று உப்புக்குத்தியில் சவட்டி கை யிரண்டையும் நெஞ்சில் சேர்த்து அசைத்துப் பிடி, நெஞ்சில் நெருக்கி விடவும், கால் இரண்டும் உதறி விடவும்,

29. எந்த அடங்கல் செய்தாலும் நோயாளிக்கு நினைவு உணர்ச்சி எப்போது உண்டாகிறதோ அப்போது உடனே தண்ணீர் கொடுக்க வேண்டும். எந்த வற்மத்திற்கும் கஞ்சி சுக்கு பொடி போட்டுக் காய்த்துக் கொடுக்க வேண்டும். தும்மிக் காலத்திற்கு கீழ் மூத்திரக்காலம் வரை பிறதாரை வளை முடித்த காலத்தின் கீழ் சடையாந்த காலம் வரை நிரப்பு சரியிட்டு கையமர்த்திப் பார்த்தால் அலறி மூச்சு விடுவான். சாதாரணமாகி விட்டால் இளகுவது நிச்சயம் இதுபோலே இடத்தும் வலத்தும் கீழ்பட வலிய அத்திச் சுருக்கி வரை கையமர்த்திப் பார்த்தால் சுவாசம் அலறும் சாதாரணமாய் விடுகிறதாயிருந்தால் பிழைக்க இதல்லாமல், வறுமத்தில் கொண்டு முன் சொன்னபடி கைஅமர்த்தினால் அமரும். சுவாசம் இது பிரகாரமே போனால் நாம் சொன்ன பிரகாரம் கைபாகமாய் இளக்கிக் கொள்ள வேண்டும்.

30. இப்பிரகாரம் யாராகிலும் வற்மம் கொண்டால் அதை இளக்குவதற்கு மொட்டை தலையுடனோ, நடை பிடித்தோ வந்து அழைத்தால் போகக் கூடாது. உள்ளேயும், வெளியேயும் கால் வைத்து அழைத்தால் போகக் கூடாது. வீட்டின் உள்ளே வந்து நின்று கொண்டு காலைச் சுரண்டியும் தேகத்தைச் சொரிந்து அழைத்தாலும் போகக் கூடாது. மேலும் பெண்கள் தலை கலைந்து ஓடி வந்து முற்றத்தில் நின்றாலும், வெளியில் நின்றாலும் தலையில் கையை வைத்து அழுது கொண்டு அழைத்தாலும் போகக் கூடாது வெளியில் இறங்கும் போது நாய் உதறலும், மொட்டைத் தலை காண்கிலும், மண் வெட்டி காண்கிலும், எங்கே என்று கேட்டாலும், வலது கால் இடறினாலும் இடதுகால் மடங்கினாலும் போகக் கூடாது. இது குரு முனிவர் வாக்கு. இந்த முறைகளை கண்டு நடந்து கொள்ளவும்.

மரணகண்டி

காப்பு

ஆயுர்வேத முன்னோர் அறிவுடனோதி வைத்த
நோய்பல முறிவுதன்னை ஆராய்ந்து பார்க்கவென்று
வாய்மையாய் தெரிந்து யானும் மருந்துகள் பற்றோடுஎண்ணை
தூய்மையாய்த் தெரிந்து யானும் சுகம்பெற உண்ணசொன்னேன்

பண்டிதனே வறுமமது அறியவென்றால்
பார்த்திடுவாய் குருநாடி கைநரடி தேர்ந்து
கண்டிதமாய் நாடியது காலந்தப்பி
கலந்து ஒரு நாடியிருகையில் வீசில்
பண்டிதனே வறுமமென்று அறிந்து நீயும்
பார்த்திடுவாய் தெளிவறிந்து பரனைப்போன்று
கண்டிதமாய் செய்முறையாய் கைசெய்வாயே
கண்டு கொள்ள குருசொல்லின் கருத்துகேளே. 1

கேளப்பா வறுமந்தான் கணக்குச் சொல்வேன்
கெடிதான வாதவறுமம் அறுபத்திநாலு
கேளப்பா பித்தவற்மம் இருபத்திஆறு
திறமான சிலேற்பனந்தான் ஆறுஅதாகும்
நாளப்பா வாதவற்மம் நயந்து செய்வாய்
நடுவான பித்தவற்மம் பயமேயில்லை
மாளப்பா சிலேற்பனந்தான் கொண்டால் நீயும்
வளமாக எண்ணாதே மரணம் பாரே. 2

கெற்பிணிகளுக்கு வற்ம இளக்கு முறை

சதமுடனே மயக்கம் உள்ள தையலர்க்கு
கூந்தல்தனை குலைந்து நாலுபங்காய் வகுத்துப் போட்டு
நிதமுடனே குருபரனை இருத்திப் போற்றி
நீ கீழொரு கை அக்கையாயே புண்ணியனே
பதைபதைப்பு முன்பதைப்பு மட்டும் ஆற்றியே
தடவிப்பின் நாசியிலும் அப்புசிப்பி அரையின் கீழ்
கதைப்பான கழுத்து மட்டும் நால்வசமும் கசக்கிறாவி
முதுப்புறம் தடவி அமர்த்திவைத்து சாற்றி அடங்கல்
செய்துகொள்ளே. 1

கொள்ளப்பா இப்படியே செய்து கொண்டு
கோர்வாக மேல் சுங்கு திரியில் தானும்
நள்ளப்பா இருபுறமும் திருப்பிச் சுற்றி
நாயகமே தோளிரண்டும் அமர்த்திப்போடு
அள்ளப்பா உச்சியின்மேல் கையை வைத்து
அழகாக மூன்று தட்டு லேசாய்த் தட்டி
மொள்ளப்பா முறைப்படியே செய்தாயானால்
மீண்டுமே ஜீவனது மீளும்தானே. 2

மீளவே சுக்கு வெந்நீர் குடிக்கச் சொல்லு
மிதமான யேக்கம் என்றால் நீக்கிப்பார்த்து
ஆளவே சுருக்காகக் கலசந்தன்னில்
அடைவாகச் ஜலம் கொண்டு பரப்பிரும்மத்தை
வீளவே சிவம்என்று சேவித்துப் போற்றி
வீசியே முகந்தனிலே தெளித்தாயானால்
தூளலே மயக்கமது நீங்கியேதான்
துப்புரவாய் கண்முழிப்பான் நலமாய்தானே. 3

நலமான கஞ்சிமுறை விளம்பக் கேளு
நாயகனே உளிஞை குறுந்தொட்டி வில்லையோடு
நலமான சீரகமும் மதுரம் ஏலம்
நாயகனே வெந்தயத்தோடு ஏழுமாகும்
பலமான வகைக்கு கழஞ்சி யொன்று எடுத்து
வண்ணமாய் சதைத்து இரு கிளியாய்க் கட்டி
நலமாகத் தான்காய்ச்சி கிளியைநீக்கி
நன்றான அன்னப்பால் அருந்தி பத்தியம்போடே. 4

போடுநீ இப்படியே ரெட்டிப்பாக
புண்ணியனே சூட்சுமமாய் அருந்திடில் வற்மம் போச்சு
ஆடவே கொழுந்து நரம்பு தெற்றல் கண்டால்
ஆவின்நெய் சினி சிங்கன் பழம் ஓிலையுமாகும்
போடுநீ சமமாக கல்வத்திட்டு
கொடுவெந்நீரா லாட்டிமைபோலாக்கி
போடவே கெர்பிணிகள் வயர் விலாக்கள்
வண்மையாய் முதுகுமற்றும் இடத்தில் பூசே. 5

பூசிவிடு எண்ணமாய் கொழுந்து நரம்பு தெற்றல்
பூண்டோடு உளைச்சல்களும் ஓடிப்போகும்

ஆசியுடன் சூட்சம் சூட்சம் சூட்சமென்று
அமிர்த நிலை அறிய தெளிவாய்ச் சொன்னேன்
பூசித்து சிவனைத்தான் இத்தலங்கள் தெளிந்து
புண்ணியனே தையலர்க்கு இளக்கம் செய்தால்
ஆசியுடன் குருவருளால் ஜெயமதாகும்
அன்பான கெற்பிணி இளக்கம் முற்றே. 6

கறந்த மலை வாகடம்

கறந்த மலை மையத்தில் கன்னிமார் கோயிலுக்கு வடக்கே இரண்டு நாழிகை வழியில் ஒருசுனை உண்டு. அந்த சுனைக்கு மேற்கே மஞ்சள் போன்ற திட்டு உண்டு. அந்த திட்டுக்கும் வடசார்பில் ஒரு கள்ளியுண்டு. அதனுடைய இலை தாமரைக்காய் போல் வரிவரியாக இருக்கும். மரத்தைப் பார்த்தால் பொன்வண்டு முதுகு போலிருக்கும். அதனுடைய பாலை கொட்டாங்கச்சியில் பிடித்து செம்பை அதில் வெதும்பி துவைக்க பொன்னாகும். மரத்தின் பால் தேன் நிறமாக இருக்கும். அந்த பாலை மூன்று நாட்கள் சாப்பிட கிழவன் குமரனாவான் ஊமை பேசும், நினைத்த காரியங்கள் வசியமாகும் கேட்டதெல்லாம் கிடைக்கும். இப்படி ஒரு மண்டலம் சாப்பிட கற்ப காலம் இருப்பான் . இந்த மரத்திற்கு வடக்கே கருந்தும்பை உண்டு இந்த மூலிகையைக் கசக்கி செய சூதனில் பிழிய நொடிக்குள் குளிகையாகும். குளிகையை வாயிலடக்கிட நினைத்த இடங்களுக்கு கொண்டுபோய் விடும். கல்தாமரை கரத்தட்டி அளவற்ற கற்பமாம்.

கன்னிமார் கோயிலுக்கு வட கிழக்கில் ஒரு அம்பு போடும் தூளத்தில் செம்பறன் கல்லுபோல கொட்டியிருக்கும். வெள்ளைக்கல்லு நெரிசலாய்க் கிடக்கும். அவ்விடத்தில் ரோமவிருட்சம் உண்டு, நிறைய கற்பங்கள் உண்டு. அதன் வடக்கே ஒரு அம்பு போடும் தூரம் போனால் அவ்விடத்தில் நெரிசல் கல்லும் சிவந்த தரையுமாய் இருக்கும். அங்கே அழுகண்ணி தொழுகண்ணி உண்டு கலறி மறை உண்டு. அளவற்ற கற்பமுண்டு. கன்னிமார் கோயிலுக்கு கிழக்கே ஒரு அம்பு போடும் தூரம் போனால் அங்கு குங்கிலிய மரம், நெவ்விமரம் உண்டு. அல்லிடத்தில் கருப்பு அஞ்சனமை முக்கியமாயுண்டு. அதிலே ஐந்து தலை நாகமுண்டு. கண்ணுக்கு தெரியாது. ஜவ்வாது வாசனை வீசும் அதைக் கொண்டு அரியவும்.

18 சித்தர்கள் ஜாதி

கடிகையில் மலைமுனிவன் கண்ணானாகும்
கரைகாணும் ரோமரிஷி மிராட்டியனாகும்
திட்டமுடன் கருவுள்ளார் தனக்குச் சொல்லி
திடமான குடிமகன்தான் சொன்ன போதே
மாட்டிமையாய் கோரக்கர் வண்ணானாகும்
வகைமோசம் நூல்களெல்லாம் வரைந்து போட்டான்
உறுதியுள்ள போகருமே குசவனாகும்
ஒகோகோ அவன்பாடில் ஒப்பொன்றில்லை
கடியனான் கொங்கணன் மழுங்கைசாதி
காவியமாய் என்நூல் கருதினானே
கருதினான் சட்டைமுனி அனந்தங்கோடி
கருவனான அவன்குலமே சேனியனாகும்
பருதியுள்ள தச்சன்தான் ரெட்டியாகும்
இனமறியாமல் நூல்களெல்லாம் பாடிப்போட்டான்
அருமையுள்ள மச்சமுனி என்ன சொல்லேன்
அவன் குலந்தான் அம்பட்டன் ஆகுந்தானே
தானான திருவள்ளுவர் பறையனாகும்
சாஸ்திரத்தில் இந்நூலை சமைத்துப் போட்டான்
ஊனான இடைக்காடார் இடையனாகும்
உவமையில்லா சட்டைமுனி வண்ணானாகும்
மானான உவமைரிஷி புலையனாகும்
ஆமப்பா கல்கோட்டு முனி பரவனாகும்
நானான பிரம்மகுலம் நந்தீஷ்வரனாகும்
நாலாறு சாஸ்திரத்தில் நூல் அறிந்து பாசம்
பத்தான நாதரிஷி தன்னைக் கூறி
பல நூல் சாஸ்திரத்தை வெளியில் போட்டார்
நானென்றும் நூலைப் பார்த்துப் பார்த்து
நாட்டிலுள்ளோர் அலைந்து அலைந்து நாய் போலானார்
பேச்சென்ன அநேக நூல் பார்த்து பார்த்து
பிரம குலம் ஆதிமுனி பெரியோர் நூல்கள்
என்னோடு பதினென்பேர் பாடிப்போட்டார்
என்நூல் முறை அறியார் மயங்கிப் போவார்
பண்ணும் பிணி நோய் பலவும் பாடிப் போட்டார்
இந்நிலத்தில் பண்டிதரே கருநோய்தீர

இயம்பினேன் அகத்தீசர் எல்லோருக்காக
இந்நிலம் எங்கும் நிறைந்த ஜோதியான
இறையருளை குருவருள் துதித்து குணம் செல்வாவே.

அறம் 32

1. ஒதுவார்க்கு சாலை
2. ஓதுலார்க்கு உணவு
3. அறிவுசமைதாற்கு உண்டி
4. பசுவுக்கு வாய் உணவு
5. சிறைச் சோறு
6. அய்யம்
7. திண்பண்டம் நல்கல்
8. அறவைச் சோறு
9. மகப் பெறுவித்தல்
10. மகவு வளர்தல்
11. மகப்பால் வார்த்தல்
12. அனாதைப் பிணம் சுடுதல்
13. அனாதை தூரியம்
14. சுண்ணம்
15. நோய் மருந்து
16. வண்ணார்
17. நாவிதர்
18. கண்ணாடி
19. காதோலை
20. கண்மருந்து
21. தலைக்கு எண்ணை
22. பெண்போகம்
23. பிறதுயர்
24. தண்ணீர்பந்தல்
25. மடம்
26. தடம்
27. சோலை
28. ஆளிஞ்சுதரி
29. விளக்குக் குறை
30. விலைகொடுத்துயிர்காத்தல்
31. தேறுவிடுதல்
32. கன்னிகாதானம்

வர்ம ஆணி சூஸ்திரம்

முகவுரை.

மகாதவசிரேஷ்டரான கும்பமாமுனிவராலருளிச் செய்த வர்ம சாஸ்திரங்கள் பதிமூன்று கிரந்தங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலும் வர்மஸ்தலத்திற்குரிய விதிகளைத் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பினும் எக்காரணத்தைக் கொண்டோ பாடல்களெல்லாம் வழுவழுவெனச் சிதறிக்காண்கிறதாயினும் விதிகளெல்லாம் முறையே வருகிறதைநோக்கில் நம் முன்னோர்களால் வேறுபாஷைகளிலிருந்த்து தமிழில் பெயர்த்த குற்றமென்றே யூகிக்கவேண்டியிருக்கிறது. நிகழ்காலம் அடியிற்கண்ட மலையாள பாஷையிலுள்ள சாஸ்திரங்கள் திருவனந்தபுரம் புத்தன்கோட்டை திட்டக்குடிவீடு பி. ஆனந்தன் ஆசான் அவர்களால் எனக்குக்கிடைத்து மேற்படி யார்களால் தமிழில் மொழிபெயர்த்து அதன் கருத்துக்கிணங்க மேற்படி யார்களனுபவமுறைகளையுஞ் சேர்த்து மின்னினேர் மின்மினியென்னத் தொகுக்கத்துணிந்தது மஞ்ஞையின்முன்பே வான்கோழி நடனத்தொக்குமாயினு மிந்நூலைக் கண்ணுறும் கற்றோர் மற்றோராரும் மழலைச்சொல்லெனக் கருதி சாக்கடை நீரைச் சாகரமேற்கும்போலென்னை யாதரிக்குமாறு பன்முறையும் வேண்டிக்கொள்கிறேன்.

அடியார்க்கடிமை

கே. எஸ். ஸ்ரீனிவாசன்.

மருந்தின் ஸ்புடவிதி யெடைபாகம்.

எள்	8	கொண்டது	நெல்	1
நெல்	2	,,	உளுந்து	1
உளுந்து	2	,,	குன்றி	1
குன்றி	32	,,	விராகன்	1
விராகன்	1¼	,,	களஞ்சி	1
களஞ்சி	12	,,	பலம்	1
பலம்	5	,,	விராட்டி	1
விராட்டி	3	,,	காடைபுடம்	1
காடை	1½	,,	கௌதாரி	1
கௌதாரி	2	,,	குக்குடம்	1
குக்குடம்	2	,,	மூசா	1
மூசா	2	,,	வராகபுடம்	1
வராகம்	1½	,,	மறை	1
மறை	2	,,	கெஜபுடம்	1
கெஜபுடம்	6	,,	முழுகெஜபுடம்	1
முழுகெஜபுடம்	2	,,	சதுரகெஜ புடம்	1

மணல் மறை உமியிட்டு போடும் புடம் கும்பபுடமென்று பெயர் பூமியிற் விதிப்படி குழியாக்கியதனுள் போடும்புடம் பூப்புடம் அல்லது குழிபுடம் என்று பெயர்.

மருந்து எடை பாகம்

உளுந்து	1 -	கொண்டது	கிரேயின்	1.
கிரெயின்	2	,,	குன்றி	1.
குன்றி	3¾	,,	பணவிடை	1.
குன்றி	32	,,	விராகனிடை	1
விராகனிடை	1	,,	வெருகடிப்பிரமாணம்	1.
வெருகடிப்பிரமாணம்	2	,,	திரிகடிப்பிரமாணம்	1

எரிப்புத் திட்டம்.

தீபம்	1	கொண்டது	தீபாக்கினி	1.
தீபாக்கினி	12	,,	கமலாக்கினி	1.
கமலாக்கினி	12	,,	காடாக்கினி	1.

நூல்

கங்கையுந் திங்கள்சூடிக் கையின் மான் மழுவு மேந்தித்
தங்கிய மறைகடோறுந் தனித்திருந்தாண்டோர் மங்கை
பங்கினையுடைய தேகப்பற்றின் பற்றற்றா னென்னும்
பொங்கிய மோனவாழ்வின் புனிதத்தாழ் வணக்கஞ்செய்வாம். 1

அம்புவி யனைத்தும் ஞானவறிவுடையான் றோராருங்
கும்பிடு தெய்வமாகிக் குருமுனியெனும் பேர்வாய்ந்து
நம்புமா வர்மநூலை நயம்பட வகுத்தமோனக்
கும்பமா முனிதன்றாளைக் குவிந்துளமிருத்துவாமே. 2

வன்மனக் கசடைநீக்கி வருவன வறிந்துதானே
தன்மனந் தன்னைவென்று சதுர்மறை கடந்தவாரிக்
கன்மனத் தனையநாயேன் கடந்திடத் தடுத்தாட்கொண்ட
யென்குரு நாதன்றாளை யெனதுளத் திருத்தினேனே. 3

பதிதனக்குரிய பெண்பால் பகர்ந்திடு மறத்தையொப்ப
மதிபெருங் கடையஞ் சீனிவாசகன் றுணிந்தவாறே
பொதிகைவா ணாதன்முன்பாற் புகன்றிட்ட வர்மநூலை
விதிபெறச் சமைக்கவென்றே விரும்பினதவன் போலாக. 4

மின்னினேர் மின்மினிதான் மின்னிடும் மின்னையொப்பப்
பன்னூலு மறிந்தஞான பண்டித பாவலர்க
ளின்னூலை யகற்றாரென் றெனிருதயத் திடத்தினாலே
சொன்னேனானப் பெரியோர் துணையடி சிரமேற்சூடி. 5

வேறு

அலையுகின்ற மனந்தானே யடக்கம் வேண்டும்
அறிவாலே கோபமதை யகற்றவேண்டும்
நிலையுடைய குருபரனின் தீட்சைவேண்டும்
நிதநிதமுமா னதமாம்பூசைவேண்டும்

கலைகளநு னிலைகளெலா மறியவேண்டும்
கற்றதுவை யுயர்வழியிற் கருதவேண்டும்
நிலையுடைய பெரியோர்க ணேசம்வேண்டும்
நெறிவேண்டு முளத்திலிவை நிலைக்குந்தானே. 6

பெருநரம்பதனைச்சாரும் பேசிய வர்மமெல்லாங்
குருநாடி தன்னைச்சாருங் கொடுமைசேர் பிணிகளெல்லாங்
கருவினைசாரும் வித்தைக் கழறிய விஞ்சையாவுங்
குருவினைச் சேருமென்றே குருமுனி யுரைத்திட்டாரே. 7

வேறு

பூட்டியதோர் வர்மமெலா மிழக்கத்துள்ளே
பொருந்தியதோர் பிணிகளெல்லா மருந்தினுள்ளே
ஆட்டியதோர் ஞானமெலா மறிவினுள்ளே
யறைந்தபல சாஸ்திரமு மகத்தினுள்ளே
சூட்டியநூற் சுருதி யுக்தி யனுபோகத்துட்
டுலங்குமிவை நிலைகள் மனதடக்கத்துள்ளே
மாட்டியவை யானதினாலறிவைக் கொண்டே
வளர்த்திடுத லாகுமென வரைந்திட்டாரே. 8

வர்ம மென்பதறிய

வர்மமே கொண்டாலந்த மானிடனிமையே துள்ளும்
மர்மமாயுச் சிரோமம் வலவலத்தாய்ந்து நிற்குந்
தர்மமாய் வர்மங்கொண்ட தன்னிடந் தண்ணென்றாகுங்
கர்மமு மிதுவறிந்தே கடந்துநீ யிழக்குவாயே. 9

வெண்குன்றித் துவரைவித்தும் விரையுடனெடுத்தொன்றாகத்
தண்ணீரிலுரைத்துக் கண்மேற் றான்றீட்ட வர்மமென்றால்
மண்ணிடைப் பிணம்போலாகு மற்றன்றேல் வாயுளறி
வெண்ணுரைகக்கித் துள்ளி மேதினியோடுவானே. 10

வர்ம அளவு

மாத்திரை காலேயாகிற் மலினமாய்த் தடவநீங்கும்
மாத்திரை யரையேயாகிற் வகையுடன் தட்ட நீங்கும்
மாத்திரை முக்காலாகிற் வழியுடனடங்கல் தட்ட
மாத்திரை யொன்றேயாகில் மானிடன் பிழைக்கா னென்பாய் 11

வர்ம தட்டு அளவு

மாத்திரை காலேயாகில் வாங்கிடுகாற் சாணீளம்
மாத்திரை யரையேயாகில் வகையுடனரைச் சாணாகும்
மாத்திரை முக்காலாகிற் வழியுடன் முக்கால் சாணாம்
மாத்திரை யொன்றேயாகிற் சாணென வழுத்தினாரே. 12

வர்மமிளக்கு மிடம்.

சுத்தமா மிடத்தைக்கண்டு சுற்றியே திறையால்மூடி
புத்தியில் வர்மமென்ற புருடரை யதற்குளாக்கிச்
சித்தியாங் குருவின்பாதஞ் சிரசின்மேற் சூடியுள்ள
சத்தியந் தவறிடாது தனித்துநீ யிளக்குவாயே. 13

இந்நூலீவதார்க்கெனல்

விடா துயரறிவினோடு விலக்கிய யாவுந்தள்ளி
யடாதறநீக்கி மேலோ ரருங்கழற் சிரமேற்சூடிப்
படாதனபட்டுத் தொண்டு பன்னிரண்டாண்டு மாற்றி
லிடாத விந்நூலுக்கென்று மிவர்களே யுரியராவார். 14

வர்ம அளவுகண்டிளக்க வேண்டுமெனல்.

வர்மங்களெது கொண்டாலு மாத்திரையளவுகண்டும்
மர்மங்களறிந்துமுள்ள வழிமுறை யறிவையூன்றிக்
கர்மங்களிளக்கவேண்டுங் காலரை தாண்டி நின்றால்
நிர்மலனடியை நோக்கும் நிலமைதானறிந்துகொள்ளே. 15

படுவர்மம் – 12

திலர்தக்காலம்

திருநுதற்புருவமையந் திலர்தத்தி னெல்லிடைக்கீழ்
வருமிடந் திலர்தக்காலவர்மமே கொண்டதானா
லுருவென வாய்பிளந்தூனொடுங்கியே வானம்பார்ப்ப
னிருவிலாப் புடைக்குந் திண்ண மிவனுயிரெமனிடத்தாம். 16

இளக்குமுறை

திரிமுக்கானாளிகைக்குட் சேர்த்தெடுத் திருத்தியுச்சி
யெரியெழத் திருமித்தட்டியிருசெவி யிடகலைக்கும்

பரிவுறசுக் கோடன்னப் பால்கொடுத்தூதிப் பின்னுந்
திருமேனி யெண்ணைதேய்க்கத் தீருமென்றோதினாரே. 17

நட்சத்திர காலம்

உடுக்கெனுங் காலங்கண்ணினோரமோர் குழியினுள்ளாய்
வெடுக்கென வர்மங்கொண்டால் வேர்வையும் விழிகாணாது
படுக்கவொட்டாது மார்புபக்கம் பின்குளிர்ந்து தோன்று
மிடுக்கமா னாளிகை யோரிருதசத்தேழும் பாரே. 18

இளக்குமுறை.

பிடித்தெடுத்திருத்திக் கையைபின்புறஞ் சாணேனீட்டி
யடித்துமேல் தடவியுச்சி யதனிலோர் தட்டுந்தட்டிப்
பொடித்தசுக் கூதியன்னப் பாலூட்டப் போகுமென்ன
முடித்த நூலாகமத்தின் முறையின வுரைத்திட்டாரே. 19

செவிக்குத்திக்காலம்

கதியுறுஞ் செவியின் குத்திக்காதடி சிறுதண்டோர
மிதிலடி கொண்டாற்கேளு மிருவிழி தள்ளுமூர்ச்சை
பதியவாய்பிளந்து காணும் பதினைந்தோடிட்டி னுக்குட்
சதியற யிழக்குந் தன்மை சாற்றிடி லெளியதாமே. 20

இளக்குமுறை

வர்மமே கொண்டபேரை வகைவகைத்தடவித் தாழ்த்துக்
கர்மமே யகலவேண்டிக் கைவிரல் மடக்கிக்குத்தி
மர்மப்பாலூட்டி யுச்சிமத்தியோர் தட்டுந்தட்டச்
சர்மதா தென்பதெல்லாஞ் சரிவர நடக்குங்கண்டாய். 21

மர்மப்பால் - இஞ்சிப்பால்.

பிடரிக்காலம்

பிடரியின் காலந்தன்னைப் பேசுவோஞ் சிரம்பின்பாக
மிடமொரு குழியுண்டான திங்கடி கொண்டதானா
லுடனுயிர் துறக்குங்கண்டா யுற்றவாய் கோணுஞ்சீறும்
விடவிடத் தலறுநாழி யிருபதுள் மேவிப்பாரே. 22

இளக்குமுறை.

இதமுறக் குறிதானன்றாயிவ் வுடற்கிருக்குமானால்
பதமுற யெடுத்திருத்திப்பக்கம் வெஞ்சருமித்தாழ்த்து

சுதனவனுச்சி தட்டிதூக்கியே யுதறியூட்டு
முதலன்னப்பாலுஞ் சுக்கு மூவாறு நாழிகையே. 23

உறக்கக் காலம்

துயிலெழுங்காலம் நாடித் தொடர்ப்ரு குள்ளபள்ளத்
தியல்பெறவடிகள் கொண்டாலிழுகி நீரொழுகி வாயுந்
தயவறப்பிளந்து நாவுந்தள்ளி மேலுரக்கங்கொள்ளும்
மயலுறும் நாழிகைதான் வகுத்ததீ ரெட்டென்பாரே. 24

இளக்குமுறை.

இடம்பட யிருத்திநாடி யிடக்கையாலேந்தி யுச்சித்
திடம்படத் திருமித்தட்டிச் சிரசடிப்பிடரி தன்னிற்
சடமசையாது குற்றித்தனித்தன்னப்பாலு மூட்டப்
படபடத்தோடுங் கெட்டபடுவர்ம மடங்கல்பாரே. 25

கூம்பென்ற நேர்வர்மம்

கூமென்றகாலம் நெஞ்சின் குழியினின்றிரு விரற்கீ
ழாமிது கொண்டால் வேர்வையாமுடற் குளிர்ந்துகாணுந்
தாமிது நெஞ்சினுள்ளே சகடம்போலுருளுஞ்சோரி
போமிது குதத்திற்பத்தும் பொருந்துமெண்ணாழிகையே. 26

இளக்குமுறை

இடங்கண்டு யுச்சிதட்டி யேந்தியே திருமித்தாழ்த்து
அடங்கலைக் கைகொண்டுள்ள வயர்வினைப் புறங்கால்கொண்டு
மடங்கல் போனிமிர்ந்து பின்பால் மடக்கிக்கால் கொண்டுதட்டி
சுடச்சுட வன்னப்பாலுஞ் சுக்குடனூட்டுவாயே. 27

தவளைக்காலம்

மண்டுகக்காலங்காரை வளைவென்பினிரையோ மூன்றிற்
கண்டது செவிகேளாது கடினமாந்தளர்ச்சை கொள்ளும்
வண்டுபோ லோடுள்ளாக்கை வலிக்குமாமரம் போலாகத்
தண்டது வளையுமீரேழ் தானது நாழிகையே. 28

இளக்குமுறை

பிடித்தெடுத் திருத்திக்கையைப் பிணைத்துச்சிதட்டிச்சுக்கை
கடித்திரு செவியிலூதிக் கால்கொண்டு முதுகுதட்டிப்
படித்ததோ ரடங்கல்கண்டு பண்புடன் றடவித்தூக்கிக்
கொடுத்திடு சுக்கோடன்னக் கூறினிலோடிப்போமே. 29

பெரிய அத்திசுருக்கிக்காலம்

சுருக்கியின் காலவேலைச் சூதறவிலாமுண்டென்பி
னிருவிரலுயரத் தாகுமிரு மூன்றுதிங்கட்குள்ளே
குருக்கது குளிந்துபோகுங் குணமுடன் புறங்கால்கொண்டு
பெருக்கமாய்த் தட்டப்போகும் பிழையாதிவ்வர்மந்தானே. 30

சிறிய அத்திசுருக்கிக்காலம்

சிறியதோர் சுருக்கிக்காலஞ் செப்புவேன் விலாமுண்டென்பி
லறியவேயிரையோ மூன்றிலானதச் சுருக்கி போலாங்
குறியவே புறங்கால்கொண்டு குந்தியம் முதுகுதட்டி
முறியவே யுச்சிகொட்டி முன்பினுந் தடவுவாயே. 31

மாத்திரை யரையேயானால் வகைபெற வடங்கல்தட்டி
யாத்திரமுடனே சுக்குமறுபதாங் குருவைவித்துங்
காத்திரமுடைய தொட்டிக்கஞ்சிவைத் தூட்டிஞான
தோத்திரஞ்செய் வாயின்று சூட்டினார் முனிவர்தானே. 32

தொட்டி - குருந்தொட்டி

உறுமிக்காலம்

தொப்புணால் விரலின்மேலே துன்பமாமுறுமிக் காலஞ்
செப்புவோங் கண்விழிக்குஞ் செவியது கேளாதாகுந்
துப்பிதட் பொடுபொடுக்குஞ் சூட்சமாய் மூச்சுண்டாகு
மப்பது தேகமீரெட்டாகுமாம் நாழிகையே. 33

இளக்குமுறை

அணைத்தெடுத்திருத்தி நெஞ்சினருகி ருகைகளினாற்
புணைத்துப்பின் முதுவரியிற் புறங்காலாலடி யொன்றூன்றிச்
சுணைத்துச் சிதிருமித் தட்டிச்சுக்கிரு பூவன்னப்பா
லிணைத்துள்ளே யூட்டப்போகு மிறப்பதிவ் வர்மந்தானே. 34

இருபூ-தேங்காய்பூ - முருங்கைப்பூ.

மூத்திரக்காலம்

மூத்திரக்காலந் தொப்புண்முனையின் கீழ்நால்விரலிற்
சாத்தியஞ் செவிகேளாது தன்னறிவகன்று போகுஞ்
சூத்திரமாகநீருஞ் சொட்டிட்டுத் துள்ளியோடும்
பாத்திரநாழிகையும் பதினாறென் றறைகுவாயே. 35

இளக்குமுறை

நீட்டியகாலங்கொண்ட நேரினி லெடுத்துக்கீல்க
ளாட்டியே நரங்கல்தட்டி யடங்கலுந் தடவித்தாழ்த்து
கூட்டிமேலுதறியாண்டு கொடுக்கவு மன்னப்பாலை
மாட்டிய வர்மமெல்லாம் வகைவகையோடுமாமே. 36

கல்லடைக்காலம்

கல்லடைக்காலந்தொப்புட் கடந்தெட்டு விரலின்கீழே
வில்லிடையம்புபோல விரைந்தேறும் விதையிரண்டு
மல்லலாய் வயிறுமூதுமபான மூடுதிரம்போகுஞ்
சொல்லவும் பிணம்போலாகுஞ் சுகம்வரு முறையைக்கேளே. 37

இளக்குமுறை

கலசங்களடுப்பா மென்னக் கால்கொண்ட வகலமாக்கி
யலசமேற்குந்தச் செய்தோராள் தனைப்பிடிக்கச்செய்து
பலவசமாக நெற்றி பறவக்கை முருக்கியுச்சி
நலம்பெறத்தட்டித் தாழ்த்த நாயகமிறங்குங் கண்டாய். 38

வித்தினை யிடக்கையாலே விரிவுறச்சேர்த்துத் தண்டோ
டத்தினை விரனால்கொண்ட வகலமாஞ் சீலைதன்னைச்
சுத்தநீர் தன்னையூட்டிச் சுற்றிப்பின் குந்தச்செய்து
சத்தசத்தன்னப்பாலைத் தானூட்டப் போகுமாமே. 39

சத்தசத்தன்னப்பால் - சுக்கு, சீரகம், தேங்காய்ப்பூ, முருங்கைப்பூ, குருந்தொட்டி, இஞ்சி, திப்பிலி, இவ்வேழுங் கிளிகட்டி வேகவைத்த அன்னப்பால்.

தொடுவர்மம் 96-க்கு விபரம்.

1-வது தலைவர்மம் 3-க்கு பெயர்.
1. நாசிமேல்வர்மம்,
2. சிவகுழி வர்மம்
3. செவிப்புற வர்மம்.

மூக்கின்மேற் காலங்கொண்டால் முனைந்தொழிமங்கும் வேர்வை
யாக்கிடுந் தளர்ச்சைகொள்ளு மடுத்துச்சிக் குழியாமாங்கே
தாக்கினாலுயிரேபோகுந் தலைப்புறஞ் செவியோரத்தில்
வாக்கறும் பிழையாரிந்த வர்மங்கள் மூன்றுந்தானே. 40

முகவர்மம் 8. { இருகையிலும் மடிப்புஜவர்மம் 2. கீழ்க்குழிவர்மம் 2. புஜமொழிவர்மம் 2. முஷ்டிவர்மம் 1. தொண்டைக் கூம்பின் வர்மம் 1. ஆக 8.

அடிப்புஜத்தெல்லின் மேலாபடிகொண்டா லாறுநாளிற்
மடியுனேர் கீழ்க்குழியில் வர்மமே கொண்டதானாற்
துடிக்குமா மாக்கைவாயிற் சோரியுமீளை சத்தி
வடிக்குமா மேனியெண்ணை வைத்திடத்தீருமென்க. 41

மேனியெண்ணை - திருமேனியெண்ணை.

மேல்மொழிநடுவனாக விரலொன்றி லடிகளானாற்
க்கால்கரஞ் சோறும் பின்னே கண்ணோக்குஞ்சுரமுமுண்டாம்
நூல்வழி முதுகுமத்தி நரம்பிடைமுஷ்டி பற்றிற்
கோல்கொண்ட முடவனாவான் கூருவோ மின்னங்கேளே. 42

தொண்டைக்கீழான கூம்பிற் சுலபமாயடிகளானாற்
கொண்டறுநாளிற் சாகுங்கொடுஞ் சுரம் வாந்தி சன்னி
யண்டருஞ் சென்றிழக் காரதிற்குறி நல்லதானாற்
தொண்டரு மேற்றுமெண்ணைச் சும்மருங் கஷாயந்தாக்கே. 43

எண்ணை - திருமேனியெண்ணை.

சும்மருங்கசாயம் :- சுக்கு - சீரகம் - திப்பிலி - இஞ்சி - குருந்தொட்டி- முருங்கைவித்து - சிறுதேக்கு - கோஷ்டம் இவை சேர்ந்த கஷாயம்.

சிறுகூம்புக்காலம்

விரிவுறு மார்பின்மேலே விரலிரண்டான கூம்பில்
முரிவுகள் கொண்டதானால் முதிர்ந்தெழு சுரமும்வேர்வை
யெரியென வெரியுமாமுள்ளீரலுஞ் சோரியாகுந்
திரிமுக் கானாழிகைக்குட் சேர்த்தெடுத்திருத்துவாயே. 44

இருத்தியே தடவியுச்சி யிடமொரு தட்டுந்தட்டித்
திருத்தியே யுதறியன்னத் திரட்சிப்பாற்சுக் கோடுட்ட
வருத்தமுமேதுகொண்ட வர்மமுமேது முன்னே
விருத்தமாய்ப் பொதிகைநாதன் விளம்பிய நூலிடத்தே. 45

அன்னத்திரட்சிப்பால் - பூடுசேர்ந்த பொடியரிசி வறுத்திட்டபால்

இருவிலாவர்மம் - 8 { தோடுவர்மம் 2. கோரைக்காலம் 2. விரிசங்கு 2. விருசு 2. ஆக 8.

இருபுற விலாவின்மேலே யிருவிரினெல்லிடைக்கீழ்
வருவதுதோடாம்புத்தி மயங்கிடும் வேர்வை சன்னி
தருமிரு விரலின்கீழே சாற்றுவோங் கோரைக்காலம்
பெருஞ்சுரம் நடைதள்ளாடும் பித்தனா மென்றுகூரே. 46

சங்கது கோரையின்கீழ் சார்ந்திடு மூவிரலில்
பொங்கிய ஈரலெல்லாம் பொடுபொடுத்தெழுந்து வீங்கு
மிங்கதன் கீழாயாறு நெல்லிடை விருசேயாகுஞ்
சங்குண்டகாளை யென்னத்தயங்குவான் சுற்றிச்சுற்றி. 47

எட்டினிலெதுகொண்டாலு மிருமலுஞ் சளியுமீறித்
திட்டமாய் நாணாறுற்றிற் சேருவன் மறலிபாலே
பட்டறு நாளிகைக்குட் பருவமாயடங்கல்தட்டி
யிட்டிடுவன்னப்பாலை யேகுமா மெண்ணையாலே. 48

எண்ணை - திருமேனியெண்ணை.

சங்குதிரிகாலம்

முன்னுரை முஷ்டிபக்கல் முனைந்தெழு சங்கின்காலம்
தன்னிடை நிமிரொண்ணாத சஞ்சல மிகவுண்டாகு
மின்னுரை மாறு மங்கிமெங்கிலு முழைந்திருமுந்
தொன்னூலின்வண்ணமந்தத் திருமேனிதொட்டுத் தாக்கே. 49

முண்டெலும்பு வர்மம்.

சுருக்கிமே மூவிறற்குட் தோன்றுமுண் டென்பின்வர்மங்
கருக்கிடும் பேதியோடு கடினமாஞ்சுரமு முண்டாந்
திருக்கிமே லடக்கந்தட்டிச் சிவராத்தி யெண்ணைதாக்க
வுருக்கிடு வர்மமெல்லா மோடிடுந் திண்ணந்தானே. 50

வித்து வர்மம்

மூத்திரக்காலங்கீழே முனைந்தொரு விரலினுள்ளே
சூத்திரவித்துவர்மந் தோன்றிடிற் தண்டைக்கானார்
த்தித்திரலாகநீருந் தெரித்திடும் நரங்கலோரங்
காத்திற நரம்பைத்தட்டிக் கையினாலிழுத்துவாங்கே. 51

வந்திழுத்தெடுத்துவேண்டும் வர்மயேலாதிபோட்டு
விந்தையாயூட்டித்தாரை மேலுக்கிட்டன்னப்பாலைக்
கந்தமோடளித்துப் பின்னே கையினாற்தடவித் தாழ்ந்த
வந்திடுங் காணாத்தண்டின் வழிதனை யுரைத்திட்டேனே. 52

சிறுவர்ம ஏலாதிகஷாயம் { ஏலம்-சுக்கு-சிறுதேக்கு-திப்பிலி-குருந்தொட்டி-கடலாடி-முத்தங்கா-தேங்காய்பூ-தாமரை வளையம்-சமனிடை 8-ல் ஒன்றாய் குறுக்கிய கஷாயம்.

தாரை என்பது - தாரை எண்ணை.

அண்டக்காலம்

அண்டத்தின் காலம் வித்தங்கமைந்தத னடுவிலாகுந்
துண்டெனக் குருதிகக் குஞ்சுழற்றிடு நாவுமாக்கைத்
தண்டடிநோகுமேலே தடவிச் சேரடங்கல்தட்டி
யெண்டிசை புகழுமேனி யெண்ணையிட் டாட்டத்தீரும். 53

நவத்வார வர்மம்:— { செவிமுண்டல் 2-நாசியிழுங்கால் 2-கண்கடை வர்மம் 2 நுனிக்குதவர்மம் 1-குய்யவர்மம் 1 அண்ணா வர்மம் 1 ஆக 9.

செவியுளே கூம்பின்றாழச் செவிமுண்டலானாற்காதிற்
புவியுளே குருதிவாயிற் பொங்கிடும் மயக்கமுண்டாங்
குவிந்திடு நாசியூடு கொண்டாலன்றிறப்ப னண்ணாக்
கவிந்திடு நெல்லிடைக்கீழ்க் கண்டாலுமப்படியே. 54

குதகுய்ய வர்மமந்தக் குறிநுனியாகுந்தேக
மதமமாயழியுங் கண்களது கடைவர்மங் கொண்டால்
விதனமு மதிகமாகும் வேர்வையுந் துள்ளுமேலுங்
கதகதப்புடனே பேதிகண் டுடலழியுமாமே. 55

சுழியாடி 2 :- வலச்சுழியாடி 1. இடச்சுழியாடி 1.

பின்புறங் கைப்பூட்டென்னும் பிடறியினோரமுள்ள
யென்பருகொரு நரம்பினிடை சுழியாடி கொண்டால்
தன்னறிவகலும் வெப்புத்தணுப்புடனேறும் பின்பா
லின்புறத்தட்டியாரை யிலைபரைத் தூட்டுவாயே 56

ஆரை யென்பது :- வல்லாரை என்றும், மாயாமுலி என்றும்பெயர்.

உள்வர்மம் 3 { செவிக்கூம்பு 1. வெள்ளீரனேர்வர்மம் 1. மண்ணீரனேர்வர்மம் 1. ஆக 3.

காதிருகூம்பினேரே காலங்களானாற் கண்கள்
சோதியுங் குன்றுமீளை தோன்றிடுங் கபமுஞ்சோரி
நீதியோடணைத்திருத்தி நேருச்சி தட்டித் தாழ்த்து
மாதிருமேனி யெண்ணை வார்த்திடப் போமென்பாரே. 57

வெள்ளீர னேர்வர்மம்

வெள்ளீரலருகுபற்றி விசைநரம் பொன்றைத்தட்டி
லுள்ளுயிர்பிரியுமன்றே யோங்குமண் ணீரனேரே
துள்ளியோரிரையின்மேலே சூட்சமாயிடதுபக்க
முள்ளவோர் நரம்பைத்தட்டி லுடனுயிரகலுமாமே. 58

சிரசடி பூட்டு வர்மம் { பின்பூட்டு 1. முன்பூட்டு 1. ஆக. 2.

ஒட்டடிப்பொருத்துப்பின் பாலோரிரைபிறை மேலாக
மூட்டின்மேற் செவிப்பின்மேலாய் முடிந்தவீரிரையிலுமாய்ப்
பூட்டடிக்கொண்டா னாற்றம் பொருவுறு கிரந்திவெப்பு
வாட்டிடு மலக்கட்டான வலகெண்ணை வார்த்திடாயே 59

அலகெண்ணை - புங்கெண்ணை தைலம்
அலவாடி 2 :- வலதலவாடி 1. இடதலவாடி 1. ஆக 2.

அலவதுமுடிந்தமூட்டி லடியிடி கொண்டதானால்
வலமிடமாறிக்கொண்ட வாயது கோணலாகுந்
தலமதிலண்ணாந்து வாய்தான் பிளந்துண்பதாகு
மிலகுமுக்கூட்டையிட் டன்றிலையரைத் தூட்டுவாயே. 60

இலை - வல்லாரை.

விலங்கு வர்மம் 2 :- பெருவிலங்கு 1. சிறுவிலங்கு 1. ஆக. 2.

கழுத்தடிக்காரைக்குள்ளே கணக்காயோரிரையில் வர்ம
மழுத்தினாற் கையுயரா தசைவிலாமரம்போலாகு
மிழுத்திரு கால்களையு மெடுத்துப்பின் னிருந்தேயுச்சி
யழுத்தியே மேனியெண்ணை யாட்டிட விட்டுப்போமே. 61

பூவாரம் 2:- வலப்பூவாரம் 1. இடப்பூவாரம் 1. ஆக. 2.

இருமுனைக்காரை யோரமிடிகொண்டா லிருமலீளை
திருவுருகரத்தில்வீக்கந் தெரிப்புடன் சதையொட்டாது
வுருவினில் மேனியெண்ணை யோடவிட் டாட்டிப்பின்னே
மருவுற மூன்றானாளில் வகையுடன் றடவப்போமே. 62

கைவர்மம் - 14 { இருகரத்திலும்-சுருக்கு-முடக்கு-மொழிமணி காலம்-திகைக் காலம்-கவுளிக்காலம்-ஊமைக் காலம் ஆக 14.

கரமிருபுஜத்தின்கீழே கைமொழிமே முன்பாக
வருநடு சுருக்கிக்காலம் வளைவுடன் றவளைபோலப்
பெருத்தெழுந்திழுக்கும் வீதிப் பெருநரம்பதனைத்தட்டி
விருத்தமாய்த் தடவித்தூக்கி விரைவுடனெட்டிவாங்கே. 63

சுருக்கிமே லிரையிரண்டிற் சூட்சமா முடக்குவர்ம
மிருக்குமங் கடிதான்கொண்டா லிருகரமசைக்கொட்டாது
குருக்குமாமென்புவேறாய்க் குருதியுமாறலாகும்
பெருக்கமாயுச்சிதட்டிப் பிடித்து நெட்டிழுத்துவாங்கே. 64

முடக்கிடுவர்மமுன்னே மொழியதிலடிகளானாற்
கடுக்கும் பின்னரம்பு மேறிக்கரத்தென்பை யசைவிற்றள்ளிக்
கொடுக்குமே வீக்கஞ்சோரிக் கொடியதோரணமாமட்டை
யடுக்கியேகட்டி யெண்ணை யாரையுமாட்டத் தீரும். 65

எண்ணை:- முறிவெண்ணை மேலுக்கிடுவது
ஆரை:- வல்லாரை உள்ளுக்குக்கொடுப்பது.

முன்கரமணிக்கட்டென்னு முனைநடுவடிகளானாற்
பன்னிரண்டாகும் நாளிற் பரமனாரடியைச்சேர்வ
னுன்னுமே லுயிருண்டாகி லொடிமுறி வெண்ணையிட்டுத்
துன்னுமங்கள விலாகுந்துகில் கிழித்தெடுத்துக்கொள்ளே. 66

வல்லாரைச்சாற்றில் வேண்டும்வரை பெருந்தகரைவித்தைக்
கல்லெனவரைத்தங்கூட்டிக் கைகட்டி மேலேசுற்றி
முல்லையினி தழையொட்டி முறிவெண்ணை யூட்டிவந்தால்
வல்லவாணாளேயாகில் வரவரச் சுகமேயாமாம். 67

இப்பெருவற்மமுன்னே யிருநான்குவிரலே தள்ளிச்
செப்பரும் வெள்ளைமத்தி திகைவர்மமானாற் கண்கள்
கொப்பெனப்பார்வை குன்றுங் குறைந்திடுந் தேகம்நாளு
மப்புபோலாகுமேற்ற வடக்கத்தாலாகுந்தானே. 68

விரிவுறுங்கையுள் மத்திவிதி பெருங்கவுளிக் காலம்
பெருவிரலூரமையாகப் பேசுவோ மிரண்டுமொன்றே
வருடமுமொன்று சென்றால் வருமேக வெள்ளை வெட்டை
யிருகரம் நெட்டைவாங்கி யிசைநரம்பிழுக்கப்போமே. 69

இப்பெருவர்ம மூத்தார்க்கிரு கால்களில்லார்க் கென்றுஞ்
செப்பரும்விதி செய்தாலுந்தீராது மற்றையோர்க்கு
யிப்புவியாண்டொன்றாகி லிருகுடித்தைலத்தோடு
முப்பெருஞ் சீரகத்தூள் முடித்துணப் போகுந்தானே. 70

முச்சீரகம் - நற்சீரகம், பெருஞ்சீரகம், கருஞ்சீரகம்.
இருகுடி தைலம் - சிவனார் வேம்புத்தைலம்.
தொடைவர்மம் இரண்டிலும் 6 - பதக்களை 2. நொடி 2 ஆமை 2. ஆக 6

பதக்களைத்தொடையிடுங் கற்பக்கனின்றாறிரைக்கீ
ழிதமுறு நொடியில் வர்மமிரு விரலாமைக்கால
முதலடிகொண்டாற்கட்டி மூன்றொடை வாழையுண்டாம்
விதம்விதம் நொந்துகாலில் வேதனையூட்டுமாமே. 71

கால் வர்மம் 12 - இருகால்களிலும் குட 2. பக்க 2. வசரு 2 திரி 2. கண்ணு 2. காடி 2. ஆக 12.

சீர்பெருவர்மமீது தீர்ந்திடும் வலமேயாகி
லார்பெரு விரலிடக் காலடி நரம்பிழுக்கத்தீரும்
பேர்பெரு பக்கவர்மம் பேசுவோங் கண்ணுவர்மங்
கூர்திரி வசகுகாடிக் குடவர்மமாறுமொன்றே. 72

சொன்னவிக்காலமாறில் தொடர்ந்தெதி லடிகொண்டாலு
மின்னிலத் துயிரளவு மிருகாலு முடமாங் கண்டாய்த்
தன்னிலைக் கோள்களோடு தலைவிதிப் பேருண்டாகி
லின்னிலைக் காலமுஷ்டி யெடுத்துமேலிட நன்றாமே. 73

ஆலமுஷ்டி - விஷ முஷ்டி தைலம்.
முன்னங்கால் வர்மம் 6 - குதிரை முகவர்மம் 2. கொம்பேரி 2. முடிச்சு 2. ஆக. 6.

குதிரைமா முகத்திற்காலங்கொண்ட தேற்குருதியோடி
விதிரைமா விடம்போலேறி விரணமாயாழங்கொண்டு

'திவிரைவாகச் செய்யுந் தப்பாது மரணமென்ப
நிதுசுகம் பங்கம்பாழை யெண்ணையிட் டாற்றுவாயே. 74

பங்கம்பாழை - ஆடுதீண்டாப்பாளை.

செம்பரிக்காலத்தின் கீழ்த்றல் பெரும்விரலோ நாலிற்
கொம்பேரி வர்மமீது கொண்டதே லதிவிடமே
யம்பெறி தன்மையென்ன வக்கண மாகுஞ்சன்னிப்
பம்பெரிதைலங் கூட்டிப் பஞ்சப்பாலூட்டுவாயே. 75

பம்பெரி தைலம் - பாசாண சுடர் தைலம்.
பஞ்சப்பால் - அன்னப்பால், சுக்குப்பால், கேசரிப்பால்,
நாங்கூழ்பால், அமுதப்பாலென்பன.

மூவிரலதனின்கீழே முடிச்செனும் வர்மங்கொண்டாற்
தாவியே வருமாஞ்சன்னி தன்முகங் கோணுமாக்கை
வேவவே நொந்துவீங்கும் விசைநரம்பெழுந்து துள்ளு
மாவியும் நாள்தான் மூன்றில கன்றிடுந் திண்ணந்தானே. 76

பாதவர்மம் 8 - பாதசகரம் 2. மத்தியிடை 2. பூமிக்காலம் 2.
மொழியடைக்காலம் 2. ஆக. 8.

பேசியவர்மம்பின்னே பெருவிரல் மூன்றுதள்ளி
வீசியபாதமேலே விசைத்தலத்திகிரி பட்டால்
மாசிலா ரணமுமாகி வருங்குளிர் சன்னிதோன்றி
நாசியாலுமிரேபோகும் நாட்டினேன் மாதமாறுள். 77

சதுர்விரல்தள்ளி இந்தச் சக்கரத்தடியிற் கொண்டா
லுதிரமுமகன்றுபோகு முழைச்சலு மதிகமாகும்
மதுரமாமேனி யெண்ணைவைத்தது மெழுகத்தீரு
மிதுமத்தியிடை யென்றாருமியம்பலா மிதனின்கீழே. 78

பெருங்கண்ணிற் பூமிக்காலம் பெரிதிது நரம்பையெல்லா
மொருவிதம் பின்னலாக்கி யூடாடி நிமிர்ந்து நிற்கு
மிருகரமுதறிவாங்கி யிதற்கெண்ணை யேதுமிட்டு
வொருதரந்தடவ நாளுமொரு நாலுளோடிப்போமே. 79

விரல்மொழி யடக்கக்காலவிசை நரம்பதனிற்பட்டா
லரவது விடம்போலேறி யசைவிலா நகண்டுதோன்றும்
வரவர நோகுந்தீர மடங்கல்போ லடங்கல்தட்டப்
பரமனாரருளினாலே படபடத்தோடுங் கண்டாய் 80

மெய்தீண்டாக் காலம்நாலு விசைத்தலத்தாரை யொன்று
கைப்புறக்குழியுந் தொப்புட் கண்ணடுவாகக் கொண்டா
லைப்புறத்திகிரி வட்டத்தடங்குமவ் வுயிர்நாளொன்று
மைம்புறச்சாகான் செத்த மானிடர்க் கொப்பந்தானே. 81

எல்லைகண்டமுத் திற்சொன்னவிவ் வர்மமாகுமல்லாற்
தொல்லைவந்தெய்திலான தொடையடி நரம்பைக்கொட்டி
யொல்லையோ ரிடதுபாங்க ரோரிடந்தணுப் புண்டாங்கே
வெல்லவே மேனியெண்ணை மேலிட்டன் றடங்கல்தட்டே. 82

ஆரையும் பருத்தித்தாழியா கவிங்கறைந்தமூலி
பாரையுந் தெரிக்குமேலே. பாரத்தை யேற்றிநோக்கிற்
கோரையு மதுவேயாகுங் கொழுஞ்சி போலிலங்குமுண்டு
நீரிலே தழைக்கும் வாதநிலைகளுக் காகுந்தானே. 83

வல்லாரை யென்னு னாமவழி கேட்டால் வர்மமெலாஞ்
சொல்லாதங் கோடுமாக்கை தொட்டிழக்காமற் தீரும்
நில்லனுமானேயென்று நேர்நின்று ஹரிவோமென்னச்
சல்லிவேர் வளையமாடச் சல்லியமிதுதா னன்றோ. 84

வேறு

திரேகப்பொருத்துகள்.

செங்கரத்தி லானதுண்டு மூன்றேயாகுஞ்
சிறிதான கவரென்பு துண்டுநாலு
வங்கமதிலிரு தசமுமிரண்டாம் பக்கத்
தறுபத்திரண்டு துண்டு குருக்கே யாகுந்
தங்குகிறவரி யென்புபதினாறாகுந்
தாரென்பு மூன்றாகுந் தந்தத்தின்மேற்
பங்கதுவும் நாலாகுங் கழுத்தை நோக்கிற்
பாகமது மாறெனவே பகர்ந்திட்டாரே. 85

கண்டமதி லுருப்பதுவும் நூறாஞ்சுற்றிக்
கட்டினதோர் நரம்புகளைக் கணித்துநோக்கி
லுண்டதுவு மெழுதசத் தோடீராயிரமா
யுள்ளநரம்பொரு தசமாமுயிரினாடி
கொண்டகுரு நாடியது மூன்றிலொன்றாய்க்
குறித்துரைத்தார் நோய்களதன் குணத்தைக்காணக்

கண்டமதிற் கத்தரிபோனிற்கு மார்க்கங்
கண்டறிந்தா ரீசனெனக் கருதலாமே. 86

வேறு

சகல வர்மத்துக்கு அன்னப்பால் கசாயம்

திரிபலை சுக்குக் கொத்தான் திப்பிலி மிளகினோடு
வரிதரு சித்தாமுட்டி வகை சமன் கிளியாய்க்கட்டி
யரிசியுமுரியிட்டாக்கி யாறவிட்டன் னப்பாலைக்
கரியுப்புங்கூட்டி யூட்டக்காணுமோ வர்மமெல்லாம். 87

குன்றியின்வேருமாடிக் கொத்தானு முள்ளிமூலம்
ஒன்றானமதுரஞ் சுக்கோடுயர்திரி பலையுங்கூட்டி
நன்றான மிளகுசோம்பு நயமான வருகின் மூலங்
கின்றிக்காயரிசியோடு கிளிக்கட்டி யுண்ணப்போமே 88

சோம்பு - பெருஞ்சீரகம். கின்றிக்காய் - திப்பிலிக்காய் ஆடி - கடலாடி

வேறு

வர்மக்குளிகை

ஓதுகின்ற திரிகடுகு மதுரமேல
முயர்வான முருக்கின்பூ குங்குமப்பூ
தூதுளையு மிசங்கின்பூ துளசிப்பூவாஞ்
சுத்தமுள வில்வப்பூ முல்லைப்பூவும்
மாதுயரைத் தானகற்று மாடாதோடை
வகையுடைய கோகோசன மதுவுங்கூட்டித்
தாதுடைய கொம்பரக்குத் தைலத்தாலே
சாமமதை யாட்டியினுஞ் சாற்றக்கேளே. 89

வேறு

ஆவினன் பாலும் பொன்னினாவரையிலைச் சாறாலுங்
கூவிளம்பழச்சாற்றாலுங் கூட்டியோர் சாமமாட்டி
மேவியதுவரை யென்னவிதிமுறைக் குளிகையாக்கிப்
பூவினிலீயவர்மம் புலபுலத்தோடுங் கண்டாய் 90

வேறு

சகலவர்மச் சன்னிகட்கு கஸ்தூரிமெழுகு.

ஓங்குகின்ற கஸ்தூரி யொன்றேயாகு
முயர்வான குங்குமப்பூ நாலேயாகும்
பாங்கான லவங்கமொடு கோகோசனம்
பதிவான வால்மிளகும் வகைக்குநாலே
தேங்கமழும் புனுகு சவ்வாதுகாலே
சிறுலவங்கப்பட்டை யுடனேல மெட்டே
தீங்ககலுங் கற்பூரத்திரணச் சோதி
சேர்த்திடுவா யிரண்டாகச் செப்பினேனே. 91

கோகோசனம் - கோரோசனை.
கற்பூரதிரணச்சோதி - பச்சைக்கற்பூரம்.

மெல்லியதன் சாறுமொரு வல்லிச்சாறும்
விதமான தூதுளையு மிஞ்சிச்சாறும்
வல்லதிரு மிளகுரச மஞ்சளோடு
வகையுடைய கரிப்பானது ரசத்தினாலும்
வெல்லவதைத் தனித்தனியா யொவ்வோர்சாமம்
விரையுடனே யரைத்ததுவு முலர்ந்தபின்பு
நல்லசுயத்தேனாலோர் சாமமாட்டி
நற்பயறு பருமனதைக் குளிகையாக்கே. **92**

மெல்லி - கற்பூர வெற்றிலை
வல்லி - கற்பூர வல்லி, நற்பயறு. சிறுபயறு.

வாதமென்ற யெண்பதுவுந் தீருங்கெட்ட
வர்மம தன்சன்னிதலை காட்டாதோடுஞ்
சீதளமுஞ் சுரங்கபமு மாந்தமாதி
தெரித்தோடுந் தேனிலிதை யுள்ளுக்கீயச்
சூதகமாம் வாய்வுகளுந் தீருங்கெட்ட
துநீருமகன் றுவிடும் வர்மமென்ற
சாதனையும் தெரிந்துவிடு முண்மையாகச்
சாற்றிவிட்டோஞ் சாஸ்திரத்தினுண்மை தானே. 93

வர்மமிளக்கா[illegible]ரி [illegible]ரெனல

பிணிதனிலழுன்றுதேகப் பெலனின்றி மெலிந்தார்க்கெல்லாந்
துணிகரமுடனே சென்று தொட்டிழுத்திழக்கலாகா
வணிசெரிகாலமேது மாகிடிலவ்வுடற்கு
மணிதொடாக்காலங்கொண்டே வர்மமு மிளக்கலாமே. 94

வஞ்சகநெஞ்சுளார்க்கும் வழிப்பறி செய்வோர்குந்
தஞ்சமென் றடைந்தோர்க்கின்னற்..........................தபேர்க்கும்
பஞ்சமாபாதகர்க்கும் பழியுடை யகமுளார்க்கும்
நஞ்சனை வர்மங்கொண்டானலம்பட யிளக்கக்கூடா. 95

உடலை தொடாமலிழக்கு முறை

சொல்லிய வர்மங்கொண்டாற் றுணைப்பத மிரண்டுங்குற்றிச்
சல்லிய மூலிகொண்டு தனித்துநேரிருந்து நோக்கித்
துல்லிய முடனேவர்மச் சூட்சத்தை யறிந்தங்கூட்டி
வல்லியின் சாற்றை யுண்ண வகைதெரித்தோடுங் கண்டாய். 96

சல்லியமூலி - வல்லி. மாயாமூலி - வல்லாரை.

வைத்தியரறிய வேண்டியது.

வெறியினாற் மயங்கினோர்க்கு மிகுநடை நடந்தபேர்க்கும்
முறிவினாலுடைந்தபேர்க்கு முழுமன விசாரத்தோர்க்கு
மறிவிலாக்கிரிகையோர்க்கு மாகிய யிவர்கட்கெல்லாஞ்
சிறியதோர் வர்மமென்றே சென்றுடலிழக்கக்கூடா. 97

மருந்துக ளிடைகண்டுள்ள வகைவழிசுத்திசெய்து
திருந்துமா பாகத்தோடே திறம்படவரைத்துச்சேர்த்து
வருந்துமவ் வுள்ளந்தேற்றி வைத்தியரனுபானத்தோ
டருந்துமா [illegible]வேண்டு மறநெறி யனுசரித்தே. 98

[illegible]ங்கஸ்தல மின்னதெனல்

எத்கைவர்ம[illegible]டு மிருவி[illegible] விம்மிமூர்ச்சை
தத்திப்பின்னமன்ர் ரூரைச்சார்பவ ராகிடினுஞ்
சித்தங்கொண் டெழுந்துமேலே செப்புவிதெல்லாஞ் செப்பி
முத்திமாநகரைச்சேரு முதல்வழி யுரைக்கின்றேனே. 99

இடப்புறத் தொடையின்கீ ழாயீரிரை நெல்லிடைப்பின்
னடப்புகண் டழுத்திப்பின்னே யாரிரை யடங்கல்தட்ட
நடப்பதிங் கிறப்பென்றாலும் நாழிகை யொன்றுமட்டுந்
திடப்பட யெழுந்து வேண்டுஞ் செய்திகள் செப்புவானே. 100

வேறு

சீர்பொருந்தும் வர்மமதனிலமை யெல்லாந்
திறம்படவே யெடுத்துரைத்தோ மவைகட்காண
நீர்பொருந்துங் கசாயமுதற் குளிகைமார்க்கம்
நெறிபடவே யெடுத்துரைத்தோ மன்னப்பாலுங்
கூர்பொருந்து மர்மமதன் சூட்சமான
குணமதனை எடுத்துரைத்தோம் விரிவதாகப்
பார் பொருந்து மடையோர்க் கிந்தநூலும்
பஞ்சமாபாதகர்குமிது பயனாகாதே. 101

ஆக்கையதன் சந்துகளும் நாடிமார்க்க
மறிவுடையார கத்தினுளே யாடுகின்ற
போக்கை யறிந்ததற்கிணங்க நடந்து வேண்டும்
புத்தியுடன் சீடனெனப்புகுந்து தொண்டு
காக்கையிலே நுட்பமெலாங் காணலாகுங்
கசடர்மனதுடையரக மிந்தநூல்கள்
பூக்கையிலே புதிய யெமனுலகில்வந்த
புதுமையென மதித்திடவே புகன்றிட்டேனே. 102

முற்றிற்று

தாமரை
நூலகம்